

# இடிபடும் கோட்டைகள்

நா. யோகேந்திரநாதன்

1950 – 1960 காலப்பகுதியில்
எமது மண்ணில் நிலவிய
சமூக, பண்பாட்டு வாழ்வியலை
அடிப்படையாகக் கொண்டு
எழுதப்பட்ட இலக்கியப் படைப்பு.

வெளியீடு – தமிழ்லீடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IDIPADUM KODDAIKAL

by :

N. Yohendranathan

# இடிபடும் கோட்டைகள்

நா. யோகேந்திரநாதன்

வெளியீடு : தமிழ்லீடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடிபடும் கோட்டைகள்

நூலாசிரியர் : நா. யோகேந்திரநாதன்

வெளியீடு : 28.04.2018

முதற்பதிப்பு : தமிழ்லீடர்

அச்சுப்பதிப்பு : றூபன் பிறிண்டேர்ஸ்,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு : நா. யோகேந்திரநாதன்
"வில்லு மதவடி",
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

தொ.பே. இல : 0777880764

*ISBN* : 978-955-42746-2-4

விலை : ரூ. 600/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எல்லாவிதமான ஒடுக்கு முறைகளுக்கும் எதிராகக் களமாடிய போராளிகளுக்கும் அவர்களுடன் தோளோடு தோள்நின்று இன்னல்களையும் இழப்புகளையும் ஏற்றுக் கொண்ட பல்லாயிரக்கணக்கான மக்களுக்கும்

சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

தமிழர் பாரம்பரியத்தின் அத்தியாயங்கள் அலாதியானவை. அவை ஒவ்வொன்றும் கொண்டிருக்கின்ற தனித்துவங்கள் ஏனைய இனக் குழுமங்களுக்கு முன்மாதிரியானவை. பல்லாயிரம் ஆண்டுகள் தொன்மை கொண்ட இனம் தனக்கான சமூகக் கட்டமைப்புக்களைக் கொண்டே கடந்து வந்திருக்கிறது. இவ்வாறான தமிழினச் செழுமையின் ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட வாழ்வியலை படம்பிடித்துக் காட்டுவதே, "இடிபடும் கோட்டைகள்", என்கிற நாவல்.

வாழ்வியல் கோலங்களின் கனபரிமாணம் என்பது எங்களுடைய மூதாதையர்களால் விரதம் போன்று கண்ணியமாக கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றது என்பதை இந்த நூல் பட்டவர்த்தனப்படுத்தியிருக்கிறது. சமூகக் கட்டமைப்புக்கள் ஒவ்வொன்றுக்கும் இடையிலான இணைப்புக்கள், அந்த இணைப்புக்களின் கனதியான தொடர்புகள் என்பனவற்றை கண் முன்னே நிறுத்தி காலத்தை இன்னொரு காலத்துக்கு மாற்றிக் கொடுக்கின்ற ஒரு இலக்கிய முயற்சியாகவே இதனைப் பார்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைய காலத்தில் சமூக விழுமியங்கள் பல மூடக் கொள்கைகளையும் பழக்கவழக்கங்களையும் கொண்டிருந்தி ருக்கின்றன என்பதையும் அவதானிக்க முடியும். இந்தச் சூழலில் முற்போக்கு சிந்தனையாளராக மட்டுமல்லாமல் முற்போக்கு செயற்பாட்டாளராக வாழ்ந்து காட்டிவருகின்ற திரு.நா.யோகேந்திரநாதன் அவர்களினால் இந்த நூல் உருப் பெற்றிருப்பது இன்னொரு சிறப்பம்சமாகும்.

திரு. நா. யோகேந்திரநாதன் அவர்கள் எழுத்துலகில் கால்பதித்து ஐம்பது ஆண்டுகளைக் கடந்த நிலையிலும் அவருடைய இலக்கியப் பதிவுகள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிற்கே அச்சிலேற்றப்பட்டவையாக இருப்பது வேதனைதரும் விடயம் தான். ஆனால் அவ்வாறான சூழல் ஏற்படுவதற்கு பிரதான காரணமாக அமைந்தது அவர் மிகச்சிறந்த போர்க்கால எழுத்தாளராக செயற்பட்டிருந்தமைதான். போர்க்காலத்தில் பத்திரிகை ஆசிரியராக, வானொலி நாடக எழுத்தாளராக, வானொலி நிகழ்ச்சிகளின் படைப்பாளராக, தயாரிப்பாளராக வானொலி மற்றும் அரங்க நாடக இயக்குநராக செயற்பட்ட அவர் ஈழத்தின் தொடக்க கால சினிமா முயற்சிகளிலும் அரும்பங்காற்றியிருந்தார். போர்க்காலத்தில் ஊடகங்களுக்காக நாளாந்தம் குறைந்தது இரண்டு அல்லது மூன்றுக்கும் மேற்பட்ட படைப்புக்களை எழுதியிருந்த போதிலும் அவை அந்த ஊடகங்களோடேயே போரோடு அழிந்துபோயின.

போருக்குப் பின்னான முயற்சியாக தமிழ்லீடர் வெளியீட்டகத்தின் முயற்சியால் “நீந்திக் கடந்த நெருப்பாறு” என்கிற தொடர் நாவல்களையும் அதன் தொடராக தற்போது அதே வெளியீட்டகத்தின் ஊடாக “இடிபடும் கோட்டைகள்” என்கிற இந்த குறு நாவலினையும் பதிவாக்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லாயிரம் ஆண்டுகள் தொன்மைவாய்ந்த சமூகக் கட்டமைப்பினை அல்லது பாரம்பரியத்தினை குறுகிய காலத்தில் புரட்டிப் போட்டவை இலத்திரனியல் ஊடகங்கள் தான் என்றால் அதனை மறுதலிக்க முடியாது. இந்தச் சூழலில் கால மாறுதலுக்கு முன்பான சமூக வாழ்க்கை முறையை பதிவாக்க வேண்டியது காலத்துக்கு நாங்கள் செய்கின்ற கைமாறுதான். அந்த வாழ்க்கை முறை படிமுறை மாற்றங்களால் வேறுபட்ட சூழலை நோக்கி உந்தப்படுவது உண்மை என்றாலும் கூட அன்றைய சூழலை அவ்வாறே படம்பிடித்துப் பதிவாக்குகின்ற இந்த முயற்சிக்காக தமிழ்லீடர் வெளியீட்டகத்தாருக்கும் ஆசிரியருக்கும் மனம் நிறைந்த வாழ்த்துகளும் நன்றியும்.

இளங்கீரன்,

ஊடகவியலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரிடமிருந்து.....

கடந்த போய் முடிந்துவிட்ட காலங்கள் திரும்பி வருவதில்லை. ஆனால், அவை இலக்கியங்களாக வடிவெடுக்கும் வரலாற்றுப் பதிவாகி நிலைபெற்று விடுவதுண்டு. அவை கற்பனைகளால் அலங்கரிக்கப்பட்டாலும் படைப்பாளியின் எண்ணப் போக்குகள் அவற்றில் பதிந்து கிடந்தாலும், கால கட்டத்தின் சுவடுகளையும் அக் காலகட்டத்தில் நிலவிய சமூக உறவுகளையும் கரைத்துவிட முடிவதில்லை.

நான் சிறுவனாயிருந்த காலத்தில் சந்தித்த பல அனுபவங்களையும், அவற்றின் அடிப்படைகளையும் அப்போது நான் புரிந்து கொண்டிராதபோதிலும் அவை எனது மனதில் ஆழமான பதிவுகளை ஏற்படுத்தியிருந்தன.

பனிபடர்ந்த காலைப் பொழுதில் செம்மண் தோட்டங்களில் செழித்து நிற்கும் புகையிலைக் கன்றுகளும், அவற்றுக்கு நீர் பாய்ச்ச துலாவின் மேலும் கீழும் திரும்பத் திரும்ப காத்தவராயன் பாடல்களை இசைத்தவாறே துலா மிதிக்கும் தொழிலாளிகளும், உயரப் பனையைக் கட்டிப் பிடித்து ஏறி வட்டுக்குள் போய் பாளை தட்டும் சீவல்காரரும், ஆரம்ப நாட்களில் எனக்கு மனித சக்தியைவிட மேம்பட்ட அதிசயங்களாகவே தெரிந்தன. அதேவேளையில் எரு லொறிகளும், குழை லொறிகளும் குஞ்சர் கடைச் சந்தியில் வரிசையாக நிற்க, தரகர்கள் பேரம் பேசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை தோட்டங்களுக்கு அனுப்புவதும் எனக்கு ஒரு கலகலப்பான அனுபவமாக இருந்தன. பனையோலையால் வீடு வேய்தல், அலம்பலால் வேலியடைத்தல் எல்லாமே இன்று காணாமற் போய்விட்டன.

மூத்தநயினார் கோவில் திருவிழா தொடங்கிவிட்டால் விரதங்கள் ஒருபுறமும் களியாட்டம் மறுபுறமும் என ஒரு புதிய உலகம் பிறந்துவிடும். சாதிக்கு ஒரு திருவிழா என்ற அடிப்படையில், நட்டுவ மேளம், சின்ன மேளம், சப்பறம், சிகரம், வான வேடிக்கை என ஒரே போட்டிமயமாகிவிடும்.

இவையெல்லாம் என் மனதில் ஒரு இன்பக் கிளுகிளுப்பை ஏற்படுத்தினாலும்கூட அவை இயல்பான நடைமுறைகளாகவே விளங்கின. இவையனைத்தின் பின்னாலும் சாதியமைப்பு என்ற வலிமையான ஒரு வலைப்பின்னல் இருந்தமையும், அதன் உயர்சாதி நிலவுடமையாளர்களால் உழைக்கும் மக்களான 'குடிமக்கள்' கடுமையாகச் சுரண்டப்படுகின்றனர் என்பதையும் அப்போது என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை.

இடையிடையே சாதிக்கட்டமைப்பை மீறிச் சில சம்பவங்கள் இடம்பெறத்தான் செய்தன. ஆனால், அவை வன்முறைகள் மூலமோ கொலைகள் மூலமோ அடக்கப்பட்டு விடுவதுண்டு. ஆரம்பத்தில் அவை தனிமனித முரண்பாடுகளால் வரும் பிரச்சினைகள் என நான் கருதியபோதும் போகப் போக என்னால் உண்மைகளை உணர முடிந்தது.

சாதி ஒடுக்குமுறையின் கொடுமைகளையும், அவை தொடர்பான போராட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு பல இலக்கியப் படைப்புகள் வெளிவந்துள்ளன. அவற்றில் பெரும்பான்மையானவை ஒடுக்குமுறைகளைப்பற்றி மட்டுமே பேசியுள்ளன.

உலகம் முதலாளித்துவமயப்பட்ட போதிலும், நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறையான சாதியமைப்பு எமது மண்ணில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டகாலம் நிலைத்து நின்ற காரணத்தை அவை பார்க்கத் தவறிவிட்டன. அதுதான் சாதிகளுக்கிடையே ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் ஒருவிதமான உறவுமுறை. ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட கடமைகளைத் தங்கள் உரிமையென இறுகப்பற்றிப் பிடிக்குமளவுக்கு சாதியமைப்பின் இழைகள் மரபுசார் பழக்க வழக்கங்களால் பின்னப்பட்டிருந்தன.

அவை தொடர்பான எனது அனுபவங்களும், அந்த அனுபவங்கள் புடம்போடப்படும்போது கிடைத்த பெறுபேறுகளுமே அந்த நூலாகும்.

*1950 – 1960* காலப் பகுதியிலேயே இந்தப் படைப்பு வலம் வருகிறது. அப்போது சாதிக் கட்டமைப்பை உடைத்து சில சம்பவங்கள் இடம்பெற்றாலும்கூட நிறுவமையப்படுத்தப்பட்ட போராட்டங்கள் ஆரம்பிக்கப்படவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் சிறுபான்மைத் தமிழர் மகாசபை அமைக்கப்பட்ட பின்பே மாற்றத்துக்கான சில முன் முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால், *1960* ஆம் ஆண்டை அடுத்த காலப்பகுதியில் சண்முகதாசன் தலைமையிலான தீண்டாமை ஒழிப்பு, வெகுஜன இயக்கம், சாதி ஒடுக்குமுறையைத் தகர்ப்பதில் பெரும் பங்கு வகித்ததை எவரும் மறுத்துவிடமுடியாது.

சாதியமைப்பு தகர்க்கப்பட்டு விட்டாலும், சாதி வேறுபாடு இலைமறைகாயாக இன்னும் உயிர்ப்புடன் உள்ளது என்பதை ஏற்கத்தான் வேண்டும். எப்படியிருப்பினும் ஒரு சிறு கால கட்டத்தைப் பதிவு செய்யும் எனது முயற்சிக்கு அனைவரினதும் ஆதரவை வேண்டி நிற்கிறேன்.

நன்றி

நா. யோகேந்திரநாதன்
(நூலாசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 01

காலை நேரச் சூரியன் செம்மைகளைத்து மெல்ல மெல்ல தன் வெண்ணிறக் கதிர்களை வீச ஆரம்பித்திருந்தான். அடுத்த காணியை நிறைத்திருந்த பனங்கூடலையும் கிணற்றடியின் கிழக்குப் பக்கமாக நின்றிருந்த தென்னையின் கீற்றுக்களையும் ஊடறுத்துப் பரந்த அந்த ஒளிக்கதிர்கள் பட்டு இன்னும் பனி ஈரம் முற்றாகக் காய்ந்து விடாத செவ்வரத்தை இலைகள் பளபளத்தன.

சொர்ணலட்சுமியின் சிவந்த மேனியில் தேய்த்துக் கொண்டிருந்த ராணிசந்தன சோப் அந்தக் காலைக் காற்றில் ஒரு மெல்லிய சுகந்தமான வாசனையைக் கலந்து விட்டிருந்தது. அந்த ஊரிலேயே ராணி சந்தன சவர்க்காரம் பாவிக்கும் ஒரு சிலரில் சொர்ணமும் ஒருத்தி. மற்றவர்கள் பெரும்பாலும் உப்புச் சவர்க்காரம் என அவர்களால் அழைக்கப்படும் சன்லைற்றையே குளிக்கவும் பாவித்துக் கொள்வார்கள். சில வயது முதிர்ந்தவர்கள் ஊத்தை உரைஞ்சிக் கல்லையே பாவித்துத் திருப்தி யடைவதுமுண்டு. அதிலும் சொர்ணத்தின் பாட்டி "உந்தக் கோதாரியிலை மாட்டுக் கொழுப்புக் கலக்கிறவங்களாம். உதையும் மனிசர் மேலிலை போடுறதே?" எனக் கூறி அவள் சவர்க்காரத்தைக் கையால் தொடுவதுகூடக் கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொர்ணம் ராணிசந்தன சோப்பை நன்றாக முகத்தில் தேய்த்துவிட்டு வாளியில் நிறைந்திருந்த நீரில் முகத்தைக் கழுவிக் கொண்டாள். எனினும் மெல்லிய எரிச்சல் கண்களில் இருக்கவே, மீண்டும் இரு கைகளாலும் நீரை அள்ளிக் கண்களுக்கு அடித்துக் கழுவினாள்.

கிணற்று மிதிகல்லில் ஏறி துலாக்கயிற்றைப் பிடித்து வாளியைக் கிணற்றுக்குள் விட்டு இழுத்தபோது சிறிதுதூரம் வந்த துலா அவள் இழுவையை ஏற்க மறுத்து அப்படியே நின்றுவிட்டது. அண்ணாந்து ஆடுகாலைப் பார்த்தாள். துலா ஒரு பக்கம் இழுபட்டு நெம்பு பக்கக் கட்டையில் பொறுத்துவிட்டது. இனி யாராவது துலாவில் ஏறி மறுபக்கம் துலாவைத் தள்ளினால்த்தான் கிணற்றில் அடுத்தவாளி நீரை அள்ள முடியும்.

துலா இப்படிப் பொறுக்கும்போது பக்கத்து வீட்டுச் செல்லையா குஞ்சியப்பரைத்தான் துலா தள்ளக் கூப்பிடுவதுண்டு. அவர் இப்போது தோட்டத்துக்குப் போயிருப்பார். உடலில் போடப்பட்ட சவர்க்காரம் காய்ந்து கொண்டிருந்தது.

என்ன செய்வது எனத் தடுமாறிக் கொண்டிருந்த வேளையில்தான் கள்ளுச்சீவி விட்டுப் பனையால் இறங்கிக் கொண்டிருந்த இளையவன் கிடுகு வேலிக்கு மேலால் அவள் கண்களில் பட்டான்.

அவள் சற்றுப் பலமான குரலில், "இளையவன்! இஞ்சை ஒருக்கால் வந்திட்டுப் போ", என்றாள்.

அரைப்பனையில் இருந்த அவன், "என்ன பிள்ளை அவசரமே?", என்றான். அவர்களின் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், எவருமே உயர்சாதியைச் சேர்ந்த பெண்களை அவர்கள் பச்சைக் குழந்தை என்றாலும் சரி படுகிழவி என்றாலும் சரி 'பிள்ளை' என்றே அழைப்பார்கள். அவ்வாறே உயர் சாதியினரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்த்தப்பட்ட சமூகப் பெண்களை 'பெட்டை' என்றே கூப்பிடுவார்கள்.

"ஓ... துலா தெண்டிப் போச்சுது! ஒருக்கால் தள்ளி விடு", என்றாள் சொர்ணம்.

"சரி வாறன்", என்றுவிட்டு வேகமாக இறங்கினான் அவன். அவளுக்குத் தான் உடுத்திருந்த ஆடை பற்றிய ஞாபகம் வந்தது. தனது வெள்ளை உள்பாவடையை நெஞ்சுக்குக் குறுக்காகக் கட்டியிருந்தாள். வெள்ளை நிறத்துணியில் நீர் படும்போது அது தனது உடலுக்குப் போதுமான மறைப்பு அல்ல என்பதை அவள் உணர்ந்து கொண்டாள். தோய்த்துப் பிழிந்து வைத்திருந்த தனது கலர்ச் சட்டையை உதறி விட்டு நெஞ்சுக்குக் குறுக்கே கட்டிக் கொண்டாள்.

இளையவன் கள்ளுமுட்டியை வேலியில் கொழுவி விட்டு துலாவை நோக்கி நடந்தான். அவன் துலாவை நெருங்கியதும் நின்று திரும்பிப் பார்த்துக் கொண்டான், "பிள்ளை அடித்துலாவிலை ஆர் பிடிக்கிறது."

"அது நான் பிடிப்பன்!", என்றாள் அவள்.

அவன் சிரித்துக் கொண்டு, "என்ன நீங்களோ?", எனக் கேட்டான்.

"நான் என்ன அவ்வளவு சக்கட்டையே? நீ ஏறு", என்றாள் அவள் ஒரு மெல்லிய பொய்க் கோபத்துடன். அவன் எதுவும் பேசாமல் துலாவில் ஏறினான். அவன் பக்கக் கட்டையில் நின்று கொண்டு துலாவில் முதுகைக் கொடுத்தவாறு, "ம் தள்ளுங்கோ", என்றான்.

மூச்சடக்கித் துலாவைத் தள்ளிய அவள் மூச்சை விட்டபோதுதான் அந்த அசம்பாவிதம் நடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்பாவடைக்கு மேல் சுற்றிக் கட்டப்பட்டிருந்த கலர்ச்சட்டை கழன்று கீழே விழுந்துவிட்டது. ஆனால் அவள் திடுக்கிட்டுக் குனிந்து எடுத்து முன்பக்கத்தை மறைத்துக் கொண்டுவிட்டாள். ஆனால் துலாவில் நின்ற இளையவனின் கண்களில் அவள் உள்பாவாடையுடன் நின்ற அந்தக் கணம் சிக்கி விட்டது. ஏதோ குற்றம் செய்து விட்ட உணர்வு அவனுள் எழ எதுவுமே பேசாது ஒருவித படபடப்புடன் துலாவிலிருந்து இறங்கி முட்டியையும் எடுத்துக் கொண்டு வேகமாகப் போய் விட்டான்.

அவன் அந்தக் கணத்தில் தன்னைக் கண்டுவிட்டான் என்பதை அவளும் புரிந்துகொண்டாள். அந்தக் கணத்தில் அவளில் தோன்றிய அந்தக் கூச்சம் அவளின் உடல் உள் நரம்புகளையே அதிர வைத்துவிட்டது போல் தோன்றியது. ஆனால் அவன் வேகமாக நடந்துபோனபோது விம்மிப் புடைத்த அவன் தோள்களையும், அவன் உடலின் உறுதியான அசைவையும் அவள் கவனிக்கத் தவறவில்லை. கலர்ச் சட்டையை மீண்டும் குறுக்கே கட்டிக் கொண்டு வாளித் துலாக் கயிற்றைப் பிடித்தாள். அவ்வளவு நேரமும் உள்பாவடையுடன் குளித்த அவளுக்குக் குறுக்குச் சட்டை இல்லாமல் குளிப்பதை நினைக்கவே ஒருவிதமான வெட்கம் தோன்றி உடலைக் கூச வைத்தது.

மேலும் நான்கைந்து வாளி அள்ளிக் குளிப்பை விரைவாக முடித்துவிட்டு கிணற்றடியை விட்டு வெளியேறினாள்.

வழக்கமாக நிலைக் கண்ணாடி முன் நின்று ஆடை மாற்றும் அவளுக்கு இன்று அதைப் பார்க்கவே ஒருவிதமான கூச்சம் தோன்றித் தடுத்தது. அந்தக் கணம் மீண்டும் மீண்டும் மனதில் தோன்றி உறுத்திக் கொண்டிருந்தது. ஆனால் தான் ஏதோ குற்றம் செய்து விட்ட எண்ணமோ, அல்லது அந்தச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பத்தின் மீதான வெறுப்போ தன்னுள் தோன்றவில்லை என்பதையும் அவள் உணரத் தவறவில்லை.

தம்பிப்பிள்ளை விதானையாரின் ஒரே பெண் வாரிசுதான் சொர்ணலட்சுமி. அவரின் ஆண் வாரிசான சொர்ணலிங்கம் கொழும்பு சட்டக் கல்லூரியில் முதலாம் ஆண்டில் படித்துக் கொண்டிருந்தான். ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்று நீதிமன்றங்களையே கலக்கும் ஒரு அப்புக்காத்துவாக வரவேண்டும் என்பது அவனின் கனவு.

தம்பிப்பிள்ளை விதானையாருக்கு 'அடியன் விதானை' என ஒரு பெயரும் உண்டு. அந்த ஊரின் பொலிஸ், நீதிமன்றம் எல்லாமே அவர்தான். அவரின் உயர்ந்த பட்சத் தண்டனையும் குறைந்தபட்சத் தண்டனையும் மாமரத்தில் கையைக் கொடுக்கும்படி சொல்லிவிட்டு தனது உப்புப் பிரம்பால் பின் பக்கத்தில் அடிப்பதுதான். அந்த ஊரில் எவருமே பொலிஸ் நிலையம் செல்லும் நிலை ஏற்பட அவர் இடமளித்ததில்லை.

மழை, புயல், பனி எனக் காலநிலை என்னதான் இடைஞ்சல் கொடுத்தாலும் அவர் அதிகாலையில் வெற்றி காட்டுப்பிள்ளையார் கோவிலில் சென்று பூசை காணத் தவறுவதில்லை. அவர் சற்றுப் பிந்தினாலும் பூசையை ஆரம்பிக்காது ஐயர் காத்துக் கொண்டிருப்பார். கோவிலிலிருந்து திரும்பும்போது அவரின் திருநீற்றுப் பூச்சும், சந்தனப் பொட்டும், காதில் கிடக்கும் மஞ்சள் அலரிப் பூவும் ஒரு தனியான புனித உணர்வையே ஏற்படுத்தி விடும்.

விதானையார் வந்து வீட்டுக்குள் புகுந்தபோது அந்த நாற்சார் வீட்டின் உள்விறாந்தையில் போடப்பட்டிருந்த வாங்கினில் சொர்ணம் அமர்ந்திருக்க தாய் கனகாம்பிகை அவளின் தலையை வாரிக் கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகாம்பிகை, "ஆட்டாதை பொறு.... பேன்....", என்று விட்டு தலையிலிருந்து ஒரு பேனை எடுத்து நகத்தில் வைத்துக் குத்தினாள். "எணேய்... நேரம் போட்டுது பேன் பிறகு எடுக்கலாம்... தலையைப் பின்னி, விடு", என்றாள் சொர்ணம்.

கனகம் விதானையாரைக் கண்டதும் சமையலறைப் பக்கம் திருப்பி பலமாக, "மாமி... இவர் வந்திட்டார். தண்ணியை ஊத்தனை", என்றாள்.

தலையைப் பின்னி முடிந்து ரிப்பன் கட்டிவிட்டு கனகம் சமையலறைப் பக்கம்போக சீதேவிப்பாட்டி அந்தப் பெரிய பித்தளைப் பேணி நிறைய பால்தேநீரை விட்டுக் கொண்டு வந்தாள். அதை வாங்கிக் கனகம் கொண்டுவந்து விதானையாரின் முன்பு வைத்தாள்.

சமையலறைக்குள் சென்ற சொர்ணம் மாபிள் பிளேட்டில் போட்டு வைக்கப்பட்டிருந்த இடியப்பத்தைக் கையில் எடுத்தாள். சீதேவிப்பாட்டி அம்மியில் அரைத்த செத்தல் மிளகாய்ச் சம்பலையும் வைத்து பால் சொதியை ஊற்றியவாறே, "ஒருவாய் சாப்பிடு! அப்பதான் உசாராய் சோதினை எழுதலாம்", என்றாள்.

சொர்ணம் ஒரு புன்னகையுடன் சாப்பிட ஆரம்பித்தாள். அன்று எஸ்.எஸ்.ஸி. சோதனையின் கடைசி நாள். எஸ்.எஸ்.ஸி. பரீட்சை என்றால் தமிழ், கணிதம், என்ற முக்கிய பாடங்கள் உட்பட ஆறு பாடங்கள் சித்தியடைய வேண்டும். அவற்றில் 5 பாடம் சித்தி என்றால் "றிவேட்" ஆடி மாதம் இடம்பெறும் பரீட்சையில் அந்த ஒரு பாடத்தைத் தனியாகச் சித்தியடைந்து எஸ்.எஸ்.ஸியை முழுமைப்படுத்தலாம். அப்படியில்லாவிட்டால் அடுத்த வருடம் திருப்பி எடுக்க வேண்டியதுதான். எஸ்.எஸ்.ஸியில் ஐந்தாறு வருடங்கள் தங்கியிருப்பவர்களும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொர்ணம் சாப்பிட்டு முடித்து எல்லாவற்றையும் தயார் செய்துவிட்டு தனது 'பைலட்' பேனைக்கு மை விட்டுக் கொண்டிருந்தபோது வாசலில் மணியண்ணையின் கார் கோர்ன் கேட்டது.

"அம்மா... போட்டுவாறன்", என்றுவிட்டு வெளிக்கேற்றை நோக்கிப் போனபோது இளையவன் கள்ளு முட்டியுடன் எதிர்ப்புறமாக வந்துகொண்டிருந்தான்.

பாட்டி சொன்னாள், "நல்ல முழுவியளம் பிள்ளை, பார் முட்டி கள்ளிலை பொங்கி நுரைக்குது", என்றாள்.

அவள் மெல்லப் புன்னகைத்தாள். அவளுக்கு இளையவன் எதிரில் வந்ததே நல்ல முழுவியளம் போலவே தோன்றியது.

ஒரு கணம் அவளின் கண்களும், அவனின் கண்களும் சந்திக்க அவன் கண்களை ஏனோ தாழ்த்திக் கொண்டான்.

கார் புறப்பட்டது.

அந்தக் காரின் நடுக் கண்ணாடியில் அவன் நடையின் உறுதியை அவள் ரசிக்கத் தவறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 02

இளையவன் சொர்ணம் ஏறிய காரை விலத்தியபோது அவள் பார்த்த பார்வையும் அவள் முகத்தில் படர்ந்த மெல்லிய புன்னகையும் ஒரு சில விநாடிகளுக்குள்ளேயே ஆயிரமாயிரம் கதைகளைச் சொல்லிவிட்டன போலவே மனதுக்குள் தோன்றியது. ஏனோ சம்பந்தமில்லாமலே கிணற்றடியில் அந்த மின்னல் வெட்டும் நேரமும் அவனின் கண்ணில்பட்ட அவளின் கோலமும் அவன் நினைவில் வந்து போயின.

அவன் காலையில் சீவ வேண்டிய பனைகளின் வேலை அனைத்தும் முடித்துவிட்டான். இனி வீட்டில் கொண்டுபோய் கள்ளை வைத்துவிட்டு தோட்டத்திற்குப் போகவேண்டியதுதான். வீடு தேடிவரும் வாடிக்கையாளருக்கு தாய் செல்லியே கள்ளூற்றிக் கொடுப்பாள்.

அவனின் தகப்பன் வேலன் நல்ல திடகாத்திரமானவன். ஐம்பது அறுபது பனைகளில் ஓய்வெடுக்காது தொடர்ச்சியாக ஓலைவெட்டும் ஆற்றல் படைத்தவன். அவன் அடித்துலாவில் ஏறினால் துலா மிதிப்பே களைகட்டிவிடும். விதானையார் வேலி அடைப்பு, வீடு மேய்ச்சல் என எந்த வேலை என்றாலும் அவனைத்தான் கூப்பிடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஒருமுறை மூத்தநாயனார் கோவிலில் மூன்றுநாள் தொடர்ந்து நித்திரை முழித்து திருவிழா பார்த்துவிட்டு, பகல் தோட்டத்தில் தண்ணி மாறிக் கொண்டிருந்தபோது தலைசுற்றி விழுந்தவன்தான் அத்துடன் ஒரு கையும் காலும் இழுத்துவிட்டன. பாரிசவாதம் அவனின் கடும் உழைப்புக்கு விடை கொடுத்து அவனை வீட்டுக்குள்ளேயே முடக்கி விட்டது.

அப்போ இளையவன் எட்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தான். அவன் படிக்கும்போதே லீவு நாட்களில் தகப்பனுடன் சென்று தொழில்களை நன்றாகவே கற்றிருந்தான். எனவே படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுக் குடும்பப் பொறுப்பைத் தனது தோளில் எடுத்துக் கொண்டான்.

விதானையார் வீடு இப்போ எல்லா வேலைகளுக்கும் அவனையே கூப்பிடுமளவுக்கு அவனின் தொழில் தேர்ச்சி அமைந்திருந்தது.

விதானையார் வீட்டில் விரதம், துவசம் என என்ன விசேஷம் நடந்தாலும் இளையவனுக்கு அங்குதான் மதிய உணவு.

அவன் தற்செயலாய் வராவிட்டாலும் உடனே சீதேவிப் பாட்டி ஆளைவிட்டு செல்லியைக் கூப்பிட்டு அவளிடம் சாப்பாடு கொடுத்து அனுப்பி விடுவாள்.

சொர்ணமும் சின்ன வேலை என்றாலும் அவனைக் கொண்டுதான் செய்விப்பாள். அவனும் முகம் சுழிக்காமல் செய்து முடித்துவிடுவான்.

ஆனால் காலை கிணற்றடியில் இடம்பெற்ற சம்பவமும், காரடியில் அவன் கண்ட அந்தப் புன்னகையும் ஏதோ வழமைக்கு மாறானவையாகவே அவனுக்குத் தோன்றின. அவற்றினை மறக்க வேண்டும் என நினைத்தாலும் அவை திரும்பத் திரும்ப ஞாபகத்துக்கு வந்து கொண்டேயிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரை முட்கள் நிறைந்த அந்தப் பனங்கூடலின் ஒற்றையடிப் பாதையில் நடந்து கொண்டிருந்தபோது ஈச்சம் புதருக்குள்ளிருந்து முயல் ஒன்று பாய்ந்து ஓடியது. ஒரு தடியை எடுத்து அதை எறிந்து விழுத்தும் நோக்குடன் பாதையை விட்டு அருகில் கால் வைத்தபோது காலில் ஏதோ குத்தி ஏறியதுபோல் வலித்தது. அவன் குனிந்து பார்த்தான். கால் பாதத்தில் ஒரு அணிஞ்சில் முள் ஆழமாக ஏறியிருந்தது. சிரமப்பட்டு அதைப் பிடுங்கி எறிந்தான். இரத்தம் கசியத் தொடங்கியது. முயலைத் தவற விட்ட ஏமாற்றத்துடன் அவன் நடக்க ஆரம்பித்தான்.

கால் நிலத்தில் படும்போது வலியெடுத்தது மட்டுமின்றி முள்ளு குத்திய இடம் விறுவிறுக்கத் தொடங்கியிருந்தது. அவன் வேகமாக வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

சொர்ணத்துக்கு அன்று எஸ்.எஸ்.ஸி. பரீட்சையின் கடைசிப் பாடம் தமிழ் இலக்கியம். அவள் விரும்பிப் படிக்கும் பாடங்களில் ஒன்று. எவ்வித தாமதமுமின்றி கேள்விகளுக்கு வேகமாக விடைகளை எழுதித் தள்ளிக் கொண்டிருந்தாள். கடைசிக் கேள்வி "வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும்" என்ற கும்பகர்ணன் வதைபடலப் பாடலுக்குப் பொழிப்பு எழுதி விளக்கம் எழுதவேண்டும். இராவணனின் மார்பும் தோளும் எப்படி இருக்கும் என்பதை வித்துவான் கனகசபை விளங்கப்படுத்துவதைக் கேட்டு அவள் தனக்குள் ஒரு கற்பனையை வளர்த்திருந்தாள். ஆனால் இப்போ அந்த வரிகளைப் பார்த்தபோது இளையவனின் மார்பும் தோள்களுமே நினைவுக்கு வந்தன. தனக்குள்ளாகவே அவள் சிரித்துக் கொண்டு விளக்கத்தை எழுத ஆரம்பித்தாள். முன்னெப்பொழுதையும் விட மிகத் திறமான முறையில் விளக்கம் எழுதிவிட்ட திருப்தியில் எழுதிய தாள்களைக் கோர்த்துக் கட்டினாள்.

ஒவ்வொரு பாடமும் எழுதி முடித்து வரும்போது அவளை லில்லி ரீச்சர் அழைக்கத் தவறுவதில்லை. அன்றும் ஒரு மாணவி வந்து லில்லி ரீச்சர் அழைப்பதாகக் கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீச்சர் கேள்விப் பேப்பர்களை வாங்கிப் பார்த்து அவளிடம் எழுதிய விபரம் பற்றிக் கேட்டுவிட்டு, "உமக்கு இந்தமுறை கெமிஸ்றி, பிஸிக்ஸ், சூலஜி, இலக்கியம் நாலிலும் 'டி' வரும். மற்றப் பாடங்களிலும் 'சீ' எடுப்பீர். எச்.எஸ்.ஸிக்கு 'பயோ' செய்யும் கட்டாயம் 'மெடிசின்' எடுபடுவீர்", என்றாள்.

சொர்ணம் மகிழ்ச்சியுடன் தலையசைத்தாள். அவளின் நினைவில் மந்திகை மருத்துவமனை விறாந்தையில் தான் கழுத்தில் ஸ்தெடஸ்கோப்புடன் 'டக்... டக்.' என நடந்துபோவது ஒருமுறை நிழலாடி மறைந்தது.

அந்தநேரத்தில் தூரத்தில் சகமாணவர்களுடன் கதைத்துக் கொண்டிருந்த தங்கவேல் அவளைக் கண்டதும் அருகில் வந்தான். அவனும் சொர்ணலட்சுமியைப் போலவே மிகவும் கெட்டிக்கார மாணவன் எனப் பெயரெடுத்தவன்.

லில்லி ரீச்சர் அவனைப் பார்த்து, "எச்.எஸ்.ஸிக்கு எந்தப் பள்ளிக்கூடம் 'ட்ரை' பண்ணப்போறீர்?", எனக் கேட்டாள். அவன் சற்று யோசித்துவிட்டு, "ஹாட்லிக்குத்தான் ரீச்சர்", என்றான்.

ரீச்சர் ஒரு புன்னகையுடன் கேட்டாள், "சொர்ணமும் கொன்வெண்டிற்கோ அல்லது மெதடிஸ்க்கோ போயிடுவாள். அப்ப ஹாட்லியில ஆரோடை போட்டி போடுவீர்?", அவன் எவ்வித தயக்கமுமில்லாமல் சொன்னான், "போட்டியைப் பிறகு மெடிக்கல் கொலிஜிலை தொடருவம்."

மெடிசின் செய்வதில் அவனுக்கிருந்த உறுதியும் தனது திறமையில் அவன் வைத்திருக்கும் நம்பிக்கையும் லில்லிக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவள் 'பயோ சயன்ஸ்' ஆசிரியையாகையால் அவளும் அவர்கள் மெடிசினுக்கு எடுபடுவார்கள் எனத் திடமாக நம்பினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியிருப்பினும் இரு கெட்டிக்கார மாணவர்கள் தன்னை விட்டுப் பிரிவது அவளுக்குக் கவலையாகத்தான் இருந்தது. ஆனால் அந்தப் பாடசாலையில் எஸ்.எஸ்.ஸிக்கு மேல் வகுப்புக்கள் இல்லாத நிலையில் அவள்தான் என்ன செய்ய முடியும்?

எல்லோரும் ரீச்சரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு புறப்படத் தயாரானார்கள். லில்லி ரீச்சர் ஒவ்வொரு வருட இறுதியிலும் இப்படியான கவலைகளைச் சந்திப்பதுண்டு. ஆனால் கடந்த மாதம் அடுத்த வருடம் அங்கு எச்.எஸ்.ஸி. தொடங்க முயற்சி எடுப்பதாக அதிபர் கூறியிருந்தார். அது மட்டும் நிறைவேறினால் அவர்கள் இருவரையும் தனது மேற்பார்வையிலேயே பல்கலைக்கழகம் அனுப்ப முடியும் என நினைத்து அவள் தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டாள்.

அன்று மாலை அவள் தான் ஆசையாக வளர்க்கும் பூக்கன்றுகளுக்கு நீருற்றிக் கொண்டிருந்தபோதுதான் இளையவன் இரு பனையோலைகளை தோளில் சுமந்து கொண்டு வந்து முற்றத்தில் போட்டான். இன்னும் சிறிதுநேரத்தில் சின்னன் ஓலைகளை ஈர்க்கிலிருந்து பிரித்தெடுத்து ஓலை குத்தியால் கீலங்களாக்கி மாடுகளுக்குப் போடுவாள்.

இளையவன் விதானையாருக்கென எடுத்து வந்த தனிப் பனைக் கள்ளை முட்டியுடன் வேலிக் கதியாலில் கொழுவி விட்டு, மீண்டும் மாலின் முற்றத்துக்கு வந்தான். தான் கொண்டு வந்த ஓலையை எடுத்து நிமிர்த்திப் பிடித்து ஓலைச் சிறகுகளைத் தன் கத்தியால் சிராய்த்து மூரி மட்டையை வேறாக்கினான்.

அவன் மூரி மட்டைகளைக் கொண்டுபோய் வேலிக் கரையில் போட்டுவிட்டுத் திரும்பும்போதுதான் தற்செயலாக அங்குவந்த சீதேவிப் பாட்டி அவன் ஒரு காலை நிலத்தில் வைக்க சிரமப்படுவதை அவதானித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“டேய் இளையவன்! என்னடா காலை நொண்டுகிறாய்”, எனக் கேட்டாள்.

அவன் ஒரு அசட்டுச் சிரிப்புடன் தயங்கியவாறே, “அது அடிக் காலிலை அணிஞ்சில் முள்ளு ஒண்டு ஏறியிட்டுது”, என்றான்.

“ஆகாசத்தைப் பார்த்துக் கொண்டு நடந்தே அணிஞ்சில் முள்ளிலை காலை வைச்சனி... எடேய் விஷமல்லே”, எனச் சொல்லியவாறே சீதேவிப்பாட்டி அவனின் காலைப் பார்த்தாள்.

“அது சாடையாய் நோகுது! மாறிடும்”, என்றான் அவன்.

“விசர்க்கதை கதைக்கிறாய். பொல்லாத விஷமடா... நில் உப்பு வைத்துச் சுடவேணும்”, என்றுவிட்டு பாட்டி சொர்ணத்தைப் பார்த்து, “சின்னன் பெட்டை வந்திட்டாளே?”, எனக் கேட்டாள்.

“ஓமணை. ஆட்டுக்குக் குழை வெட்டுறா”

“உடனை வரச்சொல்லிக் கூப்பிடு”, என்றுவிட்டு நடந்தாள்.

சின்னன் பெட்டை என அழைக்கப்படும் சின்னன் வரவும் கிழவி உப்புக் கல்லுடனும், நெருப்புக் கொள்ளியுடனும் வருவது தெரிந்தது.

சொர்ணம் மெல்ல அவனருகில் சென்று கேட்டாள், “உப்புச் சூடத் தாங்குவியே”

“என்ன செய்யுறது? தாங்கத்தானே வேணும்! இல்லாட்டி ஏற்பாக்கி விடுமே”, என்றான் மெல்லிய குரலில். அவன் முகத்திலும் ஒரு பயம் பரவியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 03

சொர்ணத்துக்கு ஏனோ அன்று இரவு தூக்கம் வர மறுத்துப் பிடிவாதம் பிடித்துக் கொண்டிருந்தது. அவள் புரண்டு புரண்டு படுத்தாள். அன்று காலை கிணற்றடியில் இடம்பெற்ற சம்பவம், பாடசாலைக்குப் போகக் காரில் ஏறியபோது பாட்டி நல்ல முழுவியளம் எனச் சந்தோசப்பட்ட அந்தச் சமயத்தில் இளையவனின் கண்களுடன் தனது பார்வை நேருக்கு நேர் மோதிக் கொண்டமை, கார்க் கண்ணாடிக்குள்ளால் அவன் பின்புற உடலை ரசித்தமை, பரீட்சை எழுதும்போது, "வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும்", என்ற வரிகள் வந்தபோது அவனின் நினைவுவர ஒரு புதிய உற்சாகம் பிறந்தமை எல்லாமே அவளில் ஏதோ ஒருவிதமான இனிய உணர்வைத் தோற்றுவித்திருந்தன.

ஆனால் அன்று மாலை நடந்த சம்பவம் அந்த இனிய உணர்வை ஏதோ ஒருவிதமாக அவளால் புரிந்துகொள்ள முடியாத குழப்பத்துக்குள் தள்ளி அவளின் மனதை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

சீதேவிப்பாட்டியிடம் சின்னன் உப்புக் கல்லையும் நெருப்புக் கொள்ளியையும் கையில் வாங்கியபோது இளையவன் முற்றத்தில் முன்குந்தில் காலை நீட்டிக் கொண்டு மறுகாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடக்கி ஒற்றைக் கையை நிலத்தில் ஊன்றிப் பக்கவாட்டாக அமர்ந்து கொண்டான்.

சின்னன் காயத்தில் உப்புக்கல்லை வைத்துவிட்டு அதன்மேல் நெருப்புக் கொள்ளியை வைத்தாள். மெல்ல மெல்லச் சூடேறுவது இளையவனின் முகத்தில் தெரிந்தது. இளையவன் சூடு தாங்க முடியாமல் பற்களை இறுகக் கடித்துக் கொண்டான். அவன் முகம் இறுகிக் கண்கள் சிவந்தன. நிலத்தில் ஊன்றியிருந்த கைகளில் நரம்புகள் புடைத்து வெளியே தெரிந்தன.

அவன் பட்ட வேதனை சொர்ணத்தின் உடலைச் சில்லிட வைக்க அவள் தன்னையறியாமல், "ஐயோ....", என்று விட்டாள்.

சின்னன் திடீரென்று சொர்ணத்தை நிமிர்ந்து பார்த்தாள். அவளின் விழிகளில் தெரிந்த உணர்வு கோபமோ அல்லது சந்தேகமோ என்பதைச் சொர்ணத்தால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவள் சொன்னாள், "பிள்ளை நீர் உள்ளை போம்..."

அவள் குரலில் தெரிந்த அழுத்தத்தில் சொர்ணம் ஒரு கணம் தடுமாறி விட்டாள். பின் ஒருவாறு சமாளித்துக் கொண்டு, "இல்லை நான் பயப்படேல்லை", என்றாள்.

உப்புக் கல்லில்லிருந்து நெருப்புக் கொள்ளியை விலக்கியவாறே சின்னன் "நீர் பயப்படேல்லை எண்டது எனக்கும் தெரியும்", என்றாள். அவள் உப்புக் கல்லு சுட்ட இளையவனின் பாதத்தை மெல்லத் தடவியவாறே, "காலைமையும் ஒருக்கால் சுட்டால் சரி! காலைமை வீட்டை வந்து செய்துவிடுறன்", என்றாள். சீதேவிப்பாட்டி, "மறந்திடாமல் காலைமை போ", என்றுவிட்டு உள்ளே போய் விட்டாள். சின்னன் ஒருமுறை சொர்ணத்தின் முகத்தைப் பார்த்துவிட்டு கொக்கத்தடியை எடுத்துக் கொண்டு வேலியை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொர்ணம் மெல்ல அவனிடம் கேட்டாள், “இப்ப மாறிட்டுதே?”, அவன் ஒரு மெல்லிய புன்னகையுடன், “சுட்டவுடனே மாறுதே... இனி காலைமையும் சுட மாறிவிடும்”, என்றுவிட்டு கத்திக் கூட்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டு புறப்பட்டான்.

இளையவன் சங்கடப்படலையால் வெளியேறும்வரை சொர்ணம் அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள். அவன் இப்போது முன்பை விட கூடுதலாகக் காலை இழுப்பது போலவே தோன்றியது. சொர்ணம் மீண்டும் பூக்கன்றுகளுக்கு நீர் ஊற்ற ஆரம்பித்தபோது சின்னன், “நீர் பயப்பிடேல்லை எண்டது எனக்குத் தெரியும்”, என்று சொன்ன வார்த்தைகளும் அவள் தன்னைப் பார்த்ததில் ஒரு வித்தியாசம் இருந்ததும் ஒருமுறை மூளையில் மின்னலிட்டு மறைந்தன.

சின்னன் இளையவனின் தகப்பனின் கூடப்பிறந்த தங்கைதான். திருமணமாகி ஒரு வருடத்திற்குள்ளேயே அவளின் கணவன் பனையால் விழுந்து இறந்துவிட்டான். அதன் பிறகு அவள் வேறு திருமணம் செய்யவில்லை. தானே உழைத்துத் தன் சீவியத்தை ஓட்டிக் கொண்டிருந்தாள்.

சின்னன் கணவன் இறந்த பிறகு விதானையார் வீட்டின் தொட்டாட்டு வேலைகளைச் செய்து வந்தாள். அதிகாலை ஐந்து மணிக்கே வந்து ஆட்டுக் கொட்டகை, மாட்டுக் கொட்டில் எல்லாம் துப்புரவு செய்துவிட்டு முற்றம் கூட்டுவாள். அவளின் வேலை முடிந்ததும் சீதேவிப் பாட்டி கொடுக்கும் காலை உணவை வாங்கிக் கொண்டு ஏழு மணிக்கு முன்பே போய் விடுவாள். பின்பு மாலையில் வந்து ஆடுகளை அவிழ்த்துக் கட்டி குழைகள் வெட்டிக் கட்டித் தூக்கிவிட்டு, மாடுகளுக்கு ஓலை கிழித்துப் போடுவாள். காலையிலும் மாலையிலும் எருது மாடுகளுக்குத் தவிடு, புண்ணாக்கு குழைத்து வைப்பதும் அவளின் வேலைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியாக இந்த வீட்டுடன் ஒன்றிப் போய்விட்ட சின்னன் ஏன் அப்படிப் பார்த்தாள் என்பதும், ஏன் அப்படிக் கூறினாள் என்பதும் இப்போது சொர்ணத்தின் முன் கேள்விகளாக எழுந்து நின்றன.

சில சமயங்களில் தான் இளைவனிடம் மனதைப் பறிகொடுத்துவிட்டதாக அவள் நினைக்கிறாளோ என்ற பயமும் எழத் தவறவில்லை. ஏனெனில் சின்னன் தன் கணவன் இறந்த பின்பு சந்தித்த வாழ்க்கை அனுபவங்கள் அவளை அப்படிச் சந்தேகிக்க வைப்பதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. ஒரு வருடத்துக்குள் இழந்துபோய்விட்ட அவள் குடும்ப வாழ்வு, அவளின் எதிர்காலத்தையே திசை திருப்பிவிட்ட அவலத்தைச் சந்தித்தவள் அவள்.

அப்படி சின்னனுக்கு ஒரு சந்தேகம் எழுந்தால் அப்படி ஒரு உறவு வளர்வதைத் தடுக்க அவள் எல்லா முயற்சிகளையும் செய்வாள் என்பதைச் சொர்ணம் நன்கு தெரிந்தே வைத்திருந்தாள்.

ஆனால் சொர்ணத்தின் குழப்பத்துக்குக் காரணம் சின்னனுக்கு அப்படி ஒரு சந்தேகம் எழுந்ததோ, இல்லையோ என்பதற்கு அப்பால் தன்னுள் அப்படி ஒரு உணர்வு உருவாகி விட்டதா அல்லது உருவாக முடியுமா என்பதுதான்.

அவனைக் காணவும், அவனுடன் கதைக்கவும் ஒரு விருப்பம் அவளுக்கு உள்ளூர இருந்தது உண்மைதான். அன்று காலை கிணற்றடியில் அந்தச் சம்பவம் இடம்பெறுவதற்கு முன்பு அவள் அதன் அர்த்தத்தையிட்டுப் பெரிதாக எதையும் யோசித்துப் பார்த்ததில்லை. ஆனால் இப்போ அதன் காரணங்கள் பற்றிய குழப்பம் மனதை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

அவள் எட்டாம் வகுப்புப் படித்தபோது அவர்களின் ஆங்கிலப் பாடப்புத்தகமாக "ரேல்ஸ் ஒவ் சேக்ஸ்பியர்" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேக்ஸ்பியரின் கதைகளே அமைந்திருந்தன. அதில் அவள் ரோமியோ ஜூலியட் கதையையும் பொருந்தாத காதல் மரணத்தில் முடிந்ததையும் படித்திருக்கிறாள். கல்கி வாரப் பத்திரிகையில் தொடராக வெளிவந்த சிவகாமியின் காதல் நிறைவேறாது கடைசியில் அவள் "தலைப்பட்டாள் தலைவன் தாளே" என இறைவனிடம் தஞ்சமடைவதையும் நினைவுபடுத்திக் கொண்டாள்.

அப்படி ஒரு பொருத்தமற்ற காதலில் சிக்கி தனது வாழ்வைப் பாழாக்க அவள் தயாரில்லை என்பதில் அவளுக்கு எவ்வித குழப்பமும் இருக்கவில்லை. ஆனால் ஏன் அவன்மீது ஒருவிதமான ஈர்ப்பு ஏற்படுகின்றது என்பதை மட்டும் அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் அது தவிர்க்கப்பட வேண்டியது என்பதை அவள் உணரவும் தவறவில்லை.

இனி அவனுடன் பழகுவதைப் பேசுவதை ஏன் காண்பதைக்கூட முடிந்தளவு தவிர்க்க வேண்டும் என அவள் முடிவு செய்துகொண்டாள். அதன் பின்பு அவள் தன்னையறியாமலே தூங்கிவிட்டாள்.

வீட்டின் உள்விறாந்தைச் சுவரில் மாட்டப்பட்டிருந்த ரோமன் சுவர்க்கடிகாரம் ஏழுமணியடித்தபோதுதான் திடுக்கிட்டு எழுந்தாள். எழுந்து யன்னலைத் திறந்தபோது அவளை அறியாமலே அவளின் கண்கள் கண்டுப்புளியடிப் பனையை நோக்கின. அதில் இளையவன் காணப்படாதது ஏதோ ஒருவிதமான ஏமாற்றத்தை அளித்தது போலவே தோன்றியது. ஆனால் இரவு மனதில் எடுத்த முடிவை நினைத்துக் கொண்டவளாகக் கவனத்தை வேறுபக்கம் திருப்ப முயன்றாள்.

அவள் வெளியே வந்து தனது காரியங்களில் ஈடுபட்ட போது மனம் ஏன் அவன் இன்னும் வரவில்லை என்ற கேள்வியை எழுப்பிக் கொண்டிருந்தது. சிலவேளை ஏற்பு வலி, வந்து ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டிருக்குமோ என நினைத்தபோது நெஞ்சு ஒருமுறை அதிர்ச்சியில் உறைந்தது. உப்புக்கல்லு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துச் சுட்டதால் அப்படி எதுவும் நடந்திராது என அவள் தன்னைத் தேற்றிக் கொண்டாள். எனினும் அவளின் கட்டுப்பாட்டுக்கு அப்பாலேயே கண்கள் அடிக்கடி சங்கடப் படலையை நோக்கத் தவறவில்லை.

சொர்ணம் திருநீற்றை எடுத்து நெற்றியில் பூசி சாமி படத்தைக் கும்பிட்டுவிட்டு வெளியே வந்தபோது சீதேவிப் பாட்டி அவளை அழைத்தாள். "பிள்ளை ஆடுகளைக் கொண்டுபோய் கண்டுபுளியடிக்கை கட்டிப் போட்டு வா", என்றாள் அவள். வழக்கமாக ஆடுகளைத் தடவிக் கொடுத்துக் கொண்டுபோய் மேயக் கட்டுவது பாட்டிதான். பாடசாலை இல்லாத நாட்களில் பாட்டி அந்த வேலைகளை சொர்ணத்திடம் கையளித்து விடுவாள். இனி தவணை லீவு முடியும் மட்டும் அது தனது பொறுப்பில்தான் என நினைத்து தனக்குள்ளாகவே சிரித்துக் கொண்டாள் சொர்ணம்.

ஆடுகளின் கழுத்துகளில் கயிறுகளைப் போட்டுக் கால் கட்டுகளைக் கழற்றி வெளியே கொண்டுவந்தபோது சீதேவிப் பாட்டி பலமாகச் சொன்னது காதில் விழுந்தது.

"வேலிக்கரையிலை கிளுவம் முள்ளுகள் கிடக்கும் கண்ணை மூடிக் கொண்டு காலை வைச்சுப் பிறகு இளையவனைப்போல வில்லங்கப்படாதை"

கிளுவம் முள்ளைவிட இளையவனின் பெயர்தான் அவள் மூளையில் கூடுதலாக உறைந்தது. மீண்டும் ஒருமுறை சங்கடப்படலையைப் பார்த்தாள். அது வெறுமனையேதான் இருந்தது.

ஆடுகளை ஒவ்வொன்றாகப் பிடித்துக் காரைமுட் செடிகளில் கட்டிவிட்டுத் திரும்பி வந்தபோது இளையவன் தான் ஏற வேண்டிய பனைக்கு வந்துவிட்டான். அவன் பனையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை நிமிர்ந்து பார்த்துவிட்டு ஒரு காலை உயர்த்தி தளநாரைக் கொழுவியபோது சொர்ணம் அருகில் வந்துவிட்டாள்.

"என்ன இளையவன்! இன்றைக்கு நல்லாப் பிந்திப் போனாய்?", அவளின் குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்த இளையவனின் முகம் திடீரென ஓடிக் கறுத்ததை அவள் அவதானித்து விட்டாள். அவன் தயக்கத்துடன், "ம்... சின்னன் மாமி வந்தவா", என்றான்.

"உப்புக் கல்லு வைத்துச் சுட்டவவே"

"ம் சுட்டவ!", என்று எங்கோ பார்த்தவாறே கூறிவிட்டு அவன் வேகமாகப் பனையில் ஏற ஆரம்பித்தான்.

அவளைக் கண்டதும் வழமையாக மலரும் அவனின் முகம் இன்று ஓடிக் கறுத்ததையும், தன்னுடன் கதைக்க விரும்பாதது போல் ஒரு சொல்லில் பதிலைக் கூறிவிட்டு வேகமாகப் பனையில் அவன் ஏறியதும் ஏன் என்று அவளால் புரிய முடியவில்லை.

திகைத்துப் போய் அவன் ஏறுவதைப் பார்த்துக் கொண்டு நின்று விட்டு ஒரு பெருமூச்சுடன் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். மீண்டும் மனம் ஏதேதோ குழப்பங்களில் தவிக்கத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 04

இளையவன் பனையில் வேகமாக ஏறிக்கொண்டு விட்டான். கைகள் பாளையைச் சீவி விட்டு, லயம் பிசகாமல் தட்டுப் பொல்லால் தட்டிக் கொண்டிருந்தபோதும் மனம் பெரும் குழப்பத்திற்குள் சிக்கிவிட்டது போன்றே அவனுக்குத் தோன்றியது. சொர்ணம் கதை கேட்டபோது அதை முறிப்பது போன்று பதில் சொல்லிவிட்டு மரத்தில் ஏறியது ஏதோ ஒரு செய்யக்கூடாத குற்றத்தைச் செய்துவிட்ட மாதிரி அவனின் மனம் சஞ்சலப்பட ஆரம்பித்தது.

அதைத் தான் வேண்டுமென்றே செய்யவில்லை என்பதையும் அது ஒரு தவிர்க்க முடியாத கட்டாயம் என்பதையும் அவன் நன்றாகவே தெரிந்திருந்த போதிலும் அவனின் மனம் சமாதானமடைய மறுத்தது.

அவன் அப்படி நடந்து கொண்டதற்கு வலுவான காரணம் இருக்கவே செய்தது.

காலையில் உப்புச் சுட வந்த சின்னனின் முகம் கடுகடுப்பாக இருந்ததை அவன் கவனித்தபோதும் அதைப் பற்றி எதுவுமே கேட்கவில்லை. அவள் உப்புக்கல்லு நெருப்புக் கொள்ளி வைத்தியத்தை முடித்துவிட்டு சொன்னாள், "டேய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளசு... இனி நீ அந்த விதானையாரின்ரை பிள்ளையோட பேசுறது பழகிறதைக் கொஞ்சம் குறைச்சுக் கொள்", என்றாள்.

இளையவன் அதிர்ந்தே போய்விட்டான்.

"மாமி... நீ... என்ன சொல்லுறாய்...?"

அவள் உறுதியாய்ச் சொன்னாள், "உங்கடை போக்கு எனக்குப் பிடிக்கேல்லை. உது பெரிய ஆபத்திலைதான் கொண்டு வந்துவிடும்."

இளையவன் தலையைக் குனிந்தவாறு தயக்கத்துடன் சொன்னான், "நான் அப்பிடி ஒண்டும் நினைக்கேல்லை மாமி..."

"எனக்குத் தெரியும்.. நீயும் அப்பிடியில்லை... சின்னதும் அப்பிடியில்லை! ஆனால் உங்கடை வயசுக்கு அது தெரியாது"

சின்னன் சொர்ணத்தைச் சின்னது என்றுதான் அழைப்பதுண்டு. அவன் மேற்கொண்டு எதுவுமே பேசவில்லை. ஆனால் தனது மாமி கண்டுபிடிக்குமளவுக்கு தமது நடைமுறைகளில் ஏதோ ஒருவித பிழை இருப்பதாக அவனும் உணர்ந்தான்.

"ஏதோ நான் சொன்ன மாதிரி நட. போனம் தொழிலைச் செய்தம் வந்தம் எண்டு நட! அதுபோதும்!"

சின்னன் சொல்லிவிட்டு அவனின் பதிலை எதிர்பாராமலே போய்விட்டாள்.

அவனிடமும் சொல்வதற்குப் பதில் எதுவும் இருக்கவில்லை.

முட்டியைக் கட்டிவிட்டு எடுத்த கள்ளை கத்திக்கூட்டில் தொங்கவிட்டுக் கொண்டு கீழே இறங்க ஆரம்பித்தான்.

கண்டுப்புளியடியை விட்டு விதானையாரின் காணிக்குள் இறங்கியபோது அவனையறியாமலே அவனின் கண்கள் சொர்ணத்தைத் தேடின. அவளை எங்குமே காணமுடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பின்புறமிருந்து வந்தபோது குசினி விறாந்தைக்கு வந்த சீதேவிப்பாட்டி அவனைக் கண்டுவிட்டாள். அவள் உரத்தகுரலில், "இளையவன்! இஞ்சை வா!", என்றாள்! அவன் கிட்ட வந்ததும், "இண்டைக்கு தோசை சுட்டது. சுடச்சுட இரண்டு திண்டிட்டுப் போ", என்றாள்.

அவன் தோசை தின்னும் மனநிலையில் இல்லை. ஆனால் அவர்கள் கொடுக்கும் உணவை மறுக்கும் நிலையிலும் அவன் இல்லை.

"வயிறு ஒரு மாதிரிக் கிடக்குது", என இழுத்தான் அவன்.

"அது நல்லெண்ணையிலை சுட்டதடா... ஒண்டும் செய்யாது... நீ இலை வெட்டி வா..."

அதற்கு மேல் அவனால் மறுக்க முடியவில்லை.

அவன் இலையை வெட்டிக் கொண்டு திரும்பியபோது அடுக்களைக்குள் பாட்டியின் குரல் பலமாகக் கேட்டது, "தோசையைக் கொண்டுபோய் அவனுக்குப் போடு எண்டுறன்... நீ என்ரை செவிட்டுக்குச் சொல்லு எண்ட மாதிரிப் போறாய்! இந்தாடி இதை எடுத்துக் கொண்டு போ...!"

உள்ளே என்ன நடந்திருக்கும் என்பதை அவன் புரிந்து கொண்டான். ஓரிரு நிமிடங்களில் சொர்ணம் தோசையுடன் வந்தாள். அவள் இளையவனின் முகத்தைப் பார்க்காமலே தோசைகளை இலையில் போட்டாள். பின் உள்ளே சென்று சம்பலைக் கொண்டுவந்து போட்டபோதும் அவள் தலை நிமிரவேயில்லை.

பனையடியில் நடந்ததற்காக அவள் கோபமடைந்திருக்கிறாள் என்றே அவன் கருதினான். ஆனால் அவள் தனக்குத் தானே வேலி போடப் போராடிக் கொண்டிருக்கிறாள் என்பதை அவன் புரிந்திருக்க நியாயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோசை தொண்டைக்குள்ளால் இறங்க மறுத்தது. மிகவும் வில்லங்கப்பட்டு விழுங்கினான். அவன் குனிந்து சாப்பிடும்போது அவள் அவனைப் பார்த்திருக்க வேண்டும். அவர்களுக்கெனப் பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட குந்தில் கவிழ்த்து வைக்கப்பட்ட பேணியை எடுத்து அவள் அதற்குள் நீரை ஊற்றினாள்.

அவன் நிமிர்ந்து பார்த்தான்.

சோகம் கவ்வியிருந்த அவளின் முகத்தை அவனும் வாடிப் போன அவனின் முகத்தை அவளும் கண்டுகொண்டனர்.

அவள் விறுவிறுவென்று நடந்து உள்ளே போய்விட்டாள். அவனும் தோசையைக் கொண்டுபோய் வேலிக்கரையில் போட்டுவிட்டு கையைக் கழுவினான்.

இரு மனங்களும் ஒன்றையொன்று அறியாமலே தங்களுக்குள் கனத்தன!

அதன்பிறகு அடுத்து வந்த பத்துப் பன்னிரண்டு நாட்களாக அவர்கள் ஒருவரையொருவர் நேரில் சந்திப்பதை இயன்றளவு தவிர்த்தே வந்தனர். ஆனால் அது அவர்களுக்கு அவ்வளவு இலகுவான விசயமாக இருக்கவில்லை.

சொர்ணத்தைப் பொறுத்தவரையில் அந்த நாட்கள் ஏதோ வெறுமை படர்ந்தவையாகவே தோன்றின. மனம் மட்டுமின்றி உடல்கூட சோர்ந்து போயிருப்பதாகவே அவளுக்குத் தோன்றியது. பகலில்கூட சோர்ந்துபோய் படுக்க ஆரம்பித்தாள். ஆனால் பகலில் மட்டுமின்றி இரவிலும்கூட தூக்கம் வர மறுத்துப் பிடிவாதம் பிடித்துக் கொண்டிருந்தது.

ஆனால் காலையில் தூக்கம் விட்டு எழுந்ததும் யன்னலைத் திறந்ததும் கண்கள் ஒருமுறை கண்டுப்புளியடிப் பனை மீது பாயும். அதில் அவனைக் காணாதபோது ஏதோ ஒருவிதமான ஏமாற்றமும் தவிப்பும் அவள் மனதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்கொள்ளும். ஆனால் அவள் பார்க்கும்போது அவனைப் பனையில் கண்டுவிட்டாலோ மனதில் ஒரு மெல்லிய இனிமை பரவும். ஆனால் அவள் உடனடியாகவே தன்னைச் சுதாகரித்துக் கொண்டு கண்களை உட்பக்கம் திருப்பி விடுவாள்.

இளையவனின் நிலைமையும் அப்படித்தான் இருந்தது. பனையில் இருந்தபடி கிணற்றடியைப் பார்ப்பான். அங்கு சொர்ணம் காணப்படாமல் அது வெறுமையாக இருக்கும்போது கண்கள் அந்தக் காணி முழுவதையும் சுற்றும். அச்சந்தர்ப்பத்தில் அவள் அறைக்குள் யன்னலருகில் நின்றிருக்கக்கூடும்.

சொர்ணத்தின் இந்த மாற்றத்தை சீதேவிப்பாட்டி ஒருநாள் அவதானித்து விட்டாள்.

"பிள்ளை... என்னடி நெடுக சோர்ந்து சோர்ந்து கட்டிலிலை சுருளுறாய்... என்னடி ஏதும் மேலுக்கு ஏலாதே?"

சொர்ணம் வலிந்து ஒரு புன்னகையை முகத்தில் வரவழைத்துக் கொண்டாள்.

"இல்லையணை பள்ளிக்கூடம் லீவல்லே சும்மா இருக்க ஒரே பஞ்சியாக் கிடக்குது!", என அவள் ஒரு அப்பட்டமான பொய்யைச் சொல்லி வைத்தாள்.

"அடி உதுதானே... அடி வளவுக்கை கிடக்கிற தென்னோலையளை இழுத்துக் கொண்டுவந்து பந்தலுக்கை போடு... நனையட்டும்... காலமை இளையவன் வர கிழிச்சுப் பின்னலாம். பஞ்சி இருந்த இடம் தெரியாமல் போகும்"

சீதேவிப் பாட்டியின் ஆலோசனை அவளுக்கும் நல்லதாகவே பட்டது. ஏதாவது வேலை செய்தால் மனம் சற்று லேசாகும் போலவும் தோன்றியது. அதுமட்டுமின்றி இளையவன் ஓலைகளைக் கிழிக்கும்போது அவனருகில் நிற்க முடியும் என்பதை நினைத்தபோது ஒரு மெல்லிய சந்தோசம் மனதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழையோடியது. உடனடியாகவே அவளின் உள்ளுணர்வு விழிப்படையவே, "அப்படி ஒண்டும் இல்லை", எனத் தனக்குள் தானே சொல்லிக் கொண்டாள். அவள் உடனடியாகவே அடி வளவை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். பாட்டியும் கூடவே வந்தாள்.

காணியெங்கும் தென்னோலையளும் கோம்பைகளும் சிதறிக் கிடந்தன.

"பார் காணி கிடக்கிற கிடையை. ஆம்பிளை இல்லாத வீடு மாதிரிக் கிடக்குது... கொப்பனுக்கு விதானை வேலை எண்டு சொல்லிக் கொண்டு ஊர்ச் சோலி பார்க்கத்தான் நேரம் சரி", கிழவி புறுபுறுத்துக் கொண்டே நடந்தாள்.

ஏராளமான தென்னோலைகள் கவனிப்பாரற்றுக் கிடந்தன. சீதேவிப் பாட்டி தொடர்ந்தாள், "முந்தியெண்டால் ஒரு ஓலை விடமாட்டம். பின்னி வித்துக் காசாக்கிப் போடுவம். இப்ப கொம்மாவுக்குக் குந்தியிருக்க வண்டி விடாது"

சொர்ணத்தின் தாய் கனகாம்பிகைக்கு உடம்பும், வண்டியும் பெரிது. நடப்பதற்கே சிரமப்படுமளவுக்கு நிலைமை அவளுக்கு ஏற்பட்டுவிட்டது. ஆனால் சீதேவிப்பாட்டியின் மெல்லிய இறுக்கமான உடம்புக்கு ஏற்றவாறு அவள் இன்னும் சுறுசுறுப்பாகவே இருந்தாள். இப்போதும் புழுக்கொடியலை கடிக்குமளவுக்கு அவளின் பற்கள் உறுதியாயிருந்தன.

இருவரும் தென்னோலைகளை இழுத்துவந்து கிணற்றடிப் பத்தலுக்குள் போட்டார்கள். பின் மண் போட்டு பத்தல் வாயிலை அடைத்துவிட்டு சொர்ணம் நீரை அள்ளி நிறைத்தாள். அப்போது ஓலைகள் நனைய ஆரம்பித்தன.

அன்றுமாலை இளையவன் மாட்டுக்குக் கிழிப்பதற்கு ஓலைகளைக் கொண்டுவந்து போட்டுவிட்டு விதானையாரின் வாடிக்கைக் கள்ளை முட்டியுடன் வேலியில் கொழுவினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போ சொர்ணம் வீட்டின் விறாந்தைப் போட்டிக்கோவில் நின்றிருந்தாள். இளையவனைக் கண்டதும் அவள் உள்ளே போக எத்தனித்தபோது அவர்களின் வளர்ப்பு நாய் தெருவில் போன ஒரு சிறுவனைக் குரைத்துக் கொண்டு துரத்த ஆரம்பித்தது. யாராவது ஓடினால் விரட்டுவது அதன் சுபாவம்.

சொர்ணம் அதன் பின்னால், "ஞ்சு... நில்... ஞ்சு... இஞ்சை வா", என்றவாறே தெருவுக்கு விரைந்து வந்தாள். அவளின் குரல் கேட்ட நாய் மீண்டும் திரும்பி அவளருகே வந்து வாலை ஆட்டிக் கொண்டு நின்றது.

சொர்ணம் சங்கடப்படலைக்கு வந்தபோது உள்ளிருந்து வெளியே வந்த இளையவனை நேருக்குநேர் சந்தித்துக் கொண்டாள். நான்கு கண்களும் மோதிக் கொண்டன.

சொர்ணம் அவளையறியாமலே அவளுள் தோன்றிய ஏதோ ஒரு உந்துதல் அவளை, "இப்போதையிலை நீ ஏன் என்னோடை கதைக்கிறேல்லை?", எனக் கேட்க வைத்துவிட்டது.

ஒருசில விநாடிகள் தடுமாறிய இளையவன் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "நானும் அதைத்தான் உங்களிட்டைக் கேட்க வேணுமெண்டு இருந்தனான்", என்றான்.

"எனக்கு உன்னோடை கதையாமல் இருக்க ஏலாது", எனப் பளீரென்று கூறிவிட்டு வேகமாக நடந்து வீட்டுக்குள் போய்விட்டாள் சொர்ணம்.

"எனக்கும் அப்படித்தான்", எனச் சொல்ல நினைத்த இளையவன் அவள் உடனடியாகவே போய்விட்ட காரணத்தால் ஒரு பெருமூச்சுடன் தெருவில் இறங்கி நடக்கத் தொடங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 05

சொர்ணம் அன்று அதிகாலையிலேயே தூக்கம் கலைந்து எழுந்துவிட்டாள். அவளின் மனம் ஏதோ ஒரு இனிமையான அனுபவத்தைச் சந்திப்பதற்காகத் துடித்துக் கொண்டிருந்ததை அவளால் உணர முடிந்தது. ஆனால் முதல் நாள் மாலையில் அவள் அவனிடம், "என்னாலை உன்னோட கதையாமல் இருக்க முடியாது", என ஏதோ ஒரு உணர்ச்சியில் கூறிவிட்டது மனதுக்குள் ஏதோ ஒரு குழப்பத்தை விளைவித்துக் கொண்டிருந்தது. ஆனால் அப்படிக் கூறியதை பிழை என நினைக்கவும் அவள் மனம் மறுத்தது.

அவள் வெளியே வந்தபோது இளையவன் பனையில் ஏறிக்கொண்டிருந்தான். அவள் கிணற்றுப் பத்தலுக்குள் உலரப் போட்டிருந்த ஓலைகளை ஒவ்வொன்றாக இழுத்து வந்து பின் முற்றத்தில் போட்டாள். இளையவன் பனையால் இறங்கி அவ்விடத்துக்கு வந்தபோது சீதேவிப்பாட்டியும் வெளியே வந்துவிட்டாள்.

"எடேய்... இளையவன் இந்த ஓலையளை அடிமட்டையை வெட்டிப்போட்டு கிழிச்சு விட்டிட்டுப் போ...", என இளையவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கிக் கூறிய பாட்டி சொர்ணத்திடம், "பிள்ளை .. அந்த வெட்டுக்கத்தியை எடுத்து வந்து குடு...", என்றாள்.

சொர்ணம் ஏற்கனவே கொண்டுவந்து வெளிக்குந்தில் வைத்திருந்த வெட்டுக்கத்தியை எடுத்து அவனிடம் நீட்டினாள். ஒரு மெல்லிய புன்னகையுடன் அவன் வாங்கிக் கொண்டான். அவனின் முகமும் வழமையை விட பிரகாசமாக இருந்ததை அவளால் அவதானிக்க முடிந்தது. அவன் அடிமட்டைகளை வெட்டிவிட்டு ஓலைகளைக் கிழிக்க ஆரம்பித்தான். ஏதாவது அவளுடன் கதைக்க வேண்டுமென அவன் மனம் துடித்துக் கொண்டிருந்தது. ஆனால் எதைத் தொடங்குவது, எப்படித் தொடங்குவது என அவனால் முடிவு செய்ய இயலவில்லை. அவளோ நேற்று மாலை தான் சொன்னதற்குப் பதிலாக எதையாவது கூறுவான் என ஆவலுடன் எதிர்பார்த்தாள்.

ஆனால் நேரம் மௌனத்தில் கரைந்து கொண்டிருந்தது. அவன் தன் வேலையை முடித்துவிட்டு நிமிர்ந்தபோது, "போதுமே?", எனக் கேட்டான்.

அவன் கேட்டது கிழிக்கப்பட்ட ஓலைகள் போதுமா என்பதைப் பற்றித்தான். ஆனால் இருவரும் சில நாட்கள் கதைக்காமல் இருந்ததைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்த சொர்ணம், "அந்த மௌன விரதம் போதுமா?", எனக் கேட்டதாகவே தோன்றியது. அவன் தன்னைக் கிண்டல் செய்வதாக யோசித்தபோது, அவளுக்கு அவளையறியாமல் கோபம் வந்துவிட்டது.

"ஓ... எல்லாம் போதும்?", என வெடுக்கெனக் கூறிவிட்டு உள்ளே போய்விட்டாள். ஏன் அவள் அப்படிச் சீறிவிழுந்தாள் என்பதைப் புரிந்து கொள்ளாமல் தடுமாறிய இளையவன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தியைக் குந்தில் வைத்துவிட்டு ஒரு பெருமூச்சுடன் அவ்விடத்தை விட்டு அகன்றான். அன்று காலையிலேயே கறுத்திருந்த அடிவான இருள் மெல்ல மெல்லப் பரவத் தொடங்கியது. சீதேவிப் பாட்டியும், சொர்ணமும் கிடுகு பின்ன ஆரம்பிக்கும்போதே மழைதூற ஆரம்பித்து விட்டது. ஓலைகளை இழுத்து ஒத்தாப்புக்குள் போட்டுவிட்டு தங்கள் பின்னல் வேலையை இருவரும் முடித்துவிட்டனர்.

மழை ஒரு பாட்டம் கொட்டித் தீர்த்துவிட்டு மாலை மூன்று மணியளவில் ஓய்ந்தது. ஊர் வெள்ளமெல்லாம் ஒழுங்கையில் இறங்கி ஒரு சிற்றாறு போல் ஓடிக்கொண்டிருந்தது. முன் போட்டிக்கோவில் நின்று மண்ணைக் கரைத்து செந்நிறமாக ஓடிக்கொண்டிருந்த நீரைப் பார்த்து கொண்டு நின்ற போதும், சொர்ணத்தின் மனம் அவன் மேல் சீறி விழுந்ததையே சுற்றிக் கொண்டிருந்தது. இப்போது அவள், தான் தவறாக விளங்கிக் கொண்டு அவனைக் கோபித்து விட்டதைப் புரிந்து கொண்டிருந்தாள். அவன் பின்னேரம் வரும்போது, அவனிடம் விசயத்தை விளக்க முடிவெடுத்தாள்.

ஆனாலும் அன்று மாலை அவளின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. அவள் வீட்டுக்குள்ளிருந்து வெளியே வருமுன்பே அவன் ஓலையைக் கொண்டுவந்து மால் முற்றத்தில் போட்டுவிட்டு போய்விட்டான். அவனைப் பின்னால் கூப்பிட்டு கதைக்கவும் அவளிடம் காரணம் எதுவும் உடனடியாக இருக்கவும் இல்லை. குழைகளை வெட்டி ஆடுகளுக்கு கட்டிவிட்டு , மால் முற்றத்துக்கு வந்தாள் சின்னன். இளையவன் மாடுகளுக்குக் கிழிக்க வேண்டிய ஓலைகளை மால் முற்றத்தில் போட்டிருந்தான். முற்றம் ஈரமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானையார் முகம் கழுவி சாமி படத்தடியில் சென்று ஒருமுறை, "சிவ சிவ சிவா", என்றவாறே திருநீற்றை நெற்றியில் பூசிவிட்டு மாலை நோக்கி வந்தார். அந்த மாலுக்குள் இருக்கும் சாய்மனைக் கதிரையில் அமர்ந்துதான் அவர் கள்ளருந்துவதுண்டு. முற்றத்தில் இருக்கும் சின்னனுடன் கதைத்தவாறே, அவரின் கள்ளுக் குடிப்பு நடக்கும். நிலவு நாட்கள் என்றால் சாய்மனைக் கதிரை முற்றத்திற்கே வந்துவிடும். கள்ளு முடிய முடிய சுண்டுக் கோப்பைக்குள் நிரப்பிக் கொடுப்பதும் சின்னனின் வேலைதான்.

சின்னன் அமர்ந்து ஓலை கிழிக்க முற்றத்தில் சாக்கை விரித்தபோது அங்கு வந்துவிட்ட விதானையார், "ஏய் ஈரமண் பட்டால் ஓலையை மாடு தின்னுமே. உள்ளை போட்டுக் கிழி", என்றார். சின்னன் நிமிர்ந்து அவரைப் பார்த்துவிட்டு , சிராய்க்கப்பட்ட ஓலைகளை அள்ளி உள்ளே போட்டாள்.

அந்த மாலுக்குள் எவரும் சாதி வேறுபாடின்றி உள்ளே வரலாம். அது பகலில் விதானையாரின் காரியாலயமாக இருக்கும். முன்னிரவு நேரங்களில் அது அவரின் ஓய்வறை. விதானையார் சாய்மனைக் கதிரையில் போய் அமர்ந்தவாறே, "சின்னன் அதில ஒரு கோப்பை ஊத்து", என்றார். 'அது' என்றால் கள்ளு என்பது சின்னனுக்கு விளங்கும்.

அவள் குந்தில் கவிழ்த்து வைத்திருந்த சுண்டுக் கோப்பையை எடுத்து, கழுவிவிட்டு முட்டியைத் தூக்கினாள். மேலே நுரையுடன் மிதந்து கொண்டிருந்த பூச்சிகளை வாயால் ஊதி ஒதுக்கிவிட்டு, வெகு பக்குவமாகப் கள்ளை ஊற்றினாள்.

மீண்டும் மழைதூற ஆரம்பித்தது.

இப்படி ஒரு மழை நாளில்தான் அவளின் வாழ்விலே என்றுமே எதிர்பார்த்திராத அந்தச் சம்பவம் நடந்தது. அப்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னனின் கணவன் இறந்து ஒரு வருஷத்துக்கு மேல் ஆகிவிட்டது. சில நாட்களுக்கு முன்புதான் சொர்ணம் பிறந்து நாற்பத்தியொரு நாள் துடக்குக் கழிந்து கோவிலுக்குக் கொண்டுபோயிருந்தனர். சுகப் பிரவசம் இடம்பெற வேண்டும் என சீதேவிக்கிழவி பெரிய தம்பிரானுக்கு மடை பரவுவதாக நேர்த்தி வைத்திருந்தாள்.

அன்று வெள்ளிக்கிழமை. வீட்டில் விதானையாரை விட எல்லோரும் பெரியதம்பிரான் பொங்கலுக்கு போய்விட்டனர். முற்றம் ஈரமாதலால் அன்றும் சின்னன் ஓலையை மாலுக்குள் போட்டே கிழித்துக் கொண்டிருந்தாள். விதானையாருக்கு கள்ளை விட சின்னனின் இளைமைத் தோற்றமும், அழகிய முகமும், குறுக்குக் கட்டுக்கு மேலே தெரிந்த நெஞ்சுப் பகுதியும் தோள்களுமே கூடுதலான போதையை ஏற்றுவது போல் தோன்றியது.

நீண்ட நேரம் அவளையே பார்த்துக் கொண்டிருந்த அவர், கோப்பையில் இருந்த கள்ளைக் குடித்துவிட்டு அவளிடம் நீட்டினார். அவள் அதை வாங்கி கள்ளை நிரப்பி விட்டு கொண்டுவந்து அவரிடம் நீட்டினாள்.

அவர் அதை வாங்கவில்லை. ஒரு மெல்லிய புன்னகையுடன் அவர் அவளின் முகத்தைப் பார்த்தார். அவள் எதையுமே புரிந்து கொள்ள முடியாமல் தடுமாறினாள். சாய்மனைக் கதிரையில் நிமிர்ந்த அவர் திடீரென அவளின் குறுக்குக் கட்டின் தொங்கலைப் பிடித்து இழுத்தார்.அதைச் சற்றும் கூட எதிர்பாராத அவள் நெஞ்சை இரு கைகளாலும் பொத்தியவாறு, ‘‘ஐயோ’’, என்றாள். கள்ளுக் கோப்பை நிலத்தில் உருள கள்ளு எங்கும் சிதறியது. சேலைத் தொங்கல் அவர் கைகளுக்குள் கிடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானையார் எழுந்தார். அவள் மேனி வெடவெடவென நடுங்கியது. அவள் கெஞ்சினாள். "ஐயா... நாங்கள் ஏழையள்... பாவங்கள்... என்னை ஒண்டும் செய்யாதேங்கோ"

அவரின் கையைத் தட்டிவிட அவளுக்கு துணிவில்லை. நெருப்புப்பட்டதுபோல் நெளிந்தாள். அவள் இரு கைகளையும் எடுத்துக் கும்பிட்டாள். "ஐயா உங்களைக் கடவுளாய்க் கும்பிடுறன். என்னை விட்டிடுங்கோ"

அவள் கையெடுத்துக் கும்பிட்டபோது அவரின் கண்களில்பட்ட அவளின் மேனி மேலும் அவருக்குப் போதையூட்டியது. விதானையார் உறுமினார். "எடியேய்... என்ர குணம் தெரியுமல்லே... சத்தம் போடாதை"

அவள் அதன் பிறகு வாய் திறக்கவில்லை. அந்தத் திண்ணை அவளின் வாழக்கையையே திசைமாற்றி விட்டது. எல்லாம் முடிந்தபின்பு முழங்காலில் முகத்தைப் புதைத்து விம்மி விம்மி அழுதாள். அவள் நடந்து முடிந்த சம்பவத்துக்காக மட்டும் அழவில்லை. தனக்கு விரும்பாத ஒரு காரியத்துக்காக எதிர்ப்பைத் தெரிவிக்கக்கூட முடியாத இழி நிலையை நினைத்தபோது அவள், தான் மனிதராக வாழ்வதில் அர்த்தமில்லை என்றே நினைத்தாள்.

விதானையார் மெல்ல அவள் தலையை வருடினார். "சின்னன் நான் மற்றவையை மாதிரி இல்லை. என்ரை மனதைப் பொறுத்த வரையில் இனி நீ என்ரை பெண்சாதிதான். நான் எப்பவும் உன்னைக் கைவிடமாட்டன்"

விதானையார் அன்று சொன்ன அந்த வார்த்தைகளை இன்றுவரை மறக்கவில்லை. சமூகமும் உறவுகளும் ஏற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளாதபோதும் அவருக்கு அவள் மனதளவில் மனைவிதான். ஆரம்ப நாட்களில் அத்தகையை ஒரு உறவை சின்னன் அறவே வெறுத்தாள். கெஞ்சல்கள் மூலமும் அழுகை மூலமும் அவரிடமிருந்து தப்ப முயன்றாள். ஆனால் அவர் அவள் மேல் காட்டிய அன்பும், அவள் மீது கொண்ட அக்கறையும் காலப்போக்கில் அந்த உறவுக்கு அவளை இசைவாக்கம் பெறவைத்து விட்டது.

அமைதியாகவும், இரகசியமாகவும் நீடித்த அவர்களின் உறவு ஏறக்குறைய ஒரு வருடம் கழிந்த பின்புதான் புதிய சிக்கலுக்குள் பிரவேசிக்க வேண்டிவந்தது. அவள் நீண்ட நாட்கள் தயக்கத்தின் ஒருநாள் விதானையாரிடம் சொன்னாள், " இரண்டு மாதமாய் எனக்கு வீட்டுக்குத் தூரம் வரயில்லை"

உடனடியாக அவர் விஷயத்தைப் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும் சில நிமிடங்களில் உண்மை புலப்பட்டது. அவர் சர்வசாதாரணமாகக் கேட்டார், " ஓ அப்படியே இப்ப அதுக்கென்ன?"

"இல்லை வேதாத்தையிட்டச் சொல்லிக் கரைப்பிச்சு விட்டால்.."

வேதாத்தை அந்த ஊரின் மருத்துவச்சி. அடுத்தவருக்குத் தெரியாமல் கருக்கலைப்பதில் பேர் பெற்றவள். சாய்ந்திருந்த விதானையார் திடீரென நிமிர்ந்தார். அவர் வார்த்தைகள் நெருப்பில் தோய்ந்து கொதித்தன.

"பொத்தடி வாய்? நீ என்ர பிள்ளையை அழிக்கிற அளவுக்கு துணிஞ்சிட்டியே?"

அவரின் கோபமும், குரலும் அவளை நடுங்க வைத்தன. அவள் கன்னங்களில் அவளை அறியாமலே கண்ணீர் வழிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 06

"சின்னன்... இதுக்கை எப்பன் ஊத்தி விடு"

சின்னனின் கைகள் ஓலையைக் கிழித்துக் கொண்டிருந்த போதும் பல வருடங்கள் பின்னோக்கிப் போய்க் கொண்டிருந்த அவளின் எண்ணங்கள் திடீரென அவரின் குரல் கேட்டுத் தடைப்பட்டன.

அவள் எழுந்து காலியாகி விட்ட கண்டுக் கோப்பையை மீண்டும் கள்ளால் நிரப்பி விட்டு அவரின் முன் வைத்தாள்.

அவர் அவளின் முகத்தை உற்று நோக்கிவிட்டு, "என்ன கடுமையாய் யோசிக்கிறாய்?", எனக் கேட்டார்.

"ஒன்டுமில்லை.....", எனச் சொல்லிச் சமாளித்து விட்டு அவள் மீண்டும் ஓலையைக் கிழிக்கத் தொடங்கினாள்.

ஏனோ எண்ணங்கள் மீண்டும் மீண்டும் பின்னோக்கியே ஓடின.

"எடியேய்... எப்பவும் நான் உன்னைக் கைவிட மாட்டன்", என அவர் அன்று சொன்ன அந்த வார்த்தைகளை பெரும் நெருக்கடியைச் சந்தித்த போது அவர் பிசகாமல் கடைப்பிடித்த சம்பவம் அவள் நினைவுக்கு வந்து போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் சீதேவிப் பாட்டி அவளின் வயிற்றுப் பகுதியில் ஒரு வித்தியாசம் தெரிவதை அவதானித்து விட்டாள்.

"சின்னன் என்னடி வயிறு கொஞ்சம் வீங்கின மாதிரிக் கிடக்குது.. சொக்கும் வைச்சுக் கிடக்குது?"

இப்படியான கேள்வியைச் சின்னன் எதிர் பார்த்துத்தானிருந்தாள். அந்தக் கேள்விக்குப் பயந்து சில சமயங்களில் தற்கொலை செய்யவும் நினைத்ததுண்டு. ஏனோ அவளுக்கு அதற்கான துணிவு வர மறுத்து விட்டது.

அவள் தலையைக் குனிந்து கொண்டாள். கண்களி லிருந்து நீர் கட்டுக் கடங்காமல் பெருக ஆரம்பித்தது.

கிழவி விஷயத்தைப் புரிந்து கொண்டாள். அவள் கோபத்துடன் அதட்டினாள், "என்னடி ஆரட்டை வேண்டினியடி.. சனியன் நீயும் ஒரு பொம்பிளையே....?"

சின்னன் விம்மத் தொடங்கினாள். கிழவி போட்ட சத்தத்தில் கனகாம்பிகையும் வெளியே வந்து விட்டாள்.

எல்லாவற்றையும் உள்ளே நின்று கேட்டுக் கொண்டிருந்த விதானையார் வேகமாக வெளியே வந்தார். "அவள் ஆரட்டைப் பிள்ளை வேண்டினாள் எண்ட கதை இஞ்சை ஒருதருக்கும் தேவையில்லை. நீ போய் வேலையைப் பாரடி"

விதானையாரின் ஓங்கி ஒலித்த குரலில் பின் அந்த இடமே நிசப்தமானது. சின்னன் கிழவியை அழுத கண்களுடன் மீண்டும் ஒரு முறை பார்த்தாள்.

"அவளட்டை ஒருதரும் ஒரு கதையும் கதைக்கத் தேவையில்லை. சொல்லிப் போட்டன் - நீ போடி"

அவர் சொல்லி விட்டு உள்ளே போய் விட்டார். அதன் பிறகு என்றும் எவரும் அவளிடம் அதைப்பற்றி எதுவுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கவில்லை. அவர்களுக்கோ அந்த ஊரில் இருப்பவர்களுக்கோ அவளிடமும் கேட்கவும் நையாண்டி பண்ணவும் மனமில்லை என்று சொல்லி விட முடியாது. ஆனால் விதானையாரின் கோபத்துக்கு அஞ்சி எவருமே எதையும் கதைப்பதில்லை.

ஆனால் தன்னைப்பற்றி முதுகுக்குப் பின்னால் கேவலமாகக் கதைப்பார்கள் என்பதைச் சின்னன் அறிந்தே இருந்தாள். ஆனால் அவளால் என்ன தான் செய்ய முடியும்?

சின்னனுக்குப் பெண் குழந்தை பிறந்த போது அவர் போகவோ பார்க்கவோ இல்லை என்பது உண்மைதான். ஆனால் இளையவனின் தாய் செல்லியைக் கூப்பிட்டு காசைக் கொடுத்து ஒரு குறையுமில்லாமல் கவனிக்க வேண்டுமெனக் கட்டளை போட்டுவிட்டார்.

அது மட்டுமன்றி அந்தக் குழந்தைக்குத் தானே 'முத்து லட்சுமி' எனப் பெயர் வைத்துப் பிறப்புச் சான்றுப் பத்திரமும் பதிந்து விட்டார். ஆனால் தகப்பன் பெயர் என்ற இடத்தில் மட்டும் சின்னனின் இறந்து போன கணவனின் பெயரைப் போட்டு தகவல் கொடுத்தவர் என்ற இடத்தில் தனது பேரைப் போட்டுக் கொண்டார். ஆனால் மூத்த மகளுக்கு சொர்ணலட்சுமி என்று பெயர் வைத்த அவர் சின்னனின் பிள்ளைக்கு முத்துலட்சுமி என்று பெயர் வைத்து தனது உரிமையை அடையாளப்படுத்திக் கொண்டார்.

இப்போது முத்துலட்சுமி உடுப்பிட்டி பெண்கள் பாடசாலையில் எட்டாம் வகுப்புப் படிக்கிறாள். அவளும் சொர்ணத்தைப் போலவே படிப்பில் நல்ல கெட்டிக்காரியாக விளங்கினாள்.

சின்னன் கிழித்து முடிந்த ஓலைகளை அள்ளிக் கொண்டு போய் மாட்டுக் கொட்டிலின் தொட்டியில் போட்டு விட்டு புறப்படத் தயாரானாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வரப் போறன்", என்றாள் அவள்.

அவர் ஒரு மெல்லிய புன்கையுடன் "பொறு: போகலாம்" என்றார்.

"பிள்ளை தனிய...", என இழுத்தாள்.

"அது தெரியும் போகலாம் தானே", என்றார்.

அதற்கு மேல் அவள் எதுவும் பேசவில்லை. அப்படி அவர் சொல்லும் எதையுமே மறுத்துப் பேச அவளுக்கு என்றுமே துணிவு வந்ததில்லை. சின்னன் போய் சிறிது நேரத்தில் மழை கொட்ட ஆரம்பித்து விட்டது. விதானையாரும் இரவு உணவை முடித்து விட்டு படுத்து விட்டார். சின்னனுக்கும் அவருக்கும் தொடர்பு ஏற்பட்டதை அறிந்த நாளிலிருந்து கனகாம்பிகைக்கும் விதானையார் அருகில் வந்து படுக்கும் போது உள்ளூர ஒரு அருவருப்பு ஏற்படும். அதை அவள் வெளியில் காட்ட என்றுமே துணிந்ததில்லை.

ஒரு நாள் கனகாம்பிகை சீதேவிக் கிழவியிடம் அது பற்றிச் சொல்லி அழுத போது "எப்படியே ஆம்பிளையள் எண்டால் அப்படித்தான்? சேறுகண்ட இடத்திலை மிதிச்சு தண்ணி கண்ட இடத்திலை கழுவுவினை. அதைவிடு", என ஒரே வசனத்தில் சொல்லி விஷயத்தை முடித்து விட்டாள். அவளும் சேறு வீட்டுக்குள் வராததே போதும் என்ற அளவில் இருந்து விட்டாள். ஆனால் அந்த மன அருவருப்பை மட்டும் அவளால் அகற்ற முடியவில்லை.

சொர்ணம் அதிகாலையில் தூக்கம் கலைந்து எழுந்த போது தவளைகளின் கத்தல் காதைப் பிய்த்தது. கண்டுப்புளிக் காணிக்குப் பின்புறம் இருந்த சிறிய வயல் துண்டில் தவளைகளின் கத்தல் ஒலித்துக் கொண்டிருந்தது. காலையில் எப்படியும் ஒரு ஏழெட்டுத் தவளைகளாவது புரண்டு போய்க்கிடக்கும் என அவள் நினைத்துக் கொண்டாள். இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடிய நேரம் இருப்பது போல் படவே மீண்டும் திரும்பி மறுபக்கம் படுத்துக் கொண்டாள். தூக்கம் வர மறுத்தது. இளையவனைத் தேவையில்லாமல் கோபித்தது தொடர்பான எண்ணங்களே மனதைப் போட்டுக் குடைய ஆரம்பித்தன. மாமரத்தில் ஏறியிருந்த சேவல் கூவும் ஒலி கேட்டது. மெல்ல யன்னலைத் திறந்து பார்த்தாள். கிழக்கு வெளித்துக் கொண்டிருந்தது. கதவைத் திறந்து வெளியே வந்த போது சீதேவிப்பாட்டி விறாந்தையில் இரு கால்களையும் நீட்டிக் கொண்டு தூணில் சாய்ந்தவாறே சுருட்டைப் புகைத்துக் கொண்டிருந்தாள்.

சொர்ணம் வீட்டின் பின்புறம் போக நினைத்த போது சின்னன் சங்கடப்படலையைத் திறந்து கொண்டு முற்றத்துக்கு வந்தாள்.

பாட்டி ஆச்சரியத்துடன் கேட்டாள் "என்ன... இண்டைக்கு நேரத்தோடை வந்திட்டாய்..?

சின்னன் மெல்லிய தயக்கத்துடன், "விடியப் பிள்ளை பெருசாகியிட்டாள். அது தான் வேலையை நேரத்துக்கு முடிச்சுப் போட்டு போவம் எண்டு பாக்கிறன்", என்றாள்.

"என்ன முத்தியோ? எனக்கேட்ட கிழவி, "ம்.. அவளையெண்டாலும் கவனமாய் வள.. உன்னைப் போல பேர் வேண்ட விட்டுடாதே", என்றாள் ஒரு வித வெறுப்புடன்.

"உங்கடை மேன் ஆடுற கூத்துக்கு பழி முழுக்க என்னிலையே", என்ற அவளின் கேள்வி நெஞ்சுக்குள்ளேயே அடங்கி விட்டது. கண்கள் மெல்லக் கலங்க முகம் ஓடிக் கறுத்தது. போய் விளக்குமாற்றை எடுத்துக் கூட்ட ஆரம்பித்தாள்.

"சொர்ணத்துக்கு உன்னைப் போலை பேர் வேண்ட விடாதை" என்ற வார்த்தைகளின் அர்த்தம் புரியவேயில்லை. அவள் இன்று வரை முத்துலட்சுமியின் தகப்பன் இறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டதாகவே நம்பிக்கொண்டிருக்கிறாள். அவள் பின்பக்கமாகப் போனாள் நிலம் ஈரமாக இருந்தது.

சின்னன் அவசரமாக வேலையை முடித்து விட்டு மகளுக்குக் குப்பைத் தண்ணி வார்ப்பதற்குப் புறப்பட்டாள். விதானையாருக்கு எப்படியாவது தெரியப்படுத்த நினைத்த அவள் கிழவியின் வார்த்தைகளுடன் அந்த எண்ணத்தை அப்படியே அடக்கி விட்டாள். அது மட்டுமன்றி விதானையாரிடம் தனியே சந்திப்பதை இயன்ற வரைத் தவிர்ப்பது என முடிவும் செய்து கொண்டாள். அனால் அது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல என்பதையும் அவள் தெரிந்தே வைத்திருந்தாள்.

சின்னன் போன பின்பு தான் விதானையார் எழுந்து வெளியே வந்தார். கிழவிக்கு வாய் கிடக்கவில்லை. "உன்ர மேள் சாமத்தியப்பட்டிட்டாளாம். போய்ப் பாலறுகு வைச்சிட்டு வாவன்"

விதானையாருக்கு எதுவும் விளங்கவில்லை.சொர்ணம் பருவமடைந்து மூன்று வருடங்களாகி விட்டன.

"நீ என்னனை சொல்லுறாய்"

கிழவியின் நக்கல் தொடர்ந்தது, "சின்னன்ரை பெட்டை பெரிசாகிவிட்டாளம். அது எந்த வெள்ளாளனைப் பிடிக்கப் போகுதோ?"

விதானையாருக்கு கிழவியின் நையாண்டி எரிச்சலை மூட்டியது.

"பேய்க் கதைகதைச்சு விடியக் காலமை என்னட்டை வேண்டிக் கட்டாதை", என்று விட்டு கிணற்றடிப் பக்கம் போகத் தொடங்கினார்.

"ஆடுற கூத்தெல்லாம் ஆட வெக்கமில்லை. ஏதும் சொன்னால் மட்டும் மூக்கு நுணியிலை வந்திடும்", எனக் கிழவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறுபுறுத்துக் கொண்டாள். கிழவியின் புருஷன் அதாவது விதானையாரின் தகப்பன் மருதப்பிள்ளை தூய்மையானவர் என்று கூறி விட முடியாது. ஆனால் அவர் இறைச்சி தின்னுறதெண்டு எலும்பைக் கழுத்திலை தொங்கவிடுவதில்லை எனக் கிழவி தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொள்வதுண்டு.

விதானையாருக்கு உள்ளூர ஒருவிதமான சந்தோஷம் தோன்றியது. அன்று இரவு சின்னன் வரும்போது ஐநூறு ரூபா கொடுத்து பூப்பு நீராட்டு விழா பெரிதாகச் செய்யும் படி சொல்ல வேண்டும் என நினைத்துக் கொண்டார். தனது பிள்ளைக்கு தான் பாலறுகு வைக்க முடியாது என்பதை நினைத்த போது ஒரு மெல்லிய கவலை அவருக்கு எழத் தவறவில்லை.

"அவள் தகப்பன் இல்லாத பிள்ளையில்லை", என மனதுக்குள் சொல்லிக் கொண்டார். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 07

சின்னனின் வீடு அன்று கலகலப்பாகி விட்டது. அயலிலுள்ளவர்களினால் அந்தச் சின்ன வீடு நிறைந்து விட்டது. வீட்டில் கிழக்குப் பக்கக் கோடியில் வைக்கப்பட்டிருந்த வாளிகளிலும் கிடாரங்களிலும் பெண்கள் நீர் நிரப்பிவிட்டிருந்தனர்.

அந்த வட்டாரத்தில் அவர்களுள் வயதுக்கு மூத்தவராக கருதப்படும் சின்னப்பன் வாழை இலை போட்டு அதன் மேல் நெல்மணிகளைப் பரப்பி செம்பில் மாவிலைகளை அடுக்கி அதன் மேல் தேங்காயை ஏற்றி நிறைகுடம் வைத்து முடித்தார். சந்தனத்தைக் குழைத்துத் தேங்காயில் பொட்டு வைத்து விட்டு அதன் மேல் குங்குமத்தை இட்டு விட்டு, "இஞ்சை எல்லாம் ஆயித்தம் பிள்ளையைக் கூட்டி வாங்கோவன்", என்றார் சின்னப்பன்.

வல்லியப்பன் வெள்ளை வேட்டியைக் கட்டி, சால்வையால் தலைப்பா கட்டி தலைக்குத் தண்ணீர் ஊற்ற தன்னை ஆயத்தப்படுத்தினான். முதல் தண்ணி தாய் மாமன் தான் ஊற்ற வேண்டும் என்பது அவர்களால் காலம் காலமாகப் பேணப்பட்டுவரும் சம்பிரதாயம். அவன் பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்தாலும் பொல்லை ஊன்றியவாறே தன் 'தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமன்' கடமையை நிறைவேற்ற வந்துவிட்டான். ஓடியாடி வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த செல்லியும் அறிந்து வந்துவிட்டாள். சில இளம் பெண்கள் ஒரு துணியால் முக்காடு போட்டு முத்துலட்சுமியை வெளியே கூட்டி வந்தனர். சின்னன் ஒரு ஓரமாக ஒதுங்கி நின்றாள். விதவைகள் இப்படியான நேரங்களில் முன்னுக்கு நிற்கக் கூடாது என்பது அவர்களின் கட்டுப்பாடு.

சின்னப்பன் குத்துவிளக்கைக் கொழுத்தி விட்டு, கண்ணை மூடி ஒரு முறை 'சிவசிவா' என்று விட்டு தேங்காயை எடுத்து வெட்டுக் கத்தியால் உடைத்தார். தேங்காய் இரண்டாகப் பிளந்தது. எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி பரவியது.

சின்னப்பன், "அவள் அதிட்டக்காரி", என்று விட்டு, "வல்லி வா..வா.. பிள்ளையாரை நினைச்சுக் கொண்டு மூண்டு கிண்ணம் தண்ணி ஊத்து", என அழைத்தார். வல்லியப்பனும் தாய் மாமன் உரிமையுடன் நீரை, அள்ளி ஊற்றினார். அடுத்து செல்லியும் கிண்ணத்தை வாங்கி மாமியின் உரிமையுடன் ஊற்றினாள்.

செல்லியின் தம்பியான கதிரனும், மனைவியுமே பெற்றோருக்கான கடமைகளைச் செய்ய வந்திருந்தனர். கதிரன் கிண்ணத்தை வாங்கி முத்துலட்சுமியின் தலையில் ஊற்றினான்.

பின்பக்கமாக சற்றுத் தொலைவில் நின்று மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்த சின்னனுக்கு 'ஓ' வென்று கதறி அழ வேண்டும் போல இருந்தது. சின்னனின் கணவன் இறந்து விட்டது உண்மை தான். எனவே தன்னை விதவை என ஒதுக்குவதற்காக அவள் கவலைப்படவில்லை. ஆனால் முத்து தகப்பனில்லாத பிள்ளையில்லை. அவளுக்கு இரவல் தாய் தகப்பன் நீர் ஊற்றிய போது விதானையர் மேல் ஆத்திரம் ஆத்திரமாகத் தான் வந்தது. ஆனால் தனது பேர் சொல்ல ஒரு வாரிசைத் தந்தவர் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் என நினைத்த போது அவளின் கோபம் மறைந்து தணிவது போலிருந்தது.

உறவினர் அனைவரும் நீரூற்றிய பின்பு தலையைத் துடைத்து உடுப்பு மாற்றிவிட்டு உள்ளே அழைத்துச் சென்றனர்.

வீட்டுக்குள் நின்ற சின்னப்பன் சின்னனைக் கூப்பிட்டார். அவள் உள்ளே வர, "பிள்ளை கொம்மாவின்ரை காலிலை விழுந்து கும்பிடனை", என்றார். முத்து காலில் விழுந்து வணங்கினாள்.

"பிள்ளை தெற்கைப் பாத்து கொப்பரை நினைச்சுக் கும்பிடு", என்று எங்கே கிழவர் சொல்லி விடுவாரோ எனச் சின்னன் பயந்து கொண்டிருந்தாள். நல்ல வேளையாக அப்படி எதுவும் நடந்து விடவில்லை. "சரி... சரி.. இனி பிள்ளைக்கு சாப்பாட்டைக் கொடுங்கோ", என்று விட்டு சின்னப்பன் வெளியே போய்விட்டார். எல்லாரும் தேநீர் அருந்தி விட்டு பிள்ளையின் கையில் ஐஞ்சோ, பத்தோ கொடுத்து ஒவ்வொருவராகப் புறப்பட்டனர்.

எல்லோரும் போன பின்பு சின்னன் உள்ளே போய் முத்துலட்சுமியின் அருகில் குந்தினாள். அவளின் முகத்தை இழுத்து தன் நெஞ்சுடன் அணைத்துக் கொண்டாள் சின்னன். அவளால் அழுகையை அடக்க முடியவில்லை. அவள் விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

முத்துலட்சுமி மிரட்சியோடு கேட்டாள் "ஏனம்மா அழுகிறாய்"

"நீ தனப்பன் இல்லாத பிள்ளை இல்லையடி" என்று பலமாகக் கத்த வேண்டும் போலிருந்தது. அவள் பெரும் சிரமப்பட்டு அதை அடக்கிக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சந்தோஷம் தாங்க முடியேல்லை", என்று விம்மலுடன் கூறி விட்டு மகளின் தலையை வருடி விட்டாள் சின்னன். அவளின் இளமையையும், அழகையும் பார்த்த போது, "இவளையே நான் கருவிலையே அழிக்க நினைச்சனான்", என்ற கேள்வி அவளுள் ஒரு முறை எழுந்தது. அப்படித் தன்னைச் செய்ய விடாமல் தடுத்த விதானையாரை நினைத்த போது உடனடியாகவே ஓடிப்போய் அவரின் காலில் விழுந்து அழ வேண்டும் போல் தோன்றியது.

ஒரு பெருமூச்சுடன் மீண்டும் அவள் முத்துலட்சுமியை நெஞ்சுடன் அணைத்துக் கொண்டாள்.

அன்று மாலை எப்படியாவது இளையவனுடன் கதைப்பது எனத் திட்டவட்டமாக முடிவு செய்து கொண்டாள் சொர்ணம். அதற்கு ஒரே வழி பின் முற்றத்தில் தென்னோலையை அவன் வரும் பாதையின் குறுக்கே போட்டுப் பின்னிக் கொண்டிருப்பதே ஒரே வழி எனத் தீர்மானித்துக் கொண்டாள் அவள்.

அவள் மாலை நான்கு மணிக்கே பின் முற்றத்திற்கு வந்து ஓலை பின்னத் தொடங்கி விட்டாள். பின்னப்பட்ட ஓலைகளின் எண்ணிக்கை அதிகரித்ததேயொழிய அவன் வந்து சேரவில்லை.

பின்னி முடிந்த பன்னிரண்டாவது ஓலையை ஓலை அடுக்கின் மேல் வைத்து விட்டுத் திரும்பிய போது அவன் வந்து கொண்டிருந்தான். அவள் மெல்லிய ஒரு புன்முறுவலுடன், "என்ன மச்சாளின்ரை தண்ணி வார்வை நல்லாய் நடந்ததோ", எனக் கேட்டு வைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நேற்று ஏன் என்னிலை சீறி விழுந்தனியள்", என்று கேட்க நினைத்த அவன் சிரமப்பட்டு அதை அடக்கிக் கொண்டு, "ஓ எங்கட வசதிக்குத் தக்கமாதிரி நடந்தது", என்றான்.

"அப்ப உனக்கு நல்ல சந்தோஷமெண்டு சொல்லு" என்றாள் அவள். சொர்ணம் இப்படி சிரித்துக் கதைக்கும் போது தான் தனக்கு உண்மையான சந்தோஷம் எற்படுகிறது என்பதை அவன் எப்படி வெளியே சொல்ல முடியும்? ஆனால் பொதுவாகவே, "நல்ல சந்தோஷம்", எனச் சொல்லி வைத்தான்.

"எப்படியும் முத்து குடுத்து வைச்சவள் தான்", என்றாள் சொர்ணம் மெல்லிய கேலியுடன். ஏனோ அத்துடன் ஒரு பெருமூச்சும் வரத்தவறவில்லை.

இளையவன் அப்பாவித்தனமாகக் கேட்டான், "ஏன்.. ஏன் அப்படிச் சொல்லுறியள்?"

"நீ அவளின்ர முறை மச்சானல்லே?", என்று விட்டுச் சொர்ணம் அவனின் முகத்தைப் பார்த்தாள். திடீரென அது ஓடிக் கறுத்ததை அவள் கவனிக்கத் தவறவில்லை.

அவன் ஒருவிதமான தடுமாற்றத்துடன் சொன்னான், "நான் அப்பிடி ஒண்டும் நினைக்கேல்லை"

ஏனோ அந்த வார்த்தைகள் அவள் நெஞ்சில் ஒரு மெல்லிய இனிமையைப் பரவ விட்டன. முகத்தில் மெல்லிய செம்மை படர்ந்தது.

"நான் சீவிப் போட்டு வாறன்", என்று விட்டு அவ்விடத்தை விட்டு அகன்றான். தான் அவனைக் காதலிக்கவோ திருமணம் செய்யவோ முடியாது என்பது நன்றாகவே தெரிந்தும். அவன் இன்னொருத்தியை விரும்பவில்லை என அறியும் போது ஏன் தன் மனம் இப்படிச் சந்தோசப்படுகிறது என்பதை அவளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து கொள்ள முடியவில்லை. அது ஒரு வரக்கூடாத உணர்வு என்பது தெரிந்திருந்தும் அவளால் அதைத் தவிர்க்க முடியவில்லை.

ஏனோ அவளையறியாமல் இளையவனுக்கு உப்புக் கல்லு வைத்துச் சுட்ட போது தான், "ஐயோ", என்றதும் சின்னன் பார்த்த அந்தப் பார்வை நினைவுக்கு வந்த போனது.

அவள் வேறு ஒரு ஓலையை எடுத்துப் போட்டு பின்னத் தொடங்கினாள். அவன் சீவி முடித்து விட்டு வரும் போது மாடுகளுக்கு கிழித்துப்போடும் ஓலைகள் இல்லாமலே வந்தான்.

அவள் கேட்டாள் "ஏன் ஓலை வெட்டயில்லையே?",

"இல்லை இண்டைக்கு ஓலை கிழிக்கச் சின்னன் மாமி வரமாட்டா... அது தான் ஓலை வெட்டேல்லை"

"அப்படியே அப்ப வா கொஞ்சம் வைக்கல் கிள்ளி மாட்டுக்கொட்டிலை போட்டிட்டுப் போ", என்று விட்டு வைக்கோல் போரை நோக்கி நடக்கத் தொடங்கினாள் சொர்ணம்.

வைக்கோல் போரிலிருந்து வைக்கோலை இழுத்துப் போட்டுக் கொண்டே அவள் கேட்டாள், "இனி சின்னன் வருமட்டும் நீதான் மாட்டுக்கு வைக்கல் காட்ட வேணும் என்ன"

"அதுக்கென்ன அது சின்ன வேலை"

"உனக்கு துணைக்கு ஒவ்வொரு நாளும் நானும் வருவன்", என்றாள் அவள்.

அவன் கேட்டான், "இந்தச் சின்ன வேலைக்கு இரண்டு பேர் வேணுமே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“வேலை சின்னனோ பெரிசோ, இரண்டு பேரும் கட்டாயம் வேணும்”, எனச் சிரித்துக் கொண்டே சொல்லி விட்டு வைக்கோலை இழுத்துப் போட்டாள்.

இவளின் வார்த்தைகள் விளங்கியது போலவும், அதே வேளையில் விளங்காதது போலவும் ஒருவிதமான குழப்பத்தை அவனுள் ஏற்படுத்தின. ஆனால் அவை மனதில் ஏதோ ஒரு வித இன்பக் கிளுகிளுப்பை ஏற்படுத்தியதை உணரத் தவறவில்லை.

அவன் குனிந்து வைக்கோலை அள்ளிக் கொண்டு போய் மாட்டுத் தொட்டிலில் உதறிப்போட்டான். பின்னால் வந்த அவள் இடுப்பில் கை வைத்தவாறு அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள். அவனின் உரமேறிய உடம்பில் ஒரு தனி அழகு இருப்பதாகவே அவளுக்குப்பட்டது.

அப்போது தான் எங்கிருந்தோ வந்து கால் முகம் கழுவ கிணற்றடிக்குப் போன விதானையார் இளையவனைக் கண்டு விட்டார்.

“இளையவன் இஞ்சையே நிக்கிறாய்?”, என்ற விதானையாரின் குரல் கேட்டு சொர்ணம் திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தாள்.

“என்ன வைக்கல் அள்ளிப் போடுறாய். சின்னன் இண்டைக்கு வர மாட்டாளே?

“ஓ முத்தாச்சியட்டைச் சொல்லச் சொல்லி விட்டவ!”

“பரவாயில்லை நாலைந்து நாளைக்கு நிண்டு கறிபுளியை வேண்டி பெட்டைக்கு வடிவாய் அரைச்சு சரக்குத் கறி வைச்சு குடுத்து கவனமாய் பார்க்கச் சொல்லு என்ன”

“ஓமய்யா”, என்றான் அவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மற்றது நாளைக்குப் பகல் சின்னனை வந்து சந்திக்கச் சொல்லு என்ன!", என்றார் விதானையார்.

"ஓ.. ஓமய்யா!" என்றான் இளையவன்.

பின் விதானையாருக்கு வைக்கும் கள்ளு முட்டியை வேலியில் கொழுவி விட்டு வெறும் முட்டியை எடுத்துக் கொண்டு புறப்பட்டான் இளையவன். ஆனால் அவனின் மனம் மட்டும் சந்தோசமும் குழப்பமும் கலந்த ஒரு உணர்வுக்குள் சிக்குப்பட்டு தள்ளாடிக் கொண்டிருந்தது. விதானையார் அப்பால் போய் மறையும் வரை பார்த்துக்கொண்டு நின்ற சொர்ணம் இளையவன் பின்னால் ஓடிப்போய், "ஏய் நாளைக்கு ஒரு விசேசம்! தெரியுமே", எனக் கேட்டாள். அவன் வியப்புடன், "என்னது?", என்றான்.

"நாளைக்குச் சொல்லுறன்" என்று விட்டு சிரித்துக் கொண்டே உள்ளே ஓடி விட்டாள் அவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் - 08

அடுத்த நாள் காலையில் இளையவன் விதானையார் வீட்டுக்கு வந்த போது அது ஒருவிதமான பொலிவுடன் திகழ்வதாக உணர்ந்தான். அன்று முற்றம் நன்றாகக் கூட்டப்பட்டு தண்ணீர் தெளிக்கப்பட்டிருந்தது. முன் விறாந்தைப் படியருகில் அழகான தாமரைப் பூக் கோலம் போட்டிருந்தது. முதல் நாள் மாலை இன்று ஏதோ விசேசம் இருப்பதாகச் சொர்ணம் சொன்னது நினைவுக்கு வந்தது.

எவரையுமே வெளியில் காணாத போதும் வீட்டுக்குள்ளே ஒரே கலகலப்புச் சிரிப்பொலிகளுமாக இருந்தது. என்னவாக இருக்கும் என தனக்குள்ளேயே கேள்வியை எழுப்பியவாறு போய் பனையைச் சீவி முடித்து விட்டு திரும்பி வந்தான் இளையவன்.

அவன் மீண்டும் முற்றத்துக்கு வந்த போது சொர்ணம் அவனைக் கண்டு விட்டு அருகே வந்தாள். வரும் போதே பலமாக "எணேய்... பெத்தாச்சி இளையவன் வந்திட்டானனை. உதுகளைக் கொண்டு வா", என்றாள்.

"நான் இஞ்சை கையிலை வேலையாய் இருக்கிறன்.. நீ வந்து எடுத்துக் கொண்டு போ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டியின் குரல் உள்ளிருந்து பலமாக ஒலித்தது.

"நில் வாறன்", என்று விட்டு உள்ளே ஓடினாள் சொர்ணம்.

மீண்டும் அவள் வெளியே வந்த போது அவள் கையில் வாழை இலையில் போடப்பட்ட புக்கை, அவல், மோதகம், வடை, வாழைப்பழம் என்பன இருந்தன.

"ம் பிடி", என்றாள் அவள்.

அவன் அதை இரு கைகளாலும் வாங்கியவாறே, "ம் இன்டைக்கு என்ன விசேசம்?", எனக் கேட்டு வைத்தான்.

"இன்டைக்கு திருவெம்பாவை கடைசி நாள். வருஷா வருஷம் திருவாதிரைக்கு பெரிய தம்பிரானுக்குப் பொங்கிப் படைக்கிறனாங்கள். ஏன் தெரியுமே?

"ம்... தெரியேல்லையே..." என இழுத்தான் இளையவன்.

"அது உனக்கு விருப்பமான ஒரு ஆள் மார்கழித் திருவாதிரை அண்டு தான் பிறந்தது. அதுக்காகத் தான் பொங்கல் படையல் எல்லாம்."

இளையவன் சற்று யோசித்தவாறே, "எனக்கு விருப்பமான ஆளோ! அப்படி ஆர்..", என இழுத்தான்.

"உண்மையாய் உனக்குத் தெரியாதே?

"ம் தெரியேல்லையே..!", இளையவன் குழம்பினான்.

அவனின் முகம் மெல்லச் சுருங்கியது. அவள் தணிந்த குரலில் மெல்லக் கேட்டாள் "அப்ப உனக்கு என்னிலை விருப்பமில்லையே?", இளையவன் நெஞ்சு ஒரு முறை, அதிர்ந்தது. அவனையறியாமலே அவளிடம் விருப்பம்", எனச்சொல்லி விட்டான். இலையில் கிடந்த மோதகம் உருண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழே நழுவியது. உடனடியாகவே அதை நிலத்தில் விழவிடாமல் ஏந்தி விட்டாள் சொர்ணம். சொர்ணம் மீண்டும் அதை இலையில் வைத்தவாறே, "கிடைச்சதை இப்பிடி தவற விடுறதே?", எனச் செல்லமாகக் கடித்து விட்டு நார்க்கடகத்தை எடுத்துக் கவிழ்த்து வைத்தாள். இளையவன் இலையை அதில் வைத்து விட்டு வெளிக் குடத்தில் நீரெடுத்துக் கையைக் கழுவினான்.

"சாப்பிடு, பாயாசம் எடுத்து வாறன்", என்று விட்டு சொர்ணம் உள்ளே போனாள். அவள் சற்று முன் கதைத்த ஒவ்வொரு வார்த்தையும் தன்னை ஒரு பெரிய ஆபத்தை நோக்கி இழுத்துச் செல்வதாகவே தோன்றியது. ஆனால் இன்னும் தான் வெளிக்குடத்தில் தான் நீர் எடுக்க வேண்டும் என்பதையும் கவிழ்த்து வைத்த கடகப் பெட்டியில் தான் இலையை வைத்துச் சாப்பிட வேண்டும் என்பதும் நெஞ்சை வந்து இடிக்கத் தவறவில்லை.

அவள் அவனை நேசிக்கிறாள் என்பதும் அவன் அவளை விரும்புகிறான் என்பதையும் எவ்வளவு முயன்றாலும் அவன் மனதால் மறுதலிக்க முடியவில்லை. ஆனால் அது காதலோ, கல்யாணத்தை நோக்கியதா அல்ல என்பதில் இருவருமே உறுதி தவறி விடக் கூடாது எனத் தனக்குத் தானே மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

அவன் இலையில் இருந்தவற்றைச் சாப்பிட்டு முடிக்க சொர்ணம் அதில் பாயாசத்தை ஊற்றி விட்டு இன்னொரு வடையை வைத்துக் கொண்டே, "வடையை பாயசத்தோடை கடி நல்லாய் இருக்கும்", என்றாள்.

அவனுக்கு இலையைச் சுழற்றி எறிந்து விட்டு அந்த இடத்திலிருந்து ஓடிப்போய் விட வேண்டும் போல ஒரு அந்தர உணர்வு தோன்றியது. சிரமப்பட்டு அதை அடக்கிக் கொண்டு பாயாசத்தைக் குடித்து முடித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சாப்பிட்டு முடிய சீதேவிப்பாட்டி புக்கை, மோதகம், வடை என எல்லாவற்றையும் மூடல் பெட்டியில் வைத்து அவளிடம் கொடுத்தவாறு, "கொண்டு போய் செல்லியட்டைக் குடு, சின்னனுக்கும் குடுக்கச் சொல்லு", என்றாள்.

அவனும் அவற்றை கொண்டு வீதியில் இறங்கினான்.

எனினும் அவன் சீவி முடித்து விட்டு விதானையார் வீட்டு முற்றத்திற்கு வந்த போது வெள்ளை நிறத்திலான முழுப்பாவாடை சட்டை, அரைத்தாவணி அணிந்து நெத்தியில் விபூதியில் மூன்று குறி இழுத்து அதன் மேல் சிறிய கறுத்தப் பொட்டிட்டு. முழுகிய பின்பு பின்னாமல் தலையைக் கூட்டிக் கட்டி, நெற்றியில் படிந்த மயிர்க்கற்றைகளை ஒதுக்கிக் கொண்டு நின்ற சொர்ணத்தின் அந்தக் கோலம் மட்டும் நெஞ்சுக்குள் நின்று ஏதோ ஒரு இனிய உணர்வைப் பரவவிட்டுக் கொண்டிருந்தது. ஏனோ அவனையறியாமலே அவனிலிருந்துஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

பாறாத்தை கொண்டு வந்த நெத்தலி மீன் குஞ்சில் சரக்கரைத்து நல்ல பிரட்டல் கறி வைத்திருந்தாள் சின்னன். அந்த ஊரின் மீன் வியாபாரிகளில் பறாத்தைக்கு தனி கௌரவம் உண்டு. அவள் அதிகாலையிலேயே எழுந்து பொலிகண்டிக்குப் போய் மீன் எடுத்து தலைச் சுமையாகவே கொண்டு வந்து எட்டு மணிக்கு முன்பாகவே வீடுவீடாகச் சென்று வியாபாரம் செய்ய ஆரம்பித்து விடுவாள்.

சாப்பாட்டைப் போட்டுக் கொண்டு போய் முத்துலட்சுமியிடம் கொடுத்த போது அவள் முகத்தைச் சுழித்தாள். அவளுக்கு காலையில் அரைத்துக் கொடுத்த வேப்பம் துளிர் உருண்டை அப்போதும் வயிறுவரைக் கசத்துக் கொண்டிருந்தது.

அவள் சினுங்கினாள், "பிறகு தின்னுறனணை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஐயோ... பிறகு வயிறு நோப்பட்டுப் போகும் நிறைய சீரகம் போட்டனான். உருசியாய் இருக்கும் தின்னடா”, எனச் சின்னன் அவளின் நாடியைத் தடவினாள்.

அவளும் ஒருவாறு சாப்பிட்டு முடித்தாள். குடிப்பதற்கு அரைப்பேணி சுட்டாறின நீரைக் கொடுத்து விட்டு, “வீட்டை வரச் சொல்லி சொல்லி விட்டிருக்கினம்.. நான் போட்டு உடனை வந்திடுறன். நீ தண்ணியை கிண்ணியை எடுத்துக் குடிச்சிடாதை கூடாது என்ன”, என்று விட்டு எழுந்தாள் சின்னன்.

சின்னன் விதானையார் வீட்டை அடைந்த போது சீதேவிக் கிழவி ஆட்டை அவிழ்த்துக் கொண்டு வெளியே வந்து கொண்டிருந்தாள். சின்னன் போய்க் கயிற்றை வேண்டினாள், “தாருங்கோணை தான் கொண்ட கட்டிப்போட்டு வாறன்”, என்றான் சின்னன்.

கிழவி கயிற்றை அவளிடம் கொடுத்தவாறே, “என்னடி அவள் பெட்டையை தனிய விட்டிட்டு வந்தனியே?”, எனக் கேட்டாள் சீதேவிப்பாட்டி.

“இல்லை.. செல்லி மச்சாளைப் பாக்கச் சொல்லிப் போட்ட வந்தனான். ஐயா வரச் சொல்லி இளையவனட்டைச் சொல்லி விட்டதாம்”

அந்த வார்த்தைகள் கிழவியின் முகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திய போது அவள் எதுவும் பேசாமலே உள்ளே சென்றுவிட்டாள்.

இரவில் விதானையாரின் ஓய்வு நிலையமாக இருக்கும் “மால்” தான் பகலில் அவரின் காரியாலயம். சின்னன் அங்கு போன போது வேறு இருவர் உள்ளே இருக்கவே சின்னன் வெளியே நின்ற பூவரசின் கீழ் குந்தினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் போனதும் விதானையார் சின்னனைக் கூப்பிட்டார். அவள் உள்ளே சென்றதும் லாச்சியைத் திறந்து ஒரு உறையை எடுத்து அவளிடம் நீட்டியவாறு, "இதுக்கை ஒரு மோதிரம் இருக்குது கொண்டு போய் பெட்டைக்குப் போடு", என்றார்.

சின்னன் தயங்கியவாறே மெல்லக் கையை நீட்டி வேண்டினாள் விதானையார் கேட்டார், "என்ன பஞ்சிப்படுறாய்?"

அவள் மென்று விழுங்கினாள், "இல்லை உவ்வளவு விலையிலை மோதிரம் எங்காலை எண்டு ஆரும் கேட்டால்..?"

"நீ கொஞ்சம் கொஞ்சமாய் சேர்த்த காசிலை செய்ததெண்டு சொல்லு", என்றார் அவர். அதை மற்றவர்கள் நம்புவார்களா இல்லையா என்பது பற்றி அவருக்கு கவலை இருப்பதில்லை. ஆனால் சின்னனால் எப்படி அவ்வாறு இருக்க முடியும்?

ஆனால் விதானையாரின் வார்த்தைகளுக்கு மறு பேச்சு பேசி அவளுக்குப் பழக்கமுமில்லை. அதற்கான துணிவும் அவளிடமில்லை. அந்த உறையை வாங்கி சேலைத் தலைப்பில் முடிந்து கொண்டாள்.

விதானையார் சட்டைப் பையிலிருந்து நான்கைந்து நூறு ரூபா தாள்களை எடுத்து அவளிடம் நீட்டியவாறு, "பெட்டைக்கு நல்ல கறி புளியாய் வேண்டி சமைச்சுக் குடு", என்றார்.

அவள் எதுவும் பேசாமல் அதை வாங்கிக் கொண்டாள். ஏனோ அவளையறியாமலே அவளின் கண்கள் கலங்கின.

விதானையார் அதை அவதானித்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏய்.. என்னது.. இப்ப என்ன நடந்தது?", எனக் கேட்ட அவர் பின்பு ஏதோ ஒரு வாஞ்சை கலந்த உணர்வுடன், "அவள் உன்ரை வீட்டை வளர்ந்தாலும் என்ரை பிள்ளை", என்றார்.

அவர் என்றுமே இப்படி வெளிப்படையாக அவளிடம் பேசியதே கிடையாது அவரின் அதிகார நடத்தைக்கு உள்ளே ஒரு ஆழமான அன்பு இளையோடுவதை அவளால் உணரமுடிந்தது. அது அவளிடம் ஒருவித துணிவை வரவழைத்தது. சின்னன் மெல்லத் தயங்கியபடியே "பிள்ளையும் பெரிதாகிவிட்டாள் இனி நாங்கள்.." அதற்கு மேல் வார்த்தைகள் எதுவும் வெளிவரவில்லை. ஆனால் அவள் என்ன சொல்ல நினைக்கிறாள் என்பதை அவர் புரிந்து கொண்டார்.

அவர் கண்களில் மெல்லிய கோபம் தோன்றியது.

"எடியேய்... நான் உன்னை வைப்பாட்டியாய் தான் வைச்சிருக்கிறன் எண்டு நினைக்கிறியே..?", அந்த வார்த்தைகளால் சின்னன் அதிர்ந்து போனாள் அவள் நெஞ்சு நடுங்கியது. அவள் தலையைக் குனிந்து கொண்டாள். கண்களிலிருந்து கண்ணீர் பொலு பொலுவென ஓடத் தொடங்கியது.

விதானையாரின் குரலில் உறுதி தொனிந்தது. "சின்னன் வெளியிலை தெரிஞ்சாலும் தெரியாட்டிலும் நான் சாகுமட்டும் எனக்கு நீ பெண்சாதி தான். போ.. போய் பிள்ளையை வடிவாய்க் கவனி"

சின்னன் கண்களைத் துடைத்துக் கொண்டாள். அவர் தன்னை மனமார நேசிக்கிறார் என்பதை அவள் நினைத்த போது மனதில் ஒருவித திருப்தி எழுந்தாலும் திசை மாறிப் போய் விட்ட தன் வாழ்வு தொடர்பான அவமான உணர்வு அவளுள் எழுவதை அவளால் தவிர்க்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – ௦௭

அன்று வெள்ளிக்கிழமை! பொங்கலுக்கு இன்னும் இரு தினங்களே இருந்தன.

அந்தப் பெரிய நாற்சாரம் வீட்டைக் கழுவுவது அவ்வளவு சுலபமான வேலையில்லை. முதல் நாளே சொல்லி வைத்த காரணத்தால் பொன்னம்மா அதிகாலை ஐந்து மணிக்கே வந்து விட்டாள். மா இடிப்பது போன்ற வேலைகளுக்கு வழமையாகப் பொன்னம்மாவையே அழைப்பதுண்டு. அவளும் அவளின் மகளும் வந்தால் இருவரும் ஒரு சில மணித்தியாலங்களிலே பத்துக் கொத்து அரிசியை இடித்து அரித்து வறுத்து விடுவார்கள்.

பொன்னம்மா வாளியிலும், குடத்திலும் நீரைக் கொண்டு வந்து ஊற்ற தென்னை ஈர்க்கைக் கொண்டு கட்டிய விளக்குமாற்றினால் சொர்ணம் கழுவிக் கொண்டிருந்தாள்.

அலுமாரியை நகர்த்த என்ன செய்வது என்று சொர்ணம் யோசித்துக் கொண்டிருந்த போது தான் இளையவன் சங்கடப் படலையடியில் வந்து கொண்டிருந்தான்.

அவள் "இளையவன் ஒருகால் வந்திட்டுப் போ" என அவனைக் கூப்பிட்டாள். அவளின் அழைப்பு அவனுள் ஏதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவித மகிழ்ச்சியை ஊட்டியிருக்க வேண்டும். அவன் முகத்தில் ஒரு மெல்லிய மலர்ச்சியுடன் அவளின் அருகில் வந்தான்.

"இந்த அலுமாரியிலை ஒரு கை பிடி.. கொஞ்சம் அரக்கிவிட வேணும்"

இளையவன் திடுக்கிட்டான். அவன் தயக்கத்துடன் "பிள்ளை! நாங்கள் அதுக்கை உள்ளிடக்கூடாது", என்றான்.

சொர்ணம் அதட்டினாள், "வா எண்ணுறன்"

அதற்கு மேல் அவனால் சொர்ணத்தின் கட்டளையை நிராகரிக்க முடியவில்லை. மெல்ல விறாந்தையில் கால் வைத்த போது ஒரு கூச்ச உணர்வு மேனியெங்கும் பரவும் போல் தோன்றவே அப்படியே நின்றுவிட்டான்.

அவள் அதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

"நீ அந்தக் கரையிலை பிடி நான் இஞ்சாலை பிடிக்கிறன்", என்று விட்டு சொர்ணம் குனிந்து அலுமாரியின் அடிப்பக்கத்தைப் பிடித்தாள் இளையவனும் ஏதோ மந்திரத்தால் கட்டுண்டவன் போல் மறுகரையில் பிடித்துத் தூக்கினான்.

அலுமாரியை அரக்கிவிட்டு நிமிர்ந்த போது பொன்னம்மா வந்து விட்டாள். அவள் கத்தினாள், "டேய் என்ன துணிவிலையடா வீட்டுக்கை கால் வைச்சனீ...?"

சொர்ணம் குறுக்கிட்டு, "நான் தான் கூப்பிட்டனான்", என்றாள்.

"நீ கூப்பிட்டால் அவன் உடனை வந்திடுறதே... போடா வெளியிலே!", என்றாள் பொன்னம்மா. இளையவன் எதுவுமே பேசாமல் தலையைக் குனிந்தவாறு வெளியே போய் விட்டான்.

சொர்ணத்தால் பேச்சு வாங்க வேண்டிய நிலை ஏற்பட்ட போதிலும் ஏனோ அவனுக்கு அவளில் கோபம் வரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தானே தவறு செய்து விட்டதாகக் கருதிக் கொண்டாலும் பொன்னம்மா அவனைத் திட்டியதை அவனால் பொறுக்க முடியவில்லை. எனினும் எதுவும் பேசாமலே பனையை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

"பொன்னம்மா.... நானல்லே அவனைக் கூப்பிட்டனான்.. நீ ஏன் அவனைப் பேசினனீ", என்ற சொர்ணத்தின் கோபமான வார்த்தைகள் இளையவனின் காதில் விழத் தவறவில்லை.

"ஓ... ஓ.. இண்டைக்கு விறாந்தைக்கு வருவங்கள் நாளைக்கு நடு வீட்டுக்கை வந்து நிக்குங்கள். விடுங்கோவன்", என்ற பொன்னம்மாவின் கடுகடுப்பு காதில் விழாத தூரத்துக்கு இளையவன் போய்விட்டான்.

ஆனால் பொன்னம்மா அதை அத்துடன் விட்டுவிடத் தயாராயிருக்கவில்லை. ஏதோ அலுவலாகப் பக்கத்து வீட்டுக்குப் போயிருந்த சீதேவிக்கிழவியிடம் போய் அங்கு வைத்தே எல்லோருமறிய ஒரு ஆர்ப்பாட்டம் நடத்தி விட்டாள்.

சீதேவிக்கிழவிக்கு இளையவன் அப்படிச் செய்ய மாட்டான் என்று ஒரு நம்பிக்கை இருந்தாலும் பொன்னம்மா சொல்வதையும் மறுக்க முடியவில்லை.

"சரி.. சரி... நீ வாயை வைச்சுக் கொண்டு கிட.. நான் அவனைக் கேட்கிறன்", என்றாள் சீதேவிக்கிழவி.

ஆனால் பொன்னம்மாவால் வாயை வைத்துக் கொண்டு இருக்க முடியவில்லை விதானையார் கோவிலில் இருந்து வந்தவுடன் முதல் வேலையாக வீட்டு முன் விறாந்தை தீட்டுப்பட்ட விஷயத்தை கை, கால் வைத்துச் சொல்லி முடித்து விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானையார் குடித்த தேனீரையும் பாதியில் வைத்து விட்டு, "அவனை வரச் சொல்லு", என்று கோபமாகக் கூறி விட்டு தனது மாலை நோக்கிப் போய் விட்டார்.

பொன்னம்மா இளையவன் பனை சீவி முடித்துத் திரும்பிய போது ஓடிப்போய் "உன்னை விதானையார் வரட்டாம்" என்றாள்.

இளையவன் மால் வாசலை நெருங்கிய போது விதானையார் எழுந்து வெளியே வந்தார்.

"இயனக் கூட்டைக் கழட்டிப் போட்டு, மாமரத்திலை போய்க் கையைக்குடு", விதானையாரின் குரலில் அதிகாரமும், கோபமும் கலந்து கொதித்தன.

திகைத்துப் போன இளையவன் ஓரிரு வினாடிகளுக்குள் விஷயத்தைப் புரிந்து கொண்டான். எதுவுமே பேசாமல் அவன் இயனக் கூட்டைக் கழற்றி ஒரு பக்கமாக வைத்து விட்டு மாமரத்தில் கையைக் கொடுத்தான்.

மாலின் இறப்பில் சொருகிருந்த உப்புப் பிரம்பை எடுத்துக் கொண்டு விதானையார் அவனருகில் வந்தார். அடுத்தடுத்து இரு அடிகள் அவன் முதுகில் விழுந்தன. இளையவன் பல்லைக்கடித்துக் கொண்டு மாமரத்தை மேலும் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டான்.

சத்தம் கேட்டு ஓடி வந்த சொர்ணம், "ஐயோ அடியாதையுங்கோ...... நான் தான் அவனை அலுமாரி அரக்க உள்ளை கூப்பிட்டனான்", எனக் கத்தினாள்.

விதானையார் திரும்பி அவளைப்பார்த்தார் பிரம்படி ஒன்று அவளின் தொடையைப் பதம் பார்த்தது. சீதேவிக்கிழவி, "நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடி இஞ்சாலை", என்று விட்டு ஓடிப்போய் அவளைக் கையில் பிடித்து அவ்விடத்தை விட்டுக் கூட்டி வந்தாள்.

விதானையார் யாருக்கும் தண்டனை கொடுக்கும் போது எவரும் தலையிடக் கூடாது என்பது அவரின் கடுமையான சட்டம். அவர் எப்போதுமே விசாரித்துத் தண்டனை வழங்குவதில்லை. அவரின் மனம் எடுக்கும் முடிவு தான் தீர்ப்பு.

விதானையார் பிரம்பை மீண்டும் இறப்பில் சொருகியவாறு "எணெய்.. அவனுக்குச் சாப்பாடு குடுத்து விடு", என்று விட்டு உள்ளே போய் விட்டார்.

விதானையார் யாருக்காவது தண்டனை கொடுத்தால், அது முடிய சீதேவிப்பாட்டி சாப்பாடு கொடுத்து அனுப்புவது ஒரு வழமை.

கிழவி சாப்பாடு கொடுக்கும் போதே, "ஏன்ரா பொடி! வீணாய் அடி வேண்டிறியள்... விதானையின்ரை குணம் தெரியும் தானே.. இனி அப்படிச் செய்யாதை", என ஒரு எச்சரிக்கை கலந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுண்டு குடிமக்களை அடித்துத் திருத்துவது தங்களின் கடமை என்பது கிழவியின் நம்பிக்கை.

இளையவன் இயனக் கூட்டை எடுத்துக் கட்டிக் கொண்டிருந்த போது கிழவி "வாடா வந்து நாலு வாய் திண்டிட்டுப் போ" என அழைத்தாள்.

இளையவனுக்கு முதுகு இன்னும் விறுவிறுத்துக் கொண்டிருந்தது. சொர்ணம் தூணைப்பிடித்தவாறு விம்மிக் கொண்டிருந்தாள். அவன் ஒரு முறை சொர்ணத்தை ஏறெடுத்துப் பார்த்து விட்டு வெளிப்படலையை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

"டேய் - நான் சொன்னது விளங்கேல்லையே... சாப்பிட்டிட்டுப் போடா!", என்றாள் கிழவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் ஒரே ஒரு வார்த்தை தான் சொன்னான் ''வேண்டாம்!'', கிழவி அதட்டினாள், ''ஒ.. அவ்வளவுக்கு உனக்கு வெடி வால் முளைச்சிட்டுதே. வாடா இஞ்சை''

இளையவன் கிழவியின் வார்த்தைகளைப் பொருட்படுத்த வில்லை. அவன் தெருவில் இறங்கி வேகமாக நடக்க ஆரம்பித்தான்.

கிழவி ''என்ரை பிடி சோறு திண்டு வளர்ந்ததுகள்... இப்ப எனக்கு வால் காட்ட வெளிக்கிட்டிட்டுதுகள். இப்பவே தட்டி முறிச்சு வையாட்டில் தலைக்கு மேலை தான் ஏறுங்கள்'' என்று புறுபுறுத்தவாறே உள்ளே போனாள்.

இளையவனைப் பொறுத்த வரையில், அவர்கள் சாப்பிடுவது முதற் கொண்டு வேலை செய்வது வரை அவர்கள் சொல்வது எதையும் மறுத்துப் பழக்கமில்லை. இன்றைய மறுப்பு அவனுக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தபோதிலும் அதில் ஏதோ ஒருவிதமான திருப்தி இருப்பதாகவே அவன் உணர்ந்தான். ஏதோ உடலில் ஒரு புதிய இரத்தத்தை, அந்த 'வேண்டாம்' என்ற அவனின் வார்த்தை அவனுள் பாயவிட்டதைப் போன்ற ஒரு உணர்வு உருவாக்கியது. எனினும் முதுகு எரிந்து கொண்டு தான் இருந்தது. தொட்டுத்தடவ அவனின் ரோசம் விட்டுக் கொடுக்க மறுத்தது. எரிவு மாறினாலும் கண்டல், நோ ஒரு வாரத்திற்காவது முதுகில் இருக்கும் என்பதை அவன் அறிவான்.

முதுகு நோவைப்பற்றி யோசித்த போது சொர்ணத்திற்கு தொடையில் அடி விழுந்ததும், அவள் தூணைப் பிடித்துக் கொண்டு விம்மியதும் நினைவுக்கு வந்தது. அவளால் தான் அடி வாங்கிய போது அவள் வலியவே வந்து அதில் பங்கு கொண்டதை நினைத்த போது அவனின் மனம் ஒரு முறை நெகிழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவனது அந்த, ''வேண்டாம்'', என்ற வார்த்தை எவ்வளவு தான் நியாயமாக இருந்த போதிலும் அது தனக்கு எவ்வளவு நெருக்கடிகளைக் கொடுக்கும் என்பதை அவன் அறிந்தே வைத்திருந்தான்.

நாளை சீதேவிக்கிழவி, ''ஏன்ரா சாப்பிடாமல் போனனீ?'', எனக் கேட்கும் போது தனது நியாயத்தைச் சொல்ல முடியாமல் தான் தடுமாற வேண்டி வரும் என்பதையும், அவள் தனது தாய் தகப்பனைக் கூப்பிட்டு, ''நீ பிள்ளை வளர்த்த வளப்பு இப்படியே?'', எண்டு கேட்க, அவர்கள் திட்டுவார்கள் என்பதையும் அவன் தெரிந்தே வைத்திருந்தான். அதற்காகவெல்லாம் அவன் பெரிதாகக் கவலைப்படவில்லை.

ஆனால் சொர்ணம், ''நீ எங்களை வெறுக்கிறியே?'', என்று கேட்டால்.

''இல்லை'', என்று பதில் சொல்லலாம். ஆனால் அடுத்த கேள்வியாய், ''அப்பிடியெண்டால் ஏன் சாப்பிடமாட்டன் எண்டனீ'', எனக்கேட்டால் என்ன பதில் சொல்வது என்பது தான் அவனின் குழப்பமாக இருந்தது.

கண்ணீர் ஒழுக விம்மிய அவளின் முகத்தை மீண்டும் மீண்டும் அவனின் மனதை விட்டு அகற்ற அவனால் முடியவில்லை.

அன்று பிராந்துப் பட்டத்திற்கு சிறகு வளைக்க வேண்டும் என்பது நினைவுக்கு வரவே வேகமாக நடக்க ஆரம்பித்தான் இளையவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 10

சொர்ணம் அழுது கொண்டே போய் கட்டிலில் குப்புறப் படுத்துவிட்டாள். அவளின் விம்மலும், கண்ணீரும் நின்றுவிட்ட போதிலும் மனதில் பொங்கிய கோபமும் அதை வெளிக்காட்ட முடியாத இயலாமையும் சேர்ந்து அவளை என்னவோ செய்தது.

சிறிது நேரத்தில் சீதேவிக் கிழவி நோவெண்ணைப் போத்தலுடன் உள்ளே வந்தாள், ''பிள்ளை – விடணை கொஞ்சம் எண்ணெய் போட்டுவிடுறன்'', என்றவாறே கிழவி பாவாடையை உயர்த்தக் கையை வைத்த போது வேகமாக அதைத் தட்டிவிட்டாள் சொர்ணம்.

''எனக்கு எண்ணெயும் வேண்டாம்! ஒரு கத்தரிக்காயும் வேண்டாம். நீ அங்காலை போ...?'', எனச் சீறினாள் சொர்ணம்.

கிழவி விடவில்லை, ''பிள்ளை மோட்டு அடி அடிச்சுப் போட்டான். பிறகு கண்டிப்போய் விடும் கொஞ்சம் போட்டுத் தேய்ச்சு விடுறன்'', என்றாள் அவள்.

''எனக்கு நீ எண்ணெய் போடுவாய்... இளையவனுக்கு ஆர் எண்ணை போடுறது?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதை விடு பிள்ளை....", என்று கிழவி ஆரம்பிக்கும் போதே குறுக்கிட்டாள் சொர்ணம்.

"கூப்பிட்டது நான்... ஒரு கேள்வி நியாயமில்லாமல் அவனுக்கே அடிக்கிறது.... உப்பிடிப் பிழை செய்யுற ஐயாவுக்கு ஆர் பிரம்படி கொடுக்கிறது?"

கிழவி திகைத்து விட்டாள். பின் சொர்ணத்தின் முதுகை மெல்ல வருடியவாறே சொன்னாள், "பிள்ளை... பெத்த தேப்பனைப் பற்றி அப்படிக் கதைக்கக் கூடாது. ஆம்பிளையள் எது செய்தாலும் நாங்கள் எதிர்த்துக் கதைக்கக் கூடாது"

படுத்திருந்த சொர்ணம் திடீரென எழும்பினாள்.

"அது உங்கட காலம் நான் இண்டைக்கு அவரட்டை கேட்கத்தான் போறன்"

"விசர்க் கூத்தாடி அவனட்டை அடி வேண்டிச் சாகாதை", என்று விட்டு கிழவி மீண்டும் பாவாடையில் கையை வைத்தாள். அவளின் கையைத் தட்டி விட்ட சொர்ணம்,

"வைச்சிட்டுப் போ.... நான் போடுறன்", என்றாள்.

"நீ வடிவாய்த் தேய்க்க மாட்டாய்?"

"அது எனக்குத் தெரியும்! நீ போ....", எனக் கத்தினாள் சொர்ணம்.

சிறுவயதிலிருந்தே சொர்ணத்தின் பிடிவாதக் குணம் பற்றி கிழவிக்கு நன்றாகவே தெரியும். எண்ணெய் போத்தலை கட்டில் காலுடன் வைத்து விட்டு வெளியேறினாள் அவள்.

கிழவி போன பின்பு சொர்ணம் மெல்லப்பாவாடையை உயர்த்தி தொடையைப் பார்த்தாள். அவளின் மஞ்சள் நிறக்காலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிவத்தக் கோடு தெரிந்தது. தொட்டுப்பார்த்த போது அதில் வலித்தது.

இளையவனுக்கும் இப்படித்தானே நோகும் என நினைத்துக் கொண்ட போது, தான் எண்ணெய் போடுவதில்லை என முடிவு செய்து கொண்டாள். மீண்டும் அவள் கட்டிலில் படுத்துக்கொண்டாள்.

அன்று மாலை யன்னலுக்குள்ளால் இளையவன் பனையில் ஏறுவதைக் கண்ட போதும் அவள் வெளியே வரவில்லை. ஏதோ ஒருவிதமான குற்ற உணர்வு தோன்றி அவளின் கண்கள் முன் செல்ல விடாமல் தடுத்தது.

இளையவன் சீவி முடித்து விட்டு முற்றத்துக்கு வந்த போது சீதேவிக் கிழவி அவனைக் கூப்பிட்டாள். அவன் அருகில் வந்தபோது கிழவி, "ஏனடா காலமை சாப்பிடாமல் போனனீ?", என அதட்டினாள்.

"உங்கடை சாப்பாட்டைக் கொண்டு போய் நாய்க்குப் போடுங்கோ", எனச் சொல்ல வேண்டும் போல் தோன்றினாலும் சிரமப்பட்டு நாவை அடக்கிக் கொண்டான்.

"வர வர நீங்கள் குணம் கொள்ளத் தொடங்கிறியள்... உது நல்லதுக்கில்லை", என்று விட்டு ஒரு சிறு சீசாவில் விட்டு வைத்திருந்த நோவெண்ணையை அவனிடம் நீட்டியவாறே, "இதை அவள் கோத்தையட்டைக் குடுத்து அடி விழுந்த இடத்திலை தேய்க்கச் சொல்லு", என்றாள்.

ஒரு சிறு தயக்கத்தின் பின் இளையவன் அதை வாங்கிக் கொண்டான். அனால் அவனின் மனம் மட்டும் அதைப் போடுவதில்லை என்பதில் உறுதியாயிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரென்றாலும், எவ்வளவு பெரிய குற்றம் செய்து விதானையாரிடம் தண்டனை பெற்றாலும் உடனடியாகவே கிழவி சாப்பாடு கொடுக்கவும், நோவெண்ணை கொடுத்து விடவும் தவறுவதில்லை.

இளையவன் தலையைக் குனிந்து கொண்டே அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டான். சொர்ணம் அவனின் குரல் கேட்டு முன்விறாந்தைக்கு வந்து யன்னலூடாக அவன் சங்கடப்படலையால் செல்வதைப் பார்த்தாள்.

அவனின் முதுகிலும் மெல்லிய இரு கறுத்தக் கோடுகளைக் கண்ட போது அவளின் கண்கள் கலங்கின. அவள் மெல்ல தன் தொடையைத் தடவிப்பார்த்தக் கொண்டாள். மனதைப் போலவே அதுவும் வலித்தது.

தைப்பொங்கல் நெருங்கிவிட்டதால் பட்டம் விடும் போட்டிகள் தொடங்கிவிட்டன. மணியாறன்கூடலைச் சேர்ந்த யாரோ ஒருவன் பட்டத்தை ஏற்றி இரவு இறக்காலே இராக் கொடிக்கு விட்டிருந்தான். பட்டத்தின் "விண்" தொடர்ந்து கூவிக் கொண்டேயிருந்தது.

விண் சத்தத்தைக் கேட்ட போது சொர்ணத்திற்கு இளையவனின் நினைவே மீண்டும் மீண்டும் வந்து கொண்டிருந்தது. விண்ணுக்கு நார் வெட்டுவதிலும் பிராந்து பட்டம் கட்டுவதிலும் இளையவன் மிகவும் திறமைசாலியாகவே விளங்கி வந்தான். பட்டம் கட்டுவிப்பதற்கும், விண் செய்வதற்கும் அயல் ஊர்களிலிருந்து கூட அவனிடம் பலர் வருவதுண்டு.

பட்டம் கட்டுவது மிக அவதானத்துடன் செய்யப்பட வேண்டிய நுணுக்கமான வேலை. மூங்கில் தடிகளைச் சீவி இருபக்கமும் சிறகுகள் அமைத்து கீழ்ப்பகுதியில் வண்டிப்பக்கம் அமைத்து மேலே கம்பியில் வளைத்துச் சொண்டு செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இரு பக்கமும் சமனான நிறை வரும் வரை பக்குவமாக மூங்கில் தடிகளைச் சீவ வேண்டும். ஒரு சிறிய தவறு ஏற்பட்டாலும் குரங்கு அப்பம் பிரித்த கதையாக முடிந்து விடும். பின்பு வாணிஸ் தாள்களை வரிச்சில் ஒட்டி பிராந்துப் பட்டம் முழுமையாக்கப்படும். பட்டம் மேல் காற்றில் நிற்கும் போது ஓசையெழுப்பும் வகையில் விண் கட்டுவதும் உண்டு. இளம் பனை மட்டையில் நார் எடுத்து அதைப் பதமாகச் சீவி வில் போன்று வளைக்கப்பட்ட மூங்கில் தடியில் கிழித்துக் கட்டியே விண் உருவாக்கப்படும்.

அங்கு சுற்றிவர உள்ள கிராமங்களிலேயே பிராந்து, கொக்கு பட்டங்கள் கட்டுவதில் பெயர் பெற்றவர் எம்பெருமான் மாஸ்ரர். இளையவன் அவர் பட்டம் கட்டும் போது அருகில் இருந்து உதவி செய்தே தானும் பட்டம் கட்டக் கற்றுக் கொண்டு விட்டான்.

இராக் கொடியின் விண் சத்தம் மிக இனிமையாகவும், ஒரே சீராகவும் ஒலித்துக் கொண்டிருந்தது. எனவே அந்த "விண்" இளையவன்தான் செய்து கொடுத்திருக்க வேண்டும்என நினைத்துக் கொண்டாள். அதைக் கேட்பதில் ஏதோ ஒருவித மனநிறைவு இருப்பதாகவே அவளுக்குத் தோன்றியது. விண் ஒலியின் தாலாட்டில் அவள் தன்னையறியாமலே தூங்கிவிட்டாள்.

அதிகாலையில் எழுந்தவுடன் யன்னலைத் திறந்து பார்த்தாள். பனையில் இளையவன் இருக்கவில்லை. இன்று எப்படியாவது அவனைக் கண்டு நேற்றைய சம்பவம் தொடர்பாகக் கதைக்க வேண்டும் என முடிவு செய்து கொண்டாள்.

கிணற்றடியில் போய் முகத்தைக் கழுவி விட்டு வாளியிலும், குடத்திலும் நீர் நிரப்பிக் கொண்டு முன் முற்றத்துக்குப் போனாள். இளையவன் வரும் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விடத்தில் நிற்க வேண்டும் என்பதற்காக ஒரு பேணியை எடுத்துக் கொஞ்சம் கொஞ்சமாக பூக்கன்றுகளுக்கு நீரை ஊற்றத் தொடங்கினாள்.

படலை திறக்கும் சத்தம் கேட்டு மகிழ்ச்சியுடன் நிமிர்ந்து பார்த்த சொர்ணத்துக்கு ஏமாற்றமே கிடைத்தது. சங்கடப்படலையால் வந்த சின்னனைக் கண்டதும் நின்று விட்டாள்.

சொர்ணம் பேணியை வாளிக்குள் போட்டுவிட்டு நிமிர்ந்து கொண்டாள்.

"பிள்ளை...", என்று ஏதோ சொல்ல வந்த சின்னன் ஒரு வித தயக்கத்துடன் அதை இடை நிறுத்தினாள். "என்ன நிப்பாடியிட்டாய்? சொல்லன்", எனக் கேட்டாள் சொர்ணம்.

"பிள்ளை..." இளையவனின்ரை முதுகைப் பாத்தனியளே.... வரி வரியாய் இரத்தம் கண்டிப்போய்க் கிடக்குது"

சொர்ணம் எதுவுமே பேசாமல் தலையைக் குனிந்து கொண்டாள் - கால் பெருவிரல் மண்ணைக் கிளறிக் கொண்டிருந்தது.

சின்னன் தொடர்ந்தாள், "பிள்ளை சீலையில் முள்ளுப் பட்டாலும் முள்ளு மேலை சீலை பட்டாலும் கிழியிறது சீலை தான். எங்கள் இரண்டு குடும்பத்துக்கும் உழைக்கிற ஒரே ஆம்பிளைப்பிள்ளை அவன் தான். அவனுக்கு ஏதாவது இசக்குப் பிசக்காய் நடந்தால் நாங்கள் எல்லாரும் பொயிலைக்கண்டு மருந்தைக் குடிச்சுத்தான் சாகவேணும்"

சொர்ணத்துக்கு அந்த இடத்தை விட்டே ஓட வேணும் போலிருந்தது. அவள் மெல்ல அனுங்கினாள், "நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேணுமெண்டு செய்யேல்லை. இப்பிடி நடக்கும் எண்டு நான் நினைச்சுக் கூடப் பார்க்கவில்லை''

சின்னன் உறுதியான குரலில் சொன்னாள் ''சரி நடந்தது நடந்து போச்சுது இனியெண்டாலும் இப்படி நடவாமல் இருக்க வேணும்... நீங்கள் பிள்ளை அவனோடை பேசுறது பழகிறதை இனியாவது விடுங்கோ!''

சொர்ணம் தலையில் ஆயிரம் இடிகள் விழுந்தவளாக அதிர்ந்தாள், ''அது மட்டும் என்னாலை முடியாது'', என்று கத்த வேண்டும் போலிருந்தது. ஆனால் அவள் அதைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, ''அது.... அது...'', எனத் தடுமாறினாள்.

சின்னன் இரு கைகளையும் எடுத்துக் கும்பிட்டாள், ''வேண்டாம் பிள்ளை நாங்கள் ஏழையள்..... இதுகளைத் தாங்க மாட்டம்''

சொர்ணத்துக்குக் கண்கள் கலங்கி விட்டன. அவள் மெலிந்த குரலில், ''சரி'', என்று சொல்லி விட்டு வேகமாக உள்ளே சென்று விட்டாள். ஆனால் அவளின் மனம் மட்டும் தனக்கும் ''சரி'' என்ற அந்த வார்த்தைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று கூறியது. அவளின் மனதில் மட்டுமன்றி உடலிலும் கூட ஏதோ ஒரு சோர்வு பரவுவது போல் தோன்றியது.

இளையவன் வந்து பனை சீவி விட்டுப் போகும் வரை அவள் அறையை விட்டு வெளியே வரவேயில்லை. சங்கடப்படலை விட்ட சத்தம் அவன் போகிறான் என்பதை உறதி செய்யவே பின் விறாந்தைக்கு வந்தாள்.

அப்போதுதான் அங்கு வந்த சீதேவிப்பாட்டி, ''பிள்ளை பின்னேரம் மாட்டுக்கு ஓலை கிழிக்கச் சின்னன் வாறனெண்டிட்டுப் போறாள். அவன் இளையவனைக் கூப்பிட்டு, பின்னேரம் வரயுக்கை மாட்டுக்கு ஓலை வெட்டி வரச் சொல்லி விடு'', என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவன் போட்டானணை", என்றாள் சொர்ணம்.

"அவன் இப்பதான் தெருவிலை இறங்கினவன், ஓடிப்போய் சொல்லிவிடு மேனை"

அதன் பின்பு சொர்ணம் தயங்கவில்லை. அவள் வேகமாக நடந்து போய் சங்கப்படலையைத் திறந்தாள். அப்போது தான் இளையவன் ஒழுங்கை வளைவை நெருங்கிக் கொண்டிருந்தான்.

"இளையவன் நில் வாறன்", என்று விட்டு சொர்ணம் வேகமாக அவனை நெருங்கினாள்.

"பாட்டி பின்னேரம் வரயுக்கை மாட்டுக்கு ஓலை வெட்டி வரட்டாம்"

"சரி பிள்ளை", என்று விட்டு அவன் திரும்பிய போது அவனின் முதுகு அவளின் கண்ணில் பட்டது. இரண்டு வரிகள் மங்கலாகத் தெரிந்தன.

அவள் மெல்லக் கேட்டாள் "இப்பவும் முதுகிலை நோகுதே?"

அவன் ஒரு மெல்லிய சிரிப்புடன் சொன்னான், "நோ உடம்பிலை இல்லை மனதிலை தான்! எனக்கு அடிவிழாமல் மறிக்க வெளிக்கிட்டு நீங்கள் அடி வேண்டினதை நினைக்க கவலையாகக் கிடக்குது"

திடீரென இறகு முளைத்து வானில் பறப்பது போன்ற ஒரு உணர்வில் மனம் ஆரவாரித்தது. அவளின் முகத்தில் மெல்லிய செம்மை படர்ந்தது.

"எனக்கும் உனக்கு அடிவிழுந்தது தான் கவலை", என்று விட்டுத் திரும்பி நடக்க ஆரம்பித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 11

சொர்ணம் அன்று அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து விட்டாள். மேனியை நடுக்கும் பனியையும் பொருட்படுத்தாமல் குளித்து முடித்துவிட்டு, பொங்கலுக்கான தயாரிப்புகளில் இறங்கி விட்டாள்.

முற்றத்தை மாட்டுச் சாணத்தால் மெழுகி, அதன் மேல் அரிசிமாவாலும், செங்கல் தூளாலும் இரட்டைக் கோடிட்டு, நான்கு வாசல்கள் விட்டு ஒரு சதுரக் கட்டம் அமைத்துக் கொண்டாள். அதன் கிழக்குப் பக்கத்தில் உதிக்கும் கதிரவனை வரைந்து கோலமிட்டாள். வட கிழக்கு மூலையில் அடுப்பு மூட்டத் தயாராக மூன்று கற்களைக் கொண்டு வந்து வைத்தாள். அவள் கட்டத்தின் மத்தியில் வாழை இலை வைத்து நெல்லைப்பரவி, அதன் மேல் செம்பு வைத்து நிறைய நீர் ஊற்றி மாவிலை அடுக்கி அதன் மேல் தேங்காயை வைத்து நிறைகுடம் வைத்து விட்டாள்.

வானத்தில் மெல்லத் தவழ்ந்து வந்து கொண்டிருந்த விண் ஒலியைக் கேட்டவாறு வேலை செய்வதில் ஏதோ ஒரு இன்பம் இருப்பதை அவளால் உணர முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையவன் முதல் நாள் மாலையே தனது பருந்துப் பட்டத்தை ஏற்றி பனையில் வில்லுப் போட்டு இராக் கொடிக்கு விட்டிருந்தான். அப்பட்டம் வாணிஸ் தாளால் ஒட்டப்பட்டிருந்ததால் கொட்டும் பனிக்கு மசிந்து கொடுக்காமல் மேல்காற்றில் நின்று கொண்டு விண் கூவிக் கொண்டிருந்தது.

சொர்ணம் வானத்தை அண்ணார்ந்து பார்த்தாள். மங்கலான ஒளியிலும் அந்தப் பருந்துப்பட்டம் தனி அழகுடன் மின்னிக் கொண்டிருந்தது.

விதானையாரும் குளித்து முடித்து விட்டு திருநீற்றை நெற்றி நிறையப் பூசிக் கொண்டு முற்றத்திற்கு வரவே சொர்ணம் அடுப்பை மூட்டினாள். வழக்கமாகப் பொங்கல் பானை ஏற்றுவது, அரிசி போடுவது எல்லாவற்றையும் சொர்ணலிங்கமே செய்வான். இம்முறை அவன் கொழும்பில் நின்றபடியால் விதானையாரே அவற்றையெல்லாம் செய்ய வேண்டியிருந்தது.

எனினும் சொர்ணலிங்கம் பொங்கலுக்கு வரமாட்டான் என அறிந்த பொழுது சிதேவிக் கிழவி, "பொங்கல் பூசை கூட இல்லாத கண்டறியாத படிப்பு", எனப் புறுபுறுக்கத் தவறவில்லை. அவளைப் பொறுத்த வரையில் மரபு சார்ந்த சடங்குகளின் முன் படிப்போ அல்லது வேறு எந்த ஒரு விசயமோ பொருட்டாக இருப்பதில்லை.

விதானையார் அடுப்பில் பானையை ஏற்ற சீதேவிப்பாட்டி தேங்காயைத் துருவி பால் பிழிந்து முடித்து விட்டாள். பாலில் சக்கரையை நன்றாகப் பிசைந்து கரைத்து மேலும் சேர்க்க வேண்டியவையெல்லாம் சேர்த்து நீர் கொதித்து வர பாட்டி பானையில் ஊற்றினாள். பால் பொங்கி வர விதானையார் இரு கைகளாலும் அரசியை எடுத்து பானையை மூன்று தரம் சுற்றி விட்டு உள்ளே போட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பானை பொங்கிச் சரிந்த போது சீதேவிப்பாட்டியால் சந்தோஷத்தைத் தாங்க முடியவில்லை.

"அங்க பாரடி பொங்கல் கிழக்குப்பக்கமாய் சூரியனைப் பார்த்துச் சரியுது. இந்த முறை எல்லாம் பொலியோ பொலியெண்டு பொலியப் போகுது", என்றாள் அவள்.

கனகாம்பிகை இன்னுமொரு அடிப்பில் வடை, பாயாசம் தயாரிக்கும் வேலையில் துரிதமாக ஈடுபட்டிருந்தாள். சொர்ணம் அருகில் நின்று புக்கை அடிப்பிடித்து விடாமல் துளாவிக் கொண்டிருந்தாள்.

அப்போது இளையவன் முற்றத்தில் வந்தான். சொர்ணம் அவனைக் கண்டதும், "நீ இஞ்சை நிற்கிறாய்.... உன்ரை பட்டம் வானத்திலை கூவுது?", என்றாள்.

அவன் மெல்லச் சிரித்துக் கொண்டு, "அது கூவயில்லை. பிள்ளையட்டை புக்கை தா... தா... எண்டு கத்துது", என்றான்.

"அது கத்தட்டும் நீ சீவிப்போட்டு ஒரு பிடி புக்கை திண்டுட்டுப் போ.." என்றாள் சீதேவிப்பாட்டி. பாட்டியைப் பொறுத்த வரையில் பொங்கிப் படைத்து அயலட்டை குடிமக்கள் என நாலு பத்துப் பேருக்கு புக்கை கொடுத்து அனுப்பினால் தான் அவளுக்கு பொங்கல் முழுமையடைந்த திருப்தி ஏற்படும். பொங்கல் கொண்டு போக சின்னனை வரும்படி பாட்டி முதல் நாளே சொல்லி விட்டிருந்தாள்.

பொங்கிச் சரிந்த புக்கையின் வாசனையை நுகர்ந்து கொண்டே இளையவன் பனையை நோக்கி நடக்க ஆரம்பித்தான். வழமையை விட ஏனோ அன்றைய பொங்கல் அவனுள் ஏதோ ஒருவிதமான குதூகலத்தைத் தூவுவதை அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று காலை பத்துமணிக்கெல்லாம் உப்புவெளி பட்டம் விடுபவர்களால் நிறைந்து விட்டது. எல்லோரும் ஒன்றாகவே பட்டம் ஏற்றிய போதும் மணியாறன் மூலையைச் சேர்ந்தவர்களுக்கும், ஆலடி வெட்டையாருக்குமிடையே பட்டமேற்றலில் ஒரு போட்டி நிலவுவதுண்டு.

மணியாறன் மூலையில் பட்டம் கட்டுவதில் இளையவன் எவ்வளவு கெட்டிக்காரனோ அவ்வாறு ஆலடி வெட்டையில் சிவஞானம் அக்கலையில் மிகவும் திறமைசாலியாயிருந்தான். இருவருக்குமிடையே புதிய புதிய விதமான பட்டங்கள் கட்டுவதில் ஒரு போட்டி இருந்தாலும் இருவரும் நல்ல நண்பர்களாகவே விளங்கினர்.

சிலர் உப்பு வெளியில் பட்டத்தை ஏற்றி விட்டு மிக லாவகமாகப் பனைகளில் சிக்குப்படாமல் கொண்டு போய் தமது இடத்தில் பனையில் வில்லுப் போட்டு விடுவதுண்டு.

ஆலடி வெட்டையைச் சேர்ந்த சுந்தரம் பட்டத்தை ஏற்றி மேல்க்காற்றுக்குக் கொண்டு வந்து விட்டு மெல்ல மெல்ல அதைத் தனது இடத்துக்குக் கொண்டு செல்ல முயன்ற போது தான் அந்த அசம்பாவிதம் நடந்தது. சுந்தரத்தின் பட்டத்தின் நூல் மணியாறன் மூலையைச் சேர்ந்த தம்பியனின் பட்ட நூலை அறுத்து விட்டது. நூலறுந்த தம்பியனின் பட்டம் காற்றில் அள்ளுப்பட்டு சுழன்று சுழன்று போய் உப்புக்கடல் நீரில் விழுந்தது.

தம்பியனுக்கு கோபம் உச்சிக்கு வந்து விட்டது. என்னடா கண்ணை மூடிக்கொண்டே பட்டம் விடுறாய்?"

சுந்தரம் கேலியாகக் கேட்டான். "என்னடா நூலைத் தானே அறுத்தது. அதுக்கேன்ரா கழுத்தறுத்த மாதிரிக் கத்துறாய்?",



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது குதர்க்கமான வார்த்தைகள் தம்பியனுக்கு மேலும் கோபத்தை மூட்டியது.

“அப்படியே பொறு வாறன்”, என்று விட்டு தம்பியன் இடுப்பிலிருந்த வில்லுக்கத்தியை எடுத்து விரித்து சுந்தரத்தின் பட்ட நூலை அறுத்து விட்டான். அது சுழன்று விழத் தொடங்கியது.

சுந்தரத்தாலும் கோபத்தை அடக்க முடியவில்லை. ஆனால் தம்பியனில் இப்போ கை வைத்தால் தன் நெஞ்சில் வில்லுக்கத்தி ஏறும் என்பது அவனுக்குத் தெரியும்.

“இண்டைக்குப் பொழுது படுறதுக்கிடையிலை உனக்குப் படிப்பிக்கிறன் பாடம்”, எனச் சீறி விட்டு வேகமாகப் புறப்பட்டான் சுந்தரம்.

அங்கு பட்டமேற்றிக் கொண்டிருந்த மணியாறன் மூலையைச் சேர்ந்தவர்கள் தம்பியன் அருகில் வந்து விஷயத்தை அறிந்த போது அங்கு ஒரு சாதிச்சண்டைக்கு அத்திவாரம் போடப்பட்டுவிட்டதைப் புரிந்து கொண்டனர். ஏனெனில் சுந்தரம் ஆலடிவெட்டையில் போய் ஒன்றுக்குப் பத்தாகச் சொல்லி அவர்களைத் தங்களுக்கு எதிராக அணி திரட்டுவான் என்பதை அவர்கள் தெரிந்தே வைத்திருந்தனர்.

இளையவன் அதைக் கேள்விப்பட்ட போது எப்படியாவது இப்படி ஒரு சண்டை நடக்காமல் தடுத்தே ஆகவேண்டும் என நினைத்தான். சிவஞானத்தைக் காண அவன் ஆலடிவெட்டைக்குப் போனால் சுந்தரத்தின் ஆட்கள் அவனுக்கு நிச்சயமாக அடிப்பார்கள். அது நிலைமையை மேலும் விபரீதமாக்கி விடும்.

அவன் நேரடியாகவே தம்பியனிடம் போனான். அவர்கள் கூடியிருந்து ஆலடிவெட்டையாருடன் சண்டைக்குத் தயாராவது பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையவன் தம்பியனிடம் கேட்டான், "இனி என்ன செய்யுறதாய் யோசினை"

தம்பியனின் மனநிலையில் அவனை இப்போ சமாதானப்படுத்த முடியாது என்பதை இளையவன் புரிந்து கொண்டான். எனினும் அவன் முயற்சியைக் கைவிட விரும்பவில்லை, "தம்பியண்ணை! நாங்கள் வலியப் போக வேண்டாம். வந்தால் பாப்பம் என்ன?", என்றான் இளையவன்.

"நாங்கள் ஏன் வலியப் போகப் போறம். ஆனால் நாங்கள் நெல்லியடிக்குப் போகேக்கை வரேக்கை எங்கள் ஆரிலையும் தொட்டால் தான் பிறகு எங்களைப் பற்றி விளங்கும்", தம்பியனின் குரலில் உறதி தொனித்தது.

இவர்கள் அங்கு போனால் ஆலடிவெட்டையார் நிச்சயம் ஏதாவது செய்வார்கள் என்பது இளையவனுக்குத் தெரியும். ஆனால் அதை எப்படித் தவிர்ப்பது என்பதையும் அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

எனினும், "சரி அப்பிடி ஏதாவது நடந்தால் பாப்பம்..... நீங்கள் பின்னேரம் ஆலடிவெட்டையார் ஆரும் கள்ளுக்கு வந்தால் அவைக்கு ஒண்டும் செய்யாமல் இருந்தால் சரி", என்றான் இளையவன்.

தம்பியனும் அதற்குத் தன் சம்மதத்தைத் தெரிவித்தான். அவன் சொன்ன சொல்லு பிசக மாட்டான் என்பதில் இளையவனுக்கு நம்பிக்கையுண்டு.

அவர்கள் பேசிக்கொண்டிருந்த போது சில்லறைக் கடை வைத்திருக்கும் சின்னத்தம்பி வேகமாக வந்தான். அவன் தம்பியனிடம் வாடிக்கைக் கள்ளுக்கு வருவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பரபரப்புடன் தம்பியனைப் பார்த்துக் கேட்டான், "டேய்... தம்பியா.. நீ என்ன வேலை பாத்துப்போட்டு நிற்கிறாய்?

"ஏன் என்ன விஷயம்?"

"நீ அவன் சுந்தரத்தை உப்பு வெளியிலை வைச்சு அடி அடியெண்டு அடிச்சுப் போட்டியாம். உன்னைத் துண்டு போடுறது எண்டு அச்சுவேலியிலிருந்து ஆக்களைக் கொண்டு வந்து வைச்சிருக்கிறாங்கள்"

தம்பியின் உறுமினான், "நான் முதல் அடிக்கேல்லை.... இனித்தான் வெட்டப் போறன்"

ஒரு பெரிய சாதிச் சண்டைக்கான ஆரம்பம் உருவாவதாகவே இளையவனுக்குத் தோன்றியது. ஆனால் எதுவுமே செய்ய முடியாத நிலையில் தானிருப்பதை எண்ணி குழம்ப மட்டுமே அவனால் முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 12

விதானையார் கோபத்தின் உச்சிக்கே போய்விட்டார். அயல் கிராமங்களில் இடையிடையே சாதிச்சண்டைகள் இடம்பெறுவதும், பொலிசார் தலையிட்டு இரு பகுதிகளிலும் தீவிரமாகச் செயற்படுபவர்களைப் பிடித்துக் கொண்டு போய் அடித்து நொருக்குவதன் மூலம் அவற்றை அடக்குவதும் இடம்பெறுவதுண்டு.

ஆனால் விதானையார் தம்பிப்பிள்ளையின் கட்டுப்பாட்டில் உள்ள கிராமங்களில் என்றுமே அப்படியான சம்பவங்கள் இடம்பெறுவதில்லை. அப்படியான ஏதாவது சண்டைகள் தோன்றக் கூடிய அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாகவே விதானையார் தன் இரும்பு அதிகாரம் கொண்டு அடக்கி விடுவதுண்டு.

அன்று பொங்கல் நாளாக இருந்த போதிலும் நண்பகலுடன் வானில் பட்டங்கள் எதுவுமே காணாமற் போகவே விதானையார் ஏதோ அசம்பாவிதம் நடந்துவிட்டதைப் புரிந்து கொண்டார். சிறிது நேரத்திலேயே நடந்த சம்பவங்கள் பற்றிய முழுத்தகவல்களும் அவருக்குக் கிடைத்து விட்டது. தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீறி இரு பகுதியினரும் சண்டைக்குத் தயாராவதை அறிந்த போது அவர்கள் தன்னை அவமதித்து விட்டதாகவே கருதினார்.

இரு பகுதியினரையும் உடனடியாக வரும்படி ஆட்களை அனுப்பி விட்டு சாய்மனைக் கதிரையில் அமர்ந்து கொண்டார். அவரின் கோபம் கையிலிருந்த சுருட்டை இழுப்பதையே மறக்கடித்து விடவே அதுவும் அணைந்து விட்டது. குறைச் சுருட்டைச் சுழற்றி எறிந்து விட்டு சங்கடவாசலைப் பார்த்தார்.

இளையவன், தம்பியன் உட்பட மணியாறன் மூலையைச் சேர்ந்த ஏழெட்டுப் பேர் வந்து மாமரத்துக்குக் கீழ் நின்றனர். விதானையார் எதுவுமே பேசவில்லை. மீண்டும் ஒரு சுருட்டை எடுத்து பற்ற வைத்துக் கொண்டார்.

சிறிது நேரத்தில் சுந்தரம், சிவஞானம் உட்பட சில ஆலடிவெட்டையைச் சேர்ந்தவர்களும் வந்து விட்டனர்.

விதானையார் நிமிர்ந்து உட்கார்ந்தார். "டேய்... தம்பியா..... வாடா.... இஞ்சாலை!" தம்பியன் விதானையார் முன் வந்து கைகளைக் கட்டிக் கொண்டு நின்றான்.

விதானையார் உறுமினார். "டேய்.... நீ வில்லுக் கத்தி விரிக்கிற அளவுக்கு சண்டியனாகி விட்டியே....?"

தம்பியன் எதுவும் பேசவில்லை அவன் தலையைக் குனிந்து கொண்டான். விதானையாரின் பார்வை ஆலடி வெட்டையாரின் பக்கம் திரும்பியது.

"டேய்.. சுந்தரம்... நீங்கள் இரண்டு பகுதியும் எங்கடை குடிமக்கள்... நீங்கள் ஒருதரையொருதர் வெட்டிக் கொண்டு துலைஞ்சால் ஆரடா நாளைக்கு நான் செத்துக் கிடக்க என்ரை பிரேதத்தைச் சுடலைக்குக் காவிக் கொண்டு போறது? ஆரடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை எரிக்கவும், எனக்கு நெஞ்சாங் கட்டை ஏத்தவும் குத்தி தறிக்கிறது.?"

இரு பகுதியினரில் எவருமே எதுவும் பேசவில்லை. அங்கு ஒரு மௌனம் நிலவியது.

விதானையார் மீண்டும் தொடர்ந்தார். "டேய் சுந்தரம், தம்பியா இரண்டுபேரும் இஞ்சாலை வாருங்கோ..."

இருவரும் மௌனமாக முன்னால் வந்து நின்றனர்.

"இரண்டு பேரும் ஒருதரின்ரை காதுகளை ஒருதர் பிடிச்சு தோப்புக்கரணம் போடுங்கோ.....ம்" எனக் கண்டிப்பான குரலில் கட்டளையிட்டார் விதானையார்.

இருவருமே தயக்கத்துடன் விதானையாரைப் பார்த்தனர்.

"நான் சொல்லுறது விளங்கேல்லையே?", என்று விட்டு இறப்பில் சொருகி வைத்திருந்த பிரம்பை கையில் எடுத்தார் விதானையார். இருவரும் ஒருவர் காதை ஒருவர் பிடித்துக் கொண்டு தோப்புக்கரணம் போட ஆரம்பித்தனர். விதானையார் சிவஞானத்தைப் பார்த்து "டேய்.... வந்து நூறுவரையும் எண்ணு" என்றார். சிவஞானமும் எண்ண ஆரம்பித்தான்.

இப்போ இரு பகுதியினருக்கும் ஒருவர் மேல் மற்றவருக்கு இருந்த கோபம் திசைதிரும்பி விதானையார் மீதே மையம் கொண்டது. ஆனால் எவருக்குமே விதானையாரை எதிர்த்துக் கதைக்கும் துணிவு வரவில்லை.

தோப்புக் கரணம் போட்டு முடிய இருவருக்கும் வியர்வை ஆறாக ஓடியது.

விதானையார் கண்டிப்பான குரலில் சொன்னார், "இனி சண்டை சச்சரவு எண்ட பேச்சே இருக்கக்கூடாது. வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுவேலியாருக்கு கள்ளுச் சாராயத்தை வேண்டிக் குடுத்து உடனையே அனுப்பி விடுங்கோ.. மீறி ஏதாவது சொறிச் சேட்டையள் நடந்தால்...", சற்று இடைநிறுத்தி விட்டு விதானையார் தொடர்ந்தார் "நான் பிறகு உங்களட்டைக் கதைக்கிற அளவுக்கு இருக்காது... பருத்தித்துறை பொலிஸ்தான் மிச்சத்தைப் பாக்கும். சார்ஜன்ட் சின்னத்தம்பியை உங்களுக்கு விளங்கும்" என்றார்.

விதானையார் தனது வார்த்தைகளை முடித்து விட்டு எல்லோரையும் ஒரு முறை பார்த்தார். எவரும் எதுவும் பேசவில்லை.

சார்ஜன்ட் சின்னத்தம்பி என்றால் பருத்தித்துறைப் பொலிஸ் வட்டாரமே நடுங்கும். அவரின் ஜீப்பைத் தொலைவில் கண்டாலே சந்தியில் தேவையற்று நின்று வம்பளப்பவர்கள் மாயமாய் மறைந்து விடுவர். அவர் ஜீப்பால் இறங்கியதும் எதுவும் பேசுவது கிடையாது. அவரின் கையும் சப்பாத்துக் காலும் தான் பேசும்.

அவர் பொலிஸ் நிலைய வாங்கில் ஆட்களைக் குப்புறப் போட்டு விட்டு குதிக்காலில் பெட்டன் பொல்லால் அடிக்கும் தண்டனையை நினைத்தாலே கள்வர்கள் சண்டியன்களுக்கு குலை நடுங்கும்.

விதானையாரின் முறைப்பாட்டில் எவராவது கைது செய்யப்பட்டாலோ அதற்கு விசேட கவனிப்புகள் உண்டு.

விதானையார் மீண்டும் போய் கதிரையில் அமர்ந்தவாறு சொன்னார், "நீங்கள் எங்கடை குடிமக்கள் உங்களுக்கு ஒண்டெண்டால் நாங்கள் தான் பாக்க வேணும். அப்படியிருக்க நீங்கள் உங்களுக்கை அடிபடுறதே. போங்கோ.. போய் சோலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரட்டில்லாமல் நல்ல மனுஷராய் இருங்கோ. என்னடா தம்பியா.. சுந்தரம் விளங்குதே?"

இருவரும் சரியெனத் தலையசைத்தனர். அவர்கள் அரைகுறை மனதுடன் தான் தனக்குப் பயத்தில் சம்மதிக்கிறார்கள் என்பதை விதானையார் புரிந்து கொண்டாலும், அந்தக் கசப்புணர்வு சில நாட்களில் மாறி விடும் என நம்பினார். எனினும் தனது சாதி தொடர்பான அதிகாரம் பலவீனமடைந்து போவதையும், விதானையாருக்குரிய அதிகாரத்தை வைத்தே அதைப் பாதுகாக்க வேண்டிய நிலை மெல்ல மெல்ல உருவாகி வருவதை அவரால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

எப்படியிருந்த போதிலும் ஒரு பெரிய சண்டை தவிர்க்கப்பட்டதில் மற்ற எல்லோரையும் விட சீதேவிப்பாட்டியே மிகவும் மகிழ்ச்சியடைந்தாள். அவளைப் பொறுத்தவரை தங்கள் குடிமக்கள் ஒற்றுமையாக இருந்து தங்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதும், அவர்களின் நல்லது, கெட்டதை தாங்களே கவனித்து அவர்களைப் பராமரிக்க வேண்டியது தங்களின் கடமை எனவும் அவள் திட்டவட்டமாக நம்பினாள். தான் செத்தால் பொன்னம்மாவும் அவளின் உறவுகாரப் பெண்களும் மாரடித்து அழாவிட்டால் தனது ஆத்மா சாந்தியடையாது என்பது அவளின் அடிமனதில் பதிந்துவிட்ட எண்ணமாகும். அவள் அந்தச் சம்பிரதாயத்தை இழக்க எப்போதுமே தயாராக இல்லை.

விதானையார் வீட்டிலிருந்து இரு பகுதியினரும் தனித்தனியாகவே வெளியேறினர். ஆலடிவெட்டையைச் சேர்ந்த சிவஞானம் சற்றுப் பின் தங்கி இளையவனின் அருகில் வந்தான்.

"வாடா.... இதாலை போவம்" என்று விட்டு பனங்கூடலுக்கால் சென்ற ஒற்றையடிப் பாதையில் இறங்கினான் சிவஞானம். சிவஞானமும், இளையவனும் எட்டாம் வகுப்பு வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாகப் படித்தவர்கள். எனினும் பட்டம் கட்டும் கலை அவர்கள் நட்பை பள்ளிக்கூடம் விட்ட பின்பும் தொடர்பு வைத்திருந்தது.

"டேய் இளையவன்! எப்பவடா இந்த குறைஞ்ச சாதி கூடின சாதி எண்ட பிரச்சினையும் இந்தச் சாதிச் சண்டையளும் தீரும்", எனக் கேட்டான் சிவஞானம். இளையவன் சிவஞானத்தைப் பார்த்து விட்டு மெல்லச் சொன்னான், "இப்போதைக்கு இது தீருமெண்டு நான் நம்பேல்லை!"

"ஏன் அப்பிடிச் சொல்லுறாய்?"

இளையவன், "இண்டைக்குப் பாத்தியே... விதானையார் ஆக்கள் கூடி எங்களுக்கை சண்டை வரக்கூடாது எண்டு விரும்பிறது சாதியமைப்பு இல்லாமல் போய் விடக் கூடாது எண்டதுக்காகத்தானே... அது இருக்கும் வரை பிரச்சினை எப்படித் தீரும்?", என்றான்.

சிவஞானம் மெல்லச் சிரித்தவாறு சொன்னான் "உண்மைதான். ஆனால் பிரச்சினை தீர்க்க நான் ஒரு வழி கண்டு பிடிச்சு வைச்சிருக்கிறன்"

"என்னது?"

உங்கடை சாதியிலை ஒரு பெட்டையைத் தான் நான் கலியாணம் செய்யிறது எண்டு முடிவு செய்திருக்கிறன்"

அதைக் கேட்ட இளையவன் பலமாக வாய் விட்டுச் சிரித்தான்.

"ஏண்டா... சிரிக்கிறாய்?"

கேலி கலந்த தொனியில் இளையவன் கேட்டான் "என்ன சிங்கன் நடத்திறமாதிரி கலியாணமோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கன் ஆலடிவெட்டையைச் சேர்ந்தவன். அவன் இளையவன் உறவுக்காரப் பெண்ணிடம் இரகசியமாக வந்து போக ஆரம்பித்திருந்தான். அது பெரிதாக வெளியே தெரியாவிட்டாலும், அது தொடர்பாக இளையவன் போன்ற சில இளைஞர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டிருந்தது.

கமலி நல்ல அழகி. அவள் எஸ்.எஸ்.ஸி வரைப் படித்தும் இருந்தாள். அவள் பள்ளிக்கூடம் போய் வந்த நாட்களில் சிங்கன் அவளைக் கலைத்துக் திரிந்து அவளைச் சம்மதிக்க வைத்துவிட்டான். கள்ளுக்குடியாத சிங்கன் கள்ளுக்குடிக்கப் போவதாகக் கூறி அடிக்கடி கமலி வீட்டுக்குப் போய் வர ஆரம்பித்தான்.

விதானையாரின் சமூகத்தைச் சேர்ந்தவர்களோ, சிங்கனின் சமூகத்தைச் சேர்ந்தவர்களோ இப்படியான இரகசியத் தொடர்புகளை வைத்திருப்பது அப்படியொன்றும் புதிய விடயமல்ல.

சிவஞானம் உறுதியாகச் சொன்னான் "நீ... நினைக்கிற மாதிரி இல்லை. இந்த தை மாதத்திலையே ஒரு நல்ல நாளிலை சிங்கன் கமலியைக் கலியாணம் கட்டப் போறான். தாலிக்கும் பொன்னுருக்கிப் போட்டான்"

இளையவனால் நம்பவே முடியவில்லை. அவன், "உனக்கு வடிவாய்த் தெரியுமே?", என வியப்புடன் கேட்டான்.

"ஓ... ஓ.. பொன்னுருக்க உடுப்பிட்டிக்கு நானும் தான் போனனான்", என்றான் சிவஞானம் உறுதியாக.

இளையவனுக்கு அந்தச் செய்தி மகிழ்ச்சியையும், ஆச்சரியத்தையும் அளித்தாலும் கூட அடுத்த ஒரு சாதிச்சண்டை எழுந்து விடுமோ என்ற பயமும் அவனுள் எழாமல் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் - 13

அன்று தேங்காய் பறிப்பு நாள்.

விதானையார், சொர்ணம், சீதேவிப்பாட்டி, கனகாம்பிகை எல்லோருமே அதிகாலையில் எழுந்தே பளைக்குப் புறப்படத்தயாராகி விட்டனர். மதிய உணவு தயாரிப்பதற்கான அரிசி, மரக்கறி போன்ற தேவையான பொருட்கள் எல்லாமே கொண்டு செல்லத் தயாராகப் பொதி செய்யப்பட்டு விட்டன. காலை உணவுக்கு புளிச்சாதமும் தயாராகி விட்டது. அன்றைய பகல் பொழுது பளை தென்னந்தோட்டத்திலேயே கழிந்து விடும்.

இளையவனும் தனது பனைகள் சீவுவதை நண்பன் ஒருவனிடம் ஒப்படைத்துவிட்டு முதல் நாள் மாலையே பளைக்கு பஸ்ஸில் புறப்பட்டு விட்டான். கிழக்கு வெளிக்கும்போதே இளையவன் தென்னைகளில் ஏறத் தொடங்கி விடுவான். ஒரே மூச்சில் முப்பது, நாற்பது பனைகளில் ஏறி ஓலை வெட்டும் இளையவனுக்கு தேங்காய் பறிப்பது ஒரு விளையாட்டுப் போலவே தோன்றும். ஒரு மணிக்கெல்லாம் அன்று பறிக்க வேண்டிய எழுபது, எண்பது தென்னைகளை ஏறி முடித்து விடுவான். அவன் பறித்துக் கொண்டிருக்கும் போதே தோட்டக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலாளியான ராமையா தேங்காய்களைப் பொறுக்கி ஆங்காங்கே குவித்து விடுவான்.

சொர்ணம் ஒரு முறை நிலக்கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள். ஏனோ தான் அன்று வழமையை விட அழகாக இருப்பதாகவே அவளுக்குத் தோன்றியது. அவள் முகத்தில் ஒரு மெல்லிய புன்னகை ஓடிப் படர்ந்தது.

"ஆறு மணிக்கு வரச் சொல்லி ஆளனுப்பினனான். இவன் மணியத்தை இன்னும் காணவில்லை", என விதானையார் போட்ட சத்தம் வெளியே கேட்கவும், ஒழுங்கை மூலையில் கார் வரும் ஓசை கேட்கவும் சரியாக இருந்தது.

மணியம் காரைத் தெருவில் நிறுத்தி விட்டு இறங்கி வந்து வண்டில் படலையை அவிழ்த்து விட்டு தூக்கி ஒரு ஓரமாக வைத்தான். பின் அந்த வழியால் காரை உள்ளே விட்டுத் திருப்பி எடுத்துக் கொண்டு போய் சங்கடப்படலைக்கு நேராக விட்டு மீண்டும் வண்டில் படலையைத் தூக்கி வைத்துக் கட்டினான்.

சொர்ணமும், சீதேவிப்பாட்டியும் சாமான்களை எடுத்துக் கார் டிக்கியில்வைத்து விட்டு பின் சீற்றில் ஏறிக் கொண்டனர்.

"பிள்ளை... வந்தேறடி", என்ற சீதேவிப்பாட்டியின் அழைப்புடன் கனகாம்பிகையும் ஏறிக் கொண்டாள். மணியம் கார்க் கதவை ஒரு முறை திறந்து விட்டு அடித்துச் சாத்தினான்.

விதானையாரும் ஏறி முன் சீட்டில் அமரவே கார் புறப்பட்டது.

கார் புறப்பட ஆயத்தமாகும் போதே சீதேவிப்பாட்டி, "ராசாத்தி... ஆட்டை அவிட்டுக் கட்டி விடு.... தண்ணி வைக்க மறந்திடாதை", என்று விட்டு நிம்மதியாகச் சீற்றில் சாய்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கைகளால் வளைந்து வளைந்து சென்ற கார் இப்போ உப்பு றோட்டில் ஏறி விட்டது. வலது பக்க பின் கதவுப் பக்கத்தில் அமர்ந்திருந்த சொர்ணத்தின் முகத்தில் அதிகாலையின் மென்குளிர் படர்ந்த காற்று வருடி இதமளித்தது. பரந்து கிடந்த உப்புக் கடலும் அதன் பின்னால் தெரிந்த மங்கலான பனை வெளியும் எங்கும் ஒரு அழகைப் பரவ விட்டிருந்தன. அவள் இடது புறம் திரும்பிப் பார்த்த போது தொலைவில் வெல்லன் பிள்ளையார் கோவில்மணி கேட்டது.

சீதேவிப்பாட்டி, "பிள்ளையாரே ஒரு விக்கினமும் வராமல் பார்த்துக்கொள்ளப்பா", என்றுவிட்டு அப்பக்கம் திரும்பி கும்பிட்டுக் கொண்டாள். அந்த மணி பிள்ளையார் தங்கள் பயணத்துக்கு வழங்கிய ஆசியெனவே அவள் கருதினாள்.

கார் கட்டைவேலிச் சந்தியைக் கடந்த போது வடமராட்சி கூட்டுறவுக் கொம்பனியின் சொக்லேற் கலர் செவலட் பஸ் சாவகச்சேரியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. கரந்தாய் சந்தியில் வந்து கொடிகாமம் றோட்டில் ஏறி ஓடத்தொடங்கியது மணியண்ணனின் அந்த ஹில்மன் கார். ஆங்காங்கே பாலங்களும், அதை அண்டிய பகுதிகளில் நீரும், இருபுறமும் கண்டல் தாவரங்களுமாய் வீதி அருகில் நீண்டு கிடந்தன.

வரணியைக் கடந்ததும் சுட்டிபுரம் அம்மன் கோவிலில் வீதியோரமாக மணியண்ணை காரை நிறுத்த அனைவரும் இறங்கினர். கிணற்றடியில் போய்க் காலைக் கழுவி விட்டு எல்லோரும் கற்பூரம் வாங்கிக் கொழுத்தி அம்மனை வழிபட்டனர்.

விதானையார் உண்டியலில் காசைப் போட்டு விட்டு வீதியில் ஏறிய போது கொடிகாமம் பக்கமிருந்து வந்த ஒரு 'ஏபோட்டி கார்' கோவிலடியை அடைந்ததும் நிறுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்த கார் போல் தோன்றவே அதை விதானையார் உற்றுப் பார்த்த போது அதற்குள்ளிருந்து பொன்னம்பலம் இறங்கினான். அவன் ஆலடிவெட்டையைச் சேர்ந்தவன். வன்னியிலிருந்து வரும் எரு, குழை லொறிகளுக்கு புறோக்கர் வேலை பார்த்து விலை தீர்த்து தோட்டக்காரருக்கு வாங்கிக் கொடுக்கும் தரகுவேலை தான் அவனின் தொழில். அந்தத் தொழில் எட்டு, ஒன்பது மணியுடன் முடிய அதன் பின் அவனின் தொழில் குடியும் சண்டித்தனமமாக மாறிவிடும்.

விதானையார் அவனைக் கண்டதும் "என்ன பொன்னம்பலம் இந்த வெள்ளன எங்கை போட்டு வாறியள்" எனக் கேட்டார்.

அந்த இடத்தில் சற்று விதானையாரை எதிர்பார்க்காத அவன், "அது.. அது... நாங்கள் நாங்கள்...", எனத் தடுமாறி விட்டு, "உருத்திரபுரத்தில ஒரு கலியாண வீடு நேற்று போனாங்கள்", என்றான்.

அவனைத் தொடர்ந்து ஆலடிவெட்டை இராமலிங்கமும் வேறு இருவரும் இறங்கினர். அவர்களின் கோலத்தைப் பார்த்த போது அவர்கள் திருமண வீட்டுக்குச் சென்று வருபவர்கள் போல் தோன்றவில்லை. விதானையார் ஒருவித சந்தேகத்துடன் கேட்டார், "அது... ஆர் ஆக்கள்.. முந்திப் பிந்தி கண்ட முகமாய் இல்லை"

பொன்னம்பலம் ஒரு முறை மென்று விழுங்கி விட்டு, "அவை அவை உருத்திரபுரத்து ஆக்கள். சும்மா எங்களோடை வந்தவை", என்றான்.

அவர்களின் தோற்றமும், நடந்து கொண்ட விதமும் திருப்தியாக இல்லாத போதும், "சரி.... சரி... கோவிலைக் கும்பிட்டிட்டு நேரத்திற்குப் போங்கோ", என்று விட்டு தங்கள் காரை நோக்கி நடக்க ஆரம்பித்தார் விதானையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம்பலம் ஏதாவது திருகுதாளம் செய்து விட்டு புத்திசாலித்தனமாகத் தப்பி விடுவான். ஆனால் இராமலிங்கம் இருமுறை விதானையாரிடம் பிரம்படி வாங்கியிருக்கிறான். கார் பளையை நோக்கிப் புறப்பட்டது.

விதானையார் தோட்டத்திற்குப் போய்ச் சேர்ந்த போது கணிசமான மரங்களில் தேங்காய் பறிக்கப்பட்டு விட்டது. அவர் ஒரு முறை ஏற்கனவே பறிக்கப்பட்ட இடங்களைப் பார்த்து விட்டு வர இளையவன் அவரைக் கண்டதும் திரும்பிப் பார்த்தான்.

"டேய் உந்த மரத்தை முடிச்சுப் போட்டு வா.... சாப்பிட்டிட்டு மிச்சத்தைப் பார்க்கலாம். என்ன..?", என்றார் அவர்.

"இந்த வட்டத்துக்கை இன்னும் மூண்டு மரம் கிடக்குது. முடிச்சுப் போட்டால் சாப்பிட்டுட்டு கிழக்கு மூலையைப் பிடுங்கலாமையா", என்றான் இளையவன்.

"சரி.... முடிச்சுப் போட்டுக் கெதியாய் வா!", என்று விட்டு தேங்காய்கள் பொறுக்கிக் குவித்துக் கொண்டு இருந்த ராமையா பக்கம் திரும்பினார்.

"என்ன ராமையா... என்ன மாதிரி?"

அந்தக் கேள்வியின் அர்த்தம் அவனுக்கு மட்டும்தான் புரியும், அவன் "அதய்யா. தனிப்பனையானான் கொண்டு வரச் சொல்லி விட்டனான். கொஞ்சம் நேரத்திலை கொண்டு வந்திடுவான்." என்றான்.

"கூழ் ஆயித்தங்கள் பாத்தனியே...?"

"அது... சேனாதியையா.. நேரத்துக்கே சைக்கிள் எடுத்துக் கொண்டு தாளையடிப்பக்கம் போட்டார். அப்படியே கூடையோடை தீர்த்துக் கொண்டு வருவார்", என்றான் அவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானையார் திருப்தியுடன் தோட்டத்து வீட்டை நேக்கி நடக்க ஆரம்பித்தார். தேங்காய் பறிப்பு நாளென்றால் அதை ஒரு ஓய்வு நாள் சுற்றுலாவாகவே விதானையார் அனுபவிப்பதுண்டு. அவர் தோட்டத்திற்கு வருகின்றார் என்றால் சேனாதி, சங்கரப்பிள்ளை, முத்துவேல் என அவரின் நண்பர்கள் அங்கு வந்து சேர்ந்து விடுவார்கள். மூன்று நான்கு மணிவரை கள்ளும் கூழுமாக ஒரே கொண்டாட்டம்தான்.

கூழுக்கு மீன் வாங்குவதில் சேனாதி தனித்திறமைசாலி எனப் பெயர் பெற்றவன்.

சீதேவிப்பாட்டி கொண்டு வந்த வாழையிலையில் எல்லோருக்கும் புளிச்சாதம் பரிமாறப்பட்டது. வாழையிலையைக் கையில் ஏந்தி கிழவியிடம் கவளம் கவளமாக புளிச்சோறு வாங்கி உண்பதில் ஒரு தனி ருசி இருப்பதாகவே இளையவனுக்குத் தோன்றியது. இளையவன் சாப்பிட்டு முடித்துக் கையைக் கழுவிவிட்டு சாரத்தில் துடைத்துக் கொண்டான். வயிற்றிலிருந்து ஒரு பெரிய ஏவறை வெளிக் கிளம்பியது.

அவன் மீண்டும் வேலையை ஆரம்பிப்பதற்காக கத்தியையும், தளநாரையும் கையில் எடுத்த போது சொர்ணம் "இளையவன்! இந்த மரத்திலை இரண்டு இளனி புடுங்கித் தந்திட்டுப் போ!", என்றாள். அவளுக்கு இளநீரை விட அவனுடன் ஏதாவது கதைக்க வேண்டும் என்பது தான் முக்கியம் என்பதை அவனை விட வேறு யாருமே புரிந்து கொண்டிருக்க முடியாது.

கிழவி உடனடியாகவே குறுக்கிட்டாள், "ஏன் பிள்ளை உதை? வாதமெல்லே.... பேய் அதிலை துரவுக் கரையிலை இரண்டு செவ்விளனி மரம் நிற்குது கூட்டிக் கொண்டு போய் அதிலை பிடுங்கி, வெட்டிக் குடு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரவு தோட்ட வீட்டிலிருந்து சற்றுத் தொலைவிலேயே இருந்தது. இளையவனுடன் தனியாகக் கதைக்க் இப்படியொரு அருமையான சந்தர்ப்பம் கிடைக்குமென்று அவள் எதிர்பார்க்கவேயில்லை. ஒருவித துள்ளலுடன் துரவை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

சொர்ணம் கீழே நின்று, "இன்னும், இன்னும்" எனச் சொல்லச் சொல்ல இளையவன் ஆறேழு செவ்விளநீர் பறித்துப் போட்டு விட்டு இறங்கினான்.

சொர்ணம் எல்லாவற்றையும் ஓரிடத்தில் போட்டு விட்டு மணல் தரையில் குந்தி விட்டாள்.

இளையவன் ஒரு இளநீரை சீவி மூளைத் தட்டி விட்டு அவளிடம் நீட்டினான்.

அவள், "உனக்கு....?", எனக் கேட்டாள்.

அவன் மெல்லச் சிரித்தவாறே, "முதல் நீங்கள் குடியுங்கோ", என்று விட்ட அவளிடம் மீண்டும் நீட்டினான்.

அவள் அதை இரு கைகளாலும் வாங்கிய போது அவனின் கை அவற்றுள் அகப்பட்டு விட்டது. அவன் திடுக்கிட்டு கையை இழுக்கவே இளநீர் நிலத்தில் விழுந்து உருண்டது.

"என்ன... நீ..", எனப் பொய்க் கோபத்துடன் சிணுங்கினாள் சொர்ணம்.

"ஓ... தெரியாமல் தவற விட்டிட்டன்", என்று விட்டு அடுத்த இளநீரை எடுத்துச் சீவத் தொடங்கினான் இளையவன்.

அவள் ஒரு பெருமூச்சுடன், "தெரிஞ்சோ தெரியாமலோ மனம் விரும்பிறதைத் தவற விடக் கூடாது எண்டது தான் என்ரை விருப்பம். ஆனால்...., என்று விட்டு இடை நிறுத்தினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையவன் அதிர்ந்தவனாக, "பிள்ளை நீங்கள்... நீங்கள் என்ன சொல்லிறியள்" என ஒருவிதக் குழப்பத்துடன் கேட்டான்.

"ஒண்டுமில்லை. இளநீரைத் தா?"

அவன் நீட்டிய இளநீரை வாங்கி மடமடவென்று அரைவாசியைக் குடித்து விட்டு மிகுதியை அவனிடம் நீட்டி, "இந்தா குடி", என்றாள்.

இளையவன் பயத்துடன், "பிள்ளை", என்றான்.

"என்ரை மிச்சம் நீ குடிக்க மாட்டியே?", அவளின் குரலில் ஏதோ ஒரு உரிமை இளையோடியதாகத் தோன்றியது.

அவன் எதுவுமே பேசாமல் வாங்கிக் குடித்தான். மனம் மட்டும் ஏதேதோ குழப்பங்களில் தவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 14

ஒரு புறத்தில் இளையவனும், ராமையாவும் தேங்காய்களைப் பிடுங்கிச் சேகரித்துக் கொண்டிருக்க, மறுபுறம் சீதேவிப்பாட்டியும், கனகாம்பிகையும் சமையலில் ஈடுபட இன்னொரு புறத்தில் மாமர நிழலில் அடுப்பு மூடப்பட்டு கூழ் காய்ச்சப்பட்டுக் கொண்டிருந்தது.

சேனாதி இரண்டு பெரிய மீன்களைக் கறிக்காகச் சீதேவிப்பாட்டியிடம் தூக்கிக் கொடுத்து விட்டு உரப்பை நிறைந்த மீன்களைத் தானே கழுவி கூழுக்கு ஏற்ற விதமாக வெட்டித்தயார் படுத்தியிருந்தான். சங்கரப்பிள்ளை செத்தல் மிளகாயை அம்மியில் அரைத்து ஒடியல் மாவுடன் கரைத்து ஏனைய தேவையான பொருட்களையும் சேர்த்து அடுப்பில் ஏற்றியிருந்தான். மீன்களையும் போட்டு அகப்பையினால் தொடர்ந்து துளாவப்பட்டு கூழ் தயாராகிக் கொண்டிருந்தது. அதேவேளையில முட்டிகளில் தயாராக இருந்த தனிப்பனைக் கள்ளும் இடையிடையே அவர்களுக்கு உற்சாகமூட்டிக்கொண்டிருந்தது.

கூழ் நல்ல கொதிநிலையை அடைந்த போது சங்கரப்பிள்ளை வேலிக்கரையில் நின்ற வடலிகளில் ஓலை வெட்டிக் கொண்டு வந்து பிளா கோல ஆரம்பித்தான். பச்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலைப் பிளாவில் கூழ் குடிப்பதில் ஒரு தனி ருசி இருப்பதாகவே அவர்கள் கருதியிருந்தனர்.

இப்படியாக ஒவ்வொருவரும் வெவ்வேறு காரியங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது சொர்ணம் மட்டும் ஒரு தனி உலகில் மிதந்து கொண்டிருந்தாள்.

தென்னந்தோட்டத்தில் ஆங்காங்கே இருந்த துரவுகளைச் சுற்றி வந்தாள். அங்கு நின்ற மாமரத்தில் காய்த்திருந்த மாங்காய்களை ஒரு தடியால் தட்டி விழுத்தி அவற்றில் சிலவற்றைக் கையில் எடுத்துக் கடித்தவாறே அந்த மணலில் சுற்றி வந்தாள்.

தான் குடித்த மிகுதி இளநீரை இளையவன் வாங்கிக் குடித்தது அவள் நெஞ்சில் ஏதோ ஒருவிதமான இன்பக் கிளுகிளுப்பை ஊட்டியிருந்தது. அவள் அதை நீட்டும்போது அவன் தயங்கியதோ அல்லது அவன் குடித்து விட்டு வெறும் கோம்பையை அவளிடம் கொடுத்து விட்டு எதுவுமே பேசாமல் அவ்விடத்தை விட்டு வேகமாகப் போனதோ அவளுக்கு ஒரு பொருட்டாகவே தெரியவில்லை, ஆனால் அவன் போன பின்பு அந்தக் கோம்பையைக் கவிழ்த்த போது அதில் எஞ்சியிருந்த ஒரு சொட்டு இளநீரால் தனது நாவை நனைத்துக் கொண்டதில் ஏதோ ஒருவிதமான இன்பம் இருந்ததாகவே அவள் உணர்ந்தாள்.

ஆனால் இளையவனின் நிலையோ வேறுவிதமாகவே இருந்தது. அவன் நன்றாகவே குழம்பிப்போயிருந்தான். அவன் சொர்ணத்துடன் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பழக வேண்டும் என மீண்டும் மீண்டும் நினைத்துக் கொண்ட போதிலும் அவளின் முன்பு தான் தன்னை இழந்து விடுவதை உணர்ந்த போது அவனுக்கு அவனிலேயே கோபம் கோபமாக வந்தது. அந்தக் குழப்பத்தில் தென்னையில் ஏறும் போது கூட எங்கே தவறி விழுந்து போகவும் கூடும் எனக் கூட அஞ்சினான். எனினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் சிரமப்பட்டு அந்த எண்ணங்களிலிருந்து விடுபட முயன்ற போதிலும் அது அவ்வளவு இலகுவான விஷயமாகத் தெரியவில்லை.

பச்சை ஓலைப் பிளாக்களில் சங்கரப்பிள்ளை அகப்பையால் கூழை அள்ளி விட கூழ் குடிப்பு ஆரம்பாகி விட்டது. கள்ளும் கூழுமாக அவர்களுக்குப் போதையூட்டிக் கொண்டிருந்தன. எனினும் விதானையார் ஏதோ வழமைக்கு மாறாக மந்தமாக இருப்பதாகவே சேனாதிக்குப் பட்டது. கூழில் நண்டும், றாலும் இல்லாதது காரணமாக இருக்குமோ எனவும் அவன் யோசித்தான். அவன் தான் என்ன செய்ய முடியும்? ஆனையிறவுக் கடலில் ஆடிமாதம் தான் றால் பட அரம்பிக்கும்.

சேனாதி கேட்டான், "என்ன விதானை! சப்பெண்டு இருக்கிறாய்? என்ன கூழ் வாய்க்கேல்லையே?"

விதானையார் ஒரு மெல்லிய சிரிப்புடன் சொன்னார், "கூழ் திறமாய்த் தான் இருக்குது.. மனம் தான் எங்கையோவெல்லாம் போய் வருகிறது?"

சங்கரப்பிள்ளை வியப்புடன் கேட்டான், "என்ன உனக்குப் கூடப் பிரச்சினையே?"

"பிரச்சினை எனக்கில்லை. ஊரிலை ஒரு பெரிய பிரச்சினை. அது எப்படி முடியப் போகுது எண்டுதான் யோசிக்கிறன்"

சங்கரப்பிள்ளை வாய்க்குக் கிட்டக் கொண்டு போன பிளாவை மீண்டும் நிலத்தில் வைத்து விட்டு, "என்ன அப்படி ஊரிலை?", எனக் கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிங்கன் எண்டு... ஆலடிவெட்டைப் பொடியன் ஒருத்தன் கமலி எண்ட மணியாறன்மூலைப் பெட்டையை விரும்பி அங்கை போய் வரத் துவங்கியிட்டான்"

சேனாதி சிரித்தவாறே குறுக்கிட்டான், "நீ அவள் சின்னனை வைச்சிருக்கிற மாதிரி"

"மடையா... நான் இறைச்சி தின்னுறநெண்டு காட்ட எலும்பைக் கழுத்திலை கட்டித் தொங்க விடுகிறனே?, அவன் கலியாணமல்லே கட்டியிட்டான்" என்றார் விதானை.

"அவங்கள் வெவ்வேறை சாதியல்லே?", எனக் கேட்டான் சங்கரப்பிள்ளை.

"ஓமோம்... அது தான் இப்ப பிரச்சினை.. அவன் யாழ்ப்பாணக் கச்சேரியிலை போய் கலியாணத்தை எழுதிப் போட்டு, முனியப்பர் கோவிலிலை தாலியையும் கட்டிப் போட்டு கூட்டியந்து பெட்டை வீட்டை தான் இருக்கிறான்"

"ஆலடி வெட்டையான்கள் விடாங்களே!", என்றான் சேனாதி.

"விடாங்கள் தான்! கட்டாயம் ஏதும் செய்வாங்கள்! ஆனால் பெட்டையின்ரை தேப்பன் பொன்னுக்குட்டியும் லேசான ஆளில்லை. அவன் கனகாலம் திருகோணமலையிலை வீரபாகுவின்ரை கப்பல் கொம்பனியில வேலை செய்தவன். அவனுக்கு ஒரு பிரச்சினை எண்டால் அவனுக்காக பருத்தித்துறை சண்டியன்கள் எல்லாம் இறங்கிடுவாங்கள். வீரபாகு முதலாளியின்ரை செல்வாக்கிலை பொலிசிலையும் நல்ல அணைவு இருக்குது"

விதானையார் விசயத்தை விளக்கமாகச் சொல்லி விட்டு கூழை எடுத்து உறிஞ்ச ஆரம்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் அவர் தொடங்கினார். "கலியாணம் நடந்து மூண்டுநாளாய்ப் போச்சுது.. இது வரைக்கும் ஒரு பிரச்சினையும் இல்லை... ஆனால் எதுவும் நடவாமல் விடாது!"

சங்கரப்பிள்ளை கேட்டான், "அப்ப... என்ன செய்யப் போறாய்?", விதானையார் உறுதியாகச் சொன்னார், "எங்கடை ஊரிலை சாதிச் சண்டை வரக்கூடாது... அதுக்குத் தக்க மாதிரி வெட்டியாட வேணும்...ம்.. நிலைமையைப் பாத்து விளையாடுவம்"

சங்கரப்பிள்ளை மீசையைத் தடவி விட்டுச் சொன்னான், "ம்... தேவையெண்டால் சொல்லு.. அஞ்சாறு துவக்கோடை வாறம்"

விதானையார் சிரித்துக் கொண்டே சொன்னார், "போடா பேயா எனக்கு என்ரை பிரம்பே போதும்"

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே இளையவனும், ராமையாவும் வேலையை முடித்துக் கொண்டு வந்து விட்டனர்.

சேனாதி ராமையாவைக் கூப்பிட்டு, கூழை ஒரு சட்டியில் ஊற்றி இருவரையும் குடிக்கும்படி சொல்லிக் கொடுத்துவிட்டான்.

அவர்களும் கூழ்ச் சட்டியுடன் போய் இன்னொரு மாமரத்தடியில் அமர்ந்து கொண்டனர். அவர்களின் களைத்த உடலுக்கு ஒடியல் கூழ் ஒரு புதிய தென்பை ஊட்டியது.

விதானையார் குழுவின் கூழ் குடிப்பு முடிய இன்னும் வெகு நேரம் எடுக்கும் என்பதைச் சீதேவிப்பாட்டி அனுபவபூர்வமாக உணர்ந்திருந்த காரணத்தால், ராமையாவையும் இளையவனையும் சாப்பிட அழைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூழ் குடித்து அரைமணி நேரம் கடந்து விட்டதால் அவர்களும் ஒத்தாப்புக்குள் இருந்த பனம் பாயை விரித்து விட்டு அதில் அமர்ந்து கொண்டனர். சாப்பாடும் அன்று அவர்களுக்குப் பச்சைப் பனையோலைப் பிளாவில் தான். அதில் ஏதோ ஒருவிதமான சுவை இருப்பதாகவே இளையவன் உணர்ந்தான். ஏனோ சாப்பிடும் போது அவனால் சொர்ணத்தை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை.

உணவு முடிந்து சற்று ஓய்வெடுத்த பின் சீதேவிப்பாட்டி, "இளையவன் வீட்டை கொண்டு போக ஒரு இருபது முப்பது தேங்காய் நல்லதாய்ப் பார்த்து உரிச்சு விடு", என்றாள். சொர்ணமும் சாக்கு ஒன்றைத் தூக்கிக் கொண்டு அவர்கள் பின்னால் நடந்தாள்.

அதற்கிடையில் தேங்காய் வியாபாரியின் உழவு இயந்திரம் வரவே கூழ் குடிப்பில் இருந்த விதானையார், "ராமையா! தேங்காயை எண்ணிக் குடு", என்றார் பலமாக. ராமையா உழவு இயந்திரத்தை நோக்கிப் போக ஆரம்பித்தான்.

இளையவன் அலவாங்கை நிலத்தில் குத்தி விட்டு, நிமிர்ந்து பார்க்காமலே தேங்காய்களை உரிக்க ஆரம்பித்தான்.

சொர்ணம் மெல்லக் கேட்டாள், "என்ன முந்தநாள் கமலி வீட்டிலை கலியாண விருந்தாம்..., நீ போகேல்லையே..?"

சில வினாடிகள் அமைதியின் பின், "போனனான்.. அயலுக்கை போகாமல் விட முடியுமே?", என்றான் அவன்.

"ஆலடிவெட்டையார் ஒருதரும் வரவில்லையே..?"

சொர்ணத்தின் கேள்வி அவனை ஒரு முறை நிமிர்ந்து பார்க்க வைத்தது. பின்பு, "அவங்கள் விருந்துக்கு வருவாங்களே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி வாறதெண்டால் வெட்டத்தான் வருவாங்கள்", என்றான் அவன்.

சொர்ணம் உடனடியாகவே கேட்டாள், "ஒரு பொடியனும் பெட்டையும் மனம் விரும்பிக் கலியாணம் செய்தால் என்ன வெட்டுறதும், கொத்துறதும்?", அவளின் குரலில் ஒரு மெல்லிய கோபம் தொனித்தது.

அவன் பதில் எதுவுமே சொல்லவில்லை. தலையைக் குனிந்தவாறே தேங்காய்களை உரித்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரம் மௌனம் நிலவியது.

சொர்ணத்தின் கேள்வியில் இருந்த நியாயத்தை அவன் மனம் ஏற்றுக் கொண்டது.

ஆனால் சமூகம் அப்படியான நியாயங்களைக் கடும் குற்றங்களாகப் பார்ப்பதை அவள் ஏன் இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்பதைத் தான் அவனால் விளங்கிக் கொள்ளமுடியவில்லை.

அவன் ஒருவிதமான தயக்கத்துடன் சொன்னான், "பொடியனும் பெட்டையும் விரும்பினால், மட்டும் போதுமே..? ஊர் உறவுகள் ஏற்க வேண்டாமே?"

அவள் குறுக்கிட்டாள்.

"ஊரும் உறவும்...", என்று தொடங்கிய அவள் இடை நிறுத்திவிட்டு பின் திடீரெனக் கேட்டாள், "நீ... ஒரு வேறை சாதிப் பெட்டையை விரும்பினால் ஊருக்குப் பயந்து கைவிடுவியோ இல்லாட்டில் நடக்கிறது நடக்கட்டும் எண்டு கலியாணம் கட்டுவியோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளின் கேள்வி அவனை அதிரவைத்தது. அவன் எதுவுமே பேசவில்லை! வேகமாகத் தேங்காயை உரிக்க ஆரம்பித்தான்.

சிறிது நேர மௌனத்தின் பின் அவள் சீறினாள், "நீ.. இதுக்கு மறுமொழி சொல்ல மாட்டாய்.. ஏனெண்டால் கை விட்டுடுவன் எண்டு சொல்ல மனம் விடாது... கலியாணம் செய்வன் எண்டு சொல்லத் துணிவு வராது?"

சொர்ணம் கையில வைத்திருந்த சாக்கைச் சுழற்றி வீசி விட்டு வேகமாகத் தோட்டத்து வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

இளையவன் செய்வதறியாத நிலையில் திகைத்துப் போய் நின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 15

கிழக்கு வெளிக்கும் போதே விதானையார் குளித்து முடித்து விட்டார். முதல் நாள் பளைத் தென்னந்தோட்டத்தில் குடித்த தனிப்பனைக் கள்ளும் ஒடியல் கூழும் உடம்பை லேசாக்கி ஒரு புதிய உற்சாகத்தைக் கொடுத்து விட்டது போலவே தோன்றியது. அவர் கோவிலுக்குப் போவதற்குத் தயாராக ஆடை மாற்றிக் கொண்டிருந்த போது தான் ஒரு வெடிச்சத்தம் கேட்டது. அது என்னவாக இருக்கும் என அவர் யோசிப்பதற்கிடையில் சில வினாடிக்குள் அடுத்த வேட்டொலியும் கேட்டது. அவை துப்பாக்கி வேட்டுகள் என்பதையும் மணியாறன்மூலைப் பக்கமிருந்தே வந்தன என்பதையும் அவரின் கூர்மையான காதுகள் கண்டு பிடித்துக் கொண்டன. ஏதோ அசம்பாவிதம் நடந்து விட்டதைப் புரிந்து கொண்ட அவர் கோவிலுக்குப் போக உடுத்திய ஆடைகளைக் கழற்றி விட்டு அவரின் விதானையார் ஆடைகளான அரவிந் வேட்டியையும் முழுக்கை நாஷனலையும் போட்டுக் கொண்டார். மடிப்புக் கலையாத பட்டுச் சால்வையை எடுத்துக் கழுத்தைச் சுற்றிப் போட்டுக் கொண்டு அவசரமவசரமாக வெளியே வந்தபோது, ஒரு இளைஞன் சங்கடப் படலையைத் திறந்து கொண்டு முற்றத்துக்கு இளைக்கக் களைக்க ஓடி வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானையார் தன் பரபரப்பை வெளிக்காட்டாமலே, "என்னடா? என்ன சங்கதி?", எனக் கேட்டார்.

அவன் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியவாறே, "சிங்கனை ஆரோ சுட்டுப் போட்டாங்கள்", என்றான்.

"என்ன! சுட்டுப் போட்டாங்களா?", என அதிர்ச்சியுடன் கேட்ட விதானையார், "என்ன பெரிய காயமே?", என வினாவினார்.

அவன், "தெரியாது! நான் அங்கை போகயில்லை. வல்லியப்புதான் இப்படிச் சொல்லச் சொல்லி அனுப்பி விட்டவர்",என்றான்.

விதானையார் தாமதிக்கவில்லை. அவனிடம் , "டேய் உப்பிடியே ஓடிப்போய் மணியத்தைக் காரைக் கொண்டு வரட்டாம்... மினைக்கடாமல் உடனே வரட்டாம் எண்டு சொல்லு", என்றார்.

அவன் மீண்டும் மணியம் வீட்டை நோக்கி ஓட ஆரம்பித்தான். சிங்கன் உயிருக்கு மட்டும் ஏதாவது நடந்தால் அடுத்து நடக்கப் போகும் சம்பவங்களைத் தன்னால் கட்டுப்படுத்த முடியுமோ என்ற சந்தேகம் விதானையாருக்கு எழ ஆரம்பித்து விட்டது.

அந்த இளைஞன் சொன்னது எல்லோருக்கும் கேட்டிருக்க வேண்டும். அனைவரும் விதானையாரைச் சுற்றிக் கூடி விட்டனர்.

சீதேவிப் பாட்டி மெல்ல முணுமுணுத்தாள், "உது ஆலடி வெட்டையாரின்ரை வேலையாகத்தான் இருக்கும்."

விதானையார் சீறி விழுந்தார். "நீ போய்ப் பாத்தனியே"...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவி விடவில்லை. "ஏன் பாப்பான் மணியாறன் மூலையார் தாங்கள் என்ன சாதியெண்டில்லாமல் அவங்களட்டை மாப்பிள்ளை எடுக்க வெளிக்கிட்டால் அவங்கள் விடுறமெண்டவங்களே?"

சீதேவிப்பாட்டியின் ஊகம் சரியாகத்தான் இருக்கும் என விதானையாரும் நினைத்தார். ஆனால் கமலியைச் சுடாமல் ஏன் சிங்கனைச் சுட வேண்டும் என்ற கேள்வி அவருள் எழாமல் இல்லை.

அவையெல்லாவற்றையும் கேட்ட போது வெளி விறாந்தையில் நின்றிருந்த சொர்ணத்துக்கு ஒரே குழப்பமாக இருந்தது. கலியாண சந்தோசத்தில் பூரிந்திருந்த கமலியின் முகமும், கதறியழும் அவளின் முகமும் சொர்ணத்தின் நினைவில் மாறிமாறி வந்து மறைந்தன.

கனகாம்பிகை தேனீரைக் கொண்டு வந்து விதானையாரிடம் நீட்டினாள். விதானையார் முற்றத்தில் நின்றவாறே தேனீரை வாங்கி அவசரமாகக் குடித்து முடித்தார்.

விதானையாரும் சின்னனை இப்படிப் பகிரங்மாகக் கலியாணம் செய்திருந்தால் அவருக்கும் சூடு விழுந்திருக்கும் என்பதை நினைத்த போது கனகாம்பிகையின் நெஞ்சு ஒரு முறை நடுங்கியது. ஆனால், அவள் அதை வெளிக்காட்டாமலே மூக்குப் பேணியை வாங்கிக் கொண்டு உள்ளே போய் விட்டாள்.

மணியம் முகம் கூடக் கழுவாமல் காரைக் கொண்டு வந்து விட்டான். அதனால் தானோ என்னவோ வழக்கமாக அவனின் காருக்குள் மணக்கும் ஊதுபத்தியின் வாசனையும் இல்லாமற் போயிருந்தது. விதானையார் ஏறி முன் சீற்றில் அமர்ந்து கொண்டு, "மணியாறன் மூலைக்கு விடு", என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார் பொன்னுக்குட்டி வீட்டுக்குத் திரும்பும் சந்தியை நெருங்கிய போது தம்பியன் அவசரமாக எங்கோ போய்க் கொண்டிருந்தான். விதானையோ காரை நிறுத்தச் சொல்லி விட்டு தம்பியனிடம், "டேய் இஞ்சை வா! சிங்கனுக்கு என்ன நடந்தது", எனக் கேட்டார்.

அவன், "சிங்கனை ஆரோ சுட்டுப் போட்டாங்கள். செத்த இடத்திலேயே பிரேதம் கிடக்குது", என்றான் அவன். முகத்தைப் பயம் கௌவியிருந்தது.

"எங்கை நடந்தது?"

"காலையில வேம்படி வடலிக்கு வெளிக்குப் போனவனாம் வெடிச்சத்தம் கேட்டு அயலட்டைச் சனம் ஓடிப் போய் பாத்தால் பிரேதம் தான் கிடந்ததாம்"

"மணியம் காரை வேம்படி வடலியடிக்கு விடு", என்றார் விதானையார். அந்த ஊரில விதானையார் வீடு உட்பட ஒரு சில வசதி படைத்தவர்களின் வீடுகளிலே மலசலகூடம் உண்டு. ஏனையோருக்கு வடலிக் காணிகளே பொது மலசலகூடங்களாக விளங்கின.

விதானையார் அங்கு போய் இறங்கிய போது மணியாறன்மூலைச் சனம் அங்கு ஏராளமாகக் கூடி நின்றனர்.

வடலிக் காணிக்குள்ளிருந்தது வெளியே வரும் ஒற்றையடிப் பாதையில் சிங்கனின் பிரேதம் வானத்தைப் பார்த்தபடி கிடந்தது. கமலி அவனின் கால் மாட்டில் கிடந்து கதறிக் கொண்டிருந்தாள். வீரபாகு முதலாளியின் நம்பிக்கையான கைகளாக திருகோணமலையைக் கலக்கின பொன்னுக்குட்டி விதானையாரைக் கண்டதும் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஐயா இரண்டு நாளிலை என்ர பிள்ளையைக் கைம்பெண்ணாக்கிப் போட்டாங்கள்”, என்று விட்டு பலமாக அழத் தொடங்கினான் பொன்னுக்குட்டி.

“ம்... ஏதோ நடந்துட்டுது...பாப்பம்”, என்று விட்டு விதானையார் பிரேதத்தை நோக்கிப் போனார். ஒரு சூடு இருதயத்துக்குள் நேராகவும் மற்றது நடு நெஞ்சிலும் விழுந்திருந்தன. அவர் உடுப்பு மாற்றிக் கொண்டிருந்த போது கேட்ட வெடிச் சத்தங்களும் சிங்கனின் உடலில் கிடந்த காயங்களும் இரட்டைக் குழல் துப்பாக்கி தான் கொலைக்குப் பாவிக்கப்பட்டிருக்கிறது என்பதை அவருக்குத் தெளிவுபடுத்தியது. அதுமட்டுமன்றி, உடனடியாக உயிரைப் பறிக்கக் கூடிய வகையில் குறிப்பான இடங்களில் விழுந்த சூடுகள் ஒரு நல்ல அனுபவம் கொண்ட வேட்டைக்காரனே சுட்டிருக்க முடியும் என அவரை ஊகிக்க வைத்தன.

முதல்நாள் பளைக்குப் போனபோது சுட்டிபுரத்தில் பொன்னம்பலத்தையும் இராமலிங்கத்தையும் சந்தித்ததும் அவர்களுடன் இரு புதிய நபர்கள் வந்திருந்ததும் அவரின் நினைவில் வந்து போயின. சிங்கன் கொலை தொடர்பாக சில விஷயங்கள் வெளிப்பதாக அவருக்குத் தோன்றியது.

விதானையார் அங்கு நின்ற சின்னப்பனைக் கூப்பிட்டு, “இஞ்சை வா இதிலை நாலு தடி நட்டு பிரேதத்தில வெயில் படாமல் ஒரு வேட்டி கட்டி விடுங்கோ. ஒரு வெள்ளைத் துணியால பிரேதத்தை மூடி விடுங்கோ” என்றார்.

பின்பு அவர் பொன்னுக்குட்டி பக்கம் திரும்பி, “நான் போய் பொலிஸ், நீதவான் எல்லாரையும் கொண்டு வாரன். விசாரனை முடிஞ்ச பிறகு வீட்டை கொண்டு போகலாம்” என்றார். பொன்னுக்குட்டி விம்மியபடியே தலையாட்டி விட்டு, “ஐயா பிரேதம் எரியிறதுக்கிடையில நாலு ஆலடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டையாரையெண்டாலும் வெட்டாமல் விடமாட்டன்'', என்றான். விதானையாரின் முகம் மாறியது.

விதானையார் உறுமினார். "விசர்க்கதை கதையாதை! எனக்கு என்ன செய்ய வேணுமெண்டு தெரியும். நான் எதுக்கும் போட்டு வாரன் என்ன?"

பொன்னுக்குட்டி சரியெனத் தலையாட்டினான். அவன் எவ்வளவு சண்டியனாக இருந்த போதும் விதானையாருக்கு மரியாதை கொடுக்கத் தவறுவதில்லை.

விதானையார் காரில் ஏறப் போன போது சிங்கனின் தாய் கதறியவாறே தலைவிரி கோலமாக ஓடி வந்தாள். விதானையாரைக் கண்டதும் அவள், "ஐயோ...ஐயோ... எல்லோரும் சேர்ந்து என்ரை பிள்ளையைத் திண்டிட்டாங்களே'', எனப் பொரியத் தொடங்கினாள்.

"சரி. நான் அதைப் பார்கிறன். அடுத்த கலகம் துவக்காமல் வாயைக் கவனமாப் பாவி'', என்ற விதானையார் பொன்னுக்குட்டி பக்கம் திரும்பி, "பெத்த வயிறு எரியத்தான் செய்யும். அவள் ஏதும் இசக்குப் பிசக்காய் கதைத்தாலும் நீங்கள் காதிலை விழுத்தாதையுங்கோ'' என்றார்.

கார் பருத்தித்துறை நோக்கிப் பறந்தது.

சிங்கனின் தந்தை சிதம்பரப்பிள்ளை மிதித்த இடத்துப் புல்லுக் கூடச் சாகாது என்பார்கள் அவ்வளவு தூரம் எல்லோராலும் நல்ல மனிதர் எனப் போற்றப்படுபவர். அவர் ஒரு நல்ல தோட்டக்காரன் மட்டுமன்றி புகையிலைக்குப் பதமாகப் புகை போடுவது, பாணி காச்சுவது போன்ற தொழில்களிலும் சிறந்து விளங்கினார். எவர் கேட்டாலும் மறுக்காமல் அவ்விஷயங்களில் உதவி செய்வார் அவர். சிங்கனும் கூட தகப்பனைப் போலவே ஊருக்குள் நன்மதிப்பைப் பெற்றிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகப்பனின் தொழில்களை நன்றாகவே கற்றுக் கொண்ட அவனும் மற்றவர்களுக்கு உதவி செய்யத் தயங்குவதில்லை. அதுமட்டுமன்றி சிங்கன், சிவஞானம், கனகசபை ஆகியோர் சேர்ந்து ஒரு வாசிகசாலை ஆரம்பித்து இரவில் சிறுவர் சிறுமியருக்கு படிப்புச் சொல்லிக் கொடுக்கவும் ஆரம்பித்தனர்.

எனினும், ஒரு சிலருக்கு இவர்களைப் பிடிப்பதில்லை. மது அருந்தி விட்டு சண்டித்தனம் செய்வதும் சாதிப் பெயர் சொல்லிச் சிலரை மரியாதை குறைவாகக் கதைப்பதும் என உதிரிகளாகத் திரிந்த சிலர் இவர்களை வெறுத்தனர். ஆனால் சிங்கனோ சிவஞானமோ அவர்களைப் பொருட்படுத்தியதில்லை. அவர்களுடன் எவ்வித தொடர்புகளையும் வைப்பதில்லை.

ஆனால், சிங்கன் மணியாறன் மூலையில் கலியாணம் செய்த விஷயம் ஆலடிவெட்டையார் சிங்கன் மேல் வைத்த நல்ல அபிப்பிராயத்தையே பாழடித்து விட்டது. சாதியின் மானத்தையே விற்று விட்டதாக ஆத்திரப்பட்டனர். எனினும், சிங்கனை வெறுக்க விரும்பாத சிலர் சிங்கனில் பிழையில்லையெனவும் கமலி மருந்து போட்டு அவனை மடக்கி விட்டதாகவும் தம்மைச் சமாதானப்படுத்திக் கொண்டனர்.

சிங்கன் மணியாறன்மூலையில் திருமணம் செய்த விஷயத்தை சிதம்பரப்பிள்ளை கேள்விப்பட்ட போது அவரின் முகம் மாறியதேயொழிய அவர் எதுவுமே பேசவில்லை. சால்வையை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு ஆலடிச் சந்திக்கு வந்து விட்டார்.

அவர் வீட்டில் கூட எவருக்குமே எதுவும் சொல்லாமல் கீரிமலைக்கு பஸ் ஏறிவிட்டார். அங்கு போய் சிங்கனுக்கு மரணச் சடங்கு செய்து அந்தியேட்டிக் கிரியைகளும் நடத்தி முடித்து விட்டு திரும்பி விட்டார். அவர் அதன் பிறகு எவரிடமும் எதுவும் பேசுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கனுக்கும் சூடு விழுந்த அன்று காலை அவரிடம் ஓடிப்போய் சிங்கன் இறந்த செய்தியைச் சொன்ன போது அவரின் வைரம் பாய்ந்த அந்த உடல் ஒருமுறை ஆடியது. கண்களிலிருந்து நீர் பொலுபொலுவென வழிய ஆரம்பித்தது.

பின்பு அவர் உறுதியான குரலில் சொன்னார், "என்ரை பிள்ளை நாலாம் நாளே செத்துப் போட்டான். இப்ப செத்தது பொன்னுக்குட்டியின்ரை மருமேன்"

அதன் பிறகு அவர் அந்த இடத்தில் இருக்கவில்லை. அவர் எழுந்து போய் விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 16

விதானையார் பருத்துறைப் பொலிஸ் நிலையத்தை அடைந்த போது அப்போது தான் சார்ஜன்ட் சின்னத்தம்பி கடமைக்கு வந்து கையெழுத்து வைத்து விட்டுக் கதிரையில் அமர்ந்தார். அவர் விதானையாரைக் கண்டதும் ஒரு மெல்லிய புன்சிரிப்புடன், "என்ன விதானையார் உங்கடை சனத்தையே இந்தப் பக்கம் வரவிடாமல் நீங்களே எல்லாப் பிரச்சனையும் தீர்த்துப் போடுவியள். இண்டைக்கு நீங்கள் இஞ்சை வந்திட்டியள்"என்றார்.

"ஓமோம்! கொலை ஒண்டு நடந்திட்டுது!", என்றார் விதானையார்.

"என்ன! கொலையோ?", என்று விட்டு நிமிர்ந்து உட்கார்ந்தார் சின்னத்தம்பி.

முழு விபரங்களையும் கவனமாகக் கேட்ட சின்னத்தம்பி, "கொலை செய்தவங்கள் ஆரெண்டு சாட்சி ஏதாவது இருக்கே?", எனக் கேட்டார்.

"கண்ணாலை கண்டவை எவரும் இருக்கிற மாதிரி தெரியேல்லை. ஆனால் எனக்கு ஆர் செய்திருப்பாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றதிலை ஒரு சந்தேகம் இருக்குது'', என்று விட்டு விதானையார் தான் சுட்டிபுரம் அம்மன் கோவிலடியில் பொன்னம்பலம், இராமலிங்கம் ஆகியோரையும், வேறு இருவரையும் கண்ட சம்பவத்தை விபரித்தார்.

இப்போ சின்னத்தம்பியின் முகம் இறுகியது.

''அவ்வளவு போதும்! மிச்சத்தை நான் பார்க்கிறன். நீங்கள் ஒரு முறைப்பாட்டைப் போடுங்கோ. நான் நீதவானையும், டொக்டரையும் தொடர்பு கொண்டு மரண விசாரணைக்கு ஏற்பாடு செய்யுறன்'', என்று விட்டு சின்னத்தம்பி எழுந்து தொலைபேசி இருக்கும் அறைக்குப் போனார்.

விதானையார் முறைப்பாட்டைப் போட்டு கையெழுத்து வைத்து விட்டு நிமிர்ந்த போது வெளியே வந்த சின்னத்தம்பி, ''நீதவான் இண்டைக்கு விரதமாம் பத்து மணிக்கிடையிலை விஷயம் முடிக்க வேணுமாம். டொக்டருக்கு உடனை வாறனெண்டிட்டார். நான் இரண்டு பொலிஸ்காரரை விடுறன்.. உங்கடை காரிலை போய் டொக்டரையும், போஸ்மோட்டம் செய்யிறவனையும் கூட்டி வரட்டும். நீதவான் தன்ரை காரிலை வருவார்'' என்றார்.

இவ்வளவு கெதியாயும் சுலபமாகவும் விஷயம் முடியுமென விதானையார் எதிர்பார்க்கவில்லை.

விதானையார், ''கொலைகாரங்கள் தப்பிப் போறதுக்கிடையிலை அவங்களைப் பிடிக்க வேணுமல்லே'', என்றார்.

அது பிரச்சினையில்லை.. நானும் நீங்களும் ஜீப்பிலை போய் அவங்களை அப்புவம்'', என்று விட்டு சின்னத்தம்பி எல்லா ஏற்பாடுகளுக்கும் தனது உதவி சார்ஜனுக்கு கட்டளைகளைக் கொடுத்து விட்டு பத்து நிமிடங்களிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாராகிவிட்டார். விதானையாரும், சார்ஜன்ட்டும், இன்னொரு பொலிஸ்காரனும் ஜீப்பில் ஏறிக் கொண்டனர்.

வேகமாக வந்த ஜீப் பொன்னம்பலம் வீட்டுக்கு முன் வந்து நின்றது. விதானையார் இறங்கிப் படலையைத் திறந்து கொண்டு உள்ளே போன போது அவனின் மனைவி முற்றம் கூட்டிக் கொண்டு நின்றாள். ஜீப்பைக் கண்டதுமே அவள் முகத்தில் ஒருவித அச்சம் பரவியது.

விதானையார் சாதாரணமாகவே கேட்டார், "பிள்ளை... பொன்னம்பலம் எங்கை போட்டான்?".

அவள் ஒருவிதமான தயக்கத்துடன் சொன்னாள், "நேற்று பொழுதுபடப் போனவர் இரவு சாப்பிடவும் வரயில்லை. இருந்திருந்திட்டு இப்பிடித் தானய்யா.. எங்கையும் குடிச்சுப் போட்டுக் கிடந்திடுவார்", "குடிச்சுப் போட்டுக் கிடந்திடுவார்" என்ற வார்த்தைகள் விதானையாரின் மூளையை வேலை செய்ய வைத்தது. திரும்பி வந்து ஜீப்பில் ஏறிய அவர் "நான் சொல்லுற இடத்திற்கு விடுங்கோ", என்றார்.

விதானையார் வழிகாட்ட ஜீப் போய் சாராயம் விற்கும் கதிராசி வீட்டின் முன் நின்றது. "இறங்கி வாங்கோ?", என்று விட்டு விதானையார் படலையைத் திறந்து கொண்டு உள்ளே போனார்.

கதிராசியின் மனைவி ஓடி வந்தாள். அவள் சாராயம் பிடிக்க பொலிஸ் வந்து விட்டதாகவே நினைத்தாள். அவள் பதட்டத்துடன் சின்னத்தம்பியை நோக்கி, "ஐயா.. இந்த மாதம் வழக்குக் குடுத்திட்டம்", என்றாள்.

களவாகச் சாராயம் விற்பவர்களின் இடத்துக்கு பொலிஸ் மாதம் ஒரு முறை வரும். அவர்கள் கால் போத்தல் சாராயத்தையும் அதற்கான கிளாஸையும் கொடுத்து பொலிசுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனை அனுப்பி விடுவார்கள். பொலிஸ் அடுத்த நாள் அவனை நீதிமன்றில் நிறுத்த அவன் சாராயம் விற்ற குற்றத்தை ஒப்புக் கொள்வான். நீதிபதி அவனுக்கு பத்து ரூபா குற்றம் அடிப்பார்.

சாராய வியாபாரம் எந்தவித இடையூறுமின்றி நடக்கும் - மாதா மாதம் பொலிசுக்குப் போக வேண்டிய மாதக் காசும் போய்க் கொண்டிருக்கும்.

விதானையார், "நாங்கள் அதுக்கு வரயில்லை. இவன் பொன்னம்பலத்திட்டை ஒரு அலுவல். இஞ்சாலை வந்தவனே?" என்றார். அவள் விழிகள் மெல்ல மிரண்டன. அவை அவளையறியாமலே வீட்டின் இடப்புறப் பின் கோடிப்பக்கம் போயின. பொன்னம்பலம், இராமலிங்கம், உருத்திபுரத்திலிருந்து வந்த இருவர் ஆகியோர் மாமரத்தின் கீழிருந்து சாராயம் குடித்துக் கொண்டிருந்தனர்.

சின்னத்தம்பி தாமதிக்கவில்லை. பாய்ந்து சப்பாத்துக் காலால் பொன்னம்பலத்துக்கு நெஞ்சில் உதைத்த உதையில் அவன், "ஐயோ", அலறியவாறு விழுந்தான். இருந்த இடத்தை விட்டுப் பதட்டத்துடன் எழுந்த இராமலிங்கத்தின் முகத்தில் விழுந்த அடியில் மூக்கு உடைந்து இரத்தம் ஒழுக அவன் மல்லாக்காக விழுந்தான். உருத்திரபுரத்திலிருந்து வந்தவர்களில் ஒருவன் ஓடி வேலியைப் பாய முயன்ற போது, மற்ற பொலிஸ்காரன் எறிந்த பட்டன் பொல்லு முழங்காலைப் பதம் பார்க்க அவன் அலறிக் கொண்டே கீழே விழுந்தான்.

சார்ஜன்ட் சின்னத்தம்பியும், மற்றப் பொலிஸ்காரனும் நாலு பேரையும் மடக்கி அவர்களின் சேட்டுகளாலேயே அவர்களின் கைகளைக் கட்டினார்கள்.

கதிராசியின் மனைவி திகைத்துப் போய் நின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்தம்பி உறுமினார், "எத்தனை மணிக்கடி வந்தவர்கள்?", அவள் நடுங்கியவாறே சொன்னாள், "இப்ப கொஞ்ச நேரம் முந்தித்தான்... கார் வந்தால் கூப்பிடச் சொல்லிப் போட்டு பின்னாலை போனவை"

"ராத்திரி வரயில்லையே?"

"வந்தவை. நிக்கேல்லை... இரண்டு போத்தல் சாராயத்தை எடுத்துக் கொண்டு போட்டினை", என்றாள் அவள்.

கைகள் கட்டப்பட்ட நால்வரும் ஜீப்பில் ஏற்றப்பட்டனர். ஜீப் உறுமிக் கொண்டு புறப்பட்டது. ஜீப் ஆலடி சந்தியில் வந்து பிரதான வீதியில் ஏறிய போது சின்னத்தம்பி ஜீப்பை நிறுத்தும்படி கட்டளையிட்டார்.

ஜீப்பிலிருந்து இறங்கி வந்த சின்னத்தம்பி பின்பக்கமாக வந்து, "இறங்குங்கோடா", என்றார். நால்வரும் விழிகள் பிதுங்கக் கீழே இறங்கினர். ஜீப் நின்றதும், கைகள் கட்டப்பட்ட நிலையில் பொன்னம்பலமும் மற்றவர்களும் இறக்கப்பட்டதும் அங்கு நின்ற சனங்கள் ஜீப்பைச் சுற்றிக் கூடி விட்டனர். சின்னத்தம்பியும் மற்றப் பொலிஸ்காரனும் நால்வரையும் பெட்டன் பொல்லாலும், சப்பாத்துக் கால்களாலும் நையப் புடைக்கத் தொடங்கினர். அவர்களின் அலறல் ஆலமரக் கொப்புகளையே நடுங்க வைத்தன.

சிறிது நேரத்தின் பின்பு அடியை நிறுத்தி விட்டு சின்னத்தம்பி சொன்னார், "இந்த நாலு நாயளும் இவங்கடை சொந்தக்காரப் பொடியனையே விடியப்பிறம் வெளிக்குப் போன நேரம் சுட்டுக் கொலை செய்திருக்கிறாங்கள்", என்றார்.

அனைவரும் ஒருவரை பார்த்துக் கொண்டனர். அவர்களால் சிங்கனைப் பொன்னம்பலம் சுட்டிருப்பான் என்பதை ஜீரணிக்க முடியவில்லை. சின்னத்தம்பி மீண்டும் சொன்னார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எத்தினை பெரிய அப்புக்காத்தை இவங்கள் வைச்சாலும், நான் இவங்களைத் தூக்குக்கு அனுப்பாமல் விடுறேல்லை”

எல்லோரும் ஒருவித மிரட்சியுடன் அவரைப் பார்த்தார்கள். அவர் வழக்கு எழுதினால் குற்றவாளிகள் தப்ப முடியாது என்பதை அவர்கள் ஏற்கனவே கேள்விப்பட்டிருந்தனர்.

“எழும்புங்கோடா”, என்று விட்டு சின்னத்தம்பி ஒவ்வொருவருக்கும் கொடுத்த உதையில் நால்வரும் ஜீப்புக்குள் போய் விழுந்தனர்.

சின்னத்தம்பி பின்பு விதானையார் பக்கம் திரும்பி, “ஐயா... நீங்கள் நடந்த இடத்துக்குப் போங்கோ. அங்கை உங்களைத் தேவைப்படும். நான் இவங்களைக் கொண்டு போய் கவனிக்கிறவிதமாய் கவனிக்கிறன்”, என்று விட்டு சந்தியில் நின்ற கார்க்காரனைக் கூப்பிட்டு “ஐயாவைக் கொண்டு போய் விடு” என்றார்.

ஜீப் புறப்பட்டது.

கார்க்காரன் ஆலடிவெட்டையைச் சேர்ந்தவன் என்றபடியால் மணியாறன்மூலைக்குப் போகப் பயப்பட்டான். விதானையார் சிரித்தவாறே, “நான் இருக்க உனக்கென்ன பயம்?” என்று விட்டு காரில் ஏறினார்.

அன்று இளையவன் கள்ளுச் சீவி வர பத்து மணியாகி விட்டது. சொர்ணம் மட்டுமன்றி வீட்டிலுள்ள அனைவருமே அவனைப் பரபரப்புடன் எதிர்பார்த்திருந்தனர்.

இளையவன் சங்கடப்படலையைத் தாண்டி முற்றத்துக்கு வந்ததுமே சீதேவிப்பாட்டி, கனகாம்பிகை, சொர்ணம் ஆகிய அனைவரும் அவனைச் சூழ்ந்து விட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதேவிப்பாட்டி ஆவலுடன், "என்னடா? என்ன நடந்தது?" எனக் கேட்டாள்.

இளையவன் ஒரு பெருமூச்சுடன், "பொன்னம்பலம் ஆக்கள் தான் சுட்டவங்கள் எண்டு பொலிஸ் பிடிச்சுக் கொண்டு போட்டுதாம்", என்றான்.

"மலைமாதிரிப் பொடியன் அவனைச் சுட அந்த பாழ்படுவாருக்கு மனம் வந்தது தானே", என ஆதங்கப்பட்டாள் சீதேவிப்பாட்டி.

"அவன் மணியாறன்மூலையுக்கை கலியாணம் செய்தது பிடிக்கேல்லை எண்டால் அவனைக் கழிச்சு விடுறதுக்கு கொலை செய்யிற அளவுக்குப் போறதே", என்றாள் கனகாம்பிகை. அவளின் மனதில் விதானையாருக்கும் சின்னனுக்குமிடையிலான தொடர்பு நினைவுக்கு வந்து போனது.

"சரி இனி என்னத்தைத் தான் செய்யிறது. போன உயிர் திரும்பியே வரப் போகுதே", எனச் சொல்லி விட்டு பாட்டி அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

இளையவன் வீட்டைச் சுற்றிக் கொண்டு வருவதற்கிடையில் சொர்ணம் வீட்டின் முன்பக்கமாக உட் சென்று பின் கதவால் வெளியே வந்தாள்.

அவள் இளையவனை மறித்து, "கமலி என்ன செய்யுறாள்?", எனக் கேட்டாள்.

இளையவன் சொர்ணத்தின் முகத்தை ஒரு முறை பார்த்துவிட்டு, "என்ன செய்யிறது.... காலமை குளறத் தொடங்கினவள் தொண்டை கட்டியும் இன்னும் நிப்பாட்டேல்லை", என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம்... இரண்டு நாளிலை அவளின்ரை வாழ்க்கை முடிஞ்சு போச்சுது. பாவம்... என்ன தான் செய்யப் போறாளோ?", என்றாள் கவலையுடன் சொர்ணம்.

"சாதித் தடிப்புக்கு ஒரு முதல் பலி எடுத்திட்டாங்கள்", என்று விட்டு பனையை நோக்கி நடந்தான் இளையவன்.

'முதல்பலி' என்ற வார்த்தை சொர்ணத்தின் இதயத்தை ஏனோ குத்தியது போலிருந்தது. அடுத்த பலி இளையவனாய் இருக்குமோ என்ற கேள்வி அவளுள் எழுந்த போது அவளின் உடல் ஒரு முறை சில்லிட்டது, "நிச்சயமாக அப்பிடி இருக்காது", என தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள் அவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 17

மரண விசாரணை, பிரேத பரிசோதனை எல்லாம் முடிந்து சிங்கனின் உடலை பொன்னுக்குட்டியின் வீட்டிற்குக் கொண்டுவர நேரம் பதினொரு மணியாகிவிட்டது.

அதற்கிடையில் மணியாறன்மூலை இளைஞர்கள் வீட்டுக்கு முன்னால் பச்சைத் தென்னோலை பின்னி தட்டைப் பந்தல் போட்டு எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டிருந்தனர்.

சிங்கனின் உடலைக் குளிப்பாட்டி புதிய ஆடைகள் உடுத்தி பந்தலின் நடுவே ஒரு மரவாங்கிலில் கிடத்தியிருந்தனர். இறந்த பின்பும் கூட அவனின் கம்பீரமான முகச் செந்தழிப்பு எள்ளளவும் குறைவுபடவில்லை. அவனின் கால்மாட்டில் ஒரு புறம் கமலியும் மறுபுறம் சிங்கனின் தாய் பார்வதியும் கதறிக் கொண்டிருந்தனர். முற்றத்தில் மணியாறன்மூலைப் பெண்கள் ஒப்பாரி சொல்லிக் கட்டியழுது கொண்டிருந்தனர்.

விதானையார் பிரேதத்தின் அருகில் வந்த போது ஒருபுறம் கமலியும் மறுபுறம் பார்வதியும் இருந்து அலறிக் கொண்டிருந்த காட்சி அவருக்கு தாய்ப்பாசம் சாதிவெறியை வெற்றி கொண்டு விட்டதை வெளிப்படுத்தியது. எனினும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கனின் தாய் விதானையாரைக் கண்டதும் அழுகையை நிறுத்தி விட்டு அவள் வெளியிட்ட வார்த்தைகள் இன்னும் அவள் நெஞ்சுக்குள் சாதி உறைந்து போயிருப்பதைக் காட்டியது.

"விதானையாரையா! என்ரை பிள்ளையை எங்கடை சுடலையிலை தான் எரிக்க வேணும்"

பார்வதியின் ஆவேசமான வார்த்தைகள் ஒரு முறை விதானையாரை அதிரவைத்தன. அதன் விளைவுகள் எப்படியிருக்கும் என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். ஆனால் ஒரு தாய் தன் மகனின் உடல் தாழ்த்தப்பட்ட மக்களின் சுடலையில் எரியக் கூடாது என விரும்புவதை அவரால் உடனடியாக நிராகரிக்க முடியவில்லை.

விதானையார், "பாப்பம்... நீ சும்மா குழப்பங்களை உண்டாக்காமல் இரு பாப்பம்", என்று விட்டு வெளியே போனார்.

"நான் கடைசி மட்டும் விடன்", எனப் பார்வதி கத்தியது அவரின் காதில் விழுந்தது.

பந்தல் கப்புடன் சோர்ந்து போய் அமர்ந்திருந்த பொன்னுக்குட்டி விதானையாரைக் கண்டதும் எழுந்து அவரருகில் வந்தான். விதானையார் அவனைப்பார்த்து, "என்ன மாதிரி பிரேதத்தைத் தங்கடை சுடலையிலை தான் எரிக்க வேணுமாம்?" என்றார்.

பொன்னுக்குட்டி விதானையாரின் முகத்தைப் பார்த்து விட்டு சொன்னான், "நானும் அப்பிடித்தான் யோசிக்கிறன். இதோடையெண்டாலும் சாதிக்கு ஒரு சுடலை எண்டது இல்லாமல் போகட்டும்"

பார்வதி, பொன்னுக்குட்டி ஆகிய இருவரும் வெவ்வேறு நோக்கங்களுடன் சொன்னாலும் விஷயம் ஒன்றாக இருப்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானையார் புரிந்து கொண்டார். ஒரு கலியாணத்துக்காக சிங்கனைத் தாழ்த்தப்பட்டவனாக்கி விட அவரின் மனமும் இடம் தரவில்லை.

"இதனாலை எவ்வளவு பெரிய கலகம் வருமெண்டு தெரியுமே?"

"தெரியும்... வரவும் வேணும்... அப்பத்தான் இந்தப் பொன்னுக்குட்டி ஆரெண்டு அவங்களுக்கு விளங்கும்"

விதானையார் அதட்டினார், "நிப்பாட்டு கதையை! எனக்குத் தெரியும் என்ன செய்ய வேணுமெண்டு.. விளங்குதே...?"

பொன்னுக்குட்டி தலையைக் குனிந்து கொண்டான். அவனின் கைகள் நடுங்கியதிலிருந்து அவன் கோபத்தைச் சிரமப்பட்டு அடக்குகிறான் என்பதை விதானையார் புரிந்து கொண்டார்.

அவர் தொடர்ந்தார். "நீங்கள் அவங்கடை சுடலையிலையே கொண்டு போய் எரியுங்கோ நான் பொலிஸ் காவல் போட்டு விடுறன் - ஒண்டும் நடவாது.... சரியே...?"

அவன் திருப்தியடைந்திருக்க வேண்டும், "சரி", எனத் தலையாட்டினான். விதானையார் போய் காரில் ஏறிக் கொண்டார்.

விதானையார் வீட்டில் போய் இறங்கியதுமே சீதேவிப்பாட்டி தொடங்கிவிட்டாள், "வெறும் வயித்தோடை ஊர் அலுவல் பார்த்துக் கொண்டு திரியிறாய். போய் தோஞ்சு போட்டு வந்து சாப்பிடு"

"ஓ...ஓ... வீட்டை வரத்தான் பசியெழும்புது!", என்ற விதானையார், "பிள்ளை இஞ்சை வா... ஒரு மூண்டு வாளி தண்ணி தலைக்கு ஊத்தி விடு", என சொர்ணத்தைக் கூப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியே அவர் வந்த உடுப்புடனேயே பத்தலுக்குள் குந்த சொர்ணம் அவருக்கு மூன்று வாளிகள் வார்த்து விட்டாள். செத்த வீட்டுத் துடக்குடன் வீட்டுக்குள் போகவோ, கிணற்றில் அள்ளவோ முடியாது. ஆனால் மூன்று வாளிகள் தலையில் ஊற்றிவிட்டால் துடக்கு போய்விடும் என்பது அவர்களின் நம்பிக்கை.

விதானையார் குளித்து முடிய மணியத்தின் கார் வந்து விட்டது. சீதேவிப்பாட்டி இருவருக்கும் சாப்பாட்டைப் போட்டுக் கொடுத்தாள். மணியமும் காலை தொடக்கம் சிவ பட்டினிதான். விதானையார் சாப்பிட்டு முடிந்து ஒரு சுருட்டைப் பற்றி விட்டு மீண்டும் பருத்துறைப் பொலிஸ் நிலையம் நோக்கிப் புறப்பட்டார்.

சார்ஜண்ட் சின்னத்தம்பியின் உருவமும் அவரது மீசையுயும் எவருக்கும் ஒரு பயணத்தை ஏற்படுத்தி விடும். அவரின் அடிகளும் சப்பாத்துக்கால் உதையும் மிகவும் பிரசித்தி பெற்றவை.

ஆனால் அவற்றால் இலகுவாக பொன்னம்பலம் குழுவினரிடம் உண்மையைக் கறக்க முடியவில்லை. ஆனால் அவரின் கடைசி மந்திராயுதம் எந்த மன உறுதி படைத்தவனையும் பணிய வைத்துவிடும். அது சம்பந்தப்பட்டவனை வாங்கிலில் குப்புறப்படுத்தி விட்டு இரு குதிக்கால்களிலும் பெட்டன் பொல்லுகளால் மாறி மாறி அடிப்பது தான் அந்த மந்திராயும், ஒவ்வொரு அடிக்கும் மூளைக்குள் மின்சாரம் பாயும்.

அந்த அடியுடன் பொன்னம்பலம் சிங்கனைச் சுட்ட இரட்டைக்குழல் துவக்கு தனது அடுக்கணைப் பரணில் உரப்பையில் கட்டி ஒளித்து வைத்த உண்மையைச் சொல்லி விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானையார் பொலிஸ் நிலையத்தை அடைந்த போது தான் சார்ஜண்ட் சின்னத்தம்பியும் பொன்னம்பலமும் ஜீப்பில் வந்து இறங்கினர்.

பொன்னம்பலத்தின் தோளில் கரிபடிந்த உரப்பை இருந்தது. அவன் நொண்டி நொண்டி நடக்க முடியாமல் நடந்த போது குதிக்கால் பூசை நடந்ததை விதானையார் புரிந்து கொண்டார்.

துவக்குப் பையை பொன்னம்பலம் ஒரு கரையாக வைத்தான். சின்னத்தம்பியின் ஒரு உதையில் 'லொக் அப்புக்குள்' போய் தலையடிபட விழுந்தான் அவன்.

விதானையாருக்கு சின்னத்தம்பி முழு விஷயங்களையும் சொல்லி முடித்தார். இரவு நால்வரும் நெல்லியடி மகாத்மா தியேட்டரில் இரண்டாவது ஆட்டம் சினிமா பார்த்து விட்டு விடியும் வரை வடலியடைப்பு காணியில் காவலிருந்து சிங்கன் வரும் போது சுட்டதாக சின்னத்தம்பி விளங்கப்படுத்தினார்.

விதானையார் எழுந்து போய் பொன்னம்பலத்திடம் கேட்டார், "டேய் உன்ரை சாதிக்காரனையே சுட என்னண்டடா உனக்கு மனம் வந்தது?"

பொன்னம்பலம் மெல்ல முணு முணுத்தான், "எங்கடை சாதியின்ரை மானத்தையே வித்துப் போட்டான்"

விதானையாரைப் பார்த்து சின்னத்தம்பி சொன்னார், "பாருங்கோ விதானையார்! தூக்குக்குப் போகப்போறது தெரிஞ்சும் திமிர் அடங்கேல்லை"

"ம்....", என்று விட்டு விதானையார் சிங்கனின் பிரேதத்தை ஆலடிவெட்டையாரின் சுடலையில் எரிக்கப் போகும் விஷயத்தைக் கூறி பொலிஸ் பாதுகாப்புக் கோரினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடியாகவே சின்னத்தம்பி நாலு பொலிஸ்காரரை அழைத்துப் போகும் படி கூறியதுடன், பிரேதம் எரித்து வீடு வந்து சேரும் வரையில் நின்று வரும்படி கட்டளையிட்டார். அவர்களும் உற்சாகத்துடன் புறப்பட்டனர். அன்று முழுக்க நல்ல பனங்கள்ளு மணியாறன்மூலையில் வழங்குவார்கள் என்ற நம்பிக்கை தான் அவர்களின் உற்சாகத்திற்குக் காரணம்.

சிங்கனின் நண்பர்களான சிவஞானம், கனகரத்தினம், சோமு ஆகியோரும் இன்னும் சில இளைஞர்களும் வாசிகசாலையின் முன்னால் நின்ற வேப்பமரத்தின் கீழ் குவிக்கப்பட்ட மணலில் அமர்ந்து கடுமையான ஆலோசனையில் ஈடுபட்டிருந்தனர். சிங்கனை இழந்த சோகம் அனைவர் முகங்களிலும் கவ்விப் போயிருந்தது. கனகசபையையும், சிவஞானத்தையும் பொறுத்தவரையில் அவர்கள் சிங்கனின் காதலுக்கு ஊக்கமும், உற்சாகமும் கொடுத்து பலவிதங்களிலும் உதவி புரிந்தவர்கள். சிங்கன் கமலியை நெல்லியடிக்கு வரும்படி கூறி விட்டு இருவரும் லக்ஷ்மி தியேட்டரில் மெட்னி சோ பார்க்கும் போது இவர்களும் அவர்களுக்குத் துணையாகப் போவதுண்டு.

கனகரத்தினம் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பிரிவில் கடைசி ஆண்டு படித்தாலும் கூட லீவுக்கு வரும் போது நண்பர்களுடன் தோட்டத்தில் இறங்கி விடுவான். வாசிகசாலை கட்டியது, பிள்ளையளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது, கிரிக்கட், உதைபந்தாட்டக் குழுக்களை அமைத்தமை போன்ற பொது விஷயங்களில் அவனே முன்னின்று உழைப்பான்.

இப்போ சிங்கனின் செத்த வீட்டுக்குப் போவதா விடுவதா என்ற குழப்பத்தில் அவர்கள் முடிவெடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தனர். நண்பனின் இறுதிக் கிரியைகளில் கலந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளாமல் இருக்கவும் மனம் ஒப்பவில்லை. சிங்கனின் கொலையால் ஆத்திரமடைந்துள்ள மணியாறன்மூலையார் விஷயம் விளங்காமல் தங்கள் மேல் பழிவாங்க வந்தால் பிரச்சினை வேறு விதமாக மாறிவிடுமே என்ற பயமும் ஏற்பட்டிருந்தது.

அங்கு நிலவிய நீண்ட அமைதியைக் குலைத்துக் கொண்டு கனகரத்தினம் சொன்னான் "மச்சான், நடக்கிறது நடக்கட்டும், செத்தவீட்டுக்குப் போவம். அடிச்சால் அடியை வேண்டிப் போட்டு விளங்கப்படுத்துவம்."

ஒருவன் திடீரென்று கேட்டான், "அடியோடை விட்டால் பரவாயில்லை. பாளைக் கத்தியைத் தூக்கினால் என்ன செய்யுறது?"

சிவஞானம் இடை மறித்து, "அதுக்கும் ஒரு வழி இருக்குது", என்றான்.

"என்னது?"

"தம்பிப்பிள்ளை விதானையார் வீட்டை போய் அவரட்டை விஷயத்தை சொல்லி எங்களைக் கூட்டிக் கொண்டு போகச் சொல்லிக் கேட்பம்", சிவஞானம் சொல்லி விட்டு, அனைவரின் முகத்தையும் பார்த்தான். சுந்தரம் குறுக்கிட்டான், "அவர் என்ன கொம்பே! அவர் தேவையில்லை…நாங்கள் போவம்", அவனுக்கு விதானையார் தம்பியனின் காதைப்பிடித்து தோப்புக் கரணம் போட வைத்த கோபம் மனதில் இன்னும் நிலை பெற்றிருந்து.

கனகலிங்கம் கேலியாகக் கேட்டான், "விதானை இல்லாட்டில் இன்னொருக்கால் தம்பியனோடை கொழுவிப் பார்க்கலாம் எண்டு யோசிக்கிறாய்… என்ன?"

"அப்பிடியில்லையண்ணை?", என சமாளித்தான் அவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மணற்குவியலை விட்டு எழுந்த போது காசிலிங்கம் முதலாளியின் கார் வேகமாக வந்து அவர்களின் அருகில் நின்றது.

அவர் இறங்கிக் கதவை அடித்துச் சாத்தும் விதத்தில் அவர் மிகவும் கோபமான நிலையில் இருக்கிறார் என்பதை இளைஞர்கள் புரிந்து கொண்டனர்.

"டேய்... நீங்களெல்லாம் இளந்தாரியள் எண்டு என்ன பிரியோசனம்?", கனகரத்தினம் நிதானமாகக் கேட்டான், "ஏன் முதலாளி என்ன பிரச்சினை?

"பிரச்சினையோ.. பிரச்சினை தலைக்கு மேலை போட்டுது. சிங்கன்ரை பிரேதத்தை எங்கடை சுடலையிலை எரிக்கப் போறாங்களாம்!....", கனகரத்தினம் இளைஞர்களை ஒரு முறை பார்த்துவிட்டு, "அதிலை என்ன பிழை? சிங்கன் எங்கடை சாதிக்காரன் தானே...", என்றான்.

"அறிவு கெட்டவனே! எரிக்கிறது அவர்களல்லே?", முதலாளி படபடத்தார்.

"ஆர் எரிச்சாலும் எரியுறது எங்கடை பிரேதம் தானே முதலாளி! இப்ப நாங்கள் போய் தான் பிரேதம் தூக்கப் போறம். சிங்கன்ரை பிரேதத்தை நாங்கள் தூக்காமல் வேறை ஆர் தூக்கிறது?", கனகலிங்கம் அழுத்தமாகச் சொன்னான்.

காசிலிங்கம் கோபத்தின் உச்சிக்கே போய் விட்டார். "உதுக்கே கொப்பர் உன்னைக் கண்டியில விட்டுப் படிப்பிக்கிறார்?"

சிவஞானத்திற்கும் மெல்லிய சினம் வந்து விட்டது. "இதுக்கேன் முதலாளி படிப்பு! நல்ல மனம் இருந்தால் போதும்"

காசிலிங்கம் முறுகினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ரோசம் கெட்டதுகள்! சாதி மானம் விளங்காத சனியன்கள்”, என்று விட்டு காரில் ஏறிக் கதவை அடித்துச் சாத்தினார். பின்பு யன்னலுக்கால் எட்டிப்பார்த்தவாறே, “டேய்... பிரேதம் சுடலையுக்கை இறங்க முதல் மணியாறன் மூலையாரிலை நாலு பிரேதம் விழும்! தெரிஞ்சு கொள்ளுங்கோ”, என்றார்.

கார் வேகமாகக் கிளம்பிப் போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 18

காசிப்பிள்ளை முதலாளியின் சவாலும் அவர் காரின் கதவைக் கோபமாக அடித்துச் சாத்தி விட்டு புறப்பட்ட விதமும் அங்கு நின்ற இளைஞர்களைத் திகைக்க வைத்து விட்டன.

ஆனால் கனகரத்தினம் மட்டும் ஒருமுறை மெல்லப் புன்னகைத்தான். அவனின் முகத்தில் ஒரு அலட்சியம் இழையோடியது. சிவஞானம் மெல்லக் கேட்டான், "என்ன மச்சான் சிரிக்கிறாய்? காசியர் எப்படிப்பட்ட நஞ்சன் எண்டு தெரியும் தானே...?,

"தெரியும்", என்று சொல்லி இடை நிறுத்தி விட்டுப் பின் தொடர்ந்தான் கனகரத்தினம், "முள்ளை முள்ளாலை தான் எடுக்க வேணும். இவர் எந்தச் சாதித் தடிப்பை வைச்சு எங்கடை ஆக்களை சேர்க்க நினைக்கிறாரோ அதை வைச்சே நாங்கள் அதைக் குழப்ப வேணும்"

சுந்தரம் வியப்புடன் கேட்டான், "என்னண்டு?"

"சிங்கன் எங்கடை சாதிக்காரன்... என்னண்டு மணியாறன்மூலையாரின்ரை சுடலையிலை அவன்ரை பிரேதத்தை எரிக்கிறது. அது எங்கடை சுடலையிலை தான் எரிக்கவேணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டு எங்கடை ஆக்களிட்டை விளங்கப்படுத்த வேணும்''. சிவஞானத்திற்கு அந்த யோசனை சரியாகவே பட்டது. ஆனால் அவ்விஷயத்தில் தோல்வியடைந்தால் காசிப்பிள்ளை சும்மா இருப்பார் என அவன் நம்பவில்லை.

''அது சரி... ஆனால் அவர் அச்சுவேலி, சங்கானைப் பக்கத்திலையிருந்து ஆக்களைக் கொண்டு வந்தால்...?''

கனகரத்தினம் சொன்னான் ''அச்சுவேலி தவராசண்ணையின்ரை தங்கச்சி என்னோடை தான் பேராதனையிலை படிக்கிறாள். நான் இப்பவே ஒரு காரைப் பிடிச்சுக் கொண்டு போய் அவளோடை கதைச்சு தவராசண்ணைக்கு விஷயத்தை விளங்கப்படுத்திறன்... தவராசண்ணை மிஞ்சி அச்சுவேலிக்காரர் ஒருதரம் வரப் போறதில்லை''

''அது நல்ல யோசினை தான்'', என ஆமோதித்தான் சிவஞானம்.

''சரி... நான் வெளிக்கிடுறன் நீங்கள் போய் எங்கடை முக்கியமான ஆக்களைச் சந்திச்சு கதைச்சுப் போட்டு நேரை சுடலைக்கு வாருங்கோ'', என்று விட்டுப் புறப்பட்டவன், "எதுக்கும் விதானையாரிட்டையும் முழு விஷயத்தை விளங்கப்படுத்திறன்.. தவராசண்ணையை மிஞ்சி அச்சுவேலிக்காரர் ஒருதரும் வரப் போறதில்லை'' என்றான்.

பொன்னுக்குட்டியும் ஆலடிவெட்டையாரின் சுடலையில் சிங்கனின் பிரேதத்தை எரித்தால் நிச்சயம் பிரச்சினை வரும் என எதிர்பார்த்தார். எனவே அவர் இரகசியமாக இளைஞர்களை அழைத்து கொட்டன்கள், கத்திகள் என்பவற்றை சுடலைக்கு அருகில் உள்ள பற்றைகளுக்குள் மறைத்து வைக்க ஏற்பாடு செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானமும் ஆலடிவெட்டை இளைஞர்களும் அங்கு வந்த போது ஒரு சிறிய சலசலப்பு ஏற்பட்டது. தம்பியன் இடுப்பைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். வில்லுக்கத்தி இடுப்பில் இருப்பதை ஒரு முறை ஊர்ஜிதம் செய்து கொண்டான்.

பொன்னுக்குட்டி முன்னால் போய் சிவஞானத்திடம், "என்ன அலுவல்?", என்றார் முறாய்ப்புடன். சிவஞானம் சிங்கனுடன் சிலதடவைகள் பொன்னுக்குட்டி வீட்டுக்கு வந்து போயிருந்த போதிலும் அன்றைய நிலையில் அவனின் வரவு சந்தேகத்தையே ஏற்படுத்தியது.

"சிங்கண்ணன்ரை முகத்தை கடைசியாய் ஒரு முறை பார்த்துப் போட்டு போவம் எண்டு வந்தம்", எனச் சோகமாகச் சொன்னான். அவன் சொன்ன விதம் பொன்னுக்குட்டியின் சந்தேகத்தையும் கோபத்தையும் மழுங்கடித்து விட்டது. "போங்கோ.. போய் உங்கடை ஆக்கள் செய்த கெட்டித்தனத்தைப் பார்த்து விட்டு வாங்கோ", என்றார் பொன்னுக்குட்டி.

தலைமாட்டில் குத்து விளக்கு எரிய சாம்பிராணிக்குச்சி வாசனையில் சிங்கனின் பிரேதம் கிடத்தப்பட்டிருந்ததைக் கண்டதும் சுந்தரம் குளறி அழ ஆரம்பித்து விட்டான். சிவஞானத்துக்கும் அவனையறியாமலே கண்கள் நீரைக் கக்க ஆரம்பித்தன.

கமலி சிவஞானத்தைக் கண்டதும், "பாத்தியே சிவஞானம் உன்ரை கூட்டாளின்ரை நிலைமையை?", எனக் கதற ஆரம்பித்து விட்டாள். சிங்கனின் காதலுக்கு எல்லாவித உதவிகளையும் செய்து ஊக்குவித்த சிவஞானத்தால் எப்படித்தான் அவளுக்கு ஆறுதல் சொல்ல முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவாறு சிவஞானமும் சிநேகிதர்களும் சுதாகரித்துக் கொண்டு வெளியே வர பனை நிழலில் ஒதுங்கி நின்ற இளையவன் அவர்கள் அருகில் வந்தான்.

சிவஞானம் உறுதியான ஒரு முடிவுக்கு வந்தவனாகச் சொன்னான், "இளையவன் சிங்கண்ணனின்ரை பிரேதம் நாங்கள் இரண்டு பகுதியும் சேர்ந்து தான் காவ வேணும்?

"ஒரு பக்கம் நீங்கள் பிடியுங்கோ... மற்றப்பக்கம் நாங்கள் பிடிக்கிறம்"

இளையவன் திகைத்துப் போய் விட்டான். பின் அவன் மெல்லக் கேட்டான், "பிறகு பிரச்சினை வராதே?"

"வராது.. அப்பிடி வந்தால் இரண்டு பகுதியும் சேர்ந்து முகம் குடுப்பம். இந்தச் சாதி வெறி சிங்கண்ணன்ரை சாவோடை அழிஞ்சு போகட்டும்... நீ போய் உங்கடை ஆக்களட்டை கதை"

இளையவன் போய் விஷயத்தைச் சொன்ன போது மணியாறன்மூலை இளைஞர்கள் உடனடியாகவே சம்மதித்து விட்டனர். ஆனால் பெரியவர்கள் சற்றுத் தயக்கம் காட்டினர்.

வல்லியப்பு நேராக சிவஞானத்திடமே வந்து விட்டார், "தம்பி! எங்கடை சனங்களை கலைக்கிறதெண்டு முடிவு எடுத்திட்டியளே?"

சிவஞானத்திற்கு மெல்லிய கோபம் வந்து விட்டது., "பின்னை சாகிற மட்டும் கமக்கட்டுக்கை சால்வை வைச்சுக் கொண்டு திரியப் போறியளே?"

வல்லி மெல்ல இழுத்தார், "விதானையார் என்ன சொல்லுறாரோ தெரியாது..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதை நாங்கள் பார்க்கிறம்!", என்றான் சிவஞானம் உறுதியுடன். சவக்கிரியைகள் முடிந்து பிரேதம் தூக்க ஆயித்தங்கள் நடந்த போது விதானையார் வந்தார். அவர் ஏற்கனவே தோய்ந்து துடக்கு கழித்து விட்டதால் காரை விட்டு இறங்கவில்லை. அவர் காரில் அமர்ந்தவாறே பொன்னுக்குட்டியை அழைத்து, "நாங்கள் முன்னாலை சுடலைக்குப் போறம் கெதியாய்க் கொண்டு வாங்கோ", என்று விட்டு காவலுக்கு வந்த பொலிஸ்காரரையும் ஏற்றிக் கொண்டு புறப்பட்டார்.

அவர் சுடலையைச் சென்றடைந்த போது கனகரத்தினம் அங்கு நின்றது அவருக்கு ஒரு மெல்லிய சந்தேகத்தை மூட்டியது.

அவர் அவனை அருகில் அழைத்தார்.

அவனும் ஒரு மெல்லிய புன்னகையுடன் அவருக்கருகில் வந்தான்.

"என்ன இஞ்சை நிக்கிறாய்....?"

கனகரத்தினம் ஒரு பெருமூச்சுடன் சொன்னான், "கடைசியாய் சிங்கன்ரை முகத்தை ஒருக்கால் பாப்பம்"

அவன் தீய நோக்கத்துடன் வரவில்லை என்பதை அவர் புரிந்து கொண்ட போதிலும், எதற்கும் முன்னெச்சரிக்கையுடன் அவனைத் தன்னருகிலேயே வைத்திருப்பது என முடிவு செய்து கொண்டார்.

பிரேதம் சுடலையடிக்கு வந்த போது விதானையார் மட்டுமின்றி கனகரத்தினமும் திகைத்து விட்டான். ஒரு புறம் மணியாறன்மூலை இளைஞர்களும், மறுபுறம் ஆலடிவெட்டை இளைஞர்களும் பிரேதத்தைக் காவிக் கொண்டு வந்தனர்.

எந்தச் சாதியமைப்பு தகர்ந்து விடக்கூடாது என்பதற்காக அவர் இரு சாதிகளுக்கும் மோதல் வராமல் தன் ஆற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதையும் பயன்படுத்தினாரோ அந்தச் சண்டை வராமலே சாதிக் கட்டுக்கோப்பு உடைவதற்கான கதவு திறந்து விட்டதை அவர் புரிந்து கொண்டார். மெல்ல முகம் ஓடிக் கறுத்தது.

"தம்பி... டேய்.. என்னடா.. உங்கடை பொடியள் செய்யிற வேலை?", என மெல்லக் கேட்டார் விதானையார்.

"ம் காலம் மாறிக் கொண்டு வருகுது.. இனி நாங்கள் இப்படியான விஷயங்களைத் தடுக்க ஏலாது"

"இருக்கலாம்.. சிங்களைத் துவக்கெடுத்துச் சுட்ட உங்கடை ஆக்கள் இவங்களை விடுவாங்களே.. நாளைக்கு மணியாறன்மூலையார் கூடி உங்களை மதிப்பாங்களே..", விதானையார் மெல்லிய படபடப்புடன் கேட்டார்.

"ஐயா... எங்கடை ஆக்கள் செய்யுறதைச் செய்யட்டும். இரண்டு சாதியள் ஒண்டோடை ஒண்டு அடிபடுறதை விட ஒரு சாதியுக்கை அடிபடுவம்"

விதானையார் எதுவும் பேசவில்லை. பேராதனைப் பல்கலைக்கழகம் அவனைக் கெடுத்து விட்டதாக எண்ணிக் கொண்டார். ஆனால் தனக்குள் இந்தச் சாதிக் கட்டமைப்பைத் தகர்க்கும் முனைப்புகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது என முடிவு செய்து கொண்டார்.

கமலி வீட்டில் வைத்துக் கொள்ளியை மூட்டிக் கொடுக்க பொன்னுக்குட்டியே சுடலையில் முறைப்படி பிரேதத்தைச் சுற்றி வந்து கொள்ளிக் குடம் உடைத்துக் கொள்ளி வைத்தார்.

இவற்றையெல்லாம் பார்த்த போது விதானையாரின் மனசில் ஏதோ ஒருவிதமான உறுத்தல் நெருடிய போதும் அவர் எதுவுமே பேசவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடலையில் எவ்வித அசம்பாவிதங்களுமின்றி எல்லாக் காரியங்களும் முறைப்படி நடந்து முடிந்தன.

விதானையார் வீட்டில் வந்து இறங்கிய போது அவரின் வருகைக்காக காசிப்பிள்ளை காத்திருந்தார்.

விதானையார் வீட்டிக்குள் வந்த போதே, "என்ன காசி இண்டைக்கு ஏதோ சுடலையிலை அஞ்சாறு பேரை விழுத்தாமல் விடுறதில்லை எண்டு துள்ளினியாம் ஒண்டையும் காணவில்லை?", என்றார்.

காசிப்பிள்ளை தலையைக் குனிந்தவாறே ஒரு பெருமூச்சுடன், "அது தான் துணிஞ்சு உதுகளிலை இறங்கக் கூடிய பொன்னம்பலத்தையும், இராமலிங்கத்தையும் பிடிச்சு அடைச்சுப் போட்டியள்", என்றார்.

"பின்னை உங்கடை பொடியன் ஒருதனை நீங்களே சுட்டதுக்கு உங்களைத் தலையிலை வைச்சு ஆடுறதோ?"

காசிப்பிள்ளை எதுவுமே பேசவில்லை.

விதானையார் தொடர்ந்தார், "டேய்... சாதி அமைப்பு உடையாமல் இருக்க வேணுமெண்டால் சண்டை வரக்கூடாது. சண்டை எண்டு வந்தால் அவங்களும் உங்களுக்கு எதிராகக் கை ஓங்கிப் போட்டால் தோற்றாலும் வெண்டாலும் அவங்கள் துணிஞ்சிடுவாங்கள்"

காலங் காலமாக எப்படி இந்த நிலப்பிரபுத்துவக் கூட்டம் சாதியமைப்பைச் சிதைய விடாது பாதுகாக்கிறது என்பது காசிப்பிள்ளைக்கு இப்போது மெல்ல மெல்ல புரிய ஆரம்பித்தது.

"நீ செய்த மோட்டு வேலையாலை உங்கடை சுடலையிலை அவங்கள் பிரேதம் எரிச்சிருக்கிறாங்கள். நானும் மறிக்க ஏலாது ஏனெண்டால் பிரேதம் உங்கடை பிரேதம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கடை பொடியன்களும் அவங்களும் ஓண்டாய் பிரேதம் தூக்கியிருக்கிறாங்கள்".

அதிர்ச்சியுடன் கேட்டார் காசிப்பிள்ளை, "என்ன அவங்களோடை சேர்த்து எங்கடை பொடியளும் பிரேதம் தூக்கினவங்களே?"

"சிங்கன்ரை பிரேதத்தை அவன்ரை சிநேகிதப் பொடியள் தூக்கிறதை ஆரும் தடுக்க ஏலுமே?", என்ற விதானையார், "இப்படியான விஷயங்களை கெட்டித்தனமாகக் கையாள வேணும்.. போய் வேறை ஏதாவது புதுக்குழப்பம் தொடங்காமல் பேசாமல் இரு. எல்லாம் நான் பாப்பன்", எனக் கூறி முடித்தார்.

ஆலடிவெட்டையாரும், மணியாறன்மூலையாரும் இரு பக்கங்களிலும் நின்று சமமாகத் தோள்கொடுத்தும் பிரேதம் தூக்கினர் என்ற வார்த்தைகள் உள்ளே நின்ற சொர்ணத்தின் காதுகளில் விழுந்தன. வேளாருடனும் அவர்கள் சமனாகும் நாள் வெகு விரைவில் வந்து விடும் போலவே அவளுக்குத் தோன்றியது.

இளையவனை, அவள் நினைத்துக் கொண்டாள். அந்த எண்ணம் ஆயிரமாயிரமாக அவள் மேல் நம்பிக்கை நட்சத்திரமாகி பொழிவது போல் தோன்றியது. ஓடிப் போய் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள். ஏனோ அவளின் முகம் நாணத்தில் சிவந்து கிடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 19

கனகரத்தினமும் - சிவஞானமும் பொன்னுக்குட்டி வீட்டுப் படலையடியில் நின்று அவரைக் கூப்பிட்ட போது வீட்டுக்குள்ளிருந்து கமலி வெளியே வந்தாள். அவர்களைக் கண்டதும் கமலி, "உள்ள வாருங்கோவன்", என்று சொல்லி முடிக்கும் முன்பே அழுகை அவளை ஆட்கொண்டு விட்டது. சிங்கனையும், அவர்களையும் முன்பெல்லாம் ஒன்றாகப் பார்த்த அவளுக்கு சிங்கனின் இல்லாமை நெஞ்சுக்குள் அடக்கி வைத்திருந்த கவலையை வெளியே இழுத்து விட்டது.

அவர்கள் எதுவும் பேசாமலே முற்றத்தில் வேப்ப மரத்தின் கீழ் கிடந்த பனங்குற்றியில் அமர்ந்து கொண்டனர். விம்மியவாறே அவர்களின் அருகில் வந்த அவள் கண்களைத் துடைத்து விட்டு, "அப்பு வெளியிலை போட்டுது... இருங்கோ, வந்திடும்", என்றாள். கனகரத்தினம் மெல்ல நிமிர்ந்து கமலியின் முகத்தைப் பார்த்தான். அவர்கள் அவளின் முகத்தை என்றுமே புன்னகை இல்லாத நிலையில் கண்டதேயில்லை. ஆனால் அன்று அவள் முகம் அளவிட முடியாத சோகத்தில் வரண்டு போய்க் கிடந்தது. ஆனால் அவளின் நெற்றியில் துலங்கிக் கொண்டிருந்த குங்குமம் அவன் முகத்தில் ஆச்சரிய ரேகைகளை ஓட விடத் தவறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனின் பார்வை தன் நெற்றியில் பட்டத்தையும், அவனின் முகத்தில் ஏற்பட்ட சிறு மாற்றத்தையும் அவள் அவதானித்திருக்க வேண்டும்.

அவள் மெல்லிய தளதளத்த குரலில் கேட்டாள், "என்ன கனகு! புருஷன் செத்த பிறகும் நெற்றியிலை குங்குமம் வைச்சிருக்கிறன் எண்டு பார்க்கிறியளே?"

அவர்கள் இருவருமே எதுவும் பேசவில்லை.

அவள் தொடர்ந்தாள் "அவர் எனக்கொரு தலகணி வேண்டித்தந்தவர். அதிலை அவரின்ரை பேரை பூக்களுக்கு நடுவிலை பின்னி வைச்சன். எனக்கு அதிலை தலை வைத்துப்படுக்கயுக்கை அவரின்ரை மடியிலை படுக்கிற உணர்வுதான் வருகுது. எனக்கு அவர் சாகேல்லை. அவர் என்னோடை தான் இருக்கிறார்."

அவள் கூறி முடித்ததும் பலமாக விம்மி அழத் தொடங்கினாள்.

கனகரத்தினம் மெல்ல அவளைச் சமாதானப்படுத்தும் விதத்தில சொன்னான், "அழாதேங்கோ கமலி.. இனி அழுறதில ஒரு பிரயோசமும் இல்லை ஆனால்..." கனகரத்தினம் ஆனால் என்று கூறி விட்டு இடை நிறுத்தியதும் அவள் கண்களைத் துடைத்துவிட்டு அவனின் முகத்தைப் பார்த்தாள்.

"எங்களைப் பொறுத்த வரையிலும் சிங்கண்ணன் சாகேல்லை? அப்படிச் சாகவும் விடமாட்டம்"

கனகரத்தினத்தின் வார்த்தைகளின் அர்த்தத்தை கமலியால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அவள், "நீங்கள் என்ன சொல்லுறியள்?", எனக் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங்கள் எங்கடை விளையாட்டுக் கழகத்துக்கு 'சிங்கன் விளையாட்டுக் கழகம்' எண்டு பேர் வைக்கப் போறம் - அவனின்ரை பேரைச் சொல்லுற ஒவ்வொரு முறையும் அவன் சாதி வேற்றுமைக்கு எதிராக துணிஞ்சு செயற்பட்டதும், அதுக்காக உயிரைக் குடுத்ததும் நினைவுக்கு வரவேணும்"

அப்போது தான் படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்த பொன்னுக்குட்டிக்கும் அந்த வார்த்தைகள் கேட்டிருக்க வேண்டும். அவர் தோளில் சுமந்து வந்த பனை மூரிக் கட்டைக் கீழே போட்டுவிட்டு, "அது நல்ல விஷயம் தான் ஆனால் என்ரை மருமேனை நீங்கள் மட்டும் உரிமை கொண்டாட நான் விடப் போறதில்லை", என்றார் உறுதியாக. "அதைப்பற்றி நாங்கள் முதலே யோசிச்சிட்டம்.. அதைப் பற்றிக் கதைக்கவெண்டு தான் இஞ்சை வந்தனாங்கள்" என்றான் சிவஞானம்.

பொன்னுக்குட்டி சப்பணம் கட்டிக்கொண்டு நிலத்தில் அமர்ந்தவாறாகக் கேட்டார், "என்ன அப்பிடி....?"

கனகரத்தினம், "சிங்கண்ணரின்ரை பேரிலை நீங்கள் இஞ்சை ஒரு வாசிகசாலை துவங்க வேணும். அதிலை இரவிலை பிள்ளையளைக் கூப்பிட்டு பாடம் சொல்லிக் குடுக்க வேணும். அவரின்ரை பேரைச் சொல்லி பிள்ளையள் படிச்சு முன்னேறட்டுமே", என்று விட்டு கமலியின் முகத்தைப் பார்த்தான்.

அவள் உடனடியாகவே, "நானும் முத்துலட்சுமியும் பிள்ளையளுக்குப் பாடம் சொல்லிக் குடுப்பம் தானே", என்றாள்.

பொன்னுக்குட்டிக்கும் அந்த ஆலோசனை நன்றாகவே பிடித்து விட்டது. அவர் சொன்னார், "எங்களட்டைப் பனைதறிக்க, கைமரப் பாச்சுகள் சீவ, தச்சு மேசன் வேலை செய்ய எல்லாத்துக்கும் ஆள் இருக்குது. பத்து நாளிலை வாசிகசாலை எழும்பிவிடும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஓமோம், எங்களுக்கும் அது தான் விருப்பம். சிங்கண்ணரின்ரை அந்தியேட்டி அண்டைக்கு வாசிகசாலை திறக்க வேணும். கட்டிட வேலைக்கு நாங்களும் எங்கடை பொடியளைக் கூட்டி வந்து உதவி செய்கிறம்”

இவற்றையெல்லாம் கேட்க கமலிக்குக் கவலைகள் எல்லாமே பறந்து போய் விடுவது போலவே தோன்றியது. ஆனால் இவற்றைப் பார்க்கச் சிங்கன் இல்லையே என நினைத்த போது தாங்க முடியாத சோகம் மீண்டும் மனதை அழுத்தியது. எனினும் அவன் இறந்து விட்டாலும் அவன் பேர் எப்போதுமே நிலைத்திருக்கும் என நினைத்த போது மனதுள் ஒரு பெருமிதம் எழத்தான் செய்தது.

“சரி நாங்கள் போய் இஞ்சத்தையில் பொடியளோடையும் கதைச்சுப் போட்டு போறம்”, என்று விட்டு எழுந்தனர் இருவரும். பொன்னுக்குட்டியும், கமலியும் படலை மட்டும் வந்து வழியனுப்பி விட்டனர். கமலி, “அடிக்கடி வந்து போங்கோ... உங்களைப் பாத்தாவது, கொஞ்சம் மனம் ஆறும்”, என்றாள்.

“ஓமோம் கட்டாயம் வருவம்”, என்று சிவஞானம் சொல்லி விட்டு இருவரும் சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்படத் தயாராகினர்.

சிங்கன் இறந்து விட்டபோதிலும் அவனை மீண்டும் வாழ வைக்கப் பாடுபடும் அவனின் நண்பர்களை நெஞ்சு நிறைந்த நன்றியுடன் வழியனுப்பி வைத்தாள் கமலி.

பூசாரி சின்னியப்பனிடம் இளையவனும், சில மணியாறன்மூலையைச் சேர்ந்த இளைஞர்களும் போய் வாசிகசாலை அமைக்கும் விஷயம் பற்றிக் கதைத்த போது அவரில் ஒரு தயக்கம் வெளிப்பட்டது. அவர் மெல்ல இழுத்தார். “விதானையார் என்ன சொல்லுவாரோ தெரியேல்லை”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையவனுக்கு அந்த வார்த்தைகள் சினத்தை மூட்டினாலும் அவன் அதை வெளிக்காட்டவில்லை. மணியாறன்மூலையில் எந்த ஒரு காரியம் செய்வதென்றாலும் சின்னியப்பனைக் கேட்காமல் செய்வதில்லை. அவரோ தம்பிப்பிள்ளை விதானையார் கீறின கோட்டைத் தாண்டமாட்டார்.

கனகரத்தினம் வாசிகசாலை தொடங்கும் விஷயம் சின்னியப்பனிடம் சொல்லும் போது அவர் இப்படித் தயக்கம் காட்டுவார் எனவும் பக்குவமாகப் பேசி அவரைச் சம்மதிக்க வைக்க வேண்டும் எனவும் இளையவனிடம் முதலே தெரிவித்திருந்தான்.

ஆனால், தம்பியனால் பொறுமை காக்க முடியவில்லை. அவன் முறுக்கினான், "எங்கடை பிள்ளையள் படிக்கிறதை மறிக்க அவரார்"

கிழவருக்குக் கோபம் வந்து விட்டது. "பொத்தடா வாயை... எங்களை வாழவைக்கிற தெய்வங்கள் அதுகள்", என்றார் அவர்.

இளையவன் அவரின் அடிமை மனப்பாண்மையையும், எஜமான் விசுவாசத்தையும் ஒரே நாளில் மாற்றி விட முடியாது என்பதை நன்றாகவே தெரிந்து வைத்திருந்தான்.

"தம்பியா! நீ சும்மா இரு", என இளையவன் அவனை அதட்டிவிட்டு பூசாரியைப் பார்த்து, "அப்பு.. எங்கடை சனம் இப்படி எத்தினை காலத்துக்கு பனை சீவிக் கொண்டும், தோட்டம் கொத்திக் கொண்டும் திரியிறது.. எங்கடை பிள்ளையளும் படிச்சு நல்லாய் வந்து வீடு வாசல் கட்டி, நாலு பேர் மதிக்கிற மாதிரி வாழக்கூடாதே?", என மென்மையாகக் கேட்டான்.

அந்த வார்த்தைகள் பூசாரியின் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அப்புக்காத்தாரின் மகன் ஒரு பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்டார் சைக்கிளில் நாலு ஊருக்குக் கேட்கும் சத்தத்துடன் பறந்து திரிவதைப் பார்த்து அவர் தனது மகனுக்கு இப்படி ஒரு வாழ்வு வராதா என ஏங்கியதுண்டு.

அவர், "படிக்கிறது நல்லது தான்.. எங்கடை பொடியள் 8, 9ற்கு மேலை படியாதுகளல்லே.." என இழுத்தார்.

இளையவன் சொன்னான், "அப்பு இப்படி ஒரு இடத்திலை பொடியளை கூட்டி வைச்சு பாடம் சொல்லி குடுத்தால் படிப்பாங்கள்"

அவர்கள் ஒருவாறு பூசாரியை சம்மதிக்க வைத்தது மட்டுமன்றி வாசிகசாலை கட்ட தனது காணியிலேயே இடம் தருவதாக ஒத்துக் கொள்ளவும் வைத்து விட்டனர். எனினும் விதானையார் பற்றிய பயம் அவரின் மனதுள் இருக்கவே செய்தது.

ஆனால், இளையவன் விதானையார் எதிர்க்க மாட்டார் என்றே நம்பினான். அப்படி எதிர்த்தால் சொர்ணத்தின் மூலம் அவரைச் சமாளித்து விடலாம் எனவும் எண்ணிக் கொண்டான். சிங்கனின் பிரேதத்தை ஆலடிவெட்டையாரின் சுடலையில் எரிக்க உதவியது, இரு சாதிக்காரரும் ஒன்றாகச் சிங்கனின் பிரேதத்தைக் காவிய போது தடுக்காமல் இருந்தது போன்ற விஷயங்களால் மணியாறன்மூலை மக்களுக்கு விதானையார் மேல் ஒரு புதிய நம்பிக்கை பிறந்திருந்தது.

எது எப்படியிருந்த போதிலும் பொன்னுக்குட்டி மட்டும் சிங்கனைச் சுட்ட பொன்னம்பலத்தையும், இராமலிங்கத்தையும் சிறையிலை விட்டு வெளியே வந்த அடுத்த நாள் ஆலடிச்சந்தியில் சனம் பார்க்க வெட்டித் துண்டு போடுவது என்ற வைராக்கியத்தை நெஞ்சுக்குள் வளர்த்துக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே வேளையில் பொன்னுக்குட்டியின் அமைதியையிட்டு விதானையாருக்குப் பலத்த சந்தேகம் இருந்து கொண்டேயிருந்தது. எனவே அவர்கள் பிணையில் வெளிவர முடியாதபடி வழக்கை இறுக்குமாறு அவர் சார்ஜண்ட் சின்னத்தம்பியிடம் சொல்லியிருந்தார். எனவே தான் காசிப்பிள்ளை முதலாளி நாலுபேரையும் பிணை எடுக்க மேற்கொண்ட முயற்சிகள் எதுவுமே பலனளிக்கவில்லை. கடைசியில் சார்ஜண்ட் சின்னத்தம்பியின் வீட்டுக்கு நேரிலேயே போய் விடுவதாக முடிவு செய்தார். சார்ஜன்ட் சின்னத்தம்பிக்கு கொஞ்சம் பெரிய தொகையாகத் தள்ளினால் எந்தப் பெரிய வழக்கையும் தள்ளத்தக்க விதமாகக் குற்றப்பத்திரிகை எழுதும் வல்லமை அவருக்குண்டு என்பதைக் காசிப்பிள்ளை அறிந்திருந்தார்.

காசிப்பிள்ளையின் கார் போய் நின்ற போது சின்னத்தம்பி விறாந்தையில் அமர்ந்திருந்தார். முன்னாலிருந்த ரீப்போவில் ஒரு கல்லோயா சிவத்த லேபல் சாராயமும் கிளாசும் இருந்தன.

காரை விட்டு இறங்கி நேராகச் சென்று விறாந்தையில் ஏறிய காசிப்பிள்ளை, "இதென்ன இதையும் மனுஷன் குடிக்கிறதே?", என்று விட்டு தனது பையிலிருந்த வெள்ளைச் சாராயத்தை எடுத்து ரீப்போவில் வைத்தார்.

சின்னத்தம்பி மீசையை ஒரு முறை தடவி விட்டுக் கேட்டார், "என்ன முதலாளி பெரிய விஷயமாய் வந்திருக்கிறியள் போலை?"

அந்தக் கேள்வியிலை காசிப்பிள்ளை சற்றுத் தடுமாறினாலும் சமாளித்தவாறே, "சீ.. சீ.. அப்படி ஒண்டுமில்லை, வரயுக்கை வெறுங்கையோடை வரக் கூடாது எண்டு ஒண்டைக் கொண்டு வந்தன்", என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்ன...... என்னை விலைக்கு வாங்கிற பிளானே?” எனக் கேட்டார் சார்ஜன்ட்.

“ஐயா..”, எனத் தயங்கினார் காசிப்பிள்ளை!

“எடுத்து உள்ளை வைக்கச் சொன்னனான்”, இடியாக முழங்கியது சின்னத்தம்பியின் குரல். குடிக்க ஆரம்பிக்கும் முன்பே அவரின் கண்கள் சிவந்து விட்டதை அவதானித்த காசிப்பிள்ளை கலங்கிப் போய்விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகம் – 20

சின்னத்தம்பியின் முரட்டுக்குரலில் வெளிவந்த அந்த அதட்டலில் காசிப்பிள்ளை முதலாளி அதிர்ந்தே போய்விட்டார். நெஞ்சில் ஒருவித பய உணர்ச்சியும் மேலெழ ஆரம்பித்தது. தான் கொண்டு வந்த வெள்ளைச் சாராயப் போத்தலைத் தயக்கத்துடன் எடுத்து மீண்டும் தனது பைக்குள் வைத்துக் கொண்டார்.

சார்ஜன்ட் ஒரு செருமலுடன் ஆரம்பித்தார். "முதலாளி நீங்கள் முதல் வந்த விஷயத்தைச் சொல்லியிருக்க வேணும். பிறகு நான் அதுக்குச் சம்மதிச்சால் உங்கடை அன்பளிப்பைத் தரலாம். நீங்கள் முதலே போத்தலை தந்தால் அது என்னை விலைக்கு வேண்டிப்போட்டு உங்கடை அலுவல் பார்க்கிற மாதிரியல்லே..?"

இப்போ காசிப்பிள்ளைக்கு சற்று நிம்மதி பிறந்தது போல் தோன்றிற்று. "ம், இனி வந்த விஷயத்தைச் சொல்லுங்கோ...!", என்றார். சின்னத்தம்பி தனது பெரிய மீசையை ஒரு முறை தடவி விட்டவாறே.

"பொன்னம்பலம், இராமலிங்கம் ஆக்களைப் பிணையிலை விட வேணும்...", காசிப்பிள்ளை தயக்கத்துடன் ஒவ்வொரு வார்த்தைகளாகச் சொல்லி முடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிணை விடுறது கோடு – நல்ல அப்புக்காத்தை வைச்சுப் பிணை கேளுங்கோ…!"

"பொலிஸ் ஓமெண்டால் தானே நீதவான் பிணையிலை விடுவார்!", என்றார் காசிப்பிள்ளை.

"முதலாளி! பொலிஸ் ஓமெண்டு சொல்ல இது என்ன கோழி களவெடுத்த கேசே… கொலையல்லே… குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாமலே எந்த நீதவானும் பிணை விடார். துவக்கு, சிங்கன்ரை உடம்பிலை இருந்து எடுத்த குண்டுகள் எல்லாம் கொழும்புக்கு அனுப்பியாச்சு.. அங்கையிருந்து றிப்போட் வந்த பிறகு தான் குற்றப்பத்திரிகை போடுவோம்"

காசிப்பிள்ளை மெல்ல முனகினார். "குற்றப் பத்திரிகையைப் பிணை விடத்தக்க மாதிரி நீங்கள் தான் செய்வியள்"

"முதலாளி இவங்கள் தான் கொலை செய்ததெண்டதுக்கு எல்லா ஆதாரமும் இருக்குது. அதுவும் திட்டமிட்ட கொலை… தூக்கை விட வேறை தண்டனை கிடையாது. விளங்குதே?"

காசிப்பிள்ளை எதுவுமே பேசவில்லை.

சின்னத்தம்பி தொடர்ந்தார், "ஆனால் உங்களுக்கு ஒரே ஒரு சாதகம் இருக்குது.. பிணையிலை விடவெண்டாலும்.." என்று விட்டு, "முதலாளி… இப்ப பிணை விட்டால் பொன்னுக்குட்டியன் கலைச்சுக் கலைச்சு வெட்டுவான்.."

முதலாளிக்கு ஏதோ துணிவு வந்து விட்டது போல் தோன்றியது. "நல்ல சேட்டை எங்கடை ஆக்கள் விடுவாங்களே…? மணியாறன்மூலையையே கொளுத்த மாட்டாங்களே…?", என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்தம்பியின் முகம் இறுகியது, "அப்ப ஒரு பெரிய சாதிச் சண்டை நடத்திக்காட்டப் போறியள். அப்பிடித்தானே...?"

காசிப்பிள்ளை சின்னத்தம்பியின் மாற்றத்தில் திகைத்துப் போய் வாயடைத்துப் போனார்.

சின்னத்தம்பி தொடர்ந்தார், "பிணை விட முடியாது" மற்றும்படி வழக்கிலை பாத்து ஏதாவது செய்கிறதெண்டால் செய்யலாம். எப்படியும் வழக்கு முடிய இரண்டு மூண்டு வரியம் செல்லும். அதுக்கிடையிலை மெல்ல மெல்ல மணியாறன் மூலையாரின்ரை கோபமும் அடங்கிவிடும்"

அவர்களைத் தூக்குக்கு அனுப்பாமல் விட்டாலே போதும் என்றளவுக்குக் காசிப்பிள்ளையின் நிலை வந்து விட்டது. சின்னத்தம்பியின் பதில் அவருக்கு சற்று ஆறுதலைக் கொடுத்தது.

"உருத்திரபுரத்தான்களிலை ஒருதனுக்கு ஆயுள் தண்டனை கிடைக்கும்... பொன்னம்பலத்தையும், இராமலிங்கத்தையும் தப்பவைக்கலாம். ஆனால் என்னைப் பெரிய அளவில கவனிக்க வேணும்"

காசிப்பிள்ளை மகிழ்ச்சியில் படபடத்தார். "அது எத்தினை ஆயிரமெண்டாலும் நான் சிலவழிப்பன்"

"சரி இனி எடுத்து வையுங்கோ போத்தலை மேசையிலை", என்றார் சின்னத்தம்பி ஒரு மெல்லிய புன்னகையுடன். இருவருமே ஏவிவிட்டவர்களைத் தப்ப வைத்து அம்பைத் தண்டிப்பது பற்றித் திட்டம் போட ஆரம்பித்தனர்.

பத்து பதினைந்து நாட்களுக்குள் மணியாறன்மூலையில் வெகு அழகான வாசிகசாலை கட்டி முடிக்கப்பட்டு விட்டது. இளைஞர்கள், பெரியவர்கள் என எல்லாருமே உற்சாகத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கு கொண்டனர். ஆலடிவெட்டை இளைஞர்களும் இரவு வேளைகளில் வந்து உதவி செய்தனர்.

ஆலடிவெட்டை விளையாட்டு மைதானத்தின் பெயர்ப் பலகையையும் மணியாறன்மூலை வாசிகசாலையையும் திறந்து வைக்க டி.ஆர்.ஓ. தங்கவேலுவை ஏற்பாடு செய்து விட்டனர். அவர் வல்வெட்டித்துறை மீனவ சமூகத்தைச் சேர்ந்தவர். கனகரத்தினம் அவரிடம் முழு விஷயங்களையும் சொல்லி அழைத்த போது அவர் மிக மகிழ்ச்சியுடன் சம்மதித்தது மட்டுமன்றி சாதி பேதங்களுக்கு சவால் விடும் வகையில் இளைஞர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்குப் பாராட்டும் தெரிவித்தார்.

அதேவேளையில் இத்திறப்பு விழாவுக்கு விதானையாரைத் தலைமை தாங்க வைப்பது எதிர்காலத்தில் பல விஷயங்களுக்குச் சாதகமாக இருக்கும் எனக் கனகரத்தினம் நம்பினான். எனவே சின்னியப்பனையும், பொன்னுக்குட்டியையும் போய் விதானையாரிடம் கதைக்கும் படி கேட்டுக் கொண்டான். சின்னியப்பன் முதலில் தயக்கம் காட்டினாலும் பொன்னுக்குட்டி வலியுறுத்தியதன் பேரில் இருவரும் போகச் சம்மதித்தனர்.

அவர்கள் விதானையார் வீட்டுக்குப் போன போது மால் முற்றத்தில் விதானையார் சாய்மனைக் கதிரையில் அமர்ந்து கள்ளுக் குடித்துக் கொண்டிருந்தார். சின்னன் அருகில் நிலத்தில் இருந்தவாறு ஓலை கிழித்துக் கொண்டிருந்தாள். அவர்களைக் கண்டதும் சின்னன் எழுந்து சற்றுத் தொலைவில் ஓலையைப் போட்டுக் கிழிக்க ஆரம்பித்தாள்.

விதானையார் இருவரையும் ஆச்சரியத்துடன் பார்த்து விட்டு, "என்ன சின்னவி, இஞ்சாலப்பக்கம்? அண்ணாமாருக்குப் பொங்கல் வைக்கப் போறியே?", எனக் கேட்டார். பூசாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னியப்பன் அண்ணமார் கோவிலில் பொங்கல் வைக்க முதல் அரிசி விதானையாரிடம் தான் வாங்குவதுண்டு.

பொன்னுக்குட்டி, "அதுக்கில்லையய்யா... ஒரு வாசிகசாலை திறக்கப்போறம். அதுக்கு நீங்கள் தான் தலைமை தாங்க வேணும்", என்றார்.

விதானையார் மெல்லிய கேலியுடன் கேட்டார், "எழுதப்படிக்கத் தெரிஞ்சவன் இல்லாத இடத்திலை ஏன் வாசிகசாலையை?"

"எங்கடை பிள்ளை குட்டியள் படிக்கும் தானே ஐயா", என்றார் பொன்னுக்குட்டி, ஏதோ ஒருவிதமான ஆபத்து ஆரம்பிப்பதற்கான அறிகுறி தென்படுவதாகவே விதானையாருக்குத் தோன்றியது. கள்ளை எடுத்து சிறிதளவு அருந்தி விட்டு விதானையார் ஒரு செருமலுடன் சொன்னார், "நீங்கள் திறந்து நடத்துங்கோவன்! அதுக்கு நான் எதுக்கு?"

கனகரத்தினம் சொல்லிக் கொடுத்த அடுத்த குண்டைத் தூக்கிப் போட்டார் பொன்னுக்குட்டி, "ஐயா...! டி.ஆர்.ஓ.ஐயா வந்து திறந்து வைக்கிறதுக்கு நீங்கள் தலைமை தாங்கிறது தான் பொருத்தமாயிருக்கும்"

விதானையார் திடீரென நிமிர்ந்து உட்கார்ந்தார் "என்ன டி.ஆர்.ஓ. வாறாரோ..?"

சின்னப்பன் மெல்லச் சொன்னார், "ஓமய்யா. அவர் தான் திறக்கிறார்!", இவர்கள் டி.ஆர்.ஓ.விடம் நேரில் சென்று கதைத்திருக்க முடியாதென்றே விதானையார் நம்பினார். இவர்களுக்குப் பின்னால் நின்று இவர்களையே யாரோ இயக்குவது போலவே அவருக்குத் தோன்றியது. ஆனால் அதைப்பற்றி அவர் எதுவுமே கேட்கவில்லை. ஆனால் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதுக்குள் இச்சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தத் தீர்மானித்துக் கொண்டார்.

“என்ன நாள் வருகுது...?”

“வாற வெள்ளிக்கிழமை ஐயா...!”, என்றார் பொன்னுக்குட்டி.

“சரி வெள்ளி தானே நான் வாறன். மற்றது டி.ஆர்.ஓ.வுக்கு இரவு சாப்பாடு நான் ஒழுங்கு பண்ணுறன் சரியோ?”

அவர்கள் சரியெனத் தலையாட்டினர். விதானையார் விஷயம் தனது கையை மீறிச் சென்று விடாமல் வெகு அவதானமாக நடக்க வேண்டும் என முடிவு செய்து கொண்டார். அந்த விழா ஏற்பாடுகள் யாவும் தனது தலைமையிலேயே இடம்பெறுவது போன்ற ஒரு தோற்றப்பாட்டை டி.ஆர்.ஓ.வுக்கு ஏற்படுத்தும் வகையில் காய்களை நகர்த்துவதன் அவசியத்தை தெளிவாகவே தெரிந்து வைத்திருந்தார்.

அன்று பகல் மணியாறன்மூலையில் எந்த ஒரு வீட்டிலும் சமையல் இடம் பெறவில்லை. சிங்கனின் அந்தியெட்டி வீட்டிலேயே எல்லோருக்கும் அன்று சாப்பாடு, கமலி மனம் நிறைந்த சோகத்தைச் சுமந்து கொண்டிருந்தாலும் ஓடி ஓடி வரவேற்பதும் பரிமாறுவதும் என துடிப்புடனேயே செயற்பட்டாள். அவள் ஒவ்வொரு இலையிலும் ஒவ்வொரு அகப்பை சோற்றையும் போடும் போது, சிங்கனுக்குப் பரிமாறுவது போன்ற ஒரு திருப்தி அவளுள் நிறைந்தது. அதில் கலந்து கொண்ட அனைவருமே ஏதோ ஒரு மாற்றத்தை நோக்கிச் சிங்கன் திருப்பி விட்டதாகவே கருதினார்.

சிவஞானம் ஆலடிவெட்டை இளைஞர்கள் அந்தியேட்டி வீட்டில் போய் சாப்பிட வேண்டும் என்பதில் பிடிவாதமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தான். ஆனால் கனகரத்தினம் அதை எள்ளளவும் விரும்பவில்லை.

இப்படிச் சின்னச் சின்னச் சலசலப்புக்களைக் காட்டி சாதி வெறியரை உசாரடைய விடக்கூடாது என்பது அவன் வாதம். பல்லாயிரம் ஆண்டுகளாக ஊறிப்போய் விட்ட சாதிப் பாகுபாட்டுக்கு எதிராக மிகவும் தந்திரமாகவே போராட வேண்டும் என்பதை விளங்கப்படுத்தினான். நீண்ட நேர விவாதத்தின் பின் சிவஞானமும் அதை ஏற்றுக் கொண்டான்.

விதானையாரே நேராக டி.ஆர்.ஓ.வீட்டுக்குப் போய் அவரை அழைத்து வந்து ஐந்து மணிக்கு ஆலடிவெட்டையில் சிங்கன் ஞாபகார்த்த விளையாட்டுக் கழக பெயர்ப்பலகையைத் திரை நீக்கம் செய்து வைத்தனர்.

பின்பு காரில் ஏறி இருவரும் அவர்களுடன் கூட வந்தவர்களும் மணியாறன்மூலையில் வந்திறங்கினர். டி.ஆர்.ஓ.காரிலிருந்து இறங்கும் போதே சீன வெடி கொழுத்தி வரவேற்பு ஆரம்பமானது. அன்று மணியாறன்மூலையாரைப் பார்த்த போது அவரின் கண்களையே அவரால் நம்பமுடியவில்லை. ஆண்கள் எல்லோரும் வெள்ளை வேட்டி, சால்வையுடன் புதுக் கோலத்தில் நின்றனர். பெண்களும் புதிய ஆடைகளுடன் தோற்றமளித்தனர்.

வாசிகசாலை முன்பாக வந்த போது பொன்னுக்குட்டி, வாழைத்தடலில் கட்டப்பட்ட மாலையைக் கொண்டு வந்து விதானையாரிடம் கொடுத்தார். அவர் அதை வாங்கி டி.ஆர்.ஓ.வுக்குப் போட்டு அவரை வரவேற்றார். பொன்னுக்குட்டி அடுத்த மாலையைக் கனகரத்தினத்திடம் கொடுத்து அதை விதானையாரிற்குப் போடும் படி கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகரத்தினம் மெல்லச் சிரித்தவாறே வரவேற்புரை நிகழ்த்தத் தயாராகிக் கொண்டிருந்த முத்துலட்சுமியிடம் அதனைக் கொடுத்து விதானையாருக்குப் போடும்படி கூறினான். அவள் சற்றுத் தயங்கிய போது, "பரவாயில்லை கையிலை குடுங்கோ..!", என்றான் அவன்

அவள் மாலையைக் கையில் வாங்கி விதானையாரின் கையில் கொடுக்க முயன்றபோது அவர் அவரையறியாமலே குனிந்து மாலையைக் கழுத்தில் வாங்கிக் கொண்டார்.

அங்கு நின்ற அனைவருமே ஒரு கணம் திகைத்துப் போய் நின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 21

முத்துலட்சுமி அருகில் வந்ததும் விதானையார் மாலையைக் கையில் வாங்காமல் குனிந்து கழுத்தைக் கொடுத்ததும் அவள் மாலையைப் அவருக்குப் போட்டதும் ஒரு சில கணங்களுக்குள் நடந்தேறி விட்டன. ஏதோ ஒரு உள்ளுணர்வு அவரைக் குனிந்து கழுத்தைக் கொடுக்கும் படி தூண்டியிருக்க வேண்டும். ஏனெனில் தான் அப்படிச் செய்ய வேண்டும் என அவர் எந்த ஒரு வினாடியிலுமே நினைத்திருக்கவில்லை. முத்துலட்சுமி கூட மாலையைக் கையில் கொடுக்க எண்ணியே கொண்டு சென்றாள். அவர் குனிந்ததும் அவளையறியாமலே அவள் கழுத்தில் போட்டு விட்டாள்.

மாலையைக் கழுத்தில் வாங்கிக் கொண்டு நிமிர்ந்த விதானையாருக்கு அவளின் முகத்தை அவ்வளவு அருகில் வைத்துப் பார்க்கும் சந்தர்ப்பம் கிட்டியிருந்தது.

அவளின் படபடக்கும் அந்த விழிகளும், பொங்கிப் பூரித்த கன்னங்களும், சிவந்து அழகு சுமந்த அந்த இதழ்களும் அப்படியே சொர்ணம் முன்னால் வந்து நிற்பது போன்ற உணர்வையே அவருக்கு ஏற்படுத்தின. சொர்ணத்தைப் போலவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்கும் அமைந்திருந்த மேல்வாய் தெத்திப் பல்லு தனிக் கவர்ச்சியூட்டியது.

அவளைப் பாராட்டுவது போல் மெல்ல அவளின் தோளில் அவர் தட்டிக் கொடுத்தார். எல்லையற்ற பாசப் பொழிவின் வருடலாகவே அவருக்கு அது தோன்றியது.

அந்த வருடல் அவளைக் கூட ஒரு முறை மெய் மறக்கச் செய்து விட்டது. அவள் குனிந்து அவரின் காலைத் தொட்டு வணங்கி கண்களில் ஒற்றிக் கொண்டாள். விதானையார் மெல்ல அவளின் தலையை வருடி விட்டு இரு தோள்களிலும் பிடித்துத் தூக்கிவிட்டார். அவள் மீண்டும் ஒரு முறை அவரைக் கரங்கூப்பி வணங்கி விட்டு மேடையை விட்டு இறங்கினாள்.

இப்படி ஒரு சம்பவத்தைச் சற்றும் எதிர்பாராத சபை அப்படியே மௌனித்துப் போயிருந்தது.

ஆனால் கனகரத்தினம் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு கை தட்டத் தொடங்கவே ஆலடிவெட்டை இளைஞர்களும், மணியாறன்மூலை இளைஞர்களும் கரகோஷம் செய்தனர். சிங்கனின் திருமணம், சாவு என்பன சாதி வேறுபாடுகளில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி விட்டதாகவே அவர்கள் கருதினர்.

ஆனால் மணியாறன்மூலைப் பெரியவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் பயத்தில் உறைந்தே போய் விட்டனர்.

அவர்கள் இச் சம்பவத்தால் விதானையார் கோபமடைந்திருப்பார் எனவும், டி.ஆர்.ஓ. இருந்த காரணத்தால் அவர் அதை வெளிப்படுத்த முடியவில்லை எனவும் அதன் தாக்கம் மறுநாள் மணியாறன்மூலை மக்கள் அனைவருக்குமே பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தும் எனவும் அவர்கள் நம்பினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னியப்பா பூசாரி அருகில் நின்ற வல்லியப்பனிடம் மெல்ல கோபத்துடன், ஆனால் தாழ்ந்த குரலில் கேட்டார், "டேய்... என்னடா உன்ரை மருமேள் செய்த வேலை?"

வல்லியப்பன் பல்லை நெருமியவாறே புறுபுறுத்தார், "அது அவள் சின்னன் வளர்த்த வளப்பு. இவளைப் படிக்க விட்டது தான் வந்த பிழை"

தந்தையும், மகளையும் மேடையில் ஒன்றாகப் பார்த்த போது சின்னன் தன்னையறியாமலே பரவசமடைந்த போதிலும், நடந்த சம்பவங்கள் அவளையும் உலுக்கிவிட்டன. அவள் உள்ளம் அவளையறியாமலே பயத்தில் நடுங்க ஆரம்பித்து விட்டது. முத்துலட்சுமி கணீரென்ற குரலில் வரவேற்புரை வழங்கினாள். கனகரத்தினம் எழுதிக் கொடுத்ததை அப்படியே மனனம் செய்து அவள் ஒப்புவித்த போதும் அவள் பேசிய முறை ஒரு சிறந்த பேச்சாளர் நிகழ்த்திய உரை போன்றேயிருந்தது. சிங்கனின் துணிவையும், தியாகத்தையும் மதித்து வந்தமைக்காக அனைவரையும் பெருமையுடன் வரவேற்பதாக அவள் தெரிவித்தாள். அவள் இறங்கி வந்ததும் கமலி அவளைக் கட்டியணைத்து முத்தமிட்டு தன் நன்றியைத் தெரிவித்தாள்.

முத்துலட்சுமி மேடையை விட்டு இறங்கிச் சென்ற பின்பு தான் விதானையாருக்கு தான் தன் சாதியின் பெருமையை மறந்து நடந்து கொண்டு விட்டதாக ஒரு குற்ற உணர்வு தலைகாட்ட ஆரம்பித்தது. ஆனால் முத்துலட்சுமி தனக்குப் பிறந்த மகள் என்பதை நினைத்த போது அவர் மனம் தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டது. எனினும் அவர் தனது தலைமையுரையில் சிங்கனையோ, கமலியையோ, பாராட்டி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. ஆனால் சாதிச் சண்டைகள் ஏற்படாமல் எல்லோரும் சமாதானமாக ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதை அவர் தன் பேச்சின் போது மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டி.ஆர்.ஓ. சிங்கனையும் கமலியையும் பாராட்டியதோடு ஆலடிவெட்டை, மணியாறன்மூலை வாலிபர்கள் இப்படி ஒற்றுமையாகச் செயற்படுவது தனக்கு மகிழ்ச்சியளிப்பதாகத் தெரிவித்தார். வெகு விரைவில் சாதிக் கொடுமைகள் தீர்ந்து விடும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார். கனகரத்தினம், சிவஞானம், இளையவன் போன்றவர்கள் எவ்வளவு தந்திரங்களைப் பாவித்து இப்படி ஒரு விழாவை வெற்றிகரமாக அரங்கேற்றினர் என்பதை அவர் அறிந்திருக்க நியாயமில்லை.

ஆனால் ஆலடிவெட்டை, மணியாறன்மூலை வாலிபர்கள் விதானையாரில் ஒரு மனமாற்றம் இடம் பெற்று விட்டதாகவே நம்பினர்.

ஆனால் சிங்கன் ஞாபகார்த்த வாசிகசாலைத் திறப்பு விழாவில் இடம்பெற்ற சம்பவங்கள் விதானையாரின் உறவினர்கள் மத்தியில் ஒருவிதமான கொதிப்பை ஏற்படுத்தத் தவறவில்லை. ஆனால் எவருக்கும் அவரிடம் அது பற்றிக் கதைக்கத் துணிவு வரவில்லை. செல்லையாக் குஞ்சி மட்டும், "தம்பி நேற்று நீ நடந்தவிதம் எங்கடை ஆக்களுக்கு அவ்வளவாய்ப் பிடிக்கேல்லை", என்றார். விதானையார் ஒரே வசனத்தில் பதில் சொல்லி விட்டார் " நான் எங்கடை ஆக்களுக்கு மட்டுமில்லை.... எல்லாருக்கும் நான் விதானையார் எண்டு அவையட்டைச் சொல்லி விடு". அதன் பிறகு எவருமே விதானையாரிடம் அது பற்றி எதுவுமே கேட்கவில்லை.

ஆனால் அவற்றின் பிரதிபலிப்பு வீட்டில் எழாமல் இருக்கவில்லை.

"ஏதோ உன்ரை பிரியன் சின்னனோடை தொடுப்பாயிருக்க என்ன செய்யிறது ஆம்பிளை தானே எண்டு விட்டால், இப்ப அவர் நூறு பத்து சனத்துக்கு முன்னாலை தேப்பன் மேள் உறவு கொண்டாடுறாரே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதேவிப்பாட்டி கனகாம்பிகையிடம் சீறி விழுந்தாள். கனகாம்பிகை விம்மியபடியே சொன்னாள், "நான் என்னத்தைச் செய்யிறது... நீயும் சேர்ந்து தானே அவரின்ரை கூத்துக்கு தலையாட்டினனீ...?"

"அவன் இப்பிடிச் செய்வன் எண்டு நினைச்சனானே... ஏதோ கண்டும் காணாமல் நடக்கிறது நடக்கட்டும் எண்டு பாத்தால் இப்பிடி ஊருக்குப் பறையடிக்கிறதே....?"

கிழவி ஆதங்கப்பட்டுக் கொண்டாள்.

கனகாம்பிகைக்கு என்றுமில்லாதவாறு கோபம் வந்திருக்க வேண்டும். அவள், "மாமி நீ இப்படிச் சத்தம் போடுறதாலை தான் ஊருலகம் அறிய வேண்டிவரும். கூட்டத்திலை தலைவருக்கு மாலை போடுறது தானே. அப்படித்தான் அவளும் போட்டாள் எண்டு சனம் நினைக்கும்.... அந்தச் சாதிக்காரி போட்டிட்டாள் எண்டது தான் எங்கடை ஆக்களுக்கு கோபமணை!"

"எடியேய்.... அவள் காலிலை விழுந்து கும்பிட்டவளாமல்லே?"

"சின்னப்பெட்டை, பெரிய ஆக்களைக் கும்பிடுறேல்லையே? அதை உதோடை விடனை?", என்றாள் கனகாம்பிகை. கிழவிக்கு முத்துலட்சுமி தகப்பன் பிள்ளை உறவு கொண்டாடாமல் இருந்தாலே போதும் என்பதே அப்போதைக்குத் தேவையாயிருந்தது.

ஆனால் அறைக்குள் நின்று இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த சொர்ணத்திற்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை. சின்னனுக்கும் தகப்பனுக்கும் உறவு இருப்பதும், முத்துலட்சுமி தனது தங்கைதான் என்பதும் அவளை அதிரவைத்த செய்திகளாக இருந்தன. அது மட்டுமன்றி தனது தந்தை அப்படிப்பட்டவர் என்பதை அவள் மனம் ஏற்கவும் மறுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் தனக்கும் முத்துலட்சுமிக்குமிடையே ஒரு விதமான உருவ ஒற்றுமை இருப்பதாக அவளின் சில தோழிகள் அவளிடம் கூறியது அவளின் நினைவுக்கு வந்து போனது. அதுமட்டுமின்றி சின்னன் இளையவன் தன்னுடன் பழகுவதை விரும்பாமைக்கு அவளின் அனுபவம் காரணமாக இருக்குமோ எனவும் சொர்ணம் தனக்குள் ஒரு கேள்வியை எழுப்பினாள். எதை நம்புவது, எதை விடுவது என அவளுக்குப் பெரும் குழப்பமே ஏற்பட்டது.

ஆனால் மாலை ஓலை கிழிக்கச் சின்னன் வந்த போது சீதேவிப்பாட்டி போட்ட சத்தம் அவளைக் குழப்பங்களிலிருந்து விடுவித்துவிட்டது.

"கண்டும் காணாமல் ஏதோ நடக்கிறது நடத்திட்டுப் போகுது எண்டு பாத்தால் இப்ப என்னடி மேளை விட்டு உறவு கொண்டாட வெளிக்கிட்டிட்டியேடி? அவ்வளவுக்குத் துணிஞ்சிட்டியே?"

சின்னன் நடுநடுங்கினாள் "ஐயோ... அப்படி ஒண்டும் இல்லைப் பெத்தாச்சி! என்ரை பெட்டை மாலை போடப் போறாள் எண்டே எனக்குத் தெரியாது"

"இத்தினை வரியமாய் எவ்வளவு அவமானங்களைத் தாங்கியும், முத்துலட்சுமியின்ரை தேப்பன் ஆரெண்டதை வெளியிலை சொல்லாத நான் இனியே உறவு கொண்டாட வரப்போறன்" எனக்கிழவியிடம் கேட்க வேண்டும் போல் சின்னனுக்குத் தோன்றியது. ஆனால் ஏனோ அப்படிக் கேட்கத் துணிவு வர மறுத்து விட்டது. அவள் விம்மி விம்மி அழத்துவங்கினாள்.

"இனி நீ இஞ்சை வரக் கூடாது? சொல்லிப் போட்டன்?" என்றாள் கிழவி ஆவேசத்துடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இவ்வளவு காலம் உங்கடை உப்பைத் திண்டு வளர்ந்தனான்”.

கிழவி சீறினாள், “அதுக்காக கனகாம்பிகையோடை சக்களத்தி கொண்டாடப் போறியே”

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த கனகாம்பிகை அருகில் வந்தாள், “மாமி... அவள் ஏன் வாறேல்லையெண்டு இவர் கேட்டால் என்ன மறுமொழி சொல்லுறது.. அதுவும் நீ சொல்லித் தான் வாறேல்லையெண்டால் பிறகு வீடே இரண்டாய்ப் போகும்” கிழவி தன் மகனின் குணம் பற்றி ஒரு முறை நினைத்துப் பார்த்துக் கொண்டாள். பின் சின்னனிடம் “நீ வழக்கம் போலை வந்து போ.. ஆனால் உன்ரை மேளை அவன்ரை கண்ணிலை பட விடக் கூடாது. அவளுக்கும் இவன் தான் தேப்பன் எண்டு தெரியக் கூடாது” என்றாள்.

உள்ளே நின்ற சொர்ணத்திற்கு முத்துலட்சுமி தன் தங்கை என்பது உறுதியாகி விட்டது. அவளுக்கு தனது தகப்பன் மேல் கொண்டிருந்த உயர்வான எண்ணம் சற்றுக் குறைவது போல் தோன்றிய போது தான் இளையவனை விரும்புவது நினைவுக்கு வந்தது.

அவளுக்கு உடனடியாகவே இளையவனைச் சந்திக்க வேண்டும் போல் ஒரு தவிப்பு ஏற்பட்டது. தங்கள் குடும்பத்தில் சாதியால் போடப்பட்ட கோடு ஏற்கனவே தனது தகப்பனால் தாண்டப்பட்டுவிட்ட செய்தியை அவனிடம் சொல்ல வேண்டும் என மனம் துடித்தது. சங்கடப்படலையால் வெளியே வந்து தெருவில் அவன் வரும் பக்கத்தைப் பார்த்தாள். அது வெறுமையாவே தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 22

முத்துலட்சுமி விதானையாருக்கு மேடையில் வைத்து மாலை போட்ட சம்பவம் மணியாறன்மூலையிலுள்ள பெரியவர்கள் மத்தியில் ஒரு பெரும் பய உணர்வையே ஏற்படுத்தி விட்டது. விதானையார் சிரித்துக் கொண்டே மாலையைக் கழுத்தில் வாங்கிய போதும் உள்ளூர அவர் கொதிப்படைந்திருப்பார் எனவே அவர்கள் நம்பினர். அதன் எதிரொலியாக மணியாறன்மூலையிலுள்ள வீடுகள் கூட எரிக்கப்படலாம் எனவும் கருதினர்.

சின்னியப்பு பூசாரி விதானையாரிடம் போய் மன்னிப்புக் கேட்டுச் சமாளித்து விட வேண்டும் என ஒற்றைக்காலில் நின்றார். வல்லியும் அவர் சொன்னமாதிரிச் செய்து வரும் ஆபத்தைத் தவிர்க்க வேண்டும் என்றே கருதினார்.

வல்லியப்பன் முத்துலட்சுமி தன் கூடப்பிறந்த தங்கையின் மகள் என்று கூடப்பாராமல், "தேப்பன் பேர் தெரியாத சனியன் வம்பிலை பிறந்த புத்தியைக் காட்டிப் போட்டுது", என்று திட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வார்த்தைகள் பொன்னுக்குட்டிக்குக் கோபத்தை ஏற்படுத்திவிட்டன. இவர், "வல்லி...இப்ப அவள் என்ன செய்து போட்டாள் எண்டு வாய்க்கு வந்தபடி திட்டுறாய்.. மாலையைத் தானே போட்டவள்... மன்னிப்பும் கேட்க வேண்டாம். மண்ணாங்கட்டியும் கேட்க வேண்டாம். வாறது வரட்டும் பாப்பம்" என்றார்.

சின்னியப்பன் சத்தமிட்டார், "டேய் நாங்கள் ஊருக்கை அதுகளோடை மரியாதையாய் வாழ்ந்தனாங்கள்"

பொன்னுக்குட்டி விடவில்லை, "என்ன மரியாதை கமக்கட்டுக்கை சால்வை வைக்கிறதும் கண்டவுடனை பல்லைக் காட்டுறதும் மரியாதையோ?"

சின்னியப்பனுக்கு கோபம் உச்சிக்கு ஏறி விட்டது. "டேய் நீ சின்னனிலையே தலையாலை தெறிச்சனீ... அப்பிடித்தானே சொல்லுவாய்.... நான் போய் மன்னிப்புக் கேட்கிறது தான்"

"நீ போறதெண்டால் போ... நான் வரமாட்டன்", எனக் கோபமாகச் சொல்லி விட்டு அவ்விடத்தை விட்டு அகன்றார் பொன்னுக்குட்டி. வல்லியப்பனும், சின்னியப்பனும் வேறு இரு முதியவர்களும் விதானையார் ஆறுதலாய் இருக்கும் மாலை நேரத்தில் போய் மன்னிப்புக் கேட்பது என முடிவு செய்து கொண்டனர்.

ஆனால் மணியாறன்மூலை, ஆலடிவெட்டை இளைஞர்களிடம் அச்சம்பவம் ஒரு புதிய நம்பிக்கையைத் தோற்றுவித்திருந்தது.

அவர்கள் அதை ஒரு தனிச்சம்பவமாகப் பார்க்கவில்லை. சிங்கனின் பிரேதத்தை ஆலடிவெட்டையாரின் சுடலையில் எரிக்க அனுமதித்தது, ஆலடிவெட்டை இளைஞர்களும், மணியாறன்மூலை இளைஞர்களும் ஒன்றாகச் சிங்கனின் பிரேதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவிய போது எந்த ஒரு ஆட்சேபணையும் தெரிவியாமல் இருந்தது, முத்துலட்சுமியிடம் மாலையைக் குனிந்து வாங்கியது எல்லாமே சாதிப் பாகுபாடு தொடர்பாக விதானையாரிடம் ஒரு மனமாற்றம் ஏற்பட்டு கொண்டிருப்பதன் அறிகுறி எனவே நம்பினர்.

ஆனால் கனகரத்தினமும் அப்படி நம்பிய போதும் அதை மற்றவர்கள் குழப்பி விடாமல் அவதானமாக இருக்க வேண்டும் என ஆலோசனை கூறினான். அதன் காரணமாகவே மணியாறன்மூலைப் பெரியவர்கள் விதானையாரிடம் மன்னிப்புக் கேட்கப் போவதை அவர்கள் தடுக்கவில்லை.

பெரியவர்கள் மன்னிப்புக் கேட்கும் போது ஒரு கௌரவத்திற்காவது விதானையார் "இப்ப காலம் மாறிப் போச்சு, உதெல்லாத்தையும் பெரிசு படுத்தக் கூடாது", என சொல்ல வேண்டிவரும் எனக் கனகரத்தினம் திட்டவட்டமாக நம்பினான். அது வேறு யாராவது பிரச்சினை கிளப்ப முயன்றாலும் விதானையாரே முன்னின்று தடுக்கும் நிலைமையை உருவாக்கும் என்பது அவனின் ஊகம்.

கனகரத்தினம் ஒவ்வொரு விஷயங்களையும் முன் யோசனையுடன் அணுகும் முறைகளும் ஒவ்வொன்றையும் வெற்றிகரமாக நிறைவேற்ற அவன் கையாளும் முறைகளும் இளையவனுக்குப் பெரும் வியப்பை ஏற்படுத்தின. அவன் தான் படிப்பை இடையில் கைவிட்டமைக்காக வருத்தப்பட்டான். எப்படியிருந்த போதிலும் சாதியமைப்பு மெல்ல மெல்லத் தகர்ந்து கொண்டு போவதாக அவன் நம்பிய போது, சொர்ணத்தின் முகம் ஒரு முறை நினைவில் வந்துபோனது. அவன் வலிந்து அந்த எண்ணத்தை மறக்க முயன்ற போதும் அது மீண்டும் நெஞ்சில் துளிர்த்துக் கொண்டிருந்தது. அவன் மாலை நேரச் சீவலுக்காக விதானையார் வீட்டடியை அடைந்த போது சொர்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கடப்படலைக்குள் நின்றிருந்தாள். அவள், "என்ன இண்டைக்கப் பிந்திப் போனாய்?", என உரிமையுடன் கேட்டாள்.

"இல்லையே வழக்கமான நேரத்துக்குத் தானே வாறன்", என்றான் அவன்.

முத்துலட்சுமி சம்பந்தமாக நான் அறிந்து கொண்ட தகவல்களைக் கொட்டாமல் அவளால் தொடர்ந்து அடக்க முடியவில்லை. அவள் கேட்டாள், "உனக்கு ஒரு விசயம் தெரியுமே?"

"என்னது?"

அவள் ஒரு மெல்லிய சிரிப்புடன் சொன்னாள் "முத்துலட்சுமி என்ரை தங்கச்சி"

இளையவன் ஒரு முறை அதிர்ந்து போனான், "பிள்ளை நீங்கள் என்ன சொல்லுறியள்?"

"முத்து... எங்கடை ஐயாவுக்குத் தான் பிறந்தவளாம்"

இளையவன் அதட்டினான், "பிள்ளை வீண் கதை கதைக்காதையுங்கோ விதானையார் ஐயாவையும் மாமியையும் கேவலப்படுத்திற கதையல்லே இது". அவனால் அந்தச் செய்தியை எள்ளவும் ஜீரணிக்க முடியவில்லை.

"ஐயோ... ஐயோ... பாட்டியும் அம்மாவும் முத்து மாலை போட்ட விஷயமாய்க் கதைக்கேக்கை நான் வடிவாய் கேட்டனான். அது மட்டுமில்லை. பெத்தாச்சி சின்னனைக் கூப்பிட்டு ஏசேக்கையும் எனக்கு முழு விஷயமும் விளங்கியிட்டுது"

சொர்ணம் பொய் சொல்ல மாட்டாள் என நம்பிய போதும் அவன் மனம் அந்தச் செய்தியை ஏற்றுக் கொள்ள மறுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் நிமிர்ந்து சொர்ணத்தைப் பார்த்தான். முத்துலட்சுமியின் கண்களும், அந்தத் தெத்திப்பல்லுச் சிரிப்பும் ஒருவித வித்தியாசமுமின்றி அப்படியேயிருந்தன. அப்படியானால் விதானையாரின் பசிக்கு இரையான வெள்ளாடுதான் தனது மாமியார் என்பது தான் உண்மை எனப்புரிந்து கொண்டான்.

எனினும், ''என்னாலை நம்ப முடியேல்லை'', என ஒரு பெருமூச்சுடன் கூறி விட்டு நடக்க ஆரம்பித்தான் அவன்.

அவள், ''நீ நம்பினாலென்ன நம்பாடிலென்ன நீ எனக்கும் மச்சான் எண்டது உண்மை'', என்று விட்டுக் கலகலவெனச் சிரித்தாள்.

இளையவன் திடுக்கிட்டு ஒரு முறை அப்படியே நின்று விட்டான், ''இல்லை இல்லை பிள்ளை வீண் ஆசையளை வளர்க்காதையுங்கோ'', என்று கத்த வேண்டும் போல் தோன்றியது. ஆனால் அது முடியாது என்பது அவனுக்கே தெரியும். அவள் எவ்வளவு அன்பு அவனில் வைத்திருக்கிறாளோ அவ்வளவு தனக்கும் உண்டு என்பதை அவன் அறிவான். ஆனால் இருவருக்குமிடையே உயர்ந்து உயர்ந்து வளர்ந்திருக்கும் சாதி மதிலை உடைக்கும் தைரியம் தனக்கு இருப்பதாக அவன் நம்பவில்லை. இயன்ற வரை தனது அன்பு என்ற எல்லைக்கு அப்பால் சென்று விடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்க வேண்டும் என எண்ணிக் கொண்டான். ஒரு முறை ஏக்கத்துடன் அவளைப் பார்த்து விட்டு ஒரு பெருமூச்சுடன் மீண்டும் நடக்க ஆரம்பித்தான்.

சின்னன் விதானையாரின் சாய்மனைக் கதிரையை மால் முற்றத்தில் இழுத்து விட்டுப் பின் இளையவன் கொண்டு வந்து போட்ட பனையோலைகளைக் கிழிக்க ஆரம்பித்தாள். சீதேவிப்பாட்டியிடம் திட்டுவாங்கிய காரணத்தாலோ என்னவோ மனம் ஒருவிதமான சஞ்சலத்தில் தவித்துக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரத்தில் விதானையார் வந்து கதிரையில் இருந்தவாறே, "சின்னன், அதிலை கொஞ்சம் ஊத்து", என்றார்.

'அதிலை' என்றால் எதுவென்று சின்னனுக்குத் தெரியுமாதலால் சுண்டுக் கோப்பையைக் கழுவி விட்டு அதற்குள் முட்டியில் கிடந்த கள்ளை ஊற்றிக் கொண்டு வந்து அவரிடம் நீட்டினாள்.

அதைக் கையில வாங்கிய விதானையார், "என்னடி இன்டைக்கு முகம் வாடிப் போய்க் கிடக்குது....?", எனக் கேட்டார்.

அவள், "சீ அப்படி ஒண்டுமில்லை!", என்று விட்டுப் போய் மீண்டும் ஓலையைக் கிழிக்க ஆரம்பித்தாள்.

விதானையார், "நான் இண்டைக்கு நல்ல சந்தோஷமாய் இருக்கிறன். ஏன் தெரியுமே?" எனக் கேட்டார். சின்னன் ஓலை கிழிப்பதை நிறுத்தி விட்டு நிமிர்ந்து அவரின் முகத்தைப் பார்த்தாள்.

"நான் நேற்று என்ரை பிள்ளையை முதல் முதலாய் பக்கத்திலை வைச்சுப் பாத்தன். என்ன வடிவு? அவள் எனக்கு மாலை போட்டுட்டு என்னைப்பார்த்து சிரிக்க, நான் என்னையே மறந்து போனன்!"

அவரின் வார்த்தைகளில் வெளிப்பட்ட ஒரு தகப்பனின் பாச உணர்வு சாதி போன்ற தடைகளை மீறும் வலிமை பெற்றது என்பதைச் சின்னன் புரிந்து கொண்ட போது அவளின் கவலைகள் அனைத்தும் எங்கோ பறந்து போய்விட்டன போல் தோன்றியது. மெல்ல அவளின் கண்கள் கலங்கின.

அந்த நேரத்தில தான் வல்லியும், சின்னியப்பனும் வேறு இருவரும் விதானையார் முன் வந்து கைகளைக் கட்டிக் கொண்டு நின்றனர். விதானையார் அவர்களைப் பார்த்து விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன பூசாரி, இந்த நேரத்திலை வந்திருக்கிறியள்?" எனக் கேட்டார்.

சின்னியப்பன் பயம் கலந்த தயக்கத்துடன், "நேற்று சின்னன்ரை பெட்டை தெரியாத்தனமாய் உங்கடை கழுத்திலை..." அவரால் மேற்கொண்டு பேச முடியவில்லை.

"ம்...", என்று விட்டு கள்ளை எடுத்து இரு மிடறுகள் உறுஞ்சினார் விதானையார்.

வல்லியப்பன் மெல்ல அனுங்கினார். "இப்படி நடக்குமெண்டு நாங்கள் நினைச்சே பார்க்கயில்லை, என்றவர் ஒரு சிறு இடைவெளியின் பின் சின்னனைப் பார்த்து, "எல்லாம் இந்தத் தோறை வளர்த்த வளப்பு" என்றார்.

"தோறை!" என்ற வார்த்தை சின்னனுக்கு நெஞ்சில ஈட்டியால குத்தியது போலிருந்தது. அதைத் தன் கூடப்பிறந்த தமையனே சொல்லும் போது அவளால் தாங்க முடியவில்லை. சின்னன் பெரிதாக விம்மியழத் தொடங்கினாள்.

சாய்ந்திருந்த விதானையார் திடீரென நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"பொத்தடா வாய்.. கூடப்பிறந்தவளை இப்பிடிச் சொல்ல உனக்கு வெக்கமில்லையே...?", விதானையாரின் வார்த்தைகள் கோபத்தில் வெளிவந்தன.

வல்லி பயத்துடன் முணு முணுத்தார். "பிரியன் செத்து இரண்டு வரியத்துக்குப் பிறகு பிள்ளை பெத்தவள் தானே.."

விதானையார் சீறினார். "ஓ அவள் பிள்ளையைக் கரைக்கவுமில்லை பெத்தாள் வடிவாய் வளர்க்கிறாள், வடிவாய்ப் படிப்பிக்கிறாள்.. அது போதாதே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானையாரின் கோபமும் வார்த்தைகளும் நால்வரையும் வாயடைத்துப் போக வைத்து விட்டது.

விதானையாரின் கண்கள் சிவந்தன. "டேய்... அவள் முத்துலட்சுமி என்ரை பிள்ளை.... அவள் எனக்கு மாலை போடாமல் வேறை ஆர் போடுறது?"

சின்னன் தன்னையறியாமலே "ஐயோ.." என்று கத்தி விட்டாள். பதினைந்து வருடங்களாக எவ்வளவோ அவமானங்களையும் தாங்கி அவள் கட்டிக்காத்த இரகசியத்தை அவர் ஒரு நொடியில் உடைத்து விட்டார். அவள் குமுறிக்குமுறி அழ ஆரம்பித்தாள்.

வந்த நால்வரும் அதிர்ச்சியில் சிலைகளாகி விட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 23

வல்லியப்பன் சின்னனின் சொந்தச் சகோதரன் என்ற போதிலும் அவளைக் கேவலப்படுத்தி அவன் சொன்ன வார்த்தை ஏற்படுத்திய கோபத்தில் விதானையார் தன்னையறியாமலே பல ஆண்டுகள் மறைத்து வைத்திருந்த இரகசியத்தைத் தானே வெளிப்படுத்தி விட்டதை உணர்ந்து கொண்டார். முத்துலட்சுமி தனது மகள் தான் என்பதைச் சொன்ன போது அங்கு நின்ற அனைவரிலுமே ஏற்பட்ட அதிர்வு அவரை அவரின் நிலையைப் புரிந்து கொள்ள வைத்து விட்டது. எனினும் உடனடியாகவே அதைச் சமாளிப்பது என முடிவெடுத்து விட்டார்.

அவர் தன் குரலில் வெளிப்படுத்திய கோபத்தைக் குறையாமலே, "நீங்கள் எல்லாரும் ஆர்? என்ர குடிமக்கள். உங்கடை நல்லது கெட்டது எல்லாம் நாங்கள் தானே பார்க்கிறம்... நீங்கள் எங்கடை பிள்ளைகள். அவளும் என்ரை பிள்ளை தானே. அவளும் என்ர குடி மக்களிலை ஒருத்தி. அவள் எனக்கு மாலை போட்டால் அதிலை என்ன பிழை?", எனக் கூறி விட்டு நிறுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகைத்துப் போய் அழுகையை நிறுத்திய சின்னனுக்கு அப்போது தான் நெஞ்சுக்குள் ஒருவித நிம்மதி தெரிந்தது. சின்னியப்பனும், வல்லியும் அதை ஏற்றுக் கொண்டு தலையாட்டினர். சின்னன் மீண்டும் தலையைக் குனிந்து கொண்டு ஓலையைக் கிழிக்க ஆரம்பித்தாள்.

விதானையார் தொடர்ந்தார். "அவள் படிச்ச பிள்ளை. இதைப் பற்றிப் பெரிசாய் எடுக்க மாட்டாள். நானும் அப்பிடி நினைக்கேல்லை. நீங்கள் ஒண்டும் யோசியாமல் போட்டு வாருங்கோ"

அவர்களும் நிம்மதியுடன் விடைபெற்றனர்.

சின்னன் எதுவுமே பேசாது ஓலையைக் கிழித்து முடித்து விட்டு எழுந்தாள். விதானையார் கோப்பையில் இருந்த கள்ளைக் குடித்து முடித்து விட்டு "என்ன சின்னன் பயந்து போனியே?"

அவள், "ம்" என்று விட்டு தயக்கத்துடன், "உங்களுக்கு மரியாதை இல்லையல்லே", என்றாள். விதானையார் ஒரு முறை சிரித்து விட்டு, "என்ன மரியாதை", என்றவர் பின், "சரி சரி உள்ளை போ", எனக் கூறினார். ஒவ்வொரு முறையும் விதானையார் உள்ளை போ", எனக் கூறும் போது அவளிடம் ஒருவித தயக்கமும் பயமும் ஏற்படுவதுண்டு. ஆனால் அன்று அவளுக்கு அப்படியான உணர்வு எதுவும் தோன்றாமல் இருந்தது அவளுக்கே ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவள் தலையைக் குனிந்தவாறு உள்ளே போய் திண்ணையில் அமர்ந்து கொண்டாள். பின்னால் வந்த விதானையார் அவளின் அருகில் அமர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுமில்லாதவாறு அவள் முதன் முதலாகத் தானாகவே அவரின் மடியில் சாய்ந்து கொண்டாள். ஏனோ அவளால் அழுகையை அடக்க முடியவில்லை. மெல்ல விம்ம ஆரம்பித்தாள் அவள்.

விதானையார் மெல்ல அவளின் தலையை வருடியவாறே, "சின்னன் என்ன இப்ப அழுறாய்..?", என்றார் அன்புடன்.

அவளுள் எல்லையற்ற அன்பு விதானையார் மேல் பெருகுவதை அவள் உணர்ந்தாள். காலம் முழுவதும் அப்படியே அவரின் மடியிலேயே படுத்துறங்க வேண்டும் போல் தோன்றியது. ஆனால் அந்த அன்பை எப்படிச் சொல்வது என்று அவளுக்குத் தெரியவுமில்லை. அதற்கான துணிவும் அவளிடத்தில் இல்லை. கண்களை மெல்ல மூடியவாறு அவள் மேலும் ஆழமாக அவரின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். விதானையார் மெல்ல அவளின் முகத்தைத் தனது பக்கம் திருப்பி, "சின்னன் அன்புக்கு சாதி சமயம் ஒண்டுமே கிடையாது விளங்குதே?", எனக் கேட்டார்.

அவள் கண்களை மெல்லத் திறந்தாள். அவளின் முகம் என்றுமில்லாதவாறு புதிய பொலிவுடன் மலர்ந்தது. விதானையார் தன்னில் காட்டும் அக்கறை வெறும் உடல் சம்மந்தப்பட்டது என நினைத்திருந்த அவளுக்கு அவரின் அன்பு வெளிப்பட்ட போது அதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஏதேதோவெல்லாம் பேச வேண்டும் என நினைத்தாள். ஆனால் மௌனமே எஞ்சியது.

அவள் கண்களில் வழிந்த நீரை விதானையார் மெல்லத் தன் கையால் துடைத்து விட்டுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சின்னன் நீ இனி எப்பவுமே அழக்கூடாது?", என்றார் அவர்.

"உங்கடை அன்பு இருக்கும் வரை எந்தத் துன்பத்தையும் எந்த அவமானத்தையும் தாங்குவன். அழவே மாட்டன்" எனச் சொல்ல நினைத்தவள் ஒரு மெல்லிய புன்னகையுடன் நிறுத்திக் கொண்டாள். பிறகு அவர் அவளைப் பேச விடவில்லை.

அடுத்த நாள் எச்.எஸ்.சி.பரீட்சைப் பெறுபேறுகள் வந்துவிட்டன. சொர்ணம் காரில் போய் இறங்கியதைக் கண்டதும் முத்துலட்சுமி அருகே ஓடிவந்தாள்.

"பிள்ளை நீங்கள் பாஸ். எழு 'சீயும் ஒரு 'டி'யும் என்றாள். அது சொர்ணம் ஓரளவுக்கு எதிர்பார்த்த பெறுபேறுதான் வந்திருந்தது. ஆனால் முத்து தன்னைப் பிள்ளை என்று கூப்பிட்டது பொருத்தமற்றதாகவே பட்டது. அவள் தனது தங்கை என்பது தனக்குத் தெரிந்து விட்டதை முத்து அறிந்திருக்க மாட்டாள் என்றாலும் அவளால் அந்தப் பிள்ளை என்ற வார்த்தையை ஏற்க முடியவில்லை. சொர்ணம், "பள்ளிக் கூடத்திலையும் என்ன பிள்ளை எண்டு கூப்பிடுற பழக்கம்? அக்கா எண்டு கூப்பிடு", என்றாள்.

முத்து ஆச்சரியத்துடன் அவள் முகத்தைப் பார்த்து விட்டு "சரி வாழ்த்துக்கள் அக்கா?", என்றாள்.

இருவரும் வாய் விட்டுச் சிரித்துக் கொண்டனர்.

பின்பு முத்து "அக்கா தங்கவேலுக்கும் உங்களை மாதிரித்தான் றிசல்ற், ஆனால் உங்களுக்கு பொட்னி அவருக்கு டபிள் மத்ஸ்", என்றாள். முத்து திருப்பித் திருப்பி அக்காவென அழைக்க வேண்டும் போல் அவளுக்குத் தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தித்த ஆசிரியர்கள், ஆசிரியைகள் எல்லோரும் சொர்ணத்துக்கு மகிழ்வுடன் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர். தங்கவேல் மட்டும் "எனக்குச் சரியான கவலையாகக் கிடக்குது", என்றான்.

சொர்ணம் ஆச்சரியத்துடன், "ஏன்?", எனக் கேட்டாள்.

"நாங்கள் இரண்டு பேரும் வேறை வேறை பள்ளிக்கூடங்களுக்குப் போக வேண்டி வரப்போகுது", என்றான் அவன்.

"நீங்கள் தானே பல்கலைக்கழகத்திலை சந்திப்பம் எண்டியள்" என்றாள் சொர்ணம்.

"ஓம் ஓம் கட்டாயம் சந்திப்பம்", என்று விட்டுப் பெரிதாகச் சிரித்தான் தங்கவேல். அன்று இருவருமே சக மாணவர்களினதும் ஆசிரியர் ஆசிரியைகளினதும் வாழ்த்துக்களில் மூழ்கித் திக்குமுக்காடி விட்டனர். அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் வரலாற்றில் அதுவே மிக உயர்ந்த பெறுபேறாக இருந்ததுடன் அப்பாடசாலையை ஹாட்லிக் கல்லூரிக்கு அடுத்த இடத்துக்கும் கொண்டு வந்திருந்தது. பாடசாலைப் பியோன் வந்து இருவரையும் அதிபர் அழைப்பதாகக் கூறவே இருவருமே காரியாலயத்தை நோக்கி நடந்தனர்.

அவர்களை மகிழ்வுடன் வரவேற்ற அதிபர் ஜோன் மாஸ்ரர் தனது பாராட்டுக்களைத் தெரிவித்தார். பின்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை இருவரையும் காலை 9.00 மணிக்கு அவர்களின் தகப்பன்மாரை அழைத்து வரும்படி கூறினார் அதிபர். இருவரும் சரியெனத் தலையாட்டினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிய உணவு இடைவேளையின் போது முத்துலட்சுமி தேமா மரத்தின் கீழ் போடப்பட்ட வாங்கினில் அமர்ந்து கல்கண்டு சஞ்சிகை படித்துக் கொண்டிருந்தாள். சொர்ணம் போய் அவளருகில் அமர்ந்து கொண்டாள்.

சொர்ணம் கேட்டாள், "சாப்பிட்டியே?"

முத்து மெல்லச் சிரித்து விட்டு, "இல்லையக்கா... இண்டைக்கு நான் கொண்டரேல்லை. பள்ளிக்கூடத்திலை தந்த பணிஸ் சாப்பிட்டனான்"

"அது காணுமே? ஏன் சாப்பாடு கொண்டரேல்லை?"

முத்து தயக்கத்துடன், "அது பழஞ்சோறு கிடந்தது, அம்மாவும் நானும் காலமை குழைச்சுச் சாப்பிட்டனாங்கள்... இனி பின்னேரம் போய் சாப்பிடலாம் தானே", என்றாள்.

சொர்ணம் மெல்லிய கோபத்துடன் கேட்டாள், "ஏய் பின்னேரம் அஞ்சு மணி மட்டும் பசியாதே. வா... நான் இட்டலி கொண்டு வந்தனான். சாப்பிடுவம்."

"வேண்டாமக்கா எனக்குப் பசியில்லை", என்றாள் முத்து தணிந்த குரலில்.

"அது பசிக்கும் வா....", என்று விட்டுக் கையைப் பிடித்து இழுத்தாள். சொர்ணம் முத்துவின் கையை அவள் பிடித்து இழுத்ததும் முத்து திடுக்கிட்டு விட்டாள். முத்துவுக்கு சொர்ணத்தின் நடத்தைகள் எல்லாமே அன்று வித்தியாசமாகத் தெரிந்தன. அவளின் கோபத்துக்கு ஆளாக விரும்பாமல் முத்து எழுந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பாட்டுப் பெட்டியின் மூடியில் இரண்டு இட்டலியை வைத்து சட்னியையும் ஊற்றி அவளிடம் கொடுத்தாள். முத்து அன்று தான் முதல் முதலாக இட்லியைச் சாப்பிட்டாள். அது நல்ல சுவையாகவே இருந்தது.

சொர்ணம் முத்துவின் முகத்தைப் பார்த்தாள்.

முத்து ஆச்சரியத்துடன், "என்னக்கா அப்படிப் பார்க்கிறியள்?"

சொர்ணம் மெல்லிய ஒரு புன்னகையுடன், "உனக்கும் என்னை மாதிரி தெத்திப்பல்லு", என்றாள்.

"ஓமக்கா என்ரை வகுப்புப் பெட்டையளும் நான் சிரிக்கிறது நடக்கிறதெல்லாம் சரியாய் உங்களை மாதிரி எண்டு சொல்லுறவை", என்றாள் மெல்லிய நாணத்துடன்.

"நீ என்ரை தங்கச்சியடி...." என்று கத்த வேண்டும் போல் சொர்ணத்துக்குத் தோன்றியது. எனினும் அவள் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். பின்பு மெல்ல, "இனி என்னை நீ அக்கா எண்டு கூப்பிடு என்ன?", என்றாள் சொர்ணம்.

"ஊரிலை என்னண்டக்கா கூப்பிடுறது?" என்றாள் முத்து சிறிது தயக்கத்துடன்.

"பரவாயில்லை நீ கூப்பிடு", என்றாள் சொர்ணம் உறுதியுடன். முத்துவும் ஒருவிதமான பயத்துடன் தலையசைத்தாள். சொர்ணம் சுற்று முற்றும் பார்த்து விட்டு தங்களை ஒருவரும் கவனிக்கவில்லை என உறுதி செய்த பின்பு எட்டி ஒரு முறை முத்துலட்சுமியின் கன்னத்தில் முத்தமிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்து திடுக்கிட்டுப் போய், "அக்கா", என்றாள். குப் என அவளின் முகம் சிவந்து விட்டது.

"எனக்கு அம்மா தங்கச்சி பெத்துத் தரேல்லை. அதாலை நீ தான் எனக்குத் தங்கச்சி", என்று விட்டு கலகலவெனச் சிரித்தாள் சொர்ணம்.

முத்துவுக்கு எல்லாமே ஆச்சரியமாக இருந்தது. எதையுமே அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சொர்ணம் வீட்டுக்குப் போய் தனது பரீட்சைப் பெறுபேறுகளைச் சொன்ன போது கனகாம்பிகை சந்தோசப் பட்டாள். ஆனால் சீதேவிக்கிழவியோ அலட்சியமாக, "அடுப்பெரிக்கிற பெண்டுகள் படிச்சு என்னத்தைக் கிழிக்கப் போறியள்?", என ஒரே வசனத்தில் முடித்து விட்டாள்.

"உன்னைப் போல தேவாரத்தோடையும் திருவாசகத்தோடையும் எங்களைக் கிடக்கச் சொல்லுறியே?", எண்டு கிழவியை முகத்தில் அறைவது போன்று கேட்க வேண்டும் போல் தோன்றியது. ஆனால் எதுவுமே பேசாது அந்த இடத்தை விட்டு அவள் அகன்றாள்.ஆனால் பொங்கி வந்த கோபம் மனதைப் போட்டுக் குடைந்து கொண்டிருந்தது.

விதானையார் எங்கோ போய் விட்டு வீட்டுக்கு வர மாலை ஆறு மணியாகி விட்டது. அவர் சொர்ணத்தின் பரீட்சை முடிவு பற்றி ஏற்கனவே கேள்விப்பட்டு விட்டார். எனவே வரும் போதே ஒரு கிறீம் பிஸ்கற் பெட்டியுடன் வந்திருந்தார்.

விதானையார் வந்து கதிரையில் அமர்ந்தவாறே சொர்ணத்தை அழைத்து பிஸ்கற் பெட்டியை நீட்டிவாறு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சோதினை முடிவு கேள்விப்பட்டனான் என்ரை பிள்ளை என்னைப் போல கெட்டிக்காரி தானே?", என்றார்.

சொர்ணம் மகிழ்வுடன் அதை வாங்கிக் கொண்டாள். பின் மெல்ல "எச்.எஸ்.சி.படிக்க வேணும்" என்றாள் சொர்ணம்.

"டாக்குத்தராகி கண்ட நிண்ட சாதியின்ரை கையைப் பிடிக்கப் போறாவாமோ.. என்ரை உயிர் போனாலும் விடன்", என்றாள் கிழவி கோபத்துடன்.

சொர்ணம், "ஐயா..." என்று விட்டு ஏக்கத்துடன் விதானையாரின் முகத்தைப் பார்த்தாள். அவர் எதுவுமே சொல்ல முடியாமல் தாயின் முகத்தைப் பார்த்தார்.

"என்ரை சொல்லை மீறி பொம்பிள்ளைப் பிள்ளையைப் படிப்பு எண்டு சொல்லிக் கொண்டு பருத்தித்துறைக்கு விட்டியோ பொயிலைக் கண்டு மருந்து தான் எனக்கு மறுமொழி சொல்லும்", என்று விட்டுக் கிழவி அவ்விடத்தை விட்டு வேகமாக அகன்றாள். சொர்ணம் விம்மி விம்மியழ ஆரம்பித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 24

அன்று அதிகாலை சொர்ணம் பற்களைத் தீட்டிக் கொண்டு கிணற்றடியை நோக்கிப் போன போது இளையவன் வந்து கொண்டிருந்தான். அவளைக் கண்டதும் மகிழ்ச்சி பொங்க, "என்ன பிள்ளை சோதினையிலை வலு திறமாய் பாஸ் பண்ணியிருக்கிறியளாம்", என அவன் கேட்டான்.

அவள் அவனை ஒரு முறை எவ்வித உணர்ச்சியுமில்லாமல் பார்த்து விட்டு, "ம்", என்றாள். வழமையாக இளையவனைக் கண்டதும் அவளின் முகத்தில் பரவும் மகிழ்ச்சி கூட அன்று எங்கோ ஓடிப் போய் விட்டிருந்தது.

அவன் ஆச்சரியத்துடன், "என்ன பிள்ளை. ஒரு மாதிரி இருக்கிறியள்?", எனக் கேட்டான்.

தன் நெஞ்சுக்குள் குமுறிக் கொண்டிருக்கும் கவலைகளை அவனிடம் கொட்டி "ஓ" வென்று கதறியழ வேண்டும் போல் அவளுக்குத் தோன்றியது. ஏனோ அவளால் அப்படிச் செய்ய முடியவில்லை. அவனின் முகத்தைத் தொடர்ந்து பார்க்க முடியாமல் தனது பார்வையை வேறு பக்கம் திரும்பியவாறு, "அப்படியொண்டும் இல்லை...?", என்று விட்டு அவ்விடத்தை விட்டு அகன்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் நாள் மாலை சீதேவிப்பாட்டி தொடர்ந்து சொர்ணம் படித்தால் மருந்து குடிக்கப் போவதாகச் சீறியதும், விதானையார் எதுவுமே பேசாமல் அவ்விடத்தை விட்டு எழுந்து சென்றதும் எல்லோரும் சேர்ந்து அவளின் "டொக்டர்" கனவை சிதைத்து விட்டதாகவே அவளை உணர வைத்தன. அவள் ஓடிப் போய் கட்டிலில் விழுந்து அழ ஆரம்பித்தாள். கனகத்தால் அவளைச் சமாதானப்படுத்தவோ, சாப்பிட வைக்கவோ முடியவில்லை.

விதானையார் சின்னனிடம் கள்ளுக்குடித்து விட்டுச் சாப்பிடத் தயாரான போது, கனகம் சொர்ணம் சாப்பிடாமல் அழுது கொண்டு படுத்திருக்கும் விஷயத்தைத் தயக்கத்துடன் அவரிடம் தெரிவித்தாள்.

அவர் கனகத்தை நிமிர்ந்து பார்த்து விட்டு, "அவளைக் கூப்பிடு", என்றார்.

கனகம் போய் மெல்ல சொர்ணத்தின் முதுகை வருடியவாறே, "பிள்ளை... ஐயா.... வரட்டாம்... வா!", என்றாள்.

விதானையாரின் அழைப்பை நிராகரிக்குமளவுக்கு சொர்ணத்திடம் துணிவில்லை.

சொர்ணம் கண்களைக் துடைத்தவாறு எழுந்து சமயலறைக்குள் வந்தாள்.

"கனகம் இரண்டு பேருக்கும் சாப்பாட்டைப் போடு", என்றார் விதானையார்.

சொர்ணம் விம்மி விம்மியழ ஆரம்பித்தாள்.

"இப்ப ஏன் அழுறாய்.....?", விதானையார் என்றுமில்லாதவாறு பரிவுடன் கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொர்ணம் தயங்கியவாறே அழுகையுடன், ''நான் படிக்க வேணும்...!'', என்றாள். விதானையார் இப்போ விஷயத்தைப் புரிந்து கொண்டு விட்டார். சொர்ணம் படித்து ஒரு மருத்துவராக வருவதை அவரும் உள்ளூர விரும்பினார். ஆனால் சீதேவிப் பாட்டியின் பிடிவாதத்தைப் பற்றி அவர் சிறுவயதிலிருந்தே அறிந்து வைத்திருக்கிறார். அவளின் சொல்லை மீறினால் அவள் 'பொலிடோல்' குடிக்கத் தயங்க மாட்டாள் என்பது அவருக்கு நன்றாகவே தெரியும்.

தன்னிடம் என்றுமே, எதையுமே வேண்டிக் கேட்காத தனது மகள் முதல் முதலாக, ''நான் படிக்கப் போறன்'', எனக் கேட்டதை அவரால் மறுக்கவும் முடியவில்லை. அவர் எந்த நெருக்கடி வரும் போதும் அதை ஒத்தி வைத்து அதன் வீரியத்தைக் குறைக்க முடியும் என்பதை அனுபவத்தில் அறிந்து வைத்திருந்தார்.

''அதைப்பற்றிப் பிறகு யோசிப்பம்... இப்ப சாப்பிடு'', என்று விட்டு கனகத்தைச் சாப்பாட்டைப் போடும்படி கூறினார்.

சொர்ணம் சாட்டுக்கு நாலு வாய் வில்லங்கப்பட்டுச் சாப்பிட்டு விட்டு கோப்பையைக் கழுவியதை அவர் அவதானிக்கத் தவறவில்லை. அந்தப் பிரச்சினையை இப்போது அப்படியே கிடப்பில் போட்டு விட்டு சில நாட்கள் செல்ல ஏதாவது ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும் என முடிவு செய்து கொண்டார் விதானையார்.

முதல் நாள் மாலையும் இரவும் விதானையார் தனக்குச் சாதகமாக எந்த ஒரு பதிலையும் சொல்லாதது சொர்ணத்தின் நம்பிக்கையை ஈடாட்டம் காண வைத்து விட்டது.

அன்று பாடசாலை செல்லவே மனம் வரவில்லை. எனினும் அதிபர் தகப்பனையும் கூட்டிக் கொண்டு வரும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியதை அவளால் தட்டிக் கழிக்க முடியவில்லை. விதானையாரிடம் அதிபர் கதைக்கும் போது சில சில சமயங்களில் மனமாற்றம் ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும் என்ற ஒரு தனி நம்பிக்கையும் அவளிடம் இருக்கத்தான் செய்தது.

சிந்தனையில் மூழ்கி தான் நெடுநேரம் பல்லுத் தீட்டிக் கொண்டிருந்ததை உணர்ந்தவளாக அவசரமாகக் குளிக்க ஆரம்பித்தாள்.

விதானையாரும் சொர்ணமும் காரில் போய் இறங்கிய போது பாடசாலைப் பியோன் செல்லத்துரை கேற்றடியில் நின்று வரவேற்று அவர்களை அதிபரின் அறைக்கு அழைத்துச் சென்றான். அங்கு ஏற்கனவே தங்கவேலும் அவனின் தகப்பன் சுந்தரமூர்த்தியும் வந்து அமர்ந்திருந்தனர். அவர் ஒரு வன இலாகா அதிகாரி அவரின் நிமிர்ந்த உயர்ந்த தோற்றமும் பெரிய மீசையும் சொர்ணத்துக்கு அவர் மீது ஒரு பயம் கலந்த மரியாதையை ஏற்படுத்தியது.

அவர் எழுந்து விதானையாரை நோக்கிக் கையை நீட்டியவாறு, "குட்மோனிங், பொறெஸ்ர் ஒவ்விசர் சுந்தரமூர்த்தி, தங்கவேலின் தகப்பன்", என்றார். விதானையாரும் அவரின் கையைப் பிடித்துக் குலுக்கியவாறு, "விலேஜ் ஹெட்மன், தம்பிப்பிள்ளை, சொர்ணத்தின்ரை தகப்பன்" எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

அவர்கள் கை குலுக்கிய அதே சந்தர்ப்பத்தில் உட்புகுந்த அதிபர் ஜோன் மாஸ்ரர், "நான் அறிமுகப்படுத்த வேண்டிய தேவையே இல்லாமல் போச்சுது. நல்லது இருங்கோ... கதைப்பம்", என்று விட்டு அவர் தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் மெல்ல பேச ஆரம்பித்தார். "உங்கடை பிள்ளையள் எங்கடை பள்ளிக்கூட வரலாற்றிலேயே பெரும் சாதனை செய்திருக்கினம். அதை இண்டைக்கு அசெம்பிளியிலை பாராட்டிக் கௌரவிக்கப் போறம். அதிலை பங்கு கொள்ளத்தான் உங்களைக் கூப்பிட்டனான்"

"இதிலை சேர் உண்மையாய் பாராட்டப்பட வேண்டியவை இவையை படிப்பிச்ச ரீச்சர்மாரும் அவையை வழிநடத்தின நீங்களும் தான் சேர்" என்றார் சுந்தரமூர்த்தி.

பெரிதாகச் சிரித்த அவர், "நோ..... நோ.... ரீச்சர்மாருக்குப் பங்கு இருக்குது எண்டது உண்மைதான். ஆனால் பெற்றார் பிள்ளையளுக்கு ஏற்படுத்திக் குடுக்கிற சூழ்நிலையும், உண்டாக்கிற ஆர்வமும் முக்கியமானவை" என்றார். விதானையார் ஒரு முறை தனக்குள் சிரித்துக் கொண்டார். அவர் ஒரு நாள் கூட சொர்ணத்தின் படிப்பைப்பற்றி அக்கறைப்பட்டதாக அவருக்கு ஞாபகமில்லை. எனினும் அவர் எதுவுமே பேசாமல் மெல்லிய புன்னகையுடன் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் பக்கம் திரும்பிய அதிபர், "வி.எச்.சேர். சொர்ணவதியை எந்தப் பள்ளிக்கூடத்திலை சேர்க்க யோசிக்கிறியள்", எனக் கேட்டார்.

விதானையார் அந்தக் கேள்வியைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஒருவாறு சமாளித்தவாறே "இன்னும் நான் அதைப் பற்றி ஒரு முடிவும் எடுக்கேல்லை", என்றார்.

அதிபர், "பரவாயில்லை, பருத்தித்துறை மெதடிஸ் நல்ல பள்ளிக்கூடம். அங்கை சேர்க்க நான் எல்லா ஏற்பாடும் செய்துவிடுறன்", என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானையார் தான் ஒரு இக்கட்டுக்குள் அகப்பட்டு விட்டதாகவே கருதினார். மெல்ல அவர், "பருத்தித்துறை தூரம். போக்குவரத்தும் பிரச்சினை", என இழுத்தார்.

"அது பெரிய பிரச்சினையில்லை. அங்கை நல்ல கட்டுப்பாடான ஹொாட்டல் இருக்கு..... கிழமைக்கு ஒருக்கால் வந்து போகலாம்", என்றார்.

என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் விதானையார் சில கணங்கள் தடுமாறினார். எனினும் அந்த சில கணங்களில் அவருக்கு அடுத்த பதில் தயாராகி விட்டது.

"எங்கடை ஆக்கள் சைவப் பழங்கள்.. மச்ச மாமிசம் புழங்கிற இடங்களை விரும்பமாட்டினம். அதாலை தான் யோசிக்கிறன்", என்றார். தான் சூழ்ப்பாட்டி போடுவது ஆடு பங்கு போடுவது அவர்களுக்குத் தெரிந்திருக்காது என்றே நம்பினார்.

ஆனால் திடீரென சுந்தரமூர்த்தி குறுக்கறுத்து, "இந்து லேடீஸ் நல்ல சைவப்பள்ளிக் கூடம். அங்கை ஹொாட்டலும் நல்ல கட்டுப்பாடானது. நானும் மகனை யவ்னா இந்துவிலை தான் சேர்க்கப் போறன்", என்றார்.

சொர்ணம் நிலைமை தனக்குச் சாதகமாக மெல்ல மெல்ல மாறி வருவதாகவே நம்பினாள். ஆனால் விதானையார் உடனடியாக மசிந்து விடவில்லை. "இப்ப என்ன அவசரம்... நாள் இருக்குத்தானே. அதுக்குப் பிறகு முடிவு செய்வம்", என்றார் அவர்.

சொர்ணம் பரிதாபமாக தங்கவேலைப் பார்த்தாள். அவனால் எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசெம்பிளியில் அதிபர் தங்கவேலையும், சொர்ணலட்சுமியையும் மேடையில் அழைத்துப் பாராட்டியதுடன் எதிர்காலப் பொறியியலாளர், மருத்துவர் எனப் புகழ்ந்துரைத்தார். மாணவர்களும் கைதட்டி தங்கள் மகிழ்வைத் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வுகள் விதானையார் மனதில் அவரை அறியாமலே ஒரு இன்பக் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. தன் மகள் மருத்துவராக வருவது தனக்குப் பெருமை தான் என அவருக்குத் தோன்றியது. ஆனால் தனது தாயாரின் பிடிவாதத்தை உடைக்க முடியுமென்றோ அல்லது அதை மீறி செயற்பட்டு விட முடியும் என்ற நம்பிக்கையோ அவருள் எழ மறுத்தன.

அசெம்பிளி முடிந்த பின்பும் விதானையார் சுந்தரமூர்த்தியுடன் சிறுது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் புறப்பட்டார். சொர்ணமும் வெளிப்படுத்த முடியாத சோகத்துடன் தங்கவேலிடம் விடைபெற்றாள்.

அன்று இரவு முழுவதும் அவளால் தூங்கவே முடியவில்லை. படிப்பை இடை நிறுத்துவது என்பதை அவளால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. இரவு வெகு நேரத்தின் பின்பு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவளாகத் தூங்கிப் போனாள்.

அடுத்த நாள் இளையவன் வரும் வரை பூக்கண்டுக்கு நீர் ஊற்றும் சாட்டில் சங்கடப்படலையடியில் நின்றாள். அவன் வந்ததுமே... அவனருகில் போய் அவனது இயனக் கூட்டுக்குள் ஒட்டப்பட்ட ஒரு கடித உறையைப் போட்டாள்.

இளையவன் திடுக்கிட்டுப் போய், "இது..... இது என்ன பிள்ளை....?", என்றான். அவள், "கடிதம்", என்றாள் உறுதியுடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையவனுக்கு நரம்புகள் கூட நடுங்குவது போலிருந்தது. அவன் தடுமாறியபடி, "கடிதமோ.... என்னத்துக்கு....?", எனக் கேட்டான்.

"என்னை உயிருக்குயிராய் விரும்பிற ஒருத்தருக்கு...... நீ ஒரு பத்துச் சத முத்திரை ஒட்டி பெட்டியிலை போட்டு விடுவியே?"

திடீரென இளையவனின் முகம் ஓடிக் கறுத்தது. ஒரு கணத்தில் தான் எல்லாவற்றையுமே இழந்து விட்டது போல் உணர்ந்தான். அப்போது தான் தன்னுள் சொர்ணத்தின் மீதான ஆசை வளர்ந்திருப்பதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. அடுத்த கணத்திலேயே இது வெறும் முட்டாள்தனம் என்பதாகவும் நினைத்துக் கொண்டான்.

எனினும், "பிள்ளை அது என்ன பழக்கம்", என்றான் அவன். சொர்ணத்தின் சோகமான முகத்திலும் ஒரு புன்னகை படர்ந்தது. அவள், "நீ யோசிக்கிறமாதிரி ஒண்டுமில்லை, இது வேறை விஷயம்...", என்று சொன்னவள் இடை நிறுத்தி விட்டுப் பின், "நான் ஒரே ஒருத்தனைத் தான் விரும்பிறன். அது ஆரெண்டும் உனக்குத் தெரியும். பிறகு ஏன் உனக்கு வீண் ஐம்மிச்சங்கள்", எனக் கத்த வேண்டும், போலிருந்தது. எனினும் அவள் அதை வலிந்து அடக்கிக் கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 25

இளையவன் பனையில ஏற ஆரம்பித்தான். அவன் ஒவ்வொரு அடியாகப் பனையின் வட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்த போதிலும் சொர்ணம் அவனிடம் கடிதத்தை நீட்டிய போது அவனுள் ஏற்பட்ட அதிர்வுணர்விலிருந்து விடுபட முடியவில்லை. அவள் தன்னை விரும்பும் ஒருவனுக்கு கடிதம் அனுப்புகிறாள் என்று புரிந்து கொண்ட அந்தக் கணத்தில் ஏனோ அவனால் அதை ஜீரணிக்க முடியவில்லை. சொர்ணம் இன்னொரு இளைஞனை விரும்புவாள் என்றால் அதைத் தன்னால் தாங்க முடியாது என்பது அவனுக்கு இப்போது புரிய ஆரம்பித்துவிட்டது. அப்படியானால் தான் சொர்ணத்தை விரும்புகிறானா என்ற கேள்வி அவனையறியாமலே அவனுள் எழுந்தது. ஆனால் சொர்ணத்துக்கும் தனக்கும் திருமணம் என்பது கனவில் கூடச் சாத்தியமில்லை என்பதை ஏற்கனவே அவன் திட்டவட்டமாக அறிந்து வைத்திருந்தான்.

அந்த நிலையில் அவள் யாரை விரும்பினாலும் தனக்கென்ன என ஏன் தன்னால் இருக்க முடியவில்லை என்பதையும் அவனால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனின் மனம் ஏதேதோ எண்ணங்களில் குழம்பிக் கொண்டிருந்தது.

அவன் வழமையை விட அவதானமாக ஓலையைப் பிடித்து ஏறி வட்டுக் கொண்டான். முட்டியைக் கழற்றி தான் கொண்டு சென்ற சுரைக் குடுவையில் கள்ளை ஊற்றினான். பாளையை சீவி விட்டு கத்தியைக் கூட்டுக்குள் வைக்க உயர்த்திய போது அதன் நுனி மணிக்கட்டுக்கு அருகில் கையில் கீறி விட்டது. இரத்தம் பெருக ஆரம்பித்தது. அவசரமவசரமாக முட்டியைக் கட்டி விட்டு இறங்க ஆரம்பித்தான்.

அவன் கீழே இறங்கி வந்த போது இடது கை இரத்தத்தில் தோய்ந்து விட்டது. கிணற்றடியிருந்து வாளியுடன் வந்த சீதேவிப்பாட்டி கையிலிருந்து இரத்தம் வடிவதைக் கண்டுவிட்டாள்.

"என்னடா இது. கையை வெட்டிப் போட்டியே... பொறடா கோப்பித்தூள் கொண்டு வாறன்", என்று விட்டு கிழவி பதட்டத்துடன் சமயலறையை நோக்கி ஓடினாள். கிழவியின் சத்தத்தைத் கேட்டு வெளியே வந்த சொர்ணம் அவன் கையிலிருந்து இரத்தம் வழிந்து நிலத்தில் விழுந்ததைக் கண்டதும் பயந்தே போய் விட்டாள்.

ஒரு பழைய வெள்ளைத்துணியுடன் கோப்பித்தூள் பேணியுடனும் ஓடி வந்த கிழவி, "கையை நீட்டடா", என்றாள்.

இளையவன் காயம் மேற்பக்கம் தெரியும்படி முன் கையை உயர்த்தினான். கிழவி கோப்பிப் போத்தலோ தன் கையோ அவன் கையில் பட்டு விடாமல் போத்தலை உயத்திப் பிடித்துக் கோப்பியைக் கொட்டினாள். பின்பு வெள்ளைத் துணியை நீட்டி, "இதாலை காயத்தைக் கட்டு", என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொர்ணம், "அவன் ஒற்றைக் கையாலை என்னண்டனை மற்றக் கையிலை கட்டுறது?", எனக் கேட்டவாறு துணியைப் பறித்து வாளிக்குள் தோய்த்தாள். பின் வாளிக்குள் இருந்த நீரில் சிறிதைக் கையால் அள்ளி கோப்பி போட்ட இடத்தை விட மற்றப்பகுதியில் இருந்த இரத்தத்தை தன் கையாலையே கழுவினாள்.

கிழவி பதட்டத்துடன், "எடியே நீ என்னடி செய்றிறாய்?", எனக் கேட்டாள். சொர்ணம், "நீ சும்மா இரு. இரத்தம் ஓடிச் சாகவிடச் சொல்லுறியே", என்று ஒரு துண்டை நான்காக மடித்து அதன் மேல் சிறிது கோப்பியைக் கொட்டி விட்டு அதைக் காயத்தில் வைத்து வேறு ஒரு துணியால் கட்டினாள்.

சீதேவிக் கிழவியின் முறாய்ப்பை அவள் பொருட்படுத்த வில்லை. சொர்ணத்தின் முதுகில் நாலு சாத்து சாத்த வேண்டும் போல் ஆத்திரம் கிழவிக்கு வந்த போதும், அதை அடக்கிக் கொண்டாள்.

சொர்ணம் காயத்தைக் கட்டி முடித்து விட்டு, "காயத்துக்கு தையல் போட வேணும், போலைக் கிடக்குது நேரை ஆஸ்பத்திரிக்குப் போ", என்றாள்.

"சரி", எனச் சொல்லி விட்டுப் புறப்பட்டான் இளையவன். சொர்ணம் தன் கையாலேயே தன் காயத்தைத் தொட்டுக் கழுவியதும் கட்டுப் போட்டு விட்டதும் அவள் தன் மேல் கொண்ட அன்பின் வெளிப்பாடு என்றே அவனுக்குத் தோன்றியது. தன் கையிலிருந்து ஒழுகிய இரத்தத்தைக் கண்டதும் அவளில் ஏற்பட்ட தவிப்பை அவனால் மறக்கவே முடியவில்லை. ஏதோ ஒரு பெரும் ஆபத்தை நோக்கித் தான் சறுக்குப்பட்டுக் கொண்டு செல்வதையும் அவன் ஒரு முறை நினைவு படுத்திக் கொண்டான். உடனடியாகவே தான் அவள் மேல் வைக்கும் அன்போ, அவள் தன் மேல் வைக்கும் அன்போ அவளுக்கு ஒரு கெட்ட பெயரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பமோ ஏற்படாதளவுக்கு அவதானமாக இருக்க வேண்டும் எனவும் நினைத்துக் கொண்டான்.

இப்போது அவனின் மனக் குழப்பங்கள் மெல்லத் தெளிவடைவது போல அவனுக்குத் தோன்றியது.

ஆனால் இளையவன் சங்கடப்படலையைக் கடந்ததுமே அங்கே ஒரு பூகம்பம் வெடித்தது.

"இப்பவே இந்தக் கூத்தாடுறனி உன்னை டாக்குத்தருக்குப் படிக்கவிட்டால் என்ன ஆட்டமெல்லாம் ஆடுவாய்?", எனச் சொர்ணத்தின் மேல் சீறி விழுந்தாள் சீதேவிப்பாட்டி.

"இப்ப என்ன கூத்தாடிப் போட்டன் எண்டு துள்ளுறாய்?" எனத் திருப்பிப் பாய்ந்தாள் சொர்ணம்.

"ஓமெடி ஓ... கீழ்சாதிக்காரன்ரை கையைத் தொட்டுக் கழுவி காயத்துக்குக் கட்டுப் போட்டுத் தொண்டு செய்யிற அளவுக்கு நீ வந்திட்டாய். அவன் ஆர், நீ ஆர்?"

"அவனும் மனுஷன். நானும் மனுஷப் பிறவி. ஆபத்தில் மனுஷருக்கு மனுஷர் உதவி செய்யிறது தான் மனுஷத்தன்மை", என்றாள் சொர்ணம் மிகவும் இறுக்கமாகவே, கிழவிக்குக் கோபம் வந்துவிட்டது. அவள், "அதுகள். அதுகளை வைக்க வேண்டிய இடத்திலை வைக்க வேணும். இல்லாட்டில் எங்கடை தோளில தான் ஏறிக் குந்துங்கள்", எனக் கொதித்தாள்.

"உன்ர மகன் சின்னனை வைக்க வேண்டிய இடத்திலையே வைச்சிருக்கிறார்.?", எனக் கேட்க வேண்டும் போல் நா துடித்தது. ஆனால் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

எனினும், "உன்னைப் போல் வீடு, கோவில், குளம், செத்த வீடு, கலியாண வீடு எண்டு ஒரு வட்டத்துக்கை கிடந்து என்னாலை சுத்த முடியாது என்னைப்படிக்க விடு?", என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொர்ணம் சொல்லி விட்டு பதிலை எதிர்பாராமலே அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

"ஓ உன்னைப் படிக்க விட கண்டதுகள் நிண்டதுகளை நடு வீட்டுக்கை கொண்டு வந்து வைச்சு வைத்தியம் செய்வாய். நாங்களும் ஓமெண்டு தலையாட்டவோ. போடி போ. போய் ஆட்டை அவிட்டுக் கட்டு", என்று விட்டு வாளித் தண்ணீரைக் கவிழ்த்து ஊற்றினாள் கிழவி.

இளையவனின் கையில் கட்டிய துணியை வாளித் தண்ணீரில் நனைத்ததற்காகவே கிழவி நீரை வெளியே ஊற்றினாள் என்பதைப் புரிந்து கொண்ட போது சொர்ணத்திற்குக் கோபம் கோபமாக வந்தது. எனினும், அவள் எதுவுமே பேசவில்லை. கிழவியுடன் இப்படியான விஷயங்களைப் பேசுவதில்லையென அவள் அந்தக் கணத்திலேயே முடிவு செய்து கொண்டாள். ஆனால் கிழவி தன் போக்குக்கு எக்காலமும் உடன்பட்டு வரமாட்டாள் என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு தூரம் கிழவியின் போக்குக்கு தன்னாலும் போக முடியாது என்பதையும் அவள் மறக்கவில்லை.

அன்று மாலை இளையவன் பனை சீவ வரவில்லை. அவனிடம் போய் விசாரிக்க ஏதோ ஒரு உணர்வு அவளைத் தடுத்தது. மாலையில் சின்னன் ஓலை கிழிக்க வரும் போது கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என முடிவெடுத்துக் கொண்டாள்.

சின்னன் கொக்கைத்தடியை எடுத்துக் கொண்டு வேலிக் கரைக்குப் போன போது பின்னால் சென்ற சொர்ணம், "என்ன சின்னன் இளையவன் ஆஸ்பத்திரிக்குப் போனவனே...?", எனக் கேட்டாள்.

சின்னன் ஒரு மாதிரியாக சொர்ணத்தின் முகத்தைப் பார்த்துவிட்டு, 'ஓ போனது. நாலு தையல். மாடு எங்கையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்பாத்துக் கொண்டு பாளையைச் சீவியிருக்குது. கை பிளந்து போட்டுது" என்றாள்.

இளையவனை மாடு என்று பேசியது சொர்ணத்துக்குப் பிடிக்கவில்லை என்றாலும் அவனுக்கு நாலு தையல் என்பது தான் முக்கியமாகப்பட்டது. என்றாலும், "என்ன மருமேனை மாடு எண்டு பேசுறாய்?", எனக் கேட்டு வைத்தாள்.

"பின்னை என்ன.. எங்கடை இரண்டு குடும்பத்துக்கும் ஒரு ஆம்பிளைப் பிள்ளை. என்ரை மனுஷன் பனையாலை விழுந்து செத்ததாலை நான் தெருவிலை நிக்கிறன். அவனுக்கு ஏதுமெண்டால் தாங்குவமே...?"

சின்னன் உணர்ச்சி வசப்பட்டுக் கொண்டேதான் அப்படிக் கூறினாள். அவள் தான் தெருவில் நிற்பதாகக் கூறியதற்கு வேறு பல அர்த்தங்கள் இருப்பதாகவே சொர்ணத்துக்கு தோன்றியது.

"சரி சரி கையை நனைக்க வேண்டாமெண்டு சொல்லு", என்று விட்டு போக முயன்ற அவளை சின்னனின் "பிள்ளை!" என்ற வார்த்தை தடுத்து நிறுத்தியது.

சொர்ணம் நின்று திரும்பிப்பார்த்தாள்.

"பிள்ளை நீங்கள் நேற்று பள்ளிக்கூடத்திலை செய்தது பெரிய பிழை", என்றாள் சின்னன்.

சொர்ணத்துக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்ன செய்தனான்?", எனக் கேட்டாள் அவள்.

"உங்கடை சாப்பாட்டிலை முத்துக்கு குடுத்தியளாம்... அதற்கு ஒண்டுமில்லை. நாங்கள் உங்களட்டை திண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளந்தனாங்கள். ஆனால்...", எனக் கூறி விட்டு இடை நிறுத்தினாள் சின்னன்.

"ஆனால் என்ன சொல்லன்?"

"உங்கடை சாப்பாட்டுப் பெட்டியின்ரை தட்டிலை போட்டுக் குடுத்து சாப்பிடச் சொல்லி வில்லங்கப் படுத்தினியளாம்", தயக்கத்துடன் சொல்லி முடித்தாள்.

"ஓ அதுக்கென்ன இப்ப?", சொர்ணம் சற்று கோபமாய் கேட்டாள். சின்னன் ஒரு மெல்லிய அச்சத்துடன், "ஐயாவோ ஆச்சியோ அறிஞ்சால் நாங்கள் குடியிருந்த பாடு இல்லை பிள்ளை", என்றாள்.

"வேறை சில விஷயங்களுக்கு சாதி இல்லை. சாப்பாட்டுத் தட்டிலை தொட்டால் மட்டும் சாதியோ....", எனக் கேட்க வாயை உன்னிய சொர்ணம் சிரமப்பட்டு அதை அடக்கிக் கொண்டாள்.

சில வினாடிகளில் சொர்ணம் நிதானத்துக்கு வந்தவளாக, "சின்னன் நாங்கள் வேதப்பள்ளிக்கூடத்திலை படிக்கிறனாங்கள், எங்களுக்குச் சாதி பார்க்கக் கூடாது எண்டுதான் சொல்லித் தாறவை விளங்குதே?", என்றாள்.

"பிள்ளை அது நல்லதுக்கில்லை...", என்றாள் பயத்துடன் சின்னன்.

"நல்லதோ கெட்டதோ நான் அப்படித்தான் நடப்பன்", என்றாள் சொர்ணம் உறுதியாக.

சின்னன் அதிர்ந்து போய் நின்றாள். ஏதோ ஒரு ஆபத்தின் அறிகுறி தென்படுவது போலவே அவளுக்குத் தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 26

அன்று பாடசாலை ஆரம்பமாகி முதலாவது பாடம் நடந்து கொண்டிருந்த போது பீயோன் வந்து ஒவ்வொரு வகுப்பாக எல்லோரையும் அசெம்பிளிக்கு வரும்படி கூறிச் சென்ற போது எல்லோருமே ஆச்சரியப்பட்டு விட்டனர். பாடத்தை இடை நிறுத்தி அசம்பிளி வைக்கும் பழக்கம் முன்பு எப்போதுமே இருந்ததில்லை.

எல்லா மாணவர்களும் அசம்பிளியில் கூடி ஒரு சில நிமிடங்களில் அதிபர் வந்தார். அவரின் முகத்தில் ஏதோ ஒரு சோர்வு படர்ந்திருப்பதாகவே தோன்றியது.

அவர் அப்பாடசாலையுடன் தொடர்புடைய ஆலயத்தின் பிரதம போதகர் காலமான செய்தியைச் சொல்லி விட்டு இரங்கலுரையை நிகழ்த்தினார். அடுத்து ஒரு கிறிஸ்தவ மாணவி வந்து போதகரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தனை செய்தாள். போதகருக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக பாடசாலை அன்று விடுமுறை எனவும் எல்லோரையும் வீடுகளுக்குப் போகும்படியும் கேட்டுக் கொண்டார்.

அசெம்பிளி கலைந்த போது சொர்ணம் தனக்கு ஏற்பட்ட சிக்கலைப் புரிந்து கொண்டாள். அவளை ஏத்த மணியத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார் நான்கு மணிக்குத் தான் வரும். அப்போதே நேரம் பத்து மணி. மாலை வரை எந்த வேலையுமின்றிக் காத்து நிற்க அவளுக்குப் பொறுமையில்லை. முத்துலட்சுமியுடன் சேர்ந்து நடந்தே போய் விடுவது எனத் தீர்மானித்துக் கொண்டாள்.

முத்துலட்சுமியிடம் அவள் அதைச் சொன்ன போது, "நீங்கள் இவ்வளவு தூரம் நடப்பியளே?", எனக் கேட்டாள்.

"நீ ஒவ்வொரு நாளும் நடக்கிறனி தானே, உன்னை விட நான் சக்கட்டையே?", எனக் கேட்டாள் சொர்ணம் ஒரு மெல்லிய புன்னகையுடன். இருவரும் புத்தகப் பைகளைத் தோளில் கொழுவியவாறு புறப்பட்டனர்.

சொர்ணத்தைப் பொறுத்த வரையில் நடந்து போவது ஒரு புதிய அனுபவமாயிருந்தது. அதிலும் முத்துலட்சுமியுடன் நடந்து போவதில் ஒரு சந்தோஷம் இருப்பதாகவே அவளுக்குத் தோன்றியது.

வளைந்து வளைந்து சென்ற ஒழுங்கைகளால் நடந்து துவாளி பிள்ளையார் வோலிலடிக்கு வந்த போது பரந்த வயல் வெளியும், அதன் நடுவில் வீற்றிருந்த துவாளி அம்மன் கோவிலும் அதன் பின்னணியில் தெரிந்த வல்லை வெளியும் சொர்ணத்திற்கு ஒரு புதிய உலகத்தை அறிமுகப்படுத்தின.

சொர்ணம் மெல்ல முத்துலட்சுமியைப் பார்த்து, "உண்மையிலை நீங்கள் அதிஷ்டக்காறியள் தான்", என்றாள்.

முத்துலட்சுமி, "ஏன்?", எனக் கேட்பது போல் விழிகளை அகலத்திறந்து சொர்ணத்தைப் பார்த்த போது அவள், "நீங்கள் இவ்வளவு வடிவான இடங்களை ஒவ்வொரு நாளும் காலமையும் பின்னேரமும் பார்த்து அனுபவிச்சுக் கொண்டு வருவியள்", என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்து ஒரு பெருமூச்சுடன் சொன்னாள், "என்னக்கா வடிவு. ஒவ்வொரு நாளும் மூச்சுவேண்ட ஓட்டமும் நடையுமாய் மூண்டு கட்டை வந்து போறதிலை போதுமெண்டு போம். நீங்கள் ஒரு பிரச்சினையும் இல்லாமல் காரிலை போவியள்"

"ஏதோ, காரிலை போறது பெரிய சொகுசு எண்டு நீ நினைக்கிறாய். எனக்கு அதுவும் ஒரு மறியல் தான். இப்படி காத்துப்பட நடக்கிறது எவ்வளவு சந்தோஷம்."

"இக்கரைக்கு அக்கரைப் பச்சை தான்", என்று விட்டு வயலில் இறங்கி வரம்பில் நடக்கத் தொடங்கினாள் முத்து, ஒரு அடி அகல வரம்பில் எதிர்காற்றில் நடப்பது சொர்ணத்துக்கு சற்ற சிரமமாக இருக்கிற போதிலும் அதில் ஒரு சுகம் இருப்பதாக அவள் உணர்ந்தாள்.

சொர்ணம் மேற்குப்பக்கமாய் பார்த்து விட்டு, "அதென்ன அம்மன் கோயிலுக்கு நேரை தூரத்திலை ஒரு கூடலாய்த் தெரியுது?", எனக் கேட்டாள்.

"அது கல்லுவத்திலையிருந்து வாற றோட்டு யாழ்ப்பாணம் றோட்டிலை ஏறுற சந்தியிலை இருக்கிற தென்னந்தோப்பு. சைக்கிளிலை இல்லாட்டில் கால் நடையாய் வாறவை அதிலை ஆறித்தான போவினை"

சொர்ணம், "இந்தப் பெரிய வெளியிலை ஆரோ ஒரு புண்ணியவான் தென்னந்தோப்பு, வைச்சிருக்கிறான்", என்றாள் வியப்புடன்.

"சந்நதிக்கு நடையிலை போய் வரயுக்க தான் அந்த நிழலின்ரை அருமை தெரியும்", என்றாள் முத்து.

அவர்கள் நடந்து போனபோது குறுக்கே வந்த பெரிய வாய்க்காலால் இறங்கி எறிய போது சுழன்றடிக்க சோழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொர்ணத்தின் சட்டையைக் தூக்கப் பார்த்தது. உடனடியாகவே அதை அழுத்திப் படித்த சொர்ணம், "சீ என்னடி இந்தக் காத்து" என்றாள்.

முத்து பெரிதாகச் சிரித்தே விட்டாள், "என்ன பிள்ளை காத்தையும் வெளியையும் பற்றிப் பாராட்டினியள் இப்ப ஏசுறியள்?"

அவள் பிள்ளை, என்று கூப்பிட்டது சொர்ணத்திற்குக் கோபத்தை மூட்டி விட்டது.

"ஏய் எத்தினை நாள் சொன்னனான் பிள்ளை வேண்டாம் அக்கா எண்டு கூப்பிடெண்டு"

"ஏதோ பழக்கத்திலை, சரியக்கா இனி அக்கா எண்டே கூப்பிடுவேன்", என்றாள் முத்து.

"எங்கை கூப்பிடு"

ஒரு இனம் புரியாத பாசத்துடன் முத்து, "அக்கா என்ரை அக்கா", என்றாள் மென்மையான குரலில். முன்பொருநாள் பாடசாலையில் சொர்ணம் கொடுத்த முத்தம் அவள் நினைவில் வந்து போனது.

சொர்ணத்தின் கண்கள் அவளையறியாமலே கலங்கின.

முத்து, "அக்கா!" என அழைத்த போது சொர்ணத்தின் முகத்தில் ஏற்பட்ட மலர்வும், கண்களில் பிறந்த ஒரு உணர்வும் அவளை ஆச்சரியப்பட வைத்த போதிலும் அப்படி அழைப்பதில் தனக்கு ஏதோ ஒரு இன்பம் ஏற்படுவதை அவள் உணரத்தவறவில்லை.

"எனக்கு ஒரு அண்ணன்தான் இருக்கிறார். ஒரு அக்காவோ தங்கச்சியோ இல்லையெண்டு கவலை. இப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு சந்தோஷம் தெரியுமே",, என்று விட்டு சொர்ணம் முத்துவின் கைகளை இறுக்கிப் பிடித்துக் கொண்டு நடக்கத் தொடங்கினாள்.

அந்த நடுவரப்பு ஏனைய வரப்புகளை விட சற்று அகலம் கூடியதாக இருந்த போதும் இருவரும் கையைப் பிடித்துக் கொண்டு அருகருகாக நடப்பது சற்றுச் சிரமமாகத்தான் இருந்தது. இடையிடையே கால் சற்று சறுக்கிய போதும் முத்து சொர்ணத்தின் கையை விடாமலே சிரித்தவாறே மீண்டும் வரப்பில் ஏறி நடந்து கொண்டிருந்தாள். சோளகக் காற்றும் கூட அவர்களின் அந்தப் பாசப்பிடியைக் குழப்பிவிடக் கூடாது என்பதற்காகவோ என்னவோ சுழன்றடித்து அவர்களின் சட்டையைத் தூக்கும் சேட்டையை நிறுத்தியிருந்தது.

அவர்கள் துவாளி வயல் வெளியைக் கடந்து அந்த நீர்முள்ளிச் செடிகள் வளர்ந்திருந்த வெட்டைக்குள் இறங்கினர். அதற்குள் இருந்த மாட்டுவண்டிப் பாதையின் சில்லுகள் போகும் தடத்தில் இருவரும் ஒவ்வொன்றில் நடந்த போதிலும் தங்கள் கைகளை விடுவித்துக் கொள்ளவில்லை.

எதிரே வந்த பனங்கூடலில் இறங்கி அதற்குள் வளைந்து வளைந்து சென்ற ஒற்றையடிப்பாதையில் இருவரும் நடக்கத் தொடங்கினர். பாதையின் அருகில் அங்குமிங்கும் காணப்பட்ட காரைச் செடிகள் அவர்களைச் சமாந்தரமாக நடக்க அனுமதிக்கமறுத்தன. காரை முட்கள் காலில் ஏறினால் அதன் வேதனை எப்படி இருக்கும் என்பதை இருவருமே தெரிந்து வைத்திருந்த படியால் கைகளை விட்டு விட்டு ஒருவர் பின் ஒருவர் நடக்கத் தொடங்கினார்.

அவ்வளவு நேரமும் அமைதியாக நடந்து வந்து கொண்டிருந்த முத்து திடீரென, "அக்கா", என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னால் சென்ற சொர்ணம் நடையை நிறுத்திவிட்டுத் திரும்பி அவளின் முகத்தைப் பார்த்தாள்.

"அக்கா இப்பவெல்லாம் எனக்கு இந்தப் பனங்கூடலுக்கை வரயுக்கை ஏதோ ஒரு மாதிரி இருக்கிறதக்கா", என்றாள் முத்து ஒரு மெல்லிய கவலை கலந்த குரலில்.

"ஏன்? ஏன் அப்படி?", எனக் கேட்டாள் சொர்ணம்.

முத்து ஒரு பெருமூச்சை விட்டு விட்டுக் கூற ஆரம்பித்தாள்,

"நானும் கமலியக்காவும் பள்ளிக்கூடத்தாலை வரயுக்கை இந்தப் பனங்கூடலுக்கை வரவும் எங்கையிருந்து வந்தவரெண்டு தெரியாமல் சிங்கண்ணன் திடீரென வந்து கொண்டிருப்பார். சிங்கண்ணன் எனக்குச் சொல்லுற மாதிரி எதுவும் சொல்லுவார். கமலியக்காவும் பதில் எனக்குத்தான் சொல்லுவா"

"அப்ப நீ ஒரு நல்ல "கடத்தி", என்று விட்டுக் கலகலவெனச் சிரித்தாள் சொர்ணம்.

"இல்லையக்கா நான் வாயே திறக்கிறேல்லை. ஆனால் எனக்குச் சொல்லுற மாதிரி இரண்டு பேரும் கதைச்சுக் கொள்வினம்", என்றாள் பரிதாபமாக முத்து.

"அப்ப உன்பாடு திண்டாட்டம் தான்?"

"சீ அப்படியொண்டுமில்லை. சிலவேளை நல்ல சந்தோசமாய்க் கதைப்பினம். இடையிலை சண்டையும் பிடிப்பினம். பனைவெளி முடியேக்கை மட்டும் நேரை கமலியக்காவைப் பார்த்து, "போட்டு வாறன்" எண்டு சிரிச்சுக் கொண்டு சொல்லிப் போட்டுப் போடுவார். இவவும் மெல்லிய சிரிப்போடை தலையாட்டி விடுவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்மையான காதல் அப்படித்தான் முத்து", என்றாள் சொர்ணம்.

"அது உங்களுக்கு எப்படி தெரியும்?"

சொர்ணம் அந்தக் கேள்வியில் ஒரு முறை தடுமாறிவிட்டாள். பின் ஒருவாறு சமாளித்தவளாக, "நீ சொல்லுறதைப் பார்த்தால் அப்படிக் கிடக்குது", என்றாள்.

"எனக்கும் அப்படித்தன் தோன்றிச்சுது ஆனால்....", என்று விட்டு ஒரு பெருமூச்சுடன் இடைநிறுத்தினாள் முத்து.

"ஆனால் ஏன் நிப்பாட்டியிட்டாய்?"

"கதைச்சுக் கொண்டு வந்த சிங்கண்ணன் ஒரு நாள் திடீரெண்டு கமலியக்காவை எட்டிக் கன்னத்திலை கொஞ்சிப் போட்டார். இவவின்ரை முகம் அப்படியே சிவந்து போச்சுது. உடனேயே", போடா நாயே நீ இனி என்னோடை கதைக்கக் கூடாது", எண்டு போட்டு நடக்கத் தொடங்கியிட்டா. சிங்கண்ணன் எவ்வளவோ கெஞ்சியும் அவ திரும்பிப் பார்க்கவேயில்லை."

"பிறகு....?" சொர்ணம் ஒருவித பதட்டத்துடன் கேட்டாள்.

"அதுக்குப்பிறகு கமலியக்கா பள்ளிக்கூடம் வாறதையே விட்டுட்டா! சிங்கண்ணன் பனங்கூடலடியிலை ஒரு கிழமையாய்க் காத்துக் காத்து நிண்டு அலுத்து கடைசியாய் ஒரு கடிதம் தந்து அவவிட்டைக் கொடுக்கச் சொன்னார். எனக்கும் அவரைப் பார்க்கப் பாவமாயிருந்தது. வேண்டிக் கொண்டு போய்க் குடுத்தன்?"

"ஒண்டும் பேசாமல் வேண்டியிட்டாவே", எனக் கேட்டாள் சொர்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓமோம். சிங்கண்ணன் தந்ததெண்டு சொல்லித்தான் குடுத்தனான். அவ சிரிச்சுக் கொண்டே, "ஆள்வருவார் எண்டு பாத்தால் கடிதமே குடுத்துவிட்டிருக்கிறார்", எண்டு சொல்லிப் போட்டு படிச்சா....", என்று கூறி விட்டு இடை நிறுத்தினாள் முத்து.

"பதில் கடிதம் தந்தவவே?"

"இல்லை, காதலிக்கிறது பனங்கூடல் வழியவும் பத்தையளுக்கையும் கொஞ்சப்படுறதுக்கு இல்லையாம்... கலியாணம் கட்டிக் குடும்பமாய் வாழுவாம் எண்டு அவரிட்டைச் சொல்லி விடு எண்டு போட்டு கடிதத்தை மடிச்சுப் பத்திரமாய் வைச்சா...?"

சொர்ணம் சிங்கன் காதலித்தது கல்யாணம் செய்தது எல்லாவற்றையும் ஏற்கனவே அறிந்திருந்த போதும் அவள் இப்போது கேள்விப்படும் சம்பவங்கள் வியப்பையே கொடுத்தன. சிங்கனின் அன்பும், கமலியின் நேர்மை, உறுதி என்பனவும் அவள் நினைத்ததை விட அவர்களின் காதல் பலமடங்கு உயர்ந்ததாகவே அவளை எண்ண வைத்தன.

"பிறகு...", என ஆவலுடன் கேட்டாள்.

"பிறகென்ன. சிங்கண்ணன் நேரை வந்து கமலியக்காவின்ரை தகப்பனோடை கதைச்சார். அவரும் ஒண்டுக்கும் பயப்பிடாதவர் தானே. உடனையே ஓமெண்டிட்டார். எல்லா அலுவலும் முடிச்சு இரண்டு கிழமையுக்கை கலியாணம் முடிஞ்சுது" எனக் கூறி முடித்துவிட்டு நிறுத்தினாள் முத்து.

இருவரும் சில வினாடிகள் எதுவுமே பேசாமல் நடந்தனர். அந்தக் காதலின் வலிமை, சிங்கன் அநியாயமாகக் கொல்லப்பட்டது என்பன சொர்ணத்தை மிகவும் உணர்ச்சி வசப்படவைத்து விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்து அங்கு நிலவிய மௌனத்தைக் கலைத்தாள்.

"அக்கா சிங்கண்ணன் அவசரப்பட்டுக் கொஞ்சாமல் இருந்தால் அவவும் உடனை கலியாணம் செய்யச் சொல்லிப் பிடிவாதம் பிடிச்சிருக்க மாட்டா. அவரும் உயிரோடை இருந்திருப்பார்"

"இல்லை முத்து... எப்பவெண்டாலும் அவை பிரச்சினைக்கு முகம் கொடுக்கத் தான் வேண்டி வந்திருக்கும். இப்ப கொஞ்சம் முந்தியிட்டுது. உண்மையான காதலுக்காகச் சாகிறதிலை கூட ஒரு பெருமை இருக்குது"

"எனக்கா நீங்கள்? செத்துப் போட்டால் பிறகென்ன காதலும் பெருமையும். இப்ப பாருங்கோ அவவின்ரை காதல் எவ்வளவு உயர்வாய்த் தான் இருந்தாலும் அவ இப்ப ஒரு வாழா வெட்டி", என்றாள் முத்து.

"அப்ப காதலிச்சவனை விட்டுட்டு இன்னுமொருதனைக் கட்டுறதே?", சற்று உரத்த தொனியிலேயே கேட்டாள் சொர்ணம்.

"இல்லையக்கா காதலிக்கேக்கை யோசிச்சுக் காதலிச்சிருக்கலாம் எண்டு சொல்ல வந்தன்?"

"முத்து காதல் எண்டது ஒரு நாள் இரண்டு நாளிலை வாறது இல்லை. கொஞ்சம் கொஞ்சமாய்த் தான் வளருறது. அப்ப யோசியாமலே காதலை வளர்த்திருப்பினம்", என நிதானமாகவே கேட்டாள் சொர்ணம்.

முத்துவால் எந்தப் பதிலையும் சொல்ல முடியவில்லை. அவள் சொன்னவை கூட ஏதோ புரியாத மாதிரியும் ஆனால் அதற்குள் ஏதோ உண்மைகள் இருப்பது போலவும் அவளுக்குத் தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் பனங்கூடலுக்கால் வெளியேறி பிரதான வீதியில் ஏறினர். பின் சிறிது தூரம் நடந்த பின்பு ஒரு தோட்ட வெளிக்குள் இறங்கி நடக்கத் தொடங்கினர். தோட்டத்திற்குள் செல்லும் போது இருவரும் செருப்புகளைக் கழற்றிக் கையில் எடுத்துக் கொண்டனர்.

தோட்டக்கிணற்றில் சூத்திர வாளியால் நீர் இறைத்துக் கொண்டிருந்தனர்.

மாடுகள் கிணற்றைச் சுற்றி நடந்து கொண்டிருக்க அவற்றின் நுகத்துடன் கொழுவப்பட்ட துலா நடுக்கிணற்றின் மேல் அமைக்கப்பட்ட ஒரு அச்சைச் சுழற்றிக் கொண்டிருந்தது. அந்த அச்சில் பிணைக்கப்பட்ட வரிசையாகக் கோர்க்கப்பட்ட வாளிகள் தலைகீழாகக் கிணற்றுக்குள் போய் நீரைக் கோலிக் கொண்டு வந்து பனைமரத்தால் கடைந்து செய்யப்பட்ட ஒரு பீலியில் ஒன்றன் பின் ஒன்றாக ஊற்றிக் கொண்டிருந்தன. பீலியில் விழுந்த நீர் வாய்க்காலில் சேர்ந்து பயிர்களுக்குப் போக ஒருவர் நின்று தண்ணீர் மாற்றிக் கொண்டிருந்தார்.

இன்னொருவர் மாடுகளை விரட்டியவாறு சூத்திரம் வளைந்து கொண்டிருந்தார்.

சொர்ணம் கேட்டாள், "முத்து அவர் இப்படி சுத்தி சுத்தி நடக்க தலையைச் சுற்றாதே?"

"அது ஒரு நாளைக்கு இரண்டு நாளைக்குள் சுத்தும் பிறகு பழகியிடும்", என்றாள் முத்து.

"அப்ப இந்தச் சாதி மாறிக் கல்யாணம் கட்டிறது முதல் பிரச்சினையாய் இருக்கும். பிறகு பழகியிடும். என்ன?", எனக் கேட்டாள் சொர்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்து திடுக்கிட்டுப் போய் கேட்டாள், “என்னக்கா சொல்லுறியள்?”

“இல்லை தலைச்சுத்து பழகிறமாதிரி சாதிப்பைத்தியமும் போகப் போக மாறத்தானே வேணும்”, என்று விட்டுக் கலகலவெனச் சிரித்தாள் சொர்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 27

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பெற்றோர் தின விழா என்றால் அப்பாடசாலையைச் சுற்றியுள்ள பதினைந்து, இருபது கிராமங்கள் அங்கு கூடி விடுவதுண்டு. அப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களின் பெற்றோர்கள் அதைத் தங்கள் சொந்த விழாவாகவே கருதி வந்தனர்.

விதானையாரும் மனைவி கனகாம்பிகையும் பாடசாலை வாசலில் காரை விட்டு இறங்கிய போதே சுந்தரமூர்த்தி கண்டுவிட்டார். உடனடியாகவே அவர் அருகில் சென்று விதானையாரின் கையைப் பிடித்து வரவேற்றார்.

இருவரும் குடும்ப சமேதரராகச் சென்று அருகருகாக அமர்ந்து கொண்டனர். விதானையார் கதிரையில் அமர்ந்த போதே அருகில் இருந்த குடியரசு கந்தப்பரைக் கண்டுவிட்டார். "கந்தப்பண்ணை நேரத்துக்கே வந்திட்டியள் போலை?", என்றார்.

கந்தப்பர் மெல்ல ஒரு முறை மீசையைத் தடவி விட்டுச் சிரித்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சியில் பிறந்து வளர்ந்த எவரும் கந்தமுருகேசனாரை அறியாமலே இருக்க முடியாது. அங்குள்ள சகல தமிழ் பண்டிதர்களும் வித்துவான்களும் அவரிடம் பாடம் பயின்றவர்கள் தான். கால்கள் வழங்காத அவர் தமிழ்ப்பாடம் கற்றுக் கொடுப்பது அவரின் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தான். தொல்காப்பியம் முதல் சங்ககால இலக்கியங்கள் வரை கற்பிப்பார். கம்பராமாயணம் சொல்லும் செய்திகளை அவர் ஏற்றுக் கொள்ளாவிடினும் கம்பனின் கவித்துவத்தில் மாறாத காதல் கொண்டவர்.

அதேவேளையில் பெரியார் ஈ.வே.ராவின் பகுத்தறிவுக் கொள்கைகளில் மாறாத பற்றுக் கொண்டவர். அவர் தமிழுடன் சேர்த்து பகுத்தறிவுக் கொள்கைகளையும் மாணவர்களுக்கு ஊட்டி விடுவார். தாழ்த்தப்பட்ட மக்களில் பண்டிதர்கள், வித்துவான்களை உருவாக்கிய பெருமையும் அவருக்குண்டு.

குடியரசு கந்தப்பர் கந்தமுருகேசனாரின் சீடன் என்று சொல்வதை விட பக்தர் என்று சொல்வதே பொருத்தமாகும். கந்தமுருகேசனாரின் போதனைகளால் கவரப்பட்ட அவர் இந்தியா சென்று பெரியாரைச் சந்தித்து அவருடன் போராட்டங்களில் கலந்து கொண்டார். இங்கு திரும்பி வந்த பின்பு பெரியாரின் கொள்கைகளைப் பரப்பியது மட்டுமன்றி குடியரசுப் பத்திரிகையைத் தருவித்து மக்களிடம் விநியோகமும் செய்து வந்தார். அத்துடன் அவரின் பெயரே குடியரசு கந்தப்பர் ஆகிவிட்டது.

சாதித் தடிப்பில் ஊறிப் போய்விட்ட பலருக்கு அவரைப் பிடிப்பதில்லை. ஆனால் எவரும் அவரை நேரடியாக எதிர்ப்பதில்லை. அப்படி எவராவது மாற்றுக் கருத்தைத் கூறி விட்டால் அப்படிக் கூறியவர் தனது கருத்தை ஏற்கும் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடமாட்டார். அந்தப் பயத்திலேயே அவரைப் பலரும் எதிர்ப்பதில்லை.

விழா ஆரம்பமாகி வரவேற்புரை, அதிபர் உரை, விருந்தினர் உரை என ஒவ்வொன்றாக இடம்பெற்று வந்தன. அடுத்து பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி, நடனப்போட்டி எனப் போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர்களின் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

பேச்சுப் போட்டியில் சொர்ணம் முதல்பரிசு பெற்றிருந்தாள். அவளின் கணீரென்ற குரலும், தெளிவான உச்சரிப்பும் சபையையே கட்டிப் போட்டுவிட்டது.

கந்தப்பர் மெல்ல விதானையார் பக்கம் திரும்பி, "விதானை! உன்ரை பெட்டை கலக்கிறாளடா", என்றார். பேச்சின் தலைப்பும், "சாதிகள் இல்லையடி பாப்பா", என அமைந்திருந்ததும் கந்தப்பருக்கு நன்றாகவே பிடித்துவிட்டது. விதானையாரும் ஒருவித பெருமிதத்துடன் புன்னகைத்தார்.

ஒவ்வொரு நிகழ்ச்சிகளாக இடம்பெற்று இறுதியில் நாடகம் ஆரம்பமாகியது. எம்பெருமான் ஆசிரியரால் எழுதி நெறிப்படுத்தப்பட்ட 'திருநாளைப் போவார்' நாடகத்தில் முத்துலட்சுமி நந்தனாராக நடித்தாள். அப்போதெல்லாம் நாடகங்களில் ஆண்களும் பெண்களும் இணைந்து நடிப்பதில்லை. ஆண்கள் பெண்கள் வேஷத்திலும் பெண்கள் ஆண்கள் வேஷத்திலும் நடிப்பார்கள்.

"நந்தி மறைக் குதையே!" எனப்பாடி முத்துலட்சுமி கண்ணீர் விட்டு நடித்த போது சபையே உருகிப் போய்விட்டது. கந்தப்பர் மெல்ல விதானையாரிடம் கேட்டார், "விதானை ஆரடா இந்தப் பெட்டை? வலு திறமாய்ச் செய்யிறாள்?"

விதானையார் ஒருமுறை தடுமாறி விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ரை பிள்ளை தான்", என்று பெருமையுடன் சொல்ல முடியாத பரிதாபத்தில் தான் இருப்பதைப் புரிந்து கொண்டார். ஒருவித தயக்கத்துடன், "எங்கடை ஊர் தான்", என்றார்.

கந்தப்பர் விடவில்லை. "ஆரின்ரை மேள்?", எனக் கேட்டார்.

சில விநாடிகள் யோசித்து விட்டு இவள், "அவள் சின்னன்ரை பெட்டை", என்றார்.

"ம்... சின்னனே ஆர் எனக்கு விளங்கேல்லை. தேப்பன்ரை பேர் என்ன?"

விதானையாருக்கு மண்டையே வெடித்துவிடும் போலிருந்தது. இறந்துவிட்ட சின்னனின் புருஷன் பேரைச் சொல்லவும் மனம் இடம் கொடுக்கவில்லை. தனது பிள்ளையென உரிமை கொண்டாடவும் முடியவில்லை.

அதற்குள் நந்தி விலகி நந்தன் சோதியில் கலக்கும் காட்சி வந்துவிட்டது. கந்தப்பர் தன் கேள்விக்கான பதிலை மறந்துவிட்டு, "பாத்தியே பிராமணர் நந்தனை எரிச்சுப் போட்டு சோதியிலை கலந்ததெண்டு பம்மாத்து விடுறாங்கள்", என்றார்.

விதானையாருக்கு கதை மாறியதே பெரும் நிம்மதியாகப் போயவிட்டது. அவர் ஒரு நக்கல் தொனியில் கேட்டார், "அப்பிடியே உன்ரை பெரியார் சொன்னவர்?"

"உண்மையும் அது தான்", என்றார் கந்தப்பர். அதன்பின்பு இருவருமே எதுவும் பேசவில்லை. கனகாம்பிகை எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த போதும் எதுவும் பேசவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்து மேடையிலிருந்து இறங்கி வரும் போது சொர்ணத்துக்குத் தன்னில் ஒரு இனம்புரியாத நடுக்கம் ஏற்பட்டிப்பது போலவே தோன்றியது.

முத்து கேட்டாள், "என்னக்கா ஏதோ பதட்டப்படுறியள்?"

"ஒண்டுமில்லை. நெருப்பு உனக்குத் சுட்டுப் போடும் எண்டு பயந்துபோனன்."

முத்து கலகலவெனச் சிரித்தாள். "என்னக்கா ரிசியூ பேப்பரும் ரேபிள் வானும் உண்டாக்கிற நெருப்பு மாதிரி ஒரு தோற்றம் சுட்டுப் போடுமே?"

"சுடாது எண்டு எனக்குத் தெரியும்! ஆனால் அந்தக் காட்சி என்னைப் பயப்பிடித்திப் போட்டுது"

"அப்படி இயற்கையான நெருப்பு மாதிரி இருக்குமெண்டால் அது எங்கடை எம்பெருமான் மாஸ்ரரின்ரை கெட்டித்தனம்தான்", என்றாள் முத்து.

பரிசளிப்பின் போது ஆரம்பத்திலேயே சொர்ணத்திற்கும் தங்கவேலுவுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. அதிபர் பரிசு வழங்கும்போது எதிர்காலப் பொறியிலாளர், மருத்துவர் எனக் குறிப்பிட்டது. சந்தரமூர்த்திக்கு மட்டுமன்றி விதானையாருக்கும் ஒரு பெருமிதத்தைக் கொடுத்தது. கனகாம்பிகையைப் பொறுத்தவரையில் இதுவரை காலமும் சொர்ணம் படிக்க வேண்டும் என்பதில் பெரிய அக்கறை எதுவும் இருந்ததில்லை. ஆனால் விழாவில் சொர்ணத்துக்குக் கிடைத்த பாராட்டுகள் அவள் மனதிலும் சொர்ணத்தை ஒரு மருத்துவராகக் வேண்டும் என்ற ஆசையை மூட்டிவிட்டன.

விழா நிறைவு பெற நேரம் இரவு இரண்டு மணியாகி விட்டது. எம்பெருமான் மாஸ்ரர் முத்துவிடம் வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முத்துலட்சுமி... நான் எதிர்பார்த்ததை விட நல்லாய் நடிச்சீர்", என்று பாராட்டினார் அவர்.

"எல்லாம் நீங்கள் சொல்லித் தந்ததுதானே சேர்", என்றாள் முத்து மிகவும் அடக்கமாக.

சொர்ணம் திடீரென்று குறுக்கிட்டாள். "நடிப்பு நல்லது சேர். ஆனால் எனக்கு நாடகம் பிடிக்கேல்லை சேர்"

எம்பெருமான் வியப்புடன் கேட்டார், "நீர் என்ன சொல்லுறீர்?"

"கோபிக்காதேங்கோ... சேர் இப்பவும் இந்தச் சாதிப் பிரச்சினையைத் தூக்கிப் பிடிக்கிறது எனக்குப் பிடிக்கேல்லை?"

"சொர்ணலட்சுமி நந்தன் கதை கூட சாதிக்கு எதிரான போராட்டம் தான். சாதிப்பாகுபாடு இருக்கும் வரையும் இப்படி நாடகங்கள் போடத்தான் வேணும்" என்றார் எம்பெருமான் மிகவும் நிதானமாக அதற்குள் விதானையாரும் கனகாம்பிகையும் சுந்தரமூர்த்திக்கும் குடும்பத்தினருக்கு விடை கொடுத்துவிட்டு அவர்கள் நின்ற இடத்துக்கு வந்துவிட்டனர்.

விதானையார் சில நிமிடங்கள் எம்பெருமானிடம் கதைத்துவிட்டு சொர்ணத்திடம், "பிள்ளை வெளிக்கிடுவம்", என்றார்.

"ஓமய்யா", என்று விட்டு சொர்ணம் முத்துவின் பக்கம் திரும்பி, "நீ என்னண்டு வரப்போறாய்?", எனக் கேட்டாள்.

"அம்மா வந்து நிக்கிறா... நாங்கள் நடந்து வந்திடுவம். அங்கையிருந்து கனசனம் வந்திருக்குது", என்றாள் முத்து.

சொர்ணம் முத்துவைப் பார்த்து, "நீ எங்களோடை காரிலை வாவன்", என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகாம்பிகை அதிர்ந்தே போய்விட்டாள். அவள் சொண்டைப் பல்லால் கடித்து சொர்ணத்தை முறைத்துப் பார்த்த பார்வையை விதானையார் அவதானித்து விட்டார்.

"அவள் தாயை விட்டிட்டு என்னண்டு வாறது.... நீ வா", என்று விட்டு நடக்கத் தொடங்கினார் விதானையார்.

தாயின் பார்வையும் விதானையார் அடுத்த கதைக்கு இடம் வைக்காமல் நடக்கத் தொடங்கியதும் கோபத்தை மூட்டிய போதும் அவள் எதுவுமே பேசவில்லை. அவர்களின் சாதித் தடிப்பை நினைக்க அவளுக்குள் ஏதோ ஒருவித அருவருப்பே மிஞ்சியது.

அவர்கள் மேடையின் பின்புறத்திலிருந்து வெளியே வந்த போது அங்கு நின்ற சின்னனை விதானையார் கண்டுவிட்டார். அவர், "சின்னன் ... பிள்ளையைக் கவனமாய்க் கூட்டிக் கொண்டு போ. போனவுடனை மிளகாய் துடைச்சுப் போடு", என்று விட்டு நடையைத் தொடர்ந்தார்.

கனகாம்பிகைக்கு கோபம் உச்சிக்கு ஏறிவிட்டது. அதை விதானையாரிடம் காட்ட முடியாத நிலையில் சொர்ணத்தின் மீது பாய்ந்தாள். "வர வர எளியன் சாதியளோடை சம்பந்தமும் செய்வியள் போலை கிடக்கு. வா வீட்டை உனக்கு சொல்லுறன் கதை".

விதானையாரின் செருமலுடன் சகல வாய்களும் மூடிக் கொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 28

அன்று சொர்ணத்திற்கு தூக்கம் கலைந்த போது நேரம் பதினொரு மணியாகிவிட்டது. இடையில் கனகாம்பிகை தேநீர் குடிக்க எழுப்பிய போதும் அவள், "வேண்டாம்". என்று விட்டு மறுபக்கம் புரண்டு படுத்துவிட்டாள். இரவு விழா முடிந்து வந்து படுக்க நேரம் இரவு இரண்டு மணிக்கு மேலாகி விட்டபடியால் கனகமும் மேற்கொண்டு வற்புறுத்தவில்லை.

தூக்கம் கலைந்து விட்ட போதும் சொர்ணத்துக்கு கட்டிலை விட்டு எழ மனம் வரவில்லை. அவளின் உடல் மட்டுமன்றி மனமும் சோர்ந்து போய் விட்டதாகவே அவளுக்குத் தோன்றியது. விழாவில் அவளின் பேச்சுச் திறமையை அனைவரும் பாராட்டியது, அதிபர் வருங்கால மருத்துவர் என மேடையில் கூறியது போன்ற சம்பவங்களால் ஏற்பட்ட மகிழ்ச்சி முத்துவையும் சின்னனையும் காரில் ஏற்றாது இரவுப் பொழுதில் நடந்து வர விட்டதன் மூலம் பெற்றோரின் சாதிவெறியில் எங்கோ ஓடிப் போய்விட்டதாகவே தோன்றியது. எனினும் தொடர்ந்து படுத்திருக்கவும் கூட அவளால் முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் எழுந்து காலைக் கடன்களை முடித்துக் குளித்துவிட்டு வந்த போது கனகம், "இடியப்பம் போட்டு வைத்து கிடக்குது, எடுத்துச் சாப்பிடு", என்றாள்.

"எனக்குப் பசிக்கேல்லை", என்று விட்டு அவ்விடத்தை விட்டு நடந்தாள் சொர்ணம். எதையுமே புரிந்து கொள்ளமுடியாமல் அப்பாவித்தனமாக அவளை நோக்கினாள் கனகம். விறாந்தையில் காலை நீட்டியவாறு மூடல் பெட்டியைப் பொத்திக் கொண்டிருந்த சீதேவிக் கிழவி நடந்தவற்றை அவதானித்து விட்டாள்.

"ஓ.. ஓ.. கொழுப்பு மெத்தினால் மாடு கொம்புக்கு மண் எடுக்குமாம் போடி போய்ச் சாப்பிடு", என்றாள் கிழவி. அதைப் பொருட்படுத்தாமலே சாமியறைக்குள் புகுந்து கொண்டாள். கிழவியும் மேற்கொண்டு எதையுமே பேசவில்லை.

சொர்ணம் படத்தடியில் சென்று விளக்கு வைத்து விட்டு திருநீற்றை அள்ளி நெற்றி நிறைய அப்பியவாறு வெளியே வந்தாள்.

அவள் நெற்றியைக் கவனித்து விட்ட கிழவி, "இஞ்சை வா கண்ணை மூடிக்கொண்டு குனி", என்றாள்.

"ஏனணை?", எனக் கேள்வி எழுப்பினாள் சொர்ணம்.

"திருநீற்றை அள்ளி அப்பியிருக்கிறாய். பிறகு கண்ணுக்கை விழுந்து உறுட்டப்போகுது", என்றாள் பாட்டி.

சொர்ணம் குனிய சீதேவிக்கிழவி அவளின் நெற்றியை நன்றாக வாயால் ஊதிவிட்டாள். பாட்டி தன்னில் வைத்திருக்கின்ற அன்பு அவளை ஒரு கணம் நெகிழ வைத்தாலும் அவர்களின் சாதித்தடிப்பை நினைத்த போது அந்த அன்பு சாதி வட்டத்துக்கு வெளியே வரும் சக்தியற்றது என்றே தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிள்ளை போய்ச் சாப்பிடு. விடியக் காலமை வெறுவயிற்றோடை இருக்கக் கூடாது", என்றாள் கிழவி மிகவும் பவ்வியமாக.

சில சமயங்களில் தனது பாட்டி தாய் போன்றோரை நினைத்து சொர்ணம் பரிதாபப்படுவதுண்டு. அடுத்தவர்களை அடக்குவதிலும் அதிகாரம் செய்வதிலும் எப்போதுமே பின்நிற்காத அவர்கள் தங்கள் வீட்டு ஆண்கள் முன் சரி. பிழைகள் பற்றிய எவ்வித பிரக்ஞையுமின்றி அடங்கிப் போய்விடுகின்றனர். முத்துவின் பிறப்பு என்பது தனது தகப்பனின் தவறு என்பதில் அவளுக்கு எவ்விதமாற்றுக் கருத்தும் இருந்ததில்லை. அதில் சின்னனுக்கு பங்கிருந்தாலும் அது தன் தகப்பனின் அதிகாரம் உருவாக்கியது தான் என்பதை அவள் நம்பினாள். தவறின் மூலகர்த்தாவான தனது தந்தை கௌரவத்துடனும் நல்ல பெயருடனும் உலவ, எதுவுமே அறியாத முத்து பாவப்பட்ட ஜென்மமாகப் பார்க்கப்படுவதை அவளால் சகிக்க முடியவில்லை. அது பற்றி தான் கூட தன் தந்தையை எதிர்த்துக் கேள்வி கேட்குமளவுக்கு இல்லையென்பதை நினைத்த போது அவளுக்குத் தன்னிலேயே வெறுப்பாயிருந்தது.

ஏனோ இளையவனைச் சந்தித்துக் கதைத்தால் மனதுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருக்கும் போல் தோன்றியது. அவள் சாப்பிட்டது பாதி சாப்பிடாதது பாதியாக உணவை முடித்து விட்டு கட்டிலில் போய்ப் படுத்துக் கொண்டாள். கண்களை இறுக மூடிக் கொண்டு படுத்த போது தூக்கம் வரப் பிடிவாதமாக மறுத்தது.

நாலு மணியானது வாளியில் நீரை நிரப்பிக் கொண்டு பூக்கன்றுகளை நோக்கிப் போனாள். ரோஜாக்களும் செவ்வந்திகளும் அழகாகத் தான் இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு பேணியாக அள்ளி ஊற்றிக் கொண்டிருந்த போதிலும் காதுகள் மட்டும் சங்கடப்படலை திறக்கும் சத்தத்திற்காகக் காத்துக் கிடந்தன. ஒரு வாளி நீர் முடிந்து அடுத்த வாளி அள்ள கிணற்றடிக்குச் சென்ற போது இளையவன் வந்துவிட்டான். அவள் எதிர்பாராத விதத்தில் அவனே பேச்சை ஆரம்பித்து விட்டான்.

"பிள்ளை ராத்திரி உங்கடை பேச்சிலை அவ்வளவு சனத்தையும் ஆடாமல் அசையாமல் இருத்தி விட்டுட்டியள்"

"சனம் ஆடினது ஆடாதது கிடக்கட்டும். உனக்கு என்ரை பேச்சு பிடிச்சுதோ இல்லையோ?", என ஏதோ ஒருவிதமான ஆவல் பொங்கக் கேட்டாள் சொர்ணம்.

அவன் மெல்ல ஒருமுறை அவளின் முகத்தைப் பார்த்துச் சிரித்து விட்டு, "நீங்கள் எது செய்தாலும் நல்லாத்தானே செய்வியள்", என்றாள் இளையவன்.

ஏதோ தங்க விருது கிடைத்தது போன்ற உணர்வு அவள் இதயத்தில் ஊறியதை அவளால் உணர முடிந்தது. பின்பு அவள் "சாதியை, சாதிப்பேயை அழிக்கிறதெண்டால் இளைய சமுதாயம் துணிய வேணும் எண்டு நான் சொன்னது பிடிச்சதே?", என்று கேட்டாள்.

இளையவன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. சில வினாடிகளின் பின்பு அவன், "பேச, கேட்க நல்லாய்த் தான் இருந்தது. ஆனால் நடக்க வேணுமே?", என்றான்.

இளையவனிலிருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது. அதன் அர்த்தத்தைச் சொர்ணத்தால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனினும் அது அவன் தனது இயலாமையை எண்ணியதால் ஏற்பட்டிருக்கலாம் எனவும் அவளுக்குத் தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொர்ணம் மெல்ல தலையைக் குனிந்தவாறே மெல்லிய குரலில் சொன்னாள், "இப்ப நான் ஏன் இந்தக் குடும்பத்தில் பிறந்தன் எண்டு கவலைப்படுறன்"

ஒருவிதமான அதிர்ச்சியுடன் இளையவன் சொர்ணத்தைப் பார்த்தான்.

"நாங்களும் ஏன் எங்கடை குடும்பத்திலை பிறந்தம் எண்டு பல நேரங்களில் கவலைப்படுறனான்", எனச் சொல்ல நினைத்த இளையவன் வலிந்து அந்த வார்த்தைகளை அடக்கிக் கொண்டான். சொர்ணத்திற்கு அலுமாரியை அரக்கிக் கொடுப்பதற்காக விதானையார் வீட்டு விறாந்தையில் ஏறியதற்காக முதுகில் பிரம்படி வாங்கிய சம்பவம் நினைவில் வந்து போனது.

என்றாலும் கூட, "எல்லாம் இக்கரைக்கு அக்கரை பச்சை தான் பிள்ளை", என்று மட்டும் கூறிவிட்டு நிறுத்தினான்.

"நேற்று இரவு சின்னனையும் முத்துவையும் ஐயா காரிலை ஏத்தாமல் விட்டிட்டு வந்ததும் எவ்வளவு கவலைப்பட்டனான் தெரியுமே?"

"இதுக்கேன் கவலைப்படுவான். எங்களுக்கு நடந்து போறது நல்ல பழக்கம்", என்றான் இளையவன்.

சொர்ணம் சீறினாள், "அவள் என்ரை தங்கச்சி. நான் காரிலை போக அவள் மட்டும் ஏன் நடப்பாள்?"

விதானையாரைக் கோபிக்க வேண்டிய இடத்தில் ஏன் தன்மீது சீறி விழுகிறாள் என்பதை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் அவளுள் ஒரு போராட்டம் ஆரம்பமாகி விட்டது என்பதையும் அதற்கு தானே பிரதான காரணம் என்பதையும் அவன் புரிந்து கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள், "ஒண்டை மட்டும் வடிவாய் நினைவிலை வை. முத்துலட்சுமி எனக்குத் தங்கச்சி. நீ எனக்கு மச்சான். அது வெளியிலை தெரியாட்டிலும் மாற்ற முடியாத உண்மை", என்று விட்டு வேகமாக அவ்விடத்தை விட்டு நடக்க ஆரம்பித்தாள்.

இளையவன் திகைத்துப் போய் அவளின் கோபம் கலந்த நடையைப் பார்த்துக் கொண்டே நின்று விட்டான்.

சிறிது நேரத்தில் சங்கடப்படலையடியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வந்து நின்ற சத்தம் கேட்கவே சொர்ணம் முன்பக்கம் வந்தாள்.

குடியரசு கந்தப்பரும், இன்னுமொரு இளைஞனும் அந்த பி.எஸ்.ஏ.மோட்டார் சைக்கிளைத் தெருவில் விட்டுவிட்டு படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்தனர்.

வழக்கம் போலவே கந்தப்பர் தனது சிம்மக்குரலில், "எங்கையடி பிள்ளை கொப்பன்?", எனக் கேட்டார்.

விதானையாரை அவன், இவன் எனக் கதைக்கும் ஒரு சிலரில் குடியரசாரும் ஒருத்தர்.

"வாருங்கோ மாமா... இங்கை மாலுக்கை இருக்கிறார்." என்றாள் சொர்ணம்.

சீதேவிப்பாட்டி அவரைக் கண்டு விட்டாள், "என்னடா கன நாளைக்குப்பிறகு இஞ்சாலை வாறாய்... என்ன புதுக் குழப்பம் எடுக்கப் போறாய்?", என்றாள் அவள்.

"உனக்கொரு கலியாணம் பேச வந்தனான்", என்று விட்டு மால் பக்கமாய் நடந்தார் குடியரசார்.

"நீ பேசினாலும் பேசுவாய்..... அப்பிடித்தானே விசர் முத்தி ஆடுறாய்", எனக் கிழவி சொல்லியதை அவர் காதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கவில்லை. சாதி இல்லை, கடவுள் இல்லை போன்ற குடியரசாரின் கொள்கைகள் கிழவிக்குப் பிடிப்பதில்லை. எப்போதும் அவருடன் சண்டை போட்டாலும் அவரில் ஒரு தனியான பாசம் உண்டு.

குடியரசாரின் குரல் கேட்டதுமே விதானையார் மாலை விட்டு வெளியே வந்து விட்டார்.

விதானையார், "என்ன ராத்திரி நாடகத்திலை நந்தனாரை எரிச்ச பிராமணனைத் தேடி வந்திருக்கிறியே?", எனச் சிரித்தவாறு கேட்டார்.

"இனி நந்தன்களை எரிக்கிற விளையாட்டு சரிவராது. இஞ்சை நந்தினிகளை நசுக்கிற வெள்ளாளரை நாங்கள் ஏரிக்கப்போறம்"

"நீ செய்தாலும் செய்வாய்?", என்று விட்டு பலமாகச் சிரித்தார் விதானையார்.

"ஓமோம். இப்ப அப்பிடி ஒரு விஷயமாய்த்தான் உன்னட்டை வந்தனான்?", என்றார் குடியரசார்.

விதானையார் திகைப்புடன் அவரின் முகத்தைப்பார்த்தார்.

ஏதோ ஒரு பெரிய வில்லங்கத்தில் தன்னை அவர் மாட்டப் போகிறார் என விதானையார் உணர்ந்தார்.

குடியரசார் ஒருமுறை மீசையைத் தடவி விட்டு செருமிக் கொண்டார். விதானையாரின் முகத்தை நேரடியாகவே பார்த்தவாறு சொல்லத் தொடங்கினார்.

"போனமுறை எலெக்சனிலையும் எங்கடை பொடியன் கந்தையா கேட்கத்தக்கதாய் நவிண்டில் இராமலிங்கத்தாருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்போட் பண்ணி அவரை எம்.பியாக்கினியள். என்ன பிரயோசனம் கண்டியள்?"

"பிரயோசனம் எதிர்பார்த்தே அவரை ஆதரிச்சனாங்கள். அவர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின்ரை கட்சியிலையல்லே கேட்டவர்"

குடியரசாரின் குரல் சற்று உயர்ந்து. "ஜீ. ஜீ. உனக்கென்ன மாமனோ..... மச்சானே... இவன் எங்கடை இரத்த உரித்தல்லே?"

விதானையாரும் விடவில்லை. "உரித்து உண்மைதான். ஆனால் இவன் சாதியில்லை. சமயமில்லை எண்டு சொல்லுற கட்சியயில்லே கேட்டவன்."

"இந்த முறையும் அந்தக் கட்சியிலை தான் கேட்கப் போறான். நீங்கள் என்ன செய்யப் போறியள்?"

"அப்பிடியெண்டால் யோசிச்சுத்தான் செய்ய வேணும்."

"அப்ப.... மணிய உடையாரின்ரை பொடியனை எம்.பி. ஆக்கிப்போட்டு ஏதும் அலுவலுக்கு அவன்ரை வீட்டு வாசலிலை நிக்கப் போறியளே?"

"ஏன் அவனே பொன்னரின்ரை கட்சியிலை கேட்கிறான்?"

"ம்...!", என்றார் குடியரசார்.

சில வினாடிகள் மௌனம் நிலவியது.

குடியரசார் மெல்லக் கதையைத் தொடர்ந்தார். "இந்த முறை கந்தையாவுக்கு நல்ல சப்போட் இருக்குது. நாங்களும் மூச்சுப் பிடிச்சு வேலை செய்தால் வெல்ல வைச்சிடலாம்."

"எங்கடை பொடியன் எம்.பி.யாய் வரத்தான் வேணும்..... இவன் கேட்கிற கட்சியல்லே பிழை!",



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியரசார் குறுக்கிட்டார். "விதானை இப்ப காலம் மாறிப்போச்சுது. பழைய விசயங்களைத் தூக்கிப் பிடிக்க ஏலாது. கந்தமுருகேசனார் இறுக்கிச் சொல்லிப் போட்டார். எல்லாம் பண்டிதர்மாரும் வித்துவான்களும் இறங்கி வேலை செய்யப் போகினம். விளங்குதே?"

கந்தமுருகேசனாரின் ஆதரவு கிடைத்தால் வெற்றி நிச்சயம் என்பது விதானையாருக்குத் தெரியும். ஆசிரியர்கள் இறங்கித் தேர்தல் வேலையில் ஈடுபட்டால் வரமராட்சியில் வெற்றி நிச்சயமாகிவிடும். விதானையார், "என்ரை ஏரியாவிலை முழுவோட்டும் எங்கடை பொடியனுக்கு விழ வைப்பன். ஆனால் ஆலடிவெட்டையாரை இவன் காசிப்பிள்ளை முதலாளி குழப்பப் பாப்பான்" என்றார்.

"அதைப்பற்றி நீ கவலைப்படாதே. பாலவெட்டையாரைக் கொண்டு அவங்களை மடக்கலாம். இனி கனகரத்தினம், சிவஞானம் ஆக்கள் எங்களுக்கு வேலை செய்வாங்கள்."

மேலும் சிறிதுநேரம் கதைத்துக் கொண்டு இருந்துவிட்டு, எதிர்வரும் வெள்ளி நியமனப்பத்திரம் தாக்கல் செய்ய யாழ்ப்பாணம் கச்சேரிக்கும் வரும்படி கூறி விட்டுக் குடியரசார் புறப்பட்டார்.

விடைபெற்றுக் கொண்டு போய் மோட்டார் சைக்கிளில் ஏறிய கந்தப்பர் விறாந்தையில் நின்ற சொர்ணத்தைக் கண்டு விட்டார்.

"பிள்ளை! வாடி இஞ்சை", என்ற அவரின் அழைப்பைக் கேட்டு அருகே வந்தாள் சொர்ணம். அவர் அவளை நோக்கி, "கந்தையாவின்ரை பிரசாரக் கூட்டங்களிலை நீ தான் பிரதம பேச்சாளர். விளங்குதோ?", என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்ல புன்னகைத்தவாறே அருகில் நின்ற சீதேவிப் பாட்டியைப் பார்த்தாள் சொர்ணம். அதை அவதானித்த குடியரசார், "அது கிழவி கத்தும் தான். நீ ஏன் காதிலை விழுத்திறாய்", என்றார். கிழவிக்குக் கேட்டுவிட்டது அவரின் கிண்டல்.

சீதேவிப் பாட்டியும், "படுவா பல்லுடைபடப் போறாய். நீ போய்க் கண்ட நிண்ட சாதி வீடெல்லாம் நக்கு. அதுக்கு ஏன் அவளை இழுக்கிறாய்", என்றாள்.

அவர், "சும்மா பிடுங்கி அடுக்காதை. உன்ரை மேன் வெள்ளான் சீவிற கள்ளே குடிக்கிறவன்", எண்டு சிரித்தவாறே சொல்லி விட்டு அவர் மோட்டார் சைக்கிளை 'ஸ்ராட்' செய்தார்.

"உனக்கு ஆரும் ஒரு கீழ் சாதிக்காரியை கட்டித் தந்திருக்க வேணும். பிழை விட்டிட்டம்", எனக் கிழவி கறுவியதைக் கேட்க அவர் அங்கு நிற்கவில்லை.

"அப்பிடியெண்டால் உன்ரை பேத்தியை ஒரு சீவல்காறனுக்குக் கட்டிக் குடுப்பியே?", எனக் கேட்க வேண்டும் போல் சொர்ணத்துக்குத் தோன்றியது. ஆனால் துணிவு வராத நிலையில் அது மனதுக்குள்ளேயே அடங்கிப் போனது. ஆனால் வலிந்து அடக்கப்படும் உணர்வுகள் என்றோ ஒரு நாளில் வெடிக்கும் என்பதை அவள் அறியாமல் இல்லை. அந்த நாளை எண்ணும் போது மனதில் பெரும் பயம் தோன்றினாலும் கூட அவளின் மனம் அப்படியான ஒரு நாளுக்காக ஏங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 29

தேர்தல் தொடர்பான ஒரு முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடத்துவதற்காக பொன்.கந்தையா அவர்களின் வீட்டில் விதானையார், குடியரசார் உட்பட ஏராளமானோர் கூடியிருந்தனர். அங்கு கூடியிருந்த பண்டிதர்கள், வித்துவான்களின் தொகையைப் பார்த்த போது கந்தமுருகேசனாரின் வார்த்தைகளின் சக்தியைக் குடியரசாரால் புரிந்துகொள்ள முடிந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து வைத்திலிங்கம் மாஸ்ரர், வி.பொன்னம்பலம், மாதகல் கந்தசாமி போன்ற பல வேட்பாளர்களும் வந்திருந்தனர்.

பொன்.கந்தையா ஒரு பக்கமாக இருந்து சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் எம்.சி.சுப்பிரமணியத்துடனும் வி.ஏ.கந்தசாமியுடனும் ஏதோ ஆழமான விஷயங்கள் தொடர்பாகப் பேசிக் கொண்டிருந்தார்.

கூட்டம் தொடங்க சிறிது நேரமிருந்தபடியால் விதானையாரும் குடியரசாரும் சற்றுத் தொலைவில் மாமரத்தின் கீழ் கதிரையைப் போட்டு அமர்ந்திருந்தனர். விதானையார் முதல் நாள் மாலை தான் கமலியுடன் கதைத்ததையும் அவள் பொன்னம்பலத்தையும் இராமலிங்கத்தையும் வெட்டப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவதாகக் கோபாவேஷம் கொண்டதையும் குடியரசாருக்குச் சொல்லி வியந்து கொண்டிருந்தார்.

அப்போது தான் பஸ்ஸிலிருந்து இறங்கி நடந்து வந்த காத்திகேயன் மாஸ்ரர் உள்ளே வரவே குடியரசார், "வாங்கோ மாஸ்ரர்", என்று அழைத்து அருகில் அமர்த்திக் கொண்டார்.

அவர்களின் கதையை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த காத்திகேயன் மாஸ்ரர், "வெட்டப் போறன் எண்டு நிக்கிற பிள்ளையை வெட்டி விழுத்தி விடச் சொல்லி விடுவம்" என்றார்.

குடியரசார் திகைத்துப் போய்விட்டார்.

"என்ன மாஸ்ரர் பிறகு நிலைமையே தலைகீழாப்போம்"

மாஸ்ரர் சிரித்துவிட்டுச் சொன்னார். "நான் கத்தியாலையே வெட்டச் சொன்னனான். வாயாலை வெட்ட வேணும்."

இருவருக்கும் எதுவுமே புரியவில்லை.

மாஸ்ரர் தொடர்ந்தார். "அவள் பிள்ளை மேடையிலே ஏறி சாதி வெறியாலை தான் சின்ன வயதிலை விதவையாய்ப் போன கதையைச் சொல்லி உங்கடை பிள்ளைக்கு இப்படி நடந்தால் தாங்குவியளே எண்டு நாலு கேள்வி கேட்க கூட்டத்திலை இருக்கிற பொம்பிளையளின்ரை கண் கலங்கும். எல்லாம் இந்தச் சாதி வெறியாலை தானே வந்தது எண்டு போட்டு இறங்கினால் போதும் மிச்சத்தை அடுத்த பேச்சாளர் பாப்பர்."

குடியரசாருக்கும் சந்தோசத்துக்கு அளவில்லாமல் போய்விட்டது. தனக்கு இந்த எண்ணம் வராததற்காகத் தன்னைத் தானே நொந்து கொண்டார். "ஓம் மாஸ்டர். பெண்ணெண்டால் பேயும் இரங்கும் எண்ணுவாங்கள். எங்கடை ஆக்கள் மனுஷர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே. கட்டாயம் இரங்குவாங்கள். ஆலடி வெட்டையாருக்கும் சிங்கனை நினைச்சு ஒரு உசார் வரும்", என்றார் குடியரசர்.

மாஸ்ரர் சொன்னார். "எங்கடை சனம் கந்தபுராண கலாசாரத்திலை ஊறினது. சாதி விஷயங்களை வலு கவனமாய்க் கையாள வேணும். பிறகு எல்லாத்தையும் குழப்பி எங்களை நாங்கள் தனிமைப்படுத்தி விடக்கூடாது."

"அது நாங்கள் வடிவாய்ச் செய்வம் மாஸ்ரர். முதல் விதானையாரின்ரை மேள் சொர்ணத்தை மேடையில பேச விட்டிட்டு அவள் பேசிக் கொண்டிருக்கேக்கை இந்த அக்கா சொல்லுறதை ஒருக்கால் கேளுங்கோ எண்டு சொல்ல கமலி ஏறி நாலு வசனம் சொல்லிப் போட்டு இறங்க பிறகு சொர்ணம் சாதி வெறியின்ரை கொடுமையைப் பாத்தியளோ எண்டு தொடர வேண்டியது தானே?", என்றார் குடியரசார் ஒருவித பெருமிதத்துடன்.

விதானையார் சற்று யோசித்து விட்டு, "நல்ல யோசனை தான். ஆனால் ஒரு முறை தான் செய்வாய்", என்றார்.

கந்தப்பர் வியப்புடன், "ஏன் என்ன விஷயம்", எனக் கேட்டார்.

"ஆச்சி. அது தான் எங்கடை சீதேவி ஆச்சி தன்ரை ஊண்டுற பொல்லாலை உன்ரை உச்சந்தலையைத் தான் பிளக்கும்."

"சும்மா கிட. கிழவியை வெட்டியாட எனக்குத் தெரியும்", என்று விட்டு மீசையைத் தடவிக் கொண்டார் குடியரசார்.

கூட்டம் தொடங்கவே அவர்களும் எழுந்து சென்று அதில் கலந்து கொண்டனர். அங்கு பல விஷயங்கள் ஆலோசிக்கப் பட்டன. எல்லோரும் வெற்றி நிச்சயம் என்ற நம்பிக்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகு உற்சாகமாகவே இருந்தனர். இறுதியில் முதலாவது பிரசாரக் கூட்டம் மாலுசந்தியில் வைப்பது எனவும் அதற்கு டொக்டர் எல்.ஏ.விக்கிரமசிங்க, பீட்டர் கெனமன் ஆகியோரை அழைப்பது எனவும் முடிவெடுக்கப்பட்டது. பொன்னுக்குட்டி பருத்தித்துறையிலிருந்து திரும்பி வந்துவிட்டதை அறிந்த குடியரசார் அவரையும் கமலியையும் விதானையார் வீட்டிற்கு அழைத்து வரும்படி ஒரு ஆளை அனுப்பிவிட்டு தான் விதானையார் வீட்டில் வந்து இறங்கினார்.

இருவரும் தேர்தல் சம்பந்தமான விஷயங்களை கதைத்துக் கொண்டிருந்த போது விதானையார் கேட்டார்.

"அது சரி. நீ சொர்ணத்தை கூட்டத்திலை பேச கூட்டிக்கொண்டு போக ஆச்சியை எண்ணன்டு சமாளிக்கப் போறாய்?"

கந்தப்பர் ஒரு மெல்லிய சிரிப்புடன், "ஆடுறமாட்டை ஆடிக்கறக்கவேணும். பாடுறமாட்டைப் பாடிக்கறக்க வேணும். பார் இப்ப திட்டுற கிழவியை திட்டாமலே கறக்கிறன்", என்று விட்டு கிழவியிடம் போனார்.

ரூடல் பொத்திக்கொண்டிருந்த சீதேவிப்பாட்டி, "என்னடா" என்றாள். "வாரகிழமை மாலிச்சந்தையில எங்கடை முதல் கூட்டம் வைக்கிறம். வாவன் போய் பார்ப்பாம்"

"எனக்கு வேறை வேலையில்லையே. நீயும் உன்ரை கூட்டமும்", என்றாள் கிழவி.

"என்ன பெரிய செருக்குக் காட்டுறாய். உன்ரை போத்தியின்ரை பேச்சைக் கேட்ட நீ வரயில்லையே", என்று விட்டுக் கிழவியின் முகத்தைப் பார்த்தார் கந்தப்பர்.

"பேத்தியே எந்தப் பேத்தி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ என்ன நூறு பேத்தியே வைச்சிருக்கிறாய். சொர்ணம் தான்"

கிழவிக்கு கோபம் வந்து விட்டது. பல்லை ஒரு முறை நெருமிவிட்டு, "அவள் ஒண்டுக்கும் வராள். நீ இதாலை போ", என்றாள்.

அவர், "பேய்க் கதை கதைக்கிறாய். நோட்டீசிலையும் போட்டாச்சு. நாளைக்கு மருதப்பிள்ளை நயினாரின்ரை பேத்தி மேடையிலை பேசப்பயந்து வராமல் விட்டிட்டாளம் எண்டால் அது உனக்கு மரியாதையே?", நாளைக்கு விதானை ஊருக்கை தலைநிமிர்ந்து உலாவுறேல்லையே?", எனக் கேட்டார் தனது வார்த்தைகள் கிழவியிடம் நன்கு வேலை செய்வது போலவே அவருக்குப்பட்டது.

"உனக்கு ஆத்திசூடி தெரியுமே...", எனக் கேட்டார் கந்தப்பர்.

"தெரியும்"

"ஆர் பாடினது எண்டு சொல்லு பாப்பம்"

"ஔவையார்"

"உன்னைப் போல மூடல் பெட்டி பொத்திக் கொண்டிருந்தால் ஔவையாரை நீ இப்ப நினைச்சிருப்பியே. அவ எல்லா இடமும் திரிஞ்சு பாடினதாலை தானே இப்பவும் அவவின்ரை பேர் நிலைச்சு நிக்குது", என்றார் கிழவியை மடக்கும் முனைப்புடன்.

"அப்ப என்ரை பிள்ளையையும் கூனிக்கொண்டு பொல்லூண்டினபடி ஊர் ஊராய் நடக்க வைக்கப்போறியே", கிழவி இடைமறித்துக் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை. மேடையில நெஞ்சை நிமிர்த்தி பேச வைக்கப் போறன். அவள் தம்பிப்பிள்ளை விதானையின்ரை மேளல்லே", என்று விட்டு தன் மீசையை ஒரு முறை தடவிக் கொண்டார் கந்தப்பர். பிறகு "நீ கூட்டத்திற்கு வரப்போறியோ இல்லையோ", எனக் கிழவியைக் கேட்டார் அவர்.

"நான் வரேல்லை. நீ போய் ஆடுற கூத்தை ஆடு", என்று விட்டு மூடலைப் பொத்த ஆரம்பித்தாள் கிழவி. அவளைப் பொறுத்தவரை கந்தப்பா் அந்த இடத்தை விட்டுப் போனால் போதும் என்ற அளவிற்கு இருந்தது.

கந்தப்பருக்கும், "நீ போய் ஆடுற ஆட்டத்தை ஆடு", என்ற வசனமே போதுமானதாகவே இருந்தது. சற்றுத் தொலைவில் இருந்த விதானையாருக்கு இவர்களின் சண்டை வெகு சிரிப்பாக இருந்த போதிலும் அதைக் கவனிக்காதது போலவே இருந்து விட்டார்.

விதானையார் இருந்த இடத்திற்கு கந்தப்பர் வரவும் பொன்னுக்குட்டியும் கமலியும் சங்கடப்படலையைத் திறந்து கொண்டு வரவும் கணக்காக இருந்தது.

ஏற்கனவே விதானையார் வாங்கிலைத் தூக்கி வெளியே போட்டு வைத்துவிட்டார். பொன்னுக்குட்டி மற்றவர்களைப் போல் நிலத்தில் குந்தி இருக்க மாட்டான். நிற்க வைத்துக் கதைத்தால் அவன் கோபித்துக் கொண்டு போனாலும் போய்விடுவான்.

சாய் மனைக்கதிரையில் இருந்தவாறு "வா பொன்னு இரு. கந்தப்பர் உன்னோடை கதைக்க வேணுமாம்.", பொன்னுக்குட்டிக்கு குடியரசார் மீது தனிமரியாதை உண்டு.

கந்தப்பா் மெல்ல ஆரம்பித்தார், "என்ன மாதிரி லெக்சன் நிலைமையள் போகுது?", பொன்னுக்குட்டி, "வீரபாகு முதலாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரசுக்கட்சி தானே. நானும் அவரோடை தான் நிக்கிறன்", என்றான்.

கந்தப்பர் உடனடியாக முறித்துக் கதைப்பது பயன் ஏற்படாது என்று நன்றாகவே தெரிந்து வைத்திருந்தார். எனவே, "முதலாளி அங்காலை நிற்க நீ அங்கை தான் நிற்க வேணும். மற்ற மணியாறன்மூலைச்சனம் முழுக்க எங்களோடை தான் நிக்கும். தெரியும் தானே?", எனக் கேட்டார்.

"ஓமோம்.. அது எனக்குத் தெரியும். விதானையார் ஐயா சொன்னால் எங்கடை சனம் அரக்காது", என்றான் பொன்னு.

கந்தப்பர் ஒரு முறை செருமிவிட்டு "அது பிரச்சினையில்லை. உன்ரை பெட்டை எங்கடை கூட்டத்திலை பேச வேணும்", என்றார். பொன்னு திகைத்துப் போய் தடுமாறி விட்டான்.

"ஐயா அது..... அது.... அவளுக்கு மேடையில ஏறிய பழக்கம் இல்லை"

கந்தப்பர் உறுதியான குரலில் சொன்னார். "நீ யோசியாதை அவள் படிச்ச பெட்டை. நான் எழுதிக் குடுப்பன் பாடமாக்கிட்டு விளாசி விட வேண்டியது தானே?

பொன்னுக்குட்டி எதுவும் பேசமால் தலை குனிந்ததிலிருந்து அவன் இதை விரும்பவில்லைப் போல் தோன்றியது.

அது வரை அமைதியாய் இருந்த விதானையார், "பொன்னு என்ரை பிள்ளையே மேடை ஏறி சாதி இருக்கக் கூடாது என்று பேசப் போறாள். உந்த சாதிப்பிரச்சனையிலை பாதிக்கப்பட்ட உன்ரை மேள் பேசுறதிலை என்ன வந்திட்டுது." என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னு ஆச்சரியத்துடன் கேட்டான், "பிள்ளையும் பேசுதே?"

"ஓமெண்டுறன்", என்றார் விதானையார் அழுத்தமாக.

அவனின் மனம் மாறியிருக்க வேண்டும், "கமலி நீ பேசுவியே?"

விதானையாருக்கும் மூளை வேலை செய்தது, "கமலி நீ பேசு நீ விரும்பினதெல்லாம் நடக்கும்", என்றார் அவர்.

கமலியின் கண்களில் தான் பாளைக்கத்தியுடன் பொன்னம்பலத்தை விரட்டுவது போல் ஒரு காட்சி தெரிந்து மறைந்தது.

அவள் தலையாட்டியதன் மூலம் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 30

அன்று மாலுச்சந்தியே விழாக்கோலம் பூண்டிருந்தது. மாலுச்சந்தி நாற்சந்திக்கு அருகாமையில் இருந்த ஒரு வெட்டைக் காணியே பொதுக்கூட்ட மைதானமாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

ஒரு பக்கத்தில் மர வாங்குகளால் உருவாக்கப்பட்டு ஒரு மேடை அமைக்கப்பட்டிருந்தது.

அதன் நான்கு பக்கங்களிலும் கப்புகள் நடப்பட்டு அவற்றில் அரிவாள் சுத்தியலுடன் நட்சத்திரச் சின்னம் பொறிக்கப்பட்ட கொடிகள் பறந்து கொண்டிருந்தன. மேடையின் மேல் பகுதியும் சிவப்புக் கொடிகளாலும், தென்னோலைத் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மைதானத்தின் நடுவில் ஒரு உயரமான தடி நாட்டப்பட்டு அதில் பிணைக்கப்பட்ட சிவப்புக் கொடித் தோரணங்கள் சகல பக்கங்களிலும் மைதானத்தின் எல்லையை நோக்கி இழுத்துக் கட்டப்பட்டிருந்தன. மைதானத்தைச் சுற்றி நட்டப்பட்டு தோரணங்கள் இழுத்துக் கட்டப்பட்ட கம்பங்களில் நீண்ட ரியூப் மின்குமிழ்கள் கட்டப்பட்டிருந்தன. அன்று பகல் முழுவதுமே ஒலிபெருக்கி பூட்டப்பட்ட மோட்டார் வாகனங்கள் வடமராட்சியின் மூலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடுக்கெங்கும் சென்று பொதுக் கூட்டத்திற்கான விளம்பரங்களை மேற்கொண்டன. அத்துடன் தேர்தல் விஞ்ஞாபனம், கொள்ளை விளக்கப் பிரசுரங்கள் என்பவற்றையும் விநியோகித்தன.

சில நாட்கள் முன்பு அதே இடத்தில் தமிழரசுக் கட்சியின் பிரசாரப் பொதுக் கூட்டம் நடந்தது. அதிலும் பெருமளவு பொதுமக்கள் கலந்து கொண்டனர். அதில் அமிர்தலிங்கம், இராசதுரை, மன்சூர் மௌலானா போன்ற பல பீரங்கிப் பேச்சாளர்கள் உட்பட சகல வேட்பாளர்களும் உரையாற்றினர். அவர்கள் அனைவரின் உரைகளின் சாராம்சம் தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிராகவே இருந்தது. சிலரின் பேச்சுக்கள் சிங்கள மக்களுக்கு எதிரான குரோத உணர்வைத் தூண்டும் வகையிலும் அமைந்திருந்தன. ஒரு இனவாதப் பிரசாரத்தின் முன்பு நியாயபூர்வமான கொள்கை விளக்கம் மேலெழுவது மிகவும் கடினம் என்பதைக் குடியரசார் நன்றாகவே தெரிந்திருந்தார். எனவே அவர் தங்கள் பிரசார முறைகளிலும் புதிய வியூகங்களை வகுக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து செயற்பட ஆரம்பித்தார். அதேவேளையில் வடமராட்சி எங்கும் கந்தமுருகேசனார் விதைத்த முற்போக்கு விதைகளின் மேல் கட்டியமைக்கப்படும் தனது பிரச்சார முறை நிச்சயம் வெற்றி பெறும் என்றே அவர் நம்பினார்.

மாலை 5 மணியளவில் தொடங்கிய ஊர்வலத்தில் தென்னிலங்கையிலிருந்து வந்திருந்த டொக்டர் விக்கிரசிங்க, பீட்டர் கெனமன், சண்முகதாசன் உட்பட வடபகுதி வேட்பாளர்களும் ஏராளமான பொதுமக்களும் கலந்து கொண்டனர். உயர்ந்து பறந்த செங்கொடிகளும் வானைப் பிளந்த கோஷங்களும் அங்கு ஒரு புரட்சிகரமான சூழ்நிலையை ஏற்படுத்தியது. நெல்லியடி சந்தியில் ஆரம்பமான ஊர்வலம் நெல்லியடி மத்திய கல்லூரி வழியால் சென்று அடுத்த சந்தியை அடைந்து மாலுசந்தியை நோக்கி நகர்ந்தது. சாணக்கமூலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்வாய் ஆகிய பகுதிகளில் வீடு வாசல்களில் கும்பம் வைத்து, குத்துவிளக்கு ஏற்றி பொன். கந்தையாவுக்கும் தென்னிலங்கைத் தலைவர்களுக்கும் மக்கள் பெருமகிழ்ச்சியுடன் மாலைகள் அணிவித்தமை கொழும்புத் தலைவர்களுக்குப் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. குடியரசாரும் ஐயாமாமாவும் வெற்றிக்காக வகுத்த வியூகங்களில் அதுவும் ஒன்று என்பதை எவரும் அறிந்திருக்கவில்லை.

நெல்லியடி சந்தியில் ஊர்வலம் ஆரம்பித்த போது சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் எம்.கா.சுப்பிரமணியத்திற்கு தம்பிப்பிள்ளை விதானையார், பொன்னில்லம் பொன்னையா ஆகியோர் மாலை அணிவித்தமை கலட்டி, கல்லோலை, இளகாமம், அல்வாய் ஆகிய இடங்களின் மக்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. ஊர்வலம் நிறைவுபெற்று பொதுக்கூட்டம் ஆரம்பமாகிய போது நேரம் ஆறரையாகிவிட்டது. ஒலிபெருக்கியில் பட்டம்மாள் பாடிய "எங்கு, சுதந்திரம் என்பதே பேச்சு. நாம் எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு. சங்கு கொண்டே ஓதுவோமே" என்ற பாடல் ஊர்வலத்தினரை வரவேற்பது போல ஒலித்துக் கொண்டிருந்தது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பொன்னுத்துரை மாஸ்ரர் தலைமையில் கூட்டம் ஆரம்பமாகியது. வழமையான தலைமையுரை, வரவேற்புரை போன்ற சம்பிரதாயங்கள் நிறைவடைய பீட்டர் கெனமன் ஆங்கிலத்தில் பேச அதைக் காத்திகேயன் மாஸ்ரர் மொழிபெயர்த்தார்.

பீட்டர் கெனமனின் நகைச்சுவை கலந்த ஆணித்தரமான அந்தப் பேச்சைக் காத்திகேயன் மாஸ்ரர் அதே சுவையுடன் மொழிபெயர்த்தார். எஸ்.ஏ.விக்கிரமசிங்கவின் சிங்களப் பேச்சை வி. பொன்னம்பலம் அழகான தமிழில் மொழிபெயர்த்தார். வேறு சில வேட்பாளர்களும் உரையாற்றினர். தேர்தல் பிரச்சாரக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டமாக இருந்த போதிலும் பேச்சுக்கள் வெறுமனே உணர்ச்சியூட்டுபனவாக இன்றி மக்களின் நெஞ்சைத் தொடும் வகையிலும், சிந்திக்கத் தூண்டுபவனவாகவும் இருந்தன.

அடுத்த பேச்சாளராக சொர்ணலட்சுமி அழைக்கப்பட்டாள். குடியரசு கந்தப்பர் எழுதிக் கொடுத்தவற்றை ஒரு வரிகூடப் பிசகாமல் மனனம் செய்திருந்தாள். தெளிந்து அமைதியாகவும், வேகமாகவும் ஓடும் ஒரு அருவி போல் அமைந்திருந்தது அவளின் பேச்சு. சமூக ஏற்றத் தாழ்வுகள் பற்றிப் பேசிவிட்டு "இப்படியான கொடுமைகளால் பாதிக்கப்பட்ட ஒரு சகோதரியின் துன்பத்தைக் கேளுங்கள்" எனக் கூறி இடை நிறுத்தினாள் அவள். குடியரசாரின் ஏற்பாட்டின்படி கமலியும் மேடையில் ஏறினாள். மேடையில் ஏறி அந்தப் பிரமாண்டமான ஜனத் திரளைப் பார்த்ததும் குடியரசார் எழுதிக் கொடுத்து அவள் மனனம் செய்து வைத்திருந்த அத்தனையும் மறந்து போய்விட்டது. கை கால்கள் நடுங்கத் தொடங்கினாள். நிலைமையை மாற்றும் விதமாக சொர்ணம், "சொல்லுங்கோ நீங்கள் பட்ட துன்பத்தைச் சொல்லுங்கோ", என்றாள்.

கமலிக்கு என்ன சொல்வது, எப்படிச் சொல்வது என்பது புரியவில்லை. ஆனால் ஏதோ ஒருவித உணர்வால் தான் ஆட்கொள்ளப்படுவதை மட்டும் உணர முடிந்தது. அவள் திடீரென சொர்ணமோ, குடியரசாரோ எதிர்பாராத விதமாகக் கத்த ஆரம்பித்தாள். "நான் சிங்கனைக் காதலிச்சன். அவரும் என்னைக் காதலிச்சார். காதலிச்சம், கலியாணம் கட்டினம். மூண்டாம் நாள் சுட்டுப் போட்டாங்கள். சுட்டுக் கொண்டு போட்டாங்கள். இப்ப நான் பதினெட்டு வயதிலை விதவை. இனி என்ரை மிச்ச வயதெல்லாம் எனக்கு பாலைவனம். பாலைவனம்.", அவளால் மேற்கொண்டு எதுவும் பேச முடியவில்லை. விம்மியழுது கொண்டே இறங்கி ஓடிவிட்டாள். குடியரசு கந்தப்பர் மெல்ல அணைத்து காருக்குள் கொண்டு போய் அமர்த்தினார். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலியின் வார்த்தைகளும் இனி தனது எதிர்காலம் பாலைவனம் எனக்கூறி குமுறி அழுதமையும் அந்தப் பெரும் மக்கள் வெள்ளத்தையே சில நிமிடங்கள் உறைய வைத்து விட்டன. அவளின் வார்த்தைகளும் கண்ணீரும் ஏதோ ஒரு விதத்தில் எல்லோரையுமே குற்றம் சுமத்துவது போல் தோன்றியன.

அதேவேளையில், சொர்ணமும் கூட குடியரசார் எழுதிக் கொடுத்ததை மறந்துவிட்டாள். ஆனால் அதைவிட சிறப்பாகத் தன்னைக் கமலி பேச வைத்து விட்டாள் என்றே அவளுக்கத் தோன்றியது. அவள் கமலியின் நிலையை எடுத்துக் கூறி அதற்கு சமூக ஏற்றத்தாழ்வு எப்படிக் காரணமாய் அமைந்தது என்று விளக்கி இன, மத, சாதி ஒடுக்குமுறைகள் இல்லாமற் போக பொதுவுடமைக் கொள்கைகள் ஏற்கப்பட வேண்டும் எனவும் கூறி தனது பேச்சை நிறைவு செய்தாள். குடியரசு கந்தப்பர் சொர்ணத்தையும், கமலியையும் மேடையில் ஏற்றியதால் எதிர்பார்த்த பலனை விடப் பலமடங்கு கிடைத்ததாக எண்ணி மகிழ்ச்சியடைந்தார். அந்தச் சம்பவம் பலரின் மனமாற்றத்திற்கான கதவுகளைத் திறக்கும் என்றே அவர் நம்பினார். எனினும், காருக்குள் இருந்த கமலியின் அழுகையை எப்படி நிறுத்துவது என்பது மட்டும் அவருக்குப் புரியவில்லை.

"அழாதை பிள்ளை..... காலம் எல்லாக் கவலையும் கழுவிவிடும்" என்றார்.

அவள் கண்களைத் துடைத்து விட்டுச் சொன்னாள், "காலத்தாலை என்ரை அழுகையை மாத்த ஏலாது. அதை சிங்களைக் கொண்டவங்களின்ரை இரத்தத்தாலை தான் கழுவ முடியும்", அவளின் குரலில் ஒரு அசைக்க முடியாத உறுதி இருந்ததை அவரால் உணர முடிந்தது.

சிறிது நேரத்தில் கூட்டம் முடிவடையவே சொர்ணமும் வந்து காரில் ஏறிக் கொண்டாள். அவள் மெல்ல கமலியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடியைப் பிடித்து முகத்தைத் தன் பக்கம் திருப்பி விட்டவாறே, "சரியாய் உனக்குக் கோபம் வந்திட்டுது என்ன?", எனக் கேட்டாள்.

கமலி இறுக்கமாகவே சொன்னாள். "அது எனக்கு வரத் தேவையில்லை. உள்ளையே இருக்குது", சொர்ணத்தைப் பொறுத்த வரையில் அவளின் வார்த்தைகள் பயமூட்டுவனவாக இருந்த போதும் அவற்றில் உள்ள நியாயங்களை அவள் மனமார ஏற்றுக் கொண்டாள்.

பீட்டர் கெனமன், விக்கிரமசிங்க ஆகியோரும் கூடக் காரின் அருகில் வந்து கமலிக்கு ஆறுதல் கூறினர். காத்திகேயன் அவர்கள் சொன்னவற்றை மொழி பெயர்த்துக் கூறிவிட்டு "மகள் நீங்கள் மட்டுமில்லை சமூகத்திலை உள்ள மூடப் பழக்க வழக்கங்களை மீறத் துணியிற ஆக்களுக்குப் பலவிதமான கஷ்டங்கள் வரும். அதை எதிர்கொண்டு நிமிர்ந்து நிண்டால் சமுதாயத்தையே மாத்தியிடலாம்", என்றார். அந்த வார்த்தைகளுக்கு ஏதோ ஒரு மந்திரசக்தி இருப்பது போலவே கமலிக்குத் தோன்றியது. அவரைக் காலில் தொட்டு வணங்க வேண்டும் போல அவளுக்கு ஒரு உணர்வு ஏற்பட்ட போதும் அவர் அப்படியான பழக்கங்களை விரும்பமாட்டார் என அறிந்திருந்தால் அவள் அப்படிச் செய்யவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் - 31

அன்று பொன். கந்தையாவின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் கரணவாய் மூத்தனார் கோவிலில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மைதான அலங்கார வேலைகளை கனகரத்தினம் தலைமையில் ஆலடிவெட்டை வாலிபர்களே மேற்கொண்டனர். சிவஞானம் மணியாறன்மூலைக்குப் போய் இளையவனையும் இன்னும் சில இளைஞர்களையும் இழுத்து வந்து அலங்காரப் பணிகளில் தங்களுடன் இணைத்துக் கொண்டான்.

அந்த வீதியால் காரில் போன காசிப்பிள்ளை முதலாளிக்கு இக்காட்சி பெரும் சினத்தை மூட்டிவிட்டது. ஏதாவது ஒரு திட்டம் போட்டு இந்த இரண்டு பகுதிகளுக்குமிடையே மோதலை ஏற்படுத்தாவிட்டால் அவ்வளவு வாக்குகளும் கந்தையாவுக்கு விழுவதைத் தடுக்க முடியாது என்பதை அவர் நன்றாகவே புரிந்து கொண்டார்.

பீட்டர் கெனமன் உட்படப் பலர் உரையாற்றிய பின்பு செனட்டர் நடராஜாவின் பேச்சு ஆரம்பமாகியது. தனிச் சிங்களச் சட்டம் மூலம் தமிழ்மக்கள் ஒடுக்கப்படுவதை எதிர்த்துக் குரல் கொடுக்கும் நாம் எங்கள் மத்தியில் உள்ள ஒரு பகுதி மக்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதியின் பெயரால் ஒடுக்குவதில் என்ன நியாயம் இருக்கிறது எனக் கேள்வி எழுப்பினார். அவரின் கனல் பேச்சு சகலரையும் கவர்ந்து விட்டது.

சொர்ணலச்சுமியின் பேச்சு மேலும் மெருகு பெற்றிருந்தது. சட்டக் கல்லூரியிலிருந்து லீவில் வந்திருந்த அவளின் தமையன் சொர்ணலிங்கம் சொல்லிக் கொடுத்த சில புதிய விசயங்களையும் அவள் தனது உரையில் சேர்ந்திருந்தாள். அவள் தனது பேச்சை இடைநிறுத்தி விட்டு கமலியை அழைத்தாள். அன்று கமலி பதட்டபடவோ உணர்ச்சி வசப்படவோ இல்லை. அவள் மிகத் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் உரையாற்றினாள்.

அவளின் பேச்சில் கூட்டத்தினர் ஒன்றிப் போயிருந்த வேளையில் எங்கிருந்தோ பறந்து வந்த கல் அவள் நெற்றியில் பட்டு விழுந்தது. மேடையில் இருந்தவர்கள் பதட்டத்துடன் எழுந்தபோது கமலி அவர்களிடம் தன்னை நெருங்க வேண்டாம் எனத் தடுத்துவிட்டு நெற்றியில் வடிந்த குருதியைத் துடைத்துக் கையில் எடுத்தவாறே பேச்சைத் தொடர்ந்தாள்.

“என்ரை சிங்கன்ரை இரத்தத்தையும் உயிரையும் குடிச்சியள். இப்ப என்ரை இரத்தத்தைக் கேட்கிறியள். எங்கடை உடம்பிலை ஓடுற எல்லா இரத்தத்தையும் நீங்கள் குடிச்சு முடிச்சாலும் உங்கடை வயித்தைப் பிளந்து கொண்டு வந்து சாதிக் கொடுமைக்கு எதிராய்ப் போராடுவம்! போராடுவம்!”

அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை. நெற்றியில் கையால் அழுத்திப் பிடித்துக் கொண்டாள். சொர்ணம் ஓடிப்போய் அவளை அணைத்து மெல்ல மேடையிலிருந்து இறக்கினாள்.

கல்லால் எறிந்தவனை ஆலடிவெட்டை இளைஞர்களை துரத்திப் பிடித்துவிட்டனர். அவன் அதே இடத்தைச் சேர்ந்த வடிவேலு எனக் கண்ட போது அவர்கள் திகைத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விட்டனர். சிவஞானம் சேட்டில் பிடித்தபடி கேட்டான். "டேய்... காலமை எங்களோடை நிண்டு சோடனை வேலை செய்தனீ..... இப்ப ஏன்ரா இந்தப் புத்தி வந்தது?", வடிவேலு எதுவுமே பேசாது 'திருதிருவென' விழிக்கத் தொடங்கினான். யாரோ அவனை ஏவி விட்டிருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்ட கனகரத்தினம் மெல்ல சிவஞானத்தின் கையை விடுவித்தான்.

அங்கு வேகமாக வந்த பொன்னுக்குட்டி அனைவரையும் விலக்கி விட்டு காலால் வடிவேலுவின் வயிற்றில் ஓர் அடி கொடுத்தார். அவன் "ஐயோ" என்றவாறு நிலத்தில் குந்தினான். அவனின் தலைமயிரைப் பிடித்து தூக்கி நிறுத்திய பொன்னுக்குட்டி கையைப் பொத்தி அவனின் முகத்தில் ஒரு குத்துக் கொடுத்தார். மூக்கு உடைந்து இரத்தம் ஒழுகியது.

அங்கு வேகமாக வந்த கார்த்திகேயன் மாஸ்ரர், "ஐயா நிப்பாட்டுங்கோ", என்றார். அந்த உயர்ந்த மெலிந்த மனிதரின் வார்த்தைகள் ஒரு மந்திரம் போல சண்டியனான அவனைக் கட்டுப்படுத்தியது. மாஸ்ரர், "மூக்கைத் துடை!", என்றார். அவன் குனிந்து மூக்கைத் துடைத்துவிட்டு விழிபிதுங்க நின்றான். "உன்னைப் பார்த்தால் ஒரு நல்ல தோட்டக்காரன் போலை கிடக்குது. நாங்கள் இப்ப உன்னைப் பொலிசிலை குடுத்தால் முதல் பதினாலு நாட்கள் விளக்கமறியலுக்கு அனுப்புவங்கள். இப்ப உன்னை ஏவிவிட்ட பெரிய மனுசன் அந்தப் பதினாலு நாளும் தோட்டத்துக்கு தண்ணி இறைப்பானே?",

மாஸ்ரரின் கேள்விக்குள் இருந்த மந்திரசக்தியைக் கனகரத்தினம் புரிந்து கொண்டான்.

கார்த்திகேயன் தொடர்ந்தார். "நாங்கள் பொலிசிலை குடுக்கேல்லை. இப்ப நீ போ! சாதி வெறிக்கு தன்ரை புருசனைப் பதினெட்டு வயதிலை பறி குடுத்த ஒரு பிள்ளை நியாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டதுக்காக நீ அவளைக் கல்லெறிஞ்சு காயப்படுத்தினது சரியோ எண்டு இரவைக்குப் படுத்திருந்து யோசி. நீ யோசிச்சு எடுத்த முடிவை அவளட்டையே நாளைக்கு போய்ச் சொல்லு. உன்னை ஒருதரும் ஒண்டும் செய்ய மாட்டினம். நீ போ."

அவன் பொன்னுக்குட்டியை ஒரு முறை பயத்துடன் பார்த்து விட்டு தலையைக் குனிந்தவாறே அவ்விடத்தை விட்டு அகன்றான்.

"சரி வாங்கோ. பிள்ளையை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போற விசயத்தைப் பாப்பம்", என்று விட்டு முன்னால் நடந்தார் மாஸ்ரர். பொன்னுவுக்கும் மாஸ்ரரின் நடவடிக்கை திருப்தியளிப்பது போன்றே தோன்றியது. இவை ஒரு புறம் நடந்து கொண்டிருந்த போதும் கூட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. வி.ஏ.கந்தசாமி மேடையில் கல்லெறிச் சம்பவத்தை அடிப்படையாக வைத்து சொல்மாரி பொழிந்து கொண்டிருந்தார். கமலியை மேடையால் இறக்கியதுமே கந்தப்பர் ஓடிப்போய் ஐயர் வீட்டில் கொஞ்சம் கோப்பியும் வெள்ளைத்துணியும் வாங்கி வந்து சொர்ணத்திடம் கொடுத்தார். அவள் இரத்தத்தைத் துடைத்து விட்டு கோப்பித் தூளை வைத்து ஈரத் துணியால் கட்டிவிட்டாள்.

சிவஞானம், கனகரத்தினம், பொன்னுக்குட்டி ஆகியோர் ஆஸ்பத்திரி விறாந்தை வாங்கிலில் அமர்ந்திருக்க, சொர்ணம் கமலியை மருந்து கட்டும் அறைக்குள் கூட்டிச் சென்றாள். காயத்தை நன்றாகக் கழுவி விட்டுப் பார்த்த போது அது சற்று ஆழமாகவே பட்டிருந்தது. நான்கு தையல் போட வேண்டும் என்றனர்.

தையல் போடும் போது கமலி பல்லை இறுகக் கடித்ததும் அவளின் முகத்தில் ஏற்பட்ட மாற்றமும் அவள் மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமப்பட்டே வலியைத் தாங்குகிறாள் என்பதைப் புரிந்துகொண்ட சொர்ணம் மெல்லக் கேட்டாள் “சரியாய் வலிக்குதே கமலி?”

வலியை அனுபவித்தாலோ என்னவோ கமலியின் கண்கள் சிறிது கலங்கியிருந்தன. அவள் ஒரு மெல்லிய புன்னகையுடன் சொர்ணத்தைப் பார்த்துச் சொன்னாள். “கடுமையான வலிதான். ஆனால் சிங்கன் எதுக்காக உயிரைக் கொடுத்தாரோ அதே காரணத்திற்காகத் தான் எனக்கும் இந்த வலியெண்டு நினைக்கேக்கை அதிலை அவரைக் கட்டியணைச்சு முத்தம் குடுக்கிற சுகம் இருக்குது!”

சொர்ணம் காதல் ஆழமானது என்பதை அறிவாள். ஆனால் இவ்வளவு பெரும் பரிமாணம் கொண்டது என்பதை அவள் இப்போது தான் உணர்ந்தாள். அதே வேளையில் இளையவன் அவளின் நெஞ்சுக்குள் வரத் தவறில்லை. சொர்ணம் தன்னால் இப்படி உறுதியாக நின்று பிடிக்க முடியுமா என்று தன்னைத் தானே கேட்டுப்பார்த்தாள். முடியுமோ முடியாதோ கமலியைப் போல் உறுதியாக இருந்தேயாக வேண்டும் என அவள் நினைத்துக் கொண்டாள்.

“என்ன பிள்ளை! யோசிக்கிறியள்?”, எனக் கேட்டாள் கமலி.

“ஒண்டுமில்லை. காதலின்ரை பலத்தைப் பற்றி யோசிச்சன்!”, என்று விட்டு மெல்லக் கமலியை அணைத்தவாறே ஊசி போடும் அறைக்குள் கூட்டிச்சென்றாள் சொர்ணம்.

கதவடியில் அவர்கள் வந்த போது சிவஞானம் எழுந்து அருகில் வந்தான்.

“என்ன தையல் போட்டதே?”

“ஓ... நாலு இழை!”, என்றாள் சொர்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஐயோ...!, என்றவாறே முகத்தைச் சுழித்தான் சிவஞானம்.

சொர்ணம் சிரித்தவாறே”, “என்ன அவளுக்குத் தையல் போட்டால் உங்களுக்கு நோகுதே?”, எனக்கேட்டாள்.

“இல்லை நோகும் தானே. அது தான் கேட்டன்”, என்றான் சிவஞானம் அசடு வழிய.

“இதெல்லாம் எனக்கு நோகாது சிவஞானம். இருக்கிற கோபத்தைத் தான் இன்னும் இன்னும் கூட்டும்”, என்றவாறே அறைக்குள் புகுந்தாள் கமலி. ‘பென்சிலின்’ ஊசி போடும் போது அவள் படும் வேதனையையும் முகம்படும் பாட்டையும் கற்பனை செய்து பார்த்தான் சிவஞானம். எனினும் அவளின் மன உறுதியும் வீரமும் அவனை வியக்க வைத்தது.

அருகில் நின்ற பொன்னுக்குட்டி தன் மகளை எண்ணி மீண்டும் ஒருமுறை பெருமைப்பட்டுக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 32

கமலியின் மண்டை உடைந்து இரத்தம் ஒழுகியதில் காசிப்பிள்ளை முதலாளிக்கும் பரம சந்தோசம். ஆனால் வடிவேலு பிடிபட்டு அடி வாங்குவான் என்பதை அவர் எதிர்பார்க்கவில்லை. எனினும் அதைக் கூட தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முடியும் என நம்பினார். அவரின் அந்த நோக்கத்தைச் செயல்படுத்தும் சரியான ஆள் 'நரிமுத்தர்' என அழைக்கப்படும் முத்தையரே சரியான ஆள் என அவர் முடிவு செய்த காரணத்தால் தன் காரைக் கொண்டு போய் முத்தரின் வீட்டுப் படலையடியில் நிறுத்தி விட்டு அதிலிருந்து இறங்காமலே 'ஹோர்ண்' அடித்தார்.

வீட்டுத் திண்ணையிலிருந்து ஒரு சுருட்டைப் புகைவிட்டு அனுபவித்துக் கொண்டிருந்த நரியர் முத்தர் சத்தம் கேட்டு எழுந்து வெளியே வந்தார்.

காசிப்பிள்ளை சுற்றி வளையாமலே விஷயத்திற்கு வந்தார்.

"நேற்று லெக்ஷன் கூட்டத்திற்கு நீ போனனியே?"

"ஓ... போனனான்!", என்றார் முத்தர். அவரின் கேள்வியின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளாமலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவன் பொன்னுக்குட்டியன் வடிவேலனைப் போட்டு அடி அடியெண்டு அடிச்சானாம். நீங்கள் என்ன வாய் பாத்துக் கொண்டு நிண்டனிங்களே? உங்களுக்கு மானரோசம் இல்லையே?"

முத்தரின் நெஞ்சில் அந்த கேள்வி 'சுரீர்' என்று ஏறியது. எனினும் அவர் தன் வழுக்கைத் தலையைத் தடவியவாறே, "இவன் அவன்ரை பெட்டைக்கு கல்லாலை எறிஞ்சு காயம்", என்றார்.

"ஏதோ தெரிஞ்சோ தெரியாமலோ செய்து போட்டான். அதுக்கு அந்தக் கீழ்சாதி ஆலடிவெட்டையானிலை கை வைக்கலாமே", என்றார் காசி சற்று உரத்த குரலில்.

முத்தருக்கு இப்போ அந்த வார்த்தைகளால் புதிய ஞானம் பிறந்துவிட்டது போல் தோன்றியது. அவரும், "ம்...ம்... உப்பிடியே விட்டால் மணியாறன்மூலையார் நாளைக்கு என்னிலை உங்களிலையும் கை வைக்கத் துணிஞ்சிடுவங்கள்", என்றார்.

"ம்... இப்ப விளங்குதே.. உப்பிடியே விட்டால் பரு முத்தி பௌத்திரம் ஆன கதையாய்த் தான் முடியும்", என்றார் காசி.

"சீ...சீ... விடேலாது. ஒரு முடிவு காணத்தான் வேணும்!", என்றார் முத்தர் பல்லை நெறுமியவாறே! காசிப்பிள்ளை முதலாளி தன் சட்டைப் பையிலிருந்து எடுத்து இரண்டு ஐம்பது ரூபா தாள்களை நீட்டியவாறு, "இந்தா பிடி", என்றார்.

முத்தர் அசட்டுச் சிரிப்புடன், "இது எதுக்கு?", என்றவாறே கையை நீட்டி வாங்கிக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அங்கினை பாத்து உன்ரை ஆக்களுக்கு கள்ளைச் சாராயத்தை வேண்டிக்குடு”, என்று விட்டுக் காரை எடுத்தார். காரும் ஏதோ பெரிய சாதனையை முடித்து விட்டுப் புறப்படுவது போல் ஒரு பெரிய உறுமலுடன் புறப்பட்டது.

முத்தர் உடனடியாகவே வடிவேலனைச் சந்திக்கப் புறப்பட்டார். ஆலமரத்தில் சாய்ந்து கொண்டு வடிவேல் நிலத்தில் இருக்க அங்கு எப்போதோ ஏதோ ஒரு தேவைக்குப் பொழியப்பட்டு நீண்டகாலமாகவே பாவிக்கப்படாத ஒரு நீண்ட கல்லில் சிவஞானமும் கனகரத்தினமும் அமர்ந்திருந்தனர்.

அங்கு நரிமுத்தர், “என்னடா வடிவேலு சோர்ந்து போயிருக்கிறாய்?”, என்று விட்டு, “ம்... கண்ட நிண்ட சாதியட்டையெல்லாம் அடி வேண்டுற அளவுக்கு காலம் கெட்டுப் போச்சுது”, என்றார். அவர் எதற்கு, அத்திவாரம் போடுகிறார் என்பதை கனகரத்தினம் உடனடியாகவே புரிந்து கொண்டான். அவன் எதுவும் பேசவில்லை.

முத்தர் மெல்ல வடிவேலுவின் அருகில் அமர்ந்தவாறே அவனின் தோளில் தடவினார். “என்னடா நல்ல நோவே?”

“பொன்னுக்குட்டியின்ரை கையாலை வேண்டினால் எப்படி இருக்குமெண்டு தெரியும்தானே?”, என்றான் சிவஞானம் கிண்டலாக.

முத்தர் சீறினார். “உங்களைப் போலை முதுகிலை எலும்பு முளையாத இளந்தாரியள் இருந்தால் பொன்னுக்குட்டியன் என்ன அவன்ரை பெட்டை கூடி எங்களைக் காலாலை அடிச்சுப் போட்டுத்தான் போவள்!”

நரியரின் நரி விளையாட்டு ஆரம்பமாகி விட்டதைச் சிவஞானமும் கனகரத்தினமும் புரிந்து கொண்டனர். கனகரத்தினம் சிரித்துக் கொண்டே சொன்னான். “சீ... அப்படி அவள் செய்யாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தால் அவளின்ரை புருஷனைச் செய்த மாதிரி வெறுங்கையோடை வெளிக்குப் போற நேரம் ஒழிச்சிருந்து சுட்டுப் போடுவியள் எண்டு அவளுக்குத் தெரியும்!"

அவனின் நக்கலை முத்தர் புரிந்து கொண்டார். என்றாலும், "அவன் பொன்னம்பலம் ரோசக்காரன்... சுட்டான். உங்களைப் போலயே?", என்றார் அவர்.

"அது தான் பதினாலு நாளைக்கொருக்கால் பொன்னம்பலம் கூட்டத்தை மாடு பிணைச்ச மாதிரி சங்கிலியிலை பூட்டி சாய்ச்சு வாறவங்கள். நீ காணுறேல்லையே?", என்றான் சிவஞானம்.

"அதிலையென்னடா வெட்கம். அவன் வீரன்", எனக் கொதித்தார் அவர்.

"ஓ..ஓ.. ஒழிச்சு நிண்டு சுட்ட வீரன்", என்று சிவஞானம் கூற இருவரும் பலமாகச் சிரித்தனர். வடிவேலுவுக்கும் சிரிப்பு வந்தபோதும் அவன் அதைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான்.

இதில் கதைப்பதில் பயனில்லை என்று முத்தரின் நரி மூளை சொல்லவே அவர் எழுந்தவாறே

"இவங்களோடை என்ன கதை. நீ வாடா...", என வடிவேலுவை அழைத்தார் அவர்.

"எங்கை?", எனக் கேட்டான் வடிவேலு.

"வாவன்ரா. உப்பிடி ஆச்சிமுத்து வீட்டுப்பக்கம் போட்டு வருவம்", என்றார் முத்தர். வடிவேலு தயங்கியவாறே மெல்ல எழுந்தான். அடி வாங்கிய நோவுக்கு சாராயம் குடித்தால் நல்லது போலவே அவனுக்கும் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் ஒரு மெல்லிய சிரிப்புடன், "சாராயத்தை வேண்டிக் குடி.. அதோடை தாற கயித்தை விழுங்கியிடாதை. பிறகு பொன்னம்பலம் ஆக்களோடை ஐஞ்சாவது ஆளாய் நடக்க வேண்டி வந்திடும்", என்றான்.

"பொத்தடா வாயை!", என்று விட்டு வடிவேலுவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு விடுவிடென்று நடந்தார் முத்தர்.

தேர்தல் வேலையாக சிவஞானமும் கனகரத்தினமும் பருத்தித்துறைக்குச் சென்று விட்டு மாலை ஏழு மணியளவில் திரும்பி வந்த போது ஆலடிச் சந்தியில் எட்டுப் பத்துப் பேர் கொட்டன் பொல்லுகளுடன் நிற்பதைக் கண்டுவிட்டு இருவரும் திகைத்து விட்டனர்.

கனகரத்தினத்தைக் கண்டதும் வேகமாக அருகில் வந்த தங்கராசா, "உங்களை வழியிலை ஒருத்தரும் காணேல்லையே?", எனப் பரபரப்புடன் கேட்டான். அவனின் கையில் ஒரு வாள் மின்னியது. சிவஞானத்துக்கோ கனகரத்தினத்துக்கோ எதுவுமே புரியவில்லை. சிவஞானம் வியப்புடன் கேட்டான், "ஏன் என்ன விஷயம்?"

"உனக்கும் ஒண்டுமே தெரியாதே... பொன்னுக்குட்டியன் இண்டைக்கு பருத்துறையிலையிருந்து ஆக்களைக் கொண்டு வந்து வடிவேலனை சந்தியிலை வைச்சு வெட்டப் போறானாம். ஆலடிவெட்டையார் ஆரும் குறுக்கை வந்தால் அவையையும் வெட்டுறதாம்", என்றார் தங்கராசா.

கனகரத்தினத்தால் அதை நம்ப முடியவில்லை. பொன்னுக்குட்டி காத்திகேயன் மாஸ்ரரின் கதையுடன் சமாதானமடைந்து விட்டதாக அவன் நினைத்திருந்தான். எனினும் சிங்கன் கொல்லப்பட்டது, கமலி காயப்பட்டது போன்ற தொடர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவங்கள் சிலசமயம் அவனை இப்படியான ஒரு நிலைக்குத் தூண்டியிருக்கலாம் எனவும் கருத வைத்தது.

எனினும் அவன் "இப்ப வடிவேலு எங்கை?, எனக் கேட்டான், "அவனைக் கொண்டு போய் காசிப்பிள்ளை முதலாளி வீட்டிலை ஒழிச்சு வைச்சிருக்கிறம். இஞ்சை மணியாறன் மூலையார் ஆர் வந்தாலும் அடிச்சு முறிக்க ஆயத்தமாய் சந்திக்கு சந்தி நிக்கிறம்", என்றார் தங்கராசா.

சிவஞானம், "இப்பிடி விஷயமெண்டு விதானையாரட்டைச் சொன்னனீங்களே?"

"காசிப்பிள்ளை முதலாளி சொல்லியிருப்பார்!"

கனகரத்தினம் கேட்டான், "விதானையார் வந்தவரே?"

"இல்லை!"

கனகரத்தினம் அழுத்தமாகச் சொன்னார். "அப்பிடி யெண்டால் விதானையாரட்டைச் சொல்லேல்லை!",

தங்கராசா இழுத்தான். "இல்லை. சொல்லுறதெண்டு தான் சொன்னவர்!"

சிவஞானத்திற்கும் கனகரத்தினத்திற்கும் காலையில் ஆலடியில் முத்தர் நரி விளையாட்டு தொடங்க முயன்றதும் வடிவேலுவைச் சாராயம் குடிக்க இழுத்துக் கொண்டு போனதும் நினைவுக்கு வந்தன. இப்போ கனகரத்தினம் உறுதியாகக் குரலில் கேட்டான். "இந்தக் கதையை ஆர் துவக்கினது?"

"எல்லோரும் கதைக்கிறாங்கள்!"

"ஒருதன் துவக்க அதிலையிருந்து பரவி எல்லாரும் கதைப்பங்கள். நான் கேட்கிறது துவக்கினது ஆர்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கராசாவும் மற்றவர்களும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். சிவஞானம், "மச்சான்... உது நரி முத்தரின்ரை விளையாட்டு... இதுக்கை ஏதோ ஒரு பெரிய திருகுதாளம் இருக்குது", என்றான் கனகரத்தினத்தைப் பார்த்து.

"ம்... இது தனிய நரி முத்தரின்ரை வேலையில்லை. பின்னுக்கு ஒரு பெரிய கை இருக்குது. இண்டைக்கு எங்களுக்கும் மணியாறன்மூலைக்கும் கலகம் ஏற்படுத்துற மாதிரி ஏதோ ஒரு பெரிய சதி நடக்குது. அதை உடனை முறியடிக்க வேணும்", என்றான் கனகரத்தினம் சற்றுப் பரபரப்புடன்.

சிவஞானம் காலையில் ஆலடியில் நரி முத்தர் தங்களிடமும் வடிவேலுவிடமும் கதைத்த விஷயங்களையும் வடிவேலுவை சாராயம் வாங்கிக் கொடுக்கக் கூட்டிக் கொண்டு போனதையும் மற்றவர்களுக்குச் சொல்லிவிட்டு, "மணியாறன்மூலையார் அப்படி எதுவும் செய்யிறதெண்டால் விதானையாருக்குத் தெரியாமல் விடாது. அவர் அப்பிடி ஏதும் நடக்க விடார். நீங்கள் அவசரப்படாதேங்கோ. நான் விதானையார் வீட்டை போட்டு வாறன்", என்றான்.

"அவங்கள் வந்தால் என்ன செய்யுறது?" என்று ஒருவிதமான தயக்கத்துடன் கேட்டான் தங்கராசா.

"நான் உங்களோடை நிக்கிறன். அவங்கள் வராங்கள். வந்தால் நிலைமையைப் பாத்துச் செய்வம்", என்றான் கனகரத்தினம். சிவஞானம் சைக்கிளை எடுத்துக் கொண்டு விதானையார் வீடு நோக்கிப் புறப்பட்டான்.

சிவஞானம் அந்த இடத்தை விட்டுப் போன சில நிமிடங்களிலேயே ஒரு பெண். குரல், "ஐயோ ஓடி வாருங்கோ... ஓடி வாருங்கோ காப்பாத்துங்கோ", என சற்றுத் தொலைவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்க ஆரம்பித்தது. தங்கராசா, "வடிவேல் வீட்டுப்பக்கமல்லே... கேட்குது", என்றான்.

"ஓமோம் வாங்கோ. போய்ப் பாப்பம்?", என்று விட்டு கனகரத்தினம் முன்னால் ஓட ஆரம்பித்தான். மற்றவர்களும் அவனைப் பின் தொடர்ந்து ஓடினர்.

அவர்கள் வடிவேலுவின் வீட்டை அடைந்த போது அவனின் தாய் முற்றத்தில் நின்று அலறிக் கொண்டிருந்தாள்.

கனகரத்தினம், "என்னணை? என்ன நடந்தது?", என்று கேட்டான். அவள் "ஐயோ... ஆரோ முத்தத்திலை நடமாடின சத்தம் கேட்டு வெளியிலை வந்து பார்த்தன். இருட்டுக்கை இரண்டு மூண்டு பேர் நிண்டாங்கள்... என்னைக் கண்டிட்டு கொண்டு வந்த கொள்ளிக் கட்டையை எறிஞ்சு போட்டு ஓடினவங்கள்", எனப் பயத்துடனும் களைப்புடனும் சொல்லி முடிந்தாள். முற்றத்தில் ஒரு கொள்ளிக்கட்டை புதைந்து கொண்டு கிடந்தது. வந்தவர்களில் ஒருவன் கோபத்தில் கத்தினான். "மணியாறன்மூலையார் வடிவேலன்ரை வீடு கொழுத்த வந்திருக்கிறாங்கள். மனிசி கண்டவுடனை விட்டிட்டு ஓடியிட்டாங்கள்."

இன்னொருவன், "இனிப் பொறுக்கேலாது... இப்பவே போய் மணியாறன்மூலையுக்கை புகுந்து வெட்டுவம்", என்றான்.

கனகரத்தினம் சற்றுத் தடுமாறி, "அவசரப்படாதேங்கோ! பாத்துச் செய்வம்", எனத் தடுக்க முயன்றான். "உன்ரை சொல்லைக் கேட்டால் நாங்கள் அழிக வேண்டியது தான்!", என்று ஒருவன் கூற அனைவரும் புறப்படத் தயாரானார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 33

கூடி நின்றவர்களின் கோபாவேசம் கனகரத்தினத்தை அதிர்ச்சியடைய வைத்தாலும் கூட அவன் நிச்சயமாக இந்த சம்பவம் ஒரு திட்டமிட்ட சூழ்ச்சி என்றே நம்பினான்.

அவன் சற்று உரத்த குரலில், "குஞ்சியப்பு நில்லணை ஒருக்கால்", என்றான். முருகர் கிழவன் நின்று திரும்பிப் பார்த்துவிட்டுக் கடுமையான தொனியில், "என்ன", எனக் கேட்டார்.

"வீடு கொழுத்திறவன் நெருப்புப் பெட்டியும் மண்ணெண்ணையும் தான் கொண்டு வருவான் நெருப்புக் கொள்ளியிலை பத்த வைக்க வீடு என்ன சுருட்டே? மற்றது வீடு எரிக்க வாறவன் முற்றத்திலை வந்து நிண்டு கலைப்பு காட்ட மாட்டான் பதுங்கிப் பின் பக்கமாய் வந்து கொளுத்திப் போட்டு ஓடிவிடுவன்"

அவனின் வார்த்தைகள் அவர்களைச் சற்று சிந்திக்க வைத்தாலும் அவர்களை முழுமையாகத் திருப்திப்படவில்லை.

பொன்னர் கேட்டார், "அப்ப ஏன் மணியாறன்மூலையார் இந்த நேரத்திலை ஏன் வந்தவங்கள்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அழுத்தமாகச் சொன்னான், "வந்தது அவங்கள் இல்லை!"

"உனக்கென்னண்டு தெரியும்?"

"வடிவாய்க் காதைக் குடுத்துக் கேளுங்கோ நாயள் வடக்குப் பக்கமாய்த் தானே குலைக்குது. மணியாறன் மூலையாரெண்டால் தெற்குப் பக்கமாயல்லோ ஓடியிருப்பாங்கள்!"

முருகருக்கு அவன் சொல்வது சரியெனவே பட்டது. தன் மனதுக்குள் தனது பெறாமகனைப் பற்றி, "எப்படியெண்டாலும் அவன் படிச்ச பொடியனல்லே", எனப் பெருமையுடன் நினைத்துக் கொண்டார். பின்பு அவர், "நீ சொல்லுறது சரி போலைத் தான் கிடக்குது. அப்பிடியெண்டால் ஆர் வந்திருப்பாங்கள்?", எனக் கேட்டார்.

"இது வேணுமெண்டு எங்களுக்கும் மணியாறன் மூலையாருக்கும் கலகம் கிளப்ப யாரோ திட்டம் போட்டு வேலை செய்யினம் அவங்கள் இஞ்சை படையெடுத்து வரப் போறாங்களெண்டு கதை பரப்பினது ஆரெண்டு கண்டுபிடிக்க வேணும்", என்றான் கனகரத்தினம். அந்த நேரத்தில் சற்றுத் தொலைவில் ஒரு கார் வரவே சற்றுப் பரபரப்பு ஏற்பட்டது. பொன்னர் பதட்டத்துடன், "பாத்தியே வந்திட்டாங்கள் வரட்டும். முதல் இறங்கவிடாமல் காரை அடிச்சு நொருக்குவோம்", என்றார்.

"பொறுங்கோ கிட்ட வரட்டும் பாப்பம்...", என்று விட்டு காரை நோக்கி நடக்க ஆரம்பித்தான் அவன். வந்த கார் ஆலமரத்தடியில் நின்றது. காரின் வெளிச்சத்திலிருந்து விதானையாரும், சிவஞானமும் இறங்குவது நன்றாகவே தெரிந்தது.

அவசரப்பட்டு காரை எறிந்தோ அடித்தோ தாக்கியிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை நினைத்த போது பொன்னருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை நெஞ்சு நடுங்கியது. அனைவரும் கையிலிருந்த கொட்டன்கள் கத்திகளை நழுவவிட்டுவிட்டு காரின் அருகில் வந்தனர்.

விதானையார் முருகரைப் பார்த்து, "என்ன... ஒரு சாதிச் சண்டை துவக்கத் திட்டம் போட்டிட்டியளே?", எனக் கேட்டார்.

முருகர் தயக்கத்துடன், "இல்லையய்யா ஆரோ வடிவேலன்ரை வீட்டைக் கொழுத்த வந்திட்டாங்கள்", என்றார்.

"எங்கை அவங்கள்?"

"ஓடியிட்டாங்கள்!", என்றார் பொன்னர்.

"அப்ப... வந்தவங்களை ஓட விட்டிட்டு தேடி மணியாறன் மூலைக்குப் போக வெளிக்கிட்டனீங்களே?",

எவருமே எதுவும் பேசாது தலையைக் குனிந்து கொண்டனர். சிவஞானம் விதானையாரைக் கூட்டி வர ஒரு கார் பிடித்துக் கொண்டு போகும் போது மணியாறன்மூலை 'சிங்கன் சனசமூக நிலையத்தில்' கமலியும் முத்துலட்சுமியும் சிறு பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்ததையும் அங்கு சண்டை பற்றிய எந்த ஒரு அறிகுறியும் இல்லாததையும் விளக்கினான்.

இரு பகுதியினருக்குமிடையே ஒரு கலகத்தை மூட்டி ஒரு இரத்தக் களரியை ஏற்படுத்தி, ஒரு மாறாத பகையை உருவாக்க ஒரு சதி நடப்பதை அனைவருமே புரிந்துகொண்டனர். விதானையாரைப் பொறுத்தவரையில் இவை அனைத்தினதும் தோற்றுவாய் காசிப்பிள்ளை முதலாளி தான் என்பதை நன்றாகவே தெரிந்து வைத்திருந்தார். ஆனால் அவர் அவர்களிடம் அதைச் சொல்லவிரும்பவில்லை. ஆனால் காசிப்பிள்ளையைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியான சந்தர்ப்பத்தில் சரியான முறையில் கவனிக்க வேண்டும் என அவர் முடிவு செய்துகொண்டார்.

"சரி.. எல்லாரும் வீடுகளுக்குப் போங்கோ. மிச்சத்தை நான் பாக்கிறன்", என்று விட்டுக் காரில் ஏறினார் விதானையார்.

அவரின் கூடவே கனகரத்தினமும் சிவஞானமும் ஏறிக்கொண்டனர். கனகரத்தினம் மெல்ல, "ஐயா நரிமுத்தரும் வடிவேலனும் தான் இப்படி ஒரு கதையைக் கிளப்பிவிட்டிருக்கிறாங்கள்", என்றான். விதானையார் மெல்ல சிரித்தவாறே "அவங்களெல்லாம் வெறும் எறிகாயள் எல்லாத்தையும் நடத்திறவன் வேறை", என்றார்.

சிவஞானம் ஆவலுடன், "ஆரய்யா அது?", எனக்கேட்டான். "எல்லாம் காசிப்பிள்ளை முதலாளி தான் நாளைக்கு பொன்னுக்குட்டி வடிவேலன்ரை வீட்டை எரிக்க வந்தவன் எண்டு முறைப்பாடு போட்டால் ஆச்சரியமில்லை!".

விதானையாரின் வார்த்தைகள் இருவரையும் ஆச்சரியப்பட வைத்தன. எனினும் யோசித்துப் பார்த்தபோது அப்படியும் நடக்கலாம் என அவர்கள் நம்பினர்.

"முறைப்பாடு போடாமல் மறிக்க வேணுமெல்லே?", சிவஞானம் அவசரப்பட்டான்.

"போடட்டும் பிறகு பார்ப்பம்... எந்தப் பொலிஸ்காரன் ஊருக்கை இறங்கிறதெண்டாலும் என்னைக் கேட்டுத்தானே இறங்க வேணும்", என்றார் விதானையார் நிதானமாக.

அடுத்த நாள் அதிகாலையிலேயே தாங்கள் கிளப்பிவிட்ட வதந்தி வெறும் வெற்று வேட்டாகப் போய்விட்டதையும், வீடு கொளுத்தல் விளையாட்டும் அம்பலமாகிவிட்டது என்பதையும் காசிப்பிள்ளை முதலாளி அறிந்துவிட்டார். எனினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விஷயத்தில் தனது பெயர் வெளிவராமல் இருந்ததில் அவருக்குப் பரம திருப்தி. அவர் எதிர்பார்த்த இரு சமூகங்களுக்குமிடையேயான சாதிச் சண்டை வெகுதூரம் விலகி விட்டது அவருக்குப் பெருங்கவலையை அளித்தது.

அவரின் வீட்டில் காவலுக்கு வந்திருந்தவர்கள் பலருக்கு இன்னும் வெறி முறியவில்லை. வடிவேலனுக்கு சாராய வெறியுடன் நித்திரைவெறியும் சேர்ந்து ஆட்டிக்கொண்டிருந்தது.

அவன் காசிப்பிள்ளையிடம் வந்து, "முதலாளி! பொன்னுக்குட்டியன் என்னைக் கண்டால் வெட்டுவான் நீங்கள் தான் என்னைக் காப்பாற்றவேணும்", எனப் புலம்பினான்.

அங்கு நின்ற மகாலிங்கம் அரை வெறியில, "வெட்டட்டன்: பிறகு பார் மணியாறன்மூலையிலை ஆம்பிளையளே இல்லாமல் அழித்துவிடுவம்!", என்றான்.

"அவன் வெட்டினால் நான் செத்துப்போவன் பிறகு நீங்கள் அழிக்கிறதை நான் எங்கை பாக்கிறது?", என பயத்துடன் சொன்னான் வடிவேலு.

"பயந்தாங்கொள்ளி!", என்று விட்டுக் கடகடவெனச் சிரித்தான் மகாலிங்கம். அதேவேளையில் மூலையில் கிடந்த சாராயப் போத்தலை அவன் கண்கள் பார்க்கத் தவறவில்லை.

"வடிவேலு? நான் இருக்க உனக்கென்ன பயம். எதுக்கும் நீ வீட்டை போய் குளிச்சிட்டு வா... விதானையார் வீட்டை போட்டு வருவம்", என்றார் காசி.

விதானையார் தனது காரியாலயத்திற்குப் போய் அமர்ந்த சிறிது நேரத்தில் காசிப்பிள்ளையும், வடிவேலுவும் அங்கு வந்து சேர்ந்தனர். காசிப்பிள்ளை வந்ததும் வராததுமாக, "என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானையார் ஐயா உங்கடை ஏரியாவிலை இப்படி அநியாயம் நடக்குது பாத்துக்கொண்டு பேசாமல் இருக்கிறியள்!", என்றார்.

"அப்பிடியே என்னது", எனக் கேட்டார். விதானையார் மிகவும் நிதானமாகவே.

"ராத்திரி பொன்னுக்குட்டியன்ரை ஆக்கள் வடிவேலன்ரை வீட்டைக் கொளுத்த வந்திட்டாங்கள்"

"கொளுத்திப் போட்டாங்களே?"

"இல்லை! தாய் மனிஷி கண்டவுடனை விட்டிட்டு ஓடியிட்டாங்கள்"

"மனிஷி ஆக்களைக் கண்டதே? ஆரையும் கண்டதே?"

விதானையார் செருமிவிட்டு வடிவேலனைப் பார்த்து, "என்னடா? நீ சொல்லு", என்றார்.

அவன், "நான் வீட்டிலை இல்லையையா?, என்றான்.

"ஏன் எங்கை போனனீ?"

"முதலாளி வீட்டை நிண்டனான்", என்றான் அவன்.

"அப்ப நீ வீட்டிலை இல்லாத நேரம் பார்த்து வீடு கொழுத்த வந்திருக்கிறாங்கள். சரி நேற்றுப் பகல் நரிமுத்தர் எவ்வளவு சாராயம் வேண்டித் தந்தவர்?".

அந்த விதானையாரின் கேள்வியில் வடிவேலு அதிர்ந்து போனான். அவன், "அது... அது...", எனத் தடுமாறினான்.

"டேய்... நேற்று சாராயம் விக்கிற வீட்டில வைத்து வாற போற ஆக்களுக்கு நரியர் சாராயம் வேண்டிக் குடுத்து இரவு பொன்னுக்குட்டி ஆக்கள் ஆலடிவெட்டையாரை வெட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரப் போறாங்களாம் எண்டு கதை பரப்பினீங்களோ இல்லையோ?"

வடிவேலன் தடுமாறினான். அவனுக்கு நாக்குளறியது. காசிப்பிள்ளை குபீரெண்டு குறுக்கிட்டு, "ஐயா உங்களுக்கு ஆரோ கதை சொல்லியிருக்கிறாங்கள்", என்றார்.

விதானையார் சீறினார், "ஓமோம் கதை தான் சொன்னவங்கள். கதையிலை சாராயச் சிலவு முழுக்க நீ தான் எண்டதையும் சொன்னவங்கள்."

காசிப்பிள்ளை திகைத்துவிட்டார். எனினும் உடனடியாகச் சமாளித்தவராக, "ஐயா நாங்கள் முறைப்பாடு போடத்தான் வந்தனாங்கள்".

"தெரியும் பொலிசுக்குப் போவியள் எண்டு பாத்தன். ஆனால் இங்சை வந்திட்டியள்", என்ற விதானையார் வடிவேலுவைப் பார்த்து, "டேய் போய் மாமரத்தோடை கையைக் குடு", என்றார்.

காசி பதட்டத்துடன், "முறைப்பாடு போட வந்தவனை அடிக்கச் சட்டம் இருக்கே?", எனக் கேட்டார்.

"முறைப்பாடு போடவர அடிக்கச் சட்டம் இருக்கோ இல்லையோ எண்டு உனக்குக் காட்டுறன்", என்ற விதானையார் வடிவேலனிடம் "போடா மாமரத்தடிக்கு" என்றார்.

விதானையார் அடுத்த நிமிஷம் இறப்பில் சொருகியிருந்த பிரம்பை உருவிக் கையில் எடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 34

காசிப்பிள்ளை விதானையாரை எதிர்த்துக் கதைத்ததும் விதானையார் பிரம்பைக் கோபத்துடன் உருவி எடுத்ததும் அனைவரையுமே அதிர்ச்சியடைய வைத்து விட்டன. சத்தம் கேட்டு சீதேவிப்பாட்டியும் அவ்விடத்திற்குப் பரபரப்புடன் வந்துவிட்டாள். சொர்ணமும் ஒருவிதமான பயத்துடன் சற்றுத் தூரத்தில் நின்று பார்த்துக் கொண்டாள்.

காசிப்பிள்ளை ஒரு சில வினாடிகள் துணுக்குற்ற போதிலும் வடிவேலனை அடி வாங்க விட்டால் அவன் முற்றாகவே தன்னில் நம்பிக்கை இழந்து விடுவான் என்பதை உணர்ந்தவராக, “விதானையார்! பிரச்சனையெண்டால் அவனைப் பொலிசில் குடுங்கோ... நீங்கள் அடிக்கிறதை விரும்பேல்லை”, என்றார்.

விதானையாருக்கு கோபம் உச்சிக்கு ஏறி விட்டது, “அப்பிடியெண்டால் இனி நான் உனக்குப் பிடிச்ச மாதிரித்தான் விதானை வேலை பார்க்க வேணுமோ?”, எனக் கேட்டார் அவர்.

“அப்பிடியில்லை, சட்டம் எண்டு ஒண்டு இருக்கல்லே”,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இது தான் என்ரை சட்டம்”, என்று சீறிய விதானையார் வடிவேலன் முதுகில் பிரம்பால் முதற் குறி வைத்தார்.

வடிவேலன் துடித்துப் போய் அலறினான், “ஐயா! அடியாதையுங்கோ... எனக்கு ஒன்றும் தெரியாது. எல்லாம் காசிமுதலாளியும் நரிமுத்தரும் சொன்னபடிதான் நான் செய்தனான்”,

சொர்ணம் வடிவேலன் ஒரு அடியுடன் துடித்துப்போய் அலறுவதையும், இளையவன் முன்பு ஒரு முறை ஐந்து அடிகளையும் அசையாமல் நின்று வாங்கியதையும் நினைத்துப் பார்த்துக் கொண்டாள். இளையவனின் மன உறுதி அவள் மனத்தில் ஒரு பெருமையைப் பரவவிட்டது.

சீதேவிக் கிழவி காசியை வெறுப்புடன் பார்த்துவிட்டு ஒரு முறை, “தூ”, என்று துப்பினாள். அவள் எவ்வளவு தான் சாதித் தடிப்புப் பிடித்தவளாக இருந்த போதிலும் தங்கள் குடிமக்களுக்குள் கலகம் ஏற்படுத்துவது ஒரு அவமதிக்கத்தக்க ஈனச் செயல் என்றே கருதினாள்.

விதானையார் இரண்டாவது அடிக்கு ஓங்கின பிரம்பைக் கீழே விட்டு விட்டு காசியைப் பார்த்து, “எனக்கு உந்த விஷயம் நேற்றே தெரியும். அவன்ரை வாயாலை கக்க வைக்கத்தான் பிரம்பைக் கையிலை எடுத்தனான்”, என்றார்.

காசிப்பிள்ளை தடுமாறியவாறே, “அவன் அடிப்பயத்தினால் ஏதோ உளறுறான்”, என்றார்.

வடிவேலன் கத்தினான், “இல்லையப்பா.. மூத்த நயினாரணை தான் சொல்லுறது உண்மை”

விதானையார் பிரம்பை ஆட்டியபடி கேட்டார், “இப்ப... நீ என்ன சொல்லப்போறாய்?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பொய்! பொய்! அவன் சொல்லுறது பொய்”

காசிப்பிள்ளைக்கு தான் ஒரு முதலாளி எண்டும் பாராமல் தனது முதுகை நோக்கி விதானையார் பிரம்பைத் திருப்பிவிடுவரோ என்ற பயம் உள்ளூற உதறல் எடுக்க வைத்தது.

விதானையார் கர்ஜித்தார், “டேய்... காசி. நீ செய்த வேலைக்கு உன்னைக் கட்டித் தொங்க விட்டிட்டு கீழை காவோலை கொழுத்த வேணும்... இந்த ஊருக்கை ஒரு பெரிய மனுசன் மாதிரித் திரியிற உனக்கு இப்படிச் செய்ய மனம் வருகுதல்லே! ஆனால், எலெக்சன் முடியுமட்டும் உன்ரை காரை றோட்டிலை காணக்கூடாது கண்டால் ஆலடிவெட்டைப் பொடியளே கல்லெறிஞ்சு உடைப்பாங்கள். நீ எல்லா இடமும் நடையிலை தான் திரியவேணும். டேய் வடிவேலு: நீயோ, நரிமுத்தனோ காசி வீட்டுப்பக்கம் எட்டியும் பார்க்கக் கூடாது... சரியே?”

சொல்லி முடித்து விட்டு பதிலை எதிர்பாராமலே, பிரம்பைக் கூரையில் சொருகிவிட்டு உள்ளே போய் விட்டார் விதானையார்.

காசியும் வடிவேலனும் அவ்விடத்திலேயே அசையாமல் நின்றிருந்தனர். சீதேவிக்கிழவி வெறுப்புடன், “ஏன்டா மரம் மாதிரி நிக்கிறியள். போய் துலையுங்கோவன். போ... போ...”, என விரட்டினாள்.

அவர்கள் மெல்ல அவ்விடத்தை விட்டு அகன்றனர். அவர்கள் போன பின்பும் வெளி விறாந்தையில் நின்ற சொர்ணம் அந்த மாமரத்தை ஒரு முறை உற்று நோக்கினாள் மீண்டும் ஒரு முறை அவள் நினைவில் ஒரு அடியுடன் எல்லாவற்றையும் கொட்டிவிட்ட வடிவேலனும் ஐந்து அடிகள் விழுந்த போதும் தான் அலுமாரியை அரக்கக் கூப்பிட்டுத்தான் வீட்டுக்குள் அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவன் என்பது பற்றி வாய்திறவாத இளையவனும் வந்து போயினர். அவள் தன் மனதுக்குள், "எப்படியும் அவன் என்ரை இளையவனல்லே?", என நினைத்த போது அவளையறியாமலே அவளின் விழிகள் மூடிக் கொண்டன. அவள் மெல்லத் தன் விழிகளைத் திறந்தபோது சங்கடப் படலையடியில் இளையவன் வந்து கொண்டிருந்ததைக் கண்டதும் அவள் எல்லையற்ற உயரத்தில் பறக்கத் தொடங்கிவிட்டாள். மெல்லத் திரும்பிப் பார்த்து சீதேவிப் பாட்டி உள்ளே போய்விட்டதை உறுதி செய்து விட்டு மெல்ல அவனருகில் போனாள்.

அவள் மெல்ல அவனிடம், "உன்னை நினைக்க நீ வந்து நிக்கிறாய்?", என்றாள்.

"என்னையோ ஏன்? ஏன் என்னை நினைச்சனீங்கள்", என ஒரு சந்தோஷம் கலந்த ஆச்சரியத்துடன் கேட்டான் அவன். ஒரு மெல்லிய பொய்க் கோபத்துடன் அவள், "நான் உன்னை நினைக்காமல் வேறை ஆரை நினைக்கிறது?", என்றாள். ஒரு மெல்லிய மின்சார அதிர்வு இளையவனின் உடலெங்கும் பரவியது. சொர்ணம் எத்தனையோ சந்தர்ப்பங்களில் எத்தனையோ விதமாக அவனிடம் தன்மனதை வெளிப்படுத்திய போதிலும் அதற்குச் சாதகமாகவோ பாதகமாகவோ தன் மனநிலையை வெளிப்படுத்த முடியாத கோழையாகத் தான் இருப்பதையிட்டு அவன் தனக்குள் வெட்கப்பட்டான். ஆனால் அவளின் விருப்பத்தைத் தன்னால் நிராகரிக்க முடியாது என்பதை மட்டும் திட்டவட்டமாகப் புரிந்து கொண்டான். எனினும் அவன் சில வினாடிகள் தாமதத்தின் பின், "நீங்கள் எதை நினைக்கிறது விடுறது என்பதை நான் கட்டுப்படுத்த முடியுமே", எனக் கேட்டுவிட்டு அவளின் முகத்தைப் பார்த்தான்.

"ஓ.. அதைத் தான் நீ எப்பவோ கட்டுப்படுத்தத் துவங்கியிட்டியே", என ஒரு மெல்லிய புன்னகையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிவிட்டு பதிலை எதிர்பாராமலே அவள் உள்ளே போய்விட்டாள்.

இளையவன் சுற்றிக்கொண்டு பின் முற்றத்துக்கு வந்தபோது அங்கு நின்ற சீதேவிப்பாட்டி, "என்னடா, இவள் சொர்ணம் கூட்டம் கூட்டமெண்டு திரியிறாள் நல்ல வடிவாய் பேசுறாளே?", எனக் கேட்டாள்.

"ஓமணை. பிள்ளை மேடையிலை ஏறி பேசத் துவங்கினால் ஒரே கைதட்டல்தான்", என்றான் இளையவன்.

கிழவி ஒரு முறை சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, "டேய்! இவள் கண்ட கண்ட இடங்களிலை தண்ணி வென்னி குடிக்கிறவளே?", என மெல்லிய குரலில் கேட்டாள்.

"நான் ஆரை நினைக்கிறது எண்டதை நீ எப்பவோ கட்டுப்படுத்தத் துவங்கியிட்டியே", என்ற சொர்ணத்தின் வார்த்தைகள் ஏற்படுத்திய ஒரு பெரிய மன நிறைவு கிழவியின் கேள்வியுடன் ஒரு முறை குலுக்கி அதிர்ந்தது. அவன் மெல்ல, "இல்லை, சோடா போத்தலோடை தான் குடிக்கிறவா", என்றான்.

அந்தப் பதில் கிழவிக்கு பெரும் மனத்திருப்தியை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

"அது தானே பார்த்தன்... அவள் பிள்ளை பிழை விடாள்", என்ற கிழவி குறுக்குக் கட்டை அவிழ்த்து உதறிவிட்டு மீண்டும் கட்டிக்கொண்டு நகர்ந்தாள்.

ஆனால், "அவள் பிள்ளை பிழை விடாள்", என்ற வார்த்தைகள் மட்டும் பேரிரைச்சலுடன் மீண்டும் மீண்டும் அவனின் காதுகளில் மோதிக்கொண்டன.

காசிப்பிள்ளை நரிமுத்தரின் வருகைக்காக பெரும் கொதிப்புடன் காத்திருந்தார். நேரம் இரவு எட்டு மணியாகியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தர் வந்து சேராத நிலையில் அவரின் பொறுமை மெல்ல மெல்ல பறிபோய்க் கொண்டிருந்தது. அவர் எழுந்து கேற்றடிக்குப் போய்ப் பார்க்க நினைத்தபோது படலையைத் திறந்துகொண்டு முத்தர் உள்ளே வந்தார்.

"இவ்வளவு நேரமும் எங்கை போனனீ", என்று கேட்டுவிட்டு காசி ரீப்போவில் கிடந்த சாராயப் போத்தலைக் காட்டி "அதிலை நாலு மிடறு வாயிலை விட்டிட்டு இதிலை வந்து இரு", எனக் கட்டளையிட்டார்.

முத்தர் ஒரு அசட்டுச் சிரிப்புடன் சாராயத்தை ஊற்றிக் குடித்துவிட்டு காசி முதலாளியின் காலடியில் சப்பாணி கட்டி அமர்ந்தவாறே தன் வழுக்கைத் தலையைத் தடவிக்கொண்டார்.

"உன்னையும் வடிவேலனையும் எனது வீட்டுப்பக்கம் வரக்கூடாதென்று விதானை சொல்லிப்போட்டான் அது தான் உன்னை இரவு கூப்பிட்டனான்", என்றார் காசி.

"ஓ... உங்களையும் கார் ஓட்டக்கூடாதெண்டும் சொல்லிப்போட்டாராம்", என்றான் முத்தர்

"கார் ஓட வேணும். எப்பிடியும் ஓட வேணும்", என்றவாறே பல்லை நெருமினார் காசி.

"ஐயா, என்ரை பிளானிலை ஒரு பிழையுமில்லை. ஆனால் அதை இந்த கனகரத்தினமும் சிவஞானமும் தான் குழப்பிப் போட்டாங்கள்", என்று விட்டு மீண்டும் தலையைத் தடவினார் முத்தர்.

காசி முதலாளியின் கண்களில் தீ படர்ந்தது.

"டேய் நான் கார் ஓடவும் வேணும். அவங்களைப் பழிவேண்டவும் வேணும்!".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தர் நரிச்சிரிப்புடன் சொன்னார், "அது சின்ன விஷயம், கொஞ்சம் சிலவு அவ்வளவுதான்"

"என்னண்டு?"

"உங்கடை காரின் முன் லையிற் கண்ணாடியை அடிச்சு உடைப்பம். மட்காட்டை மெல்ல அடித்து நெளிப்பம்... கண்ணாடித் துண்டுகளைக் கொண்டு போய் ஆலடிச் சந்தியிலை போட்டிட்டுப் பொலிசிலை போய் சிவஞானத்திலையும் கனகரத்தினத்திலையும் என்ரி போடுவம்!"

காசி முதலாளிக்கு ஒரு வெளிச்சம் தெரிவது போலிருந்தது. அவர் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

"சார்ஜண்ட் சின்னத்தம்பியிட்டை ஒரு வெள்ளைப் போத்திலோடை போனியள் எண்டால் மிச்சம் எல்லாம் சரிவரும். விதானையையும் மாட்டி விடலாம்".

பெரும் வெற்றியின் எதிர்பார்ப்புடன் காசிப்பிள்ளை எழுந்து சென்று சாராயத்தை கிளாசில் ஊற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 35

காசிப்பிள்ளை ஆலடிவெட்டைக்கும் மணியாறன் மூலைக்குமிடையே ஒரு கலகத்தை ஏற்படுத்தி அதன் மூலம் மணியாறன்மூலையாரைத் தனிமைப்படுத்திப் பழிவாங்கவும், ஆலடிவெட்டையாரின் வாக்குகள் பொன். கந்தையாவுக்கு விழாமல் தடுக்கவும் போட்ட அத்தனை திட்டங்களும் தோல்வியடைந்து விட்டதில் மிகவும் கொதிப்படைந்து போயிருந்தார். கனகரத்தினத்தையும் சிவஞானத்தையும் மடக்கினால் தான் ஆலடிவெட்டையைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும் என்பதைப் புரிந்து கொண்டார். ஆனால் அம் முயற்சியிலும் தோல்வியடைந்து விடாமலிருக்க, நரிமுத்தருடன் ஆழமான ஆலோசனைகள் நடத்தியிருந்தார்.

அதன்படி காரின் இரு முன் கதவுகளிலும் காங்கிரஸ் கட்சியின் விளம்பரச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு விட்டன. வலது இடது பக்க லைட்டும் கதவுக்கண்ணாடியும் அடித்து நொருக்கப்பட்டன. அதன் உடைந்த துண்டுகளையும் கண்ணாடியையும் ஒரு கடதாசிப் பையில் அவர் வெகு பக்குவமாக எடுத்துப் போட்டுக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் விடிந்து விடாத அதிகாலைப் பொழுதில் கார் நரிமுத்தரையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்டது. ஆலடிச் சந்தியில் அவர்கள் வரும்போது எவருமே காணப்படவில்லை. காரை நிறுத்தி கடதாசிப் பையில் கொண்டு வந்தவற்றைச் சந்தியில் எறிந்துவிட்டுக் கார் புறப்பட்டது.

நேரம் ஏழு மணியாகி விட்டபோதிலும் சார்ஜண்ட் சின்னத்தம்பி இன்னும் வந்து சேரவில்லை. இரவு குடித்த கல்லோயாச் சாராயம் காசிப்பிள்ளைக்கு தாங்க முடியாத தாகத்தை ஏற்படுத்தியிருந்தது. மெல்ல அவர் எழுந்து சென்று பொலிஸ் நிலையத்துக்கு முன்பிருந்த ஒரு பெட்டிக் கடையில் வல்வெட்டித்துறைச் சோடா ஒன்றை வாங்கிக் குடித்தார். அப்போ யானைச் சோடா பிரபலமாக இருந்த போதிலும் உள்ளூர் கடைகளில் சுப்பிரமணியம் சோடாவே எப்போதும் கிடைக்கும்.

அவர் ஒரு நீண்ட ஏவறையை விட்டு விட்டுத் திரும்பிப் பார்த்த போது சார்ஜண்ட் தனது பழைய ட்றாம்ப் மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கினார். அவரைக் கண்டதும் காசி அவசர அவசரமாக அவரின் அருகில் சென்றார்.

அவர் காசியிடம் மெல்லச் சிரித்தவாறே, "என்ன முதலாளி! இண்டைக்கு ஆரை உள்ளை அனுப்பப் பிளான்", எனக் கேட்டார்.

காசி ஒரு அசட்டைச் சிரிப்புடன், "நீங்கள் மனம் வைச்சால் நான் கடவுளைக் கூட உள்ளை அனுப்பியிடுவன்", என்றார்.

"ம்... வசதி கிடைச்சால் செய்வியள் தான். வாருங்கோ உள்ளை போய்க் கதைப்பம்", என்று விட்டு சார்ஜண்ட் போய் தனது ஆசனத்தில் அமர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசிப்பிள்ளை கூட்டத்தில் கல்லெறிந்தது தொடக்கம் நடந்த முழு உண்மைகளையும் கூறி விட்டு, தான் போட்டுள்ள திட்டங்களையும் விளக்கினார்.

சகலவற்றையும் கவனமாகக் கேட்ட சின்னத்தம்பி, "நீங்கள் நினைக்கிற மாதிரி அவங்களை விளக்கமறியலுக்கு அனுப்பிறதெண்டது உங்கடை என்ரியைப் பொறுத்து இருக்கு", என்றார்.

"என்ரியை எப்படி எழுதவேணுமோ அப்படி நீங்கள் எழுதுங்கோ.... நான் கையெழுத்துப் போடுறன்"

"இதுக்கு மூன்று விதமாய் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யலாம். ஒண்டு வழி மறிச்சுத் தாக்கினது. மற்றது தற்செயலான கொலை முயற்சி. அடுத்தது திட்டமிட்ட கொலை முயற்சி மூண்டாவதுக்கு தக்க மாதிரி என்றி போட்டால் பிணை என்ற பேச்சுக்கே இடமில்லை".

காசிப்பிள்ளை சந்தோசத்தில் துள்ளினார். "மூண்டாவதையே போடுவம்"

"என்ர விசயம் என்ன மாதிரி?"

"அது நான் பிழை விடுவனோ?"

சார்ஜன்ட் என்றியை எழுத ஆரம்பித்தார். என்றி எழுதிமுடிந்த போது காசிப்பிள்ளை ஏற்பாடு செய்த அப்புக்காத்து சிவப்பிரகாசமும் வந்து விட்டார்.

சார்ஜன்ட் சிவப்பிரகாசத்திடம், "சேர். இப்ப நாங்கள் ஆலடிக்குப் போய் அடையாளங்களைப் பாத்திட்டு நான் முதல் ரிப்போட் எழுதிறன்... அதை நாங்கள் கொண்டு போய் நீதவானிட்டை சமர்ப்பிச்சு அறெஸ்ற் வாறன்ற் வாங்குவம்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஓமோம். அறெஸ்ற் வாறன்ட் எடுத்தால் விதானையிட்டைப் போகத் தேவையில்லை. நாங்கள் நேரையே போய்ப் பிடிக்கலாம்”, என அவரும் அதை ஆமோதித்தார்.

இப்படி ஒரு பெரும் சதி வலை பின்னப்படுவதை விதானையாரோ அல்லது ஆலடிவெட்டை இளைஞர்களோ அறிந்திருக்கவில்லை என்பது மட்டுமல்ல இப்படி நடக்கும் என எதிர்பார்க்ககூட இல்லை. சார்ஜன்ட் அவர்களைக் கைது செய்வதைக் கூட வெகு நிதானமாகவும் புத்திசாலித்தனமாகவும் செய்து முடிக்கத் திட்டமிட்டிருந்தார்.

அடுத்த நாள் அதிகாலையில் சின்னத்தம்பியையும் இன்னும் சில பொலிஸ்காரரையும் அழைத்துச் சென்ற பொலிஸ் ஜீப் கனகரத்தினம் வீட்டின் முன்பு நின்று ஹோர்ண் அடித்தது. வெகு நிதானமாக கையில் கொட்டன் பொல்லுக் கூட இல்லாமல் படலையை திறந்து கொண்டு உள்ளே போனார் சார்ஜன்ட்.

முற்றம் கூட்டிக்கொண்டு நின்ற கனகரத்தினத்தின் தாயிடம், “அம்மா தம்பி கனகரத்தினத்தை கூப்பிடுங்கோ!” என்றார்.

ஒரு பொலிஸ்காரன் இவ்வளவு பண்பாக கதைக்கிறது அவளுக்குப் பெரும் ஆச்சரியத்தை மூட்டியபோதும் அவள், “ஏனய்யா”, எனக்கேட்டாள்.

“சாட்சி ஒண்டு சொல்லவேணும்.... அது தான் கூட்டிக்கொண்டு போக வந்தனாங்கள்”, என்றார் அவர். சத்தம் கேட்டு வெளியே வந்த கனகரத்தினம் அவர்களை ஆச்சரியத்துடன் பார்த்தான். சார்ஜன்ட், “தம்பி அந்தப் பொன்னுக்குட்டியின்ரை பெட்டைக்கு கூட்டத்திலை கல்லெறி விழுந்தது பற்றி ஒரு சாட்சி சொல்ல வேணும். நீங்களெல்லே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனனீங்கள்'', என்றார் வெகு மரியாதையாக.

"நாங்கள் என்றி போடேல்லையே சேர்!'', என்றான் கனகரத்தினம் சற்று யோசித்து விட்டு

"ஓமோம் தெரியும்... ஆனால் ஆஸ்பத்திரி றிப்போட் வந்திருக்கு இது எலெக்சனோடை சம்பந்தப்பட்டபடியால் நீதவான் வலு இறுக்கமாய் இருக்கிறார்''.

கனகரத்தினத்தால் நம்ப முடியவில்லை. ஆனால் அவர் சொல்லும் விதம் நம்பும்படியாக இருந்தது.

"நான் இன்னும் முகம் கூடிக் கழுவேல்லை. நீங்கள் போங்கோ...நான் வெளிக்கிட்டு சைக்கிளில் வாறன்'', என்று விட்டு உள்ளே போகத் திரும்பினான்.

"பரவாயில்லை. நீங்கள் முகத்தைக் கழுவிப்போட்டு வாங்கோ நாங்கள் நிக்கிறம்'', என்றார் சின்னத்தம்பி.

"ஐயா இவ்வளவு தூரம் கேட்குது போட்டு வாவன் தம்பி?'', என்றாள் கனகரத்தினத்தின் தாய்.

பத்தே நிமிடங்களில் தயாராகி ஜீப்பில் வந்து ஏறினான் அவன். அதே கதையைச் சொல்லி சிவஞானத்தையும் அழைத்தனர். கனகரத்தினமும் அவர்களுடன் நின்றதால் எவ்வித மறுப்புமின்றி அவனும் புறப்பட்டான்.

ஜீப் பருத்தித்துறை நோக்கி வேகமாய்ப் போக ஆரம்பித்தது. நெல்லியடி கடந்து சிறிது தூரம் சென்று கொண்டிருக்கும் போது தங்கள் இருவர் கைகளும் பிணைத்து விலங்கிடப்பட்ட போது தான் அவர்கள் தாங்கள் ஒரு பெரும் சதி வலைக்குள் சிக்குப்பட்டு விட்டதைப் புரிந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் - 36

சின்னன் ஊற்றிக் கொடுத்த கள்ளில் ஒரு பகுதியைக் குடித்துவிட்டு சாய்மனைக் கதிரையில் சாய்ந்து அமர்ந்து கொண்டார். விதானையார் தலையைக் குனிந்தவாறே ஓலை கிழித்துக்கொண்டிருந்த சின்னனின் பொன் மஞ்சள் நிறத் தோள்களும் முதுகும் குறுக்குக் கட்டுக்கு மேலே தெரிந்து கொண்டிருந்தன. அவருக்கு அவளிடம் ஏதாவது பேச வேண்டும் போல் தோன்றியது.

அவர் மெல்லிய செருமலுடன் "சின்னன்" கூட்டங்களிலை என்ரை பிள்ளையின்ரை பேச்சு எப்படி?", எனக்கேட்டார். அவள் மெல்லத் தலையை நிமிர்த்தி அவரைப் பார்த்துவிட்டு, "அது உங்களைப் போலை கெட்டிக்காரிதானே", என்றாள். அதை அவள் சொன்னபோது மெல்ல நாணம் பரவி அவளின் முகத்தைச் சிவக்க வைக்கவே மீண்டும் தலையைக் குனிந்து ஓலையைக் கிழிக்க ஆரம்பித்துவிட்டாள். விதானையார் அவளின் முகமாற்றத்தை அவதானித்துவிட்டு ஒரு மெல்லிய புன்னகையுடன் மிகுதிக் கள்ளை எடுத்துக் குடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் தலையை நிமிர்த்தாமலே மெல்லிய குரலில், "அண்டைக்கு கமலிக்குக் கல்லெறிஞ்ச மாதிரி பிள்ளைக்கும் ஏதும் நடந்திடுமோ எண்டுதான் பயமாய்க் கிடக்கிது", என்றாள்.

சில வினாடிகள் மௌனத்தின் பின் அவர், "அப்படி நடவாது! நடந்தால் செய்தவனுக்கு மற்ற நாள் கை இருக்காது", என்றார் இறுக்கமாக. சின்னன் ஒரு பெருமூச்சு விட்டாள் உண்மையாகவே அப்படி எதுவும் நடந்து விடக்கூடாது என அவள் மனசுக்குள் சன்னதியானை வேண்டிக்கொண்டாள்.

அந்த நேரத்தில் நாய் பெரிதாகக் குலைக்கவே எட்டிப்பார்த்த சொர்ணம் சங்கக்கடைப் படலைக்குள் ஒரு பெரிய கூட்டமே நிற்பதைக் கண்டு வெளியே வந்தாள்.

கந்தவனம், "பிள்ளை ஐயா நிக்குதே?", எனக்கேட்டார்.

"ஓ. மாலுக்கை இருக்கிறார்", என்ற சொர்ணம் பலமாக, "ஐயா.. ஆலடிவெட்டையிலையிருந்து ஆக்கள் வந்திருக்கினம்", என்றாள்.

"இஞ்சை வரச் சொல்லு?", என்று விதானையார் பதிலுக்குக் குரல் கொடுத்தார். சொர்ணமும் அவர்களின் பின்னால் போனாள்.

அவர்களைக்கண்ட விதானையார் ஆச்சரியத்துடன், "என்ன இப்பிடிப் படையெடுத்துக் கொண்டு வந்திருக்கிறியள்?", எனக் கேட்டார்.

பொன்னம்மா அழுதழுது சொல்லி முடிக்கும் வரை விதானையார் நிதானமாகக் கேட்டுக்கொண்டிருந்தார். முதலில் கமலியிடம் முறைப்பாடு எடுக்காமல் சாட்சிகளிடம் வாக்குமூலம் பதிய முடியாது என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். எனவே அவர்களைப் பொய் சொல்லி வேறு ஏதோ காரணத்திற்காகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்துக்கொண்டு போயுள்ளனர் என்பதை அவர் உடனடியாகப் புரிந்துகொண்டாலும் அதை வெளியே சொல்லவில்லை.

சுண்டுக் கோப்பையை எடுத்துச் சின்னனிடம் நீட்டியவாறு, அவர், "இதுக்கை கொஞ்சம் விடு!" சின்னன் கொடுத்ததை ஒரே மூச்சில் இழுத்து முடித்து விட்டு, "கந்தவனம்! போய் மணியத்தின்ரை காரை வரச்சொல்லு பொலிஸ் ஸ்ரேசன் மட்டும் போட்டு வருவம்", என்றார். பொன்னம்மா அழுதவாறே, "ஐயா நானும் வாறன்", என்றாள். விதானையார் அவளைப் பார்த்துவிட்டு. "நீ.. நில்! நான் கந்தவனத்தைக் கூட்டிக்கொண்டு போறன்", என்றார். விதானையார் பொலிஸ் நிலையத்துக்குப் போய்ச் சேர்ந்த போது சார்ஜண்ட் சின்னத்தம்பி கடமை முடித்து வீட்டுக்குப் போகத்தயாராகிக் கொண்டிருந்தார்.

விதானையார் சற்றுக் கடுமையாகவே கேட்டார். "நான் இல்லாமல் என்னண்டு என்ரை ஏரியாவிலை வந்து அறெஸ்ற் பண்ணுவியள்?"

சின்னத்தம்பி அப்பாவி போலவே பதிலளித்தார். "நான் என்ன விதானையார் செய்யலாம். அவங்கள் லெக்சன்காறர் நீதவானட்டைப் போய் அறெஸ்ற் வாறன்ற் எடுத்துக்கொண்டு வந்திட்டாங்கள்".

"எப்பிடியெண்டாலும் என்னட்டை வந்திருக்கலாமெல்லே?"

"ஏன் உங்களுக்கு கரைச்சலை எண்டிட்டு", என இழுத்தார் சின்னத்தம்பி

"அவங்கள் என்ன பிழை செய்தவங்கள்?"

"இராத்திரி காசிப்பிள்ளை முதலாளியின்ரை காரை அடிச்சு நொருக்கிப் போட்டாங்கள். அவர் உயிர் தப்பினதே அருந்தப்பு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானையாருக்கு விஷயங்கள் ஓடி வெளிக்க ஆரம்பித்துவிட்டது. தான் எலெக்சன் முடியுமட்டும் காசி கார் ஓடக்கூடாது எண்டு சொன்னதும் ஓடினால் ஆலடிவெட்டைப் பெடியளைக்கொண்டு காரை உடைப்பிக்கப் போவதாகவும் கூறியது, அவரின் நினைவுக்கு வந்துபோனது. தான் அப்படிச்சொல்லும் போது காசியும் வடிவேலனும் மட்டும் இருந்த காரணத்தால் அது வேறு எவருக்கும் தெரிந்திருக்க வழியில்லை என்பதையும் முடிவு செய்துகொண்டார்.

"அப்ப... இப்ப... என்ன செய்யலாம்?", எனச் சின்னத்தம்பியிடம் கேட்டார் விதானையார். சின்னத்தம்பி சற்று யோசித்துவிட்டு, "நாளைக்கு சனி இனி திங்கள் தான் கோட்டிலை மோசன் போடலாம். செவ்வாய் தான் ஏதாவது செய்யலாம்", என்றார் அவர்.

"சரி பாப்பம்...", என்று விட்டு காரை நோக்கிப் போனார் விதானையார்.

கந்தவனம் மெல்லக் கேட்டார், "ஐயா! இனி என்ன செய்யிறது?"

விதானையார் எதுவுமே பதில் பேசாமல், "மணியம்! காரை குடியரசார் வீட்டை விடு" என்றார்.

கொழும்பிலிருந்து ஜெயசிங்கம் என்ற பிரபல சட்டத்தரணி பொன். கந்தையாவின் தேர்தல் வேலைகளுக்காக வந்திருந்தார். விதானையார் குடியரசாருக்கு விசயங்களை விளக்கமாகச் சொன்னபோது அவர் உடனடியாகவே விதானையாரையும் அழைத்துக்கொண்டு ஜெயசிங்கம் தங்கியிருந்த இடத்துக்குப் போனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயசிங்கம் முழுமையாகவே விஷயங்களைக்கேட்டு விட்டுப் பின் சில கேள்விகளையும் கேட்டு முழுமையான தெளிவைப் பெற்றுக்கொண்டார்.

பின்பு அவர் "இனிக் கோடு திங்கட்கிழமை தான். எண்டாலும் நீதவான் வீட்டிலை சந்திச்சு மோசன் குடுக்கலாம். அதுக்கு அவர் அனுமதி தந்தால் தான் அது சாத்தியம்", என்று விட்டு, "இஞ்சை பக்கத்திலை எங்கையும் ரெலிபோன் இருக்கே?", என்று கேட்டார்.

"இஞ்சை போஸ்ற் ஒப்பிசிலதான் இருக்குது. இப்ப போனால் கதைக்காலாம்", என்றார் குடியரசார்.

"அப்ப வெளிக்கிடுவம் நீதவான் சந்திக்க நாளைக்கு அனுமதி தாறதும் விடுறதும் உங்கடை அதிஷ்டத்தைப் பொறுத்தது", என்று விட்டு எழுந்தார் ஜெயசிங்கம்.

கரவெட்டி தபாலகத்திற்குச் சென்று நீதிபதி வீட்டுக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்த போது நேரம் எட்டு மணியாகவில்லை. நீதிபதி ஜெயநேசன் மிகவும் கண்டிப்பானவர் எனப் பெயர் எடுத்தவர். எனினும் தனக்கு தொலைபேசி அழைப்பை எடுத்தவர் பிரபல சட்டத்தரணி ஜெயசிங்கம் என அறிந்ததும் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

ஜெயசிங்கம் ஒரு பொய்முறைப்பாட்டின் பேரில் இரு இளைஞர்களும் விளக்க மறியலுக்கு அனுப்பப்பட்டமையைத் தெளிவுபடுத்தி அது தொடர்பாக ஒரு மனுச் சமர்ப்பிக்க நேரம் தரும்படி கேட்டுக்கொண்டார். உடனடியாகவே நீதிபதி மறுநாள் காலை தன்னை உரிய மனுவுடன் காலை பத்துமணிக்கு சேம்பரில் சந்திக்கும் படி அனுமதி வழங்கினார்.

விதானையாரும் குடியரசாரும் இவ்வளவு இலகுவாக அனுமதி கிடைக்கும் என எதிர்பார்க்கவில்லை. எப்படியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரையும் பிணையில் மறுநாள் எடுத்துவிட முடியும் எனவே அவர்கள் நம்பினர்.

ஆனால் ஜெயசிங்கம், "கந்தப்பர் நாங்கள் இப்ப என்ரை வீட்டை போய் கமராவை எடுத்துக்கொண்டு ஆலடிக்குப் போய் வரவேணும்", என்றார்.

"ஏன்?", என்பது போல் குடியரசார் ஜெயசிங்கத்தின் முகத்தை நோக்கினார்.

அவர் அமைதியான முறையில், "நாங்கள் சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படுற இடத்திற்குப் போனால் எங்களுக்குச் சாதகமான தடயங்கள் கிடைக்கலாம்", என்றார்.

குடியரசராலும் விதானையாராலும் அதைப்பற்றிப் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் ஜெயசிங்கம் ஏதோ ஒரு நோக்கத்துடனே செய்வதாக நம்பிய காரணத்தால் அவர்கள் காரில் ஏறிக்கொண்டனர். கார் ஆலடியை அடைந்ததும் மூவரும் காரிலிருந்து இறங்கிக் கொண்டனர். ரோச் லைற்றை அடித்தவாறே நிலத்தைப் பார்த்து நடந்த ஜெயசிங்கம் எதையோ கண்டுவிட்ட அப்படியே நின்றுவிட்டார்.

"கந்தப்பர் இது கார் லைட்டின்ரை கண்ணாடியல்லே?. இது ஒரே இடத்திலை கிடக்கிறபடியால் வேறை இடத்திலையிருந்து இஞ்சை கொண்டுவந்து போட்டுக்கிடக்கு இதிலை அடிச்சுடைச்சிருந்தால் கண்ணாடியள் சிதறித்தான் கிடக்கும்".

ஜெயசிங்கத்தின் விளக்கத்தைக் கேட்டு இருவரும் அதிசயித்துப் போய்விட்டனர். ஜெயசிங்கம் தங்கள் காரடிக்குச் சென்று தன் கமராவை எடுத்து வந்து அக்கண்ணாடிகளைப் பல கோணங்களில் படமெடுத்துக் கொண்டார். அதே நேரத்தில் கார் வெளிச்சத்தில் சிறிது தூரத்தில் கிடந்த கடதாசிப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானையார் கண்களில் பட்டுவிட்டது. அவர் அதை எடுத்து உள்ளே பார்த்த போது அதனுள் சில கண்ணாடித் துண்டுகள் கிடந்தன.

"இஞ்சை இதை ஒருக்கால் பாருங்கோ" என விதானையார் பையை ஜெயசிங்கத்திடம் கொடுத்த போது அவர் விரித்து உள்ளே பார்த்துவிட்டு, "இது போதும் பொடியங்களை பிணையெடுக்க. கார்க் கண்ணாடியைத் தாங்களே உடைச்சுப்போட்டு பொய் வழக்குப் போடுறதுக்காக இஞ்சை கொண்டு வந்து போட்டிருக்கிறாங்கள்", என்றார் அவர் ஒரு மெல்லிய புன்சிரிப்புடன்.

விதானையாருக்கு வந்த கோபம் உடனடியாகவே போய் காசிப்பிள்ளையைப் பிடித்துவந்து ஆலமரத்திலை கட்டித்தூக்கி கீழே காவோலை கொழுத்த வேண்டும் என்ற உணர்வையே ஏற்படுத்தியது. எனினும் அவர் அதை வலிந்து அடக்கிக்கொண்டார்.

ஜெயசிங்கம், "காலை எட்டு மணிக்கிடையிலை இந்தப் படங்களைக் கழுவி எடுக்க வேணும்", என்றார்.

"அது செய்யலாம். மணியண்ணை காரை பருத்தித்துறை குகன் ஸ்ரூடியோவுக்கு விடு", என்றார் கந்தப்பர்.

முழு விஷயங்களையும் மனுவாக எழுதிக்கொண்டு வந்திருந்தார் ஜெயசிங்கம். சரியாகப் பத்துமணிக்கு நீதிபதி அழைப்பதாக பியோன் வந்து செல்லவே ஜெயசிங்கம் சேம்பர் உள்ளே போனார். ஜெபநேசன் தான் ஒரு நீதிபதி என்பதைப் பொருட்படுத்தாமலே எழுந்து ஜெயசிங்கத்தைக் கைகுலுக்கி வரவேற்றார்.

ஜெயசிங்கம் கொடுத்த மனுவை நிதானமாகப் படித்தார் நீதிபதி. அவருடைய முகம் மெல்ல மெல்லக் கோபத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவந்தது. அவர் எதுவும் பேசாமலே மணியை அடித்தார். அழைப்புக்காகக் காத்திருந்தவர் போல் நீதிமன்றச் செயலாளர் உடனடியாக வந்து நின்றார்.

நீதிபதி மனுவில் எதையோ எழுதிவிட்டு உடனேயே, மறியல் வீட்டுக்கு அறிவித்து இரண்டு பேரையும் கொண்டு வரச் சொல்லுங்கோ மற்றது அந்த முறைப்பாட்டுப் பிரதி பற்றிய விளக்கங்களோடை சார்ஜன்ட் சின்னத்தம்பியைத் திங்கட்கிழமை கோட்டுக்கு வரச்சொல்லி ஓடர் அனுப்புங்கோ!" என்றார்.

பின்பு அவர் ஜெயசிங்கம் பக்கம் திரும்பி "ஐ ஆம் வெறி சொறி மிஸ்டர் ஜெயசிங்கம்! சில வேளை இந்தப் பொலிஸ்காரர் நீதியோடையே விளையாடிப் பார்க்கிறாங்கள். அதுக்கு நான் சரியான நடவடிக்கை எடுக்கிறன். ஒரு மணித்தியாலத்துக்கை கொண்டு வந்திடுவாங்கள். சரீரப் பிணையிலேயே எடுக்கலாம்", என்றார் நீதிபதி ஜெயநேசன்.

"நன்றி", என்று விட்டு எழுந்து கொண்டார் ஜெயசிங்கம். வெளியே வந்த ஜெயசிங்கம் எல்லோரிடமும் விஷயத்தைச் சொன்னார். விதானையார் ஆலடிவெட்டையிலிருந்து எவரையும் நீதிமன்றுக்கு வரவேண்டாம் எனச் சொல்லியிருந்த போதிலும் சில இளைஞர்கள் சைக்கிளில் வந்து சேர்ந்துவிட்டனர்.

கனகரத்தினத்தையும் சிவஞானத்தையும் நீதிமன்றத்திற்குக் கொண்டு வந்து வழமையான சடங்குகள் முடித்து வெளியே விட ஒரு மணியாகிவிட்டது. அவர்கள் இருவரையும் இளைஞர்கள் சூழ்ந்து கொண்டனர்.

அவர்கள் வெளியே வந்ததுக்கு மட்டுமன்றி அவர்களைப் பதினாலு நாள் தடுப்பில் வைக்கும் சதி முறியடிக்கப் பட்டதற்காகவும் எல்லோரும் மகிழ்ச்சியடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகரத்தினமும் சிவஞானமும் சற்றே சோர்வடைந்திருந்த போதிலும் அவர்களும் தங்கள் நண்பர்களைக் கண்டதும் உற்சாகம் அடைந்து விட்டனர். விதானையார் மற்றவர்களை சைக்கிளில் முன்னால் போகும் படி அனுப்பிவிட்ட இருவரையும் காரில் ஏற்றினார்.

கார் பஸ்நிலையப் பக்கமாகப் போய் ஒரு சாப்பாட்டுக் கடையின் முன் நின்றது. அனைவரும் இறங்கி உள்ளே சென்றனர்.

"தம்பியவை என்ன சாப்பிடப்போறியள்" எனக் கேட்டார் குடியரசர்.

"ஒண்டும் வேண்டாமய்யா", என்று மறுத்தான் கனகரத்தினம்.

"மறியல் வீடு உங்களுக்குப் புது அனுபவம். அங்கை வடிவாச் சாப்பிட்டிருக்க மாட்டியள்", என்று விட்டுப் பலமாக "இரண்டு பேருக்கும் இடியப்பம் வையுங்கோ", எனக் கடைக்காரரிடம் கட்டளையிட்டார் குடியரசார்.

விதானையார் தங்களுக்கு சோடா கொண்டு வரும் படி கேட்டுக்கொண்டார். பின்பு, "எப்படி மறியல் வீடு", எனக் கேட்டார் அவர்.

கனகரத்தினம் ஒரு பெருமூச்சுடன் சொன்னான், "ஜெயில் காட் மாரின்ரை அதட்டலும் மிரட்டலும் போதும் போதும் எண்டு போச்சு. சாப்பாட்டுக்கு வரிசையில் நிண்டு கோப்பையை ஏந்திறதை நினைக்க...", என்று விட்டு நிறுத்தினான் கனகரத்தினம்.

"பொன்னம்பலம் பாடு என்ன மாதிரி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொஞ்சம் திமிர் அடங்கிப்போனமாதிக் கிடக்குது. வண்டியும் வத்திப் போச்சுது", என சிவஞானம் மெல்ல சிரித்தவாறே சொன்னான்.

விதானையார் "இப்பவாவது தாங்கள் செய்ததுக்காகக் கவலைப்படுறாங்களோ?", என மெல்லக் கேட்டார்.

"அப்படித் தெரியவில்லை. எப்படியும் காசி முதலாளி தங்களைக் காப்பாற்றுவார் எண்டு நம்பினம்". விதானையார் மெல்லிய கேலியுடன் சொன்னார். "காசிக்கு மறியலுக்கு அனுப்பத் தெரியும் வெளியில எடுக்கத்தெரியாது இப்ப சார்ஜன்ட் சின்னத்தம்பியையும் தொப்பி கழட்டி வீட்டுக்கு அனுப்பப்போறான் போலை கிடக்குது, பார்ப்பம் என்ன நடக்குதெண்டு".

அப்போது, "அவனை வீட்டை அனுப்பத்தான் வேணும். லஞ்சம் குடி எண்டு அவன்ரை அட்டகாசம் கூடிற்றுத்தான் போகுது" என்றார் கந்தப்பர்.

கனகரத்தினத்திற்கு தன்னுடன் சின்னத்தம்பி நடந்து கொண்ட விதம் நினைவுக்கு வந்தது. அதிகாரங்களைப் பாவித்து சிலரின் சுயநலப் போக்குகளுக்காக அநியாயம் செய்யும் அவர்களைப் போன்றவர்களை நாட்டை விட்டே விரட்டி விட வேண்டும் என அவன் நினைத்தான். குடியரசார் மிகவும் அழுத்தமாகச் சொன்னார். "தம்பி இண்டையில் சமூக அமைப்பே வசதி படைச்சவங்களின்ரை தேவையளுக்கு அமைவானதுதான்? அதாலைதான் அதை மாற்ற நாங்கள் பொதுவுடமைக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டம்."

அந்த வார்த்தைகள் விதானையாருக்கு ஜீரணமாகாத மாதிரித்தோன்றிய போதும் இளைஞர்கள் இருவரும் அதை ஏற்றுக்கொண்டனர். கனகரத்தினத்திற்குப் பல்கலைக்கழகத்திலும் பொதுவுடமைவாதிகளுடன் நிறையவே தொடர்பு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் ஆலடியை வந்தடைந்த போது அங்கு ஒரு பெரும் கூட்டமே கூடிவிட்டது. ஆலடிவெட்டை பெரியவர்கள், பெண்கள், இளைஞர்கள் என ஊரே அங்கு கூடி நின்றது. அவர்கள் விடுதலையான செய்தி கேட்டு மணியாறன்மூலை இளைஞர்களும் அங்கு வந்துவிட்டனர்.

ஆனால் அவர்கள் ஏன் பிடிக்கப்பட்டார்கள் என்பதையோ ஏன் விடுவிக்கப்பட்டார்கள் என்பதையோ எவரும் சரியாக அறிந்திருக்கவில்லை. ஒவ்வொருவரும் ஏதோ ஒவ்வொரு விதமான கதைகளை வெளியிட்டுக் கொண்டனர்.

அவர்கள் வந்திறங்கியதும் கந்தவனம் ஆவலை அடக்கமுடியாமல் விதானையாரிடம், 'என்னய்யா என்ன நடந்தது ஏன் பொடியளைப் பிடிச்சவங்கள்', எனக் கேட்டார்.

காசி வடிவேலன் வீட்டை மணியாறன்மூலையார் கொழுத்தப் போறாங்கள் எண்டு கதைகட்டிச் சண்டை மூட்ட முயன்றதிலிருந்து பொய் முறைப்பாடு போட்டது வரை விதானையார் விபரமாய் சொல்லி முடித்தார்.

கந்தவனம், திரவியம் போன்ற பெரியவர்களுக்கு ஒவ்வொன்றையும் கேட்க சினம் உச்சிக்கு ஏறிவிட்டது.

"செய்யாத பிழைக்கு எங்கடை பொடியளுக்கு மறியல் எண்டால் நாங்களும் செய்து போட்டு போவம். வாருங்கோ போய் காசியின்ரை காரை அடிச்சு நொருக்கித் தூளாக்குவம்", என்று விட்டு சண்டிக்கட்டை வரிந்துகட்ட வேறு ஏழெட்டுப் பேரும் அவரைத் தொடர்ந்தனர்.

"கந்தவனம் நில்!", என்ற அதிகாரக்குரல் ஏற்படுத்திய அதிர்ச்சியில் ஆலமரத்திற்குள் இலைகள் கூட அசையாமல் நின்றுவிட்டன போலத் தோன்றியன. அங்கு நின்ற அனைவரின் அசைவுகளுமே சில்லிட்டுப்போய் விட்ட நிலையில் அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவிய மௌனத்தை விதானையாரின் குரல் கலைத்தது. "பதினாலு நாள் விளக்கமறியலுக்கு அனுப்பி பிறகு இரண்டு வருசமோ மூண்டு வருசமோ இந்தப் பொடியளை அவங்கள் அனுப்பவிடாமல் ஒரு நாளிலை நீங்களே மீட்டு வந்தனியள்? இப்ப மட்டும் துள்ளிக்கொண்டு போறியள்"

எவரும் எதுவுமே பேசவில்லை!

"நீங்கள் போய் காசி வீட்டை அடிச்சு நொருக்கிப்போட்டு வர. இந்தப் பொடியள் ஏவி விட்டுத்தான் செய்தது எண்டு பொலிஸ் நம்பி இவங்களைப் பிறகும் கொண்டு போனால் ஆர் பொறுப்பு?"

கனகரத்தினத்திற்கும் அப்போதுதான் காசி இப்படி ஒரு நிலைமையை உருவாக்கி விடுவான் என உணரமுடிந்தது.

தங்கராசா மெல்ல முணுமுணுத்தான். "காசியை நெடுக உப்பிடியே விடுறதே?"

"அதுக்கு எத்தினை வழி இருக்குது, இண்டைக்கு துவக்கம் காசியோடை ஒரு தொடர்பும் வையாதேயுங்கோ! வேலி அடைக்கக்கூடி ஆள்கிடைக்காமல் விட்டால் அவனுக்குப் புத்தி வரும்?"

கந்தவனத்துக்கு அந்த முடிவு திருப்தியளிக்காத போதும் விதானையாரின் சொல்லை மீற முடியாத நிலையில் அனைவரும் சம்மதித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 37

விதானையார் வீட்டிலிருந்து புறப்பட்ட பொலிஸ் ஜீப் முதலில் ஆலடிச் சந்தியில் போய் நின்றது. அவர்கள் இருவரும் இன்னொரு பொலிஸ்காரனும் கீழே இறங்கிக் கொண்டனர். விதானையார் இன்ஸ்பெக்டருக்கு கண்ணாடித்துண்டுகள் கிடந்த இடம் கடதாசிப்பை கிடந்த இடம் என்பவற்றைக் காட்டியதுடன் ஜெயசிங்கம் அவற்றைப் படமெடுத்த பிரதிகளையும் அவரிடம் காட்டினார். இன்ஸ்பெக்டர் அவற்றில் தனக்கும் ஒரு பிரதி தரும்படி கேட்டுக்கொண்டார்.

சனிக்கிழமை இரவுதான் கனகரத்தினமும் சிவஞானமும் பிணையில் விடுவிக்கப்பட்ட செய்தியை காசிப்பிள்ளை கேள்விப்பட்டார். தங்களைவிட வலுவான சக்தி தங்களுக்கு எதிராக வேலை செய்கிறது என்பதை ஊகித்துக்கொண்ட அவர் ஞாயிறு காலையிலேயே சார்ஜன்ட் சின்னத்தம்பியிடம் போய் விபரமறிய புறப்படுவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார். அப்போது தான் இன்ஸ்பெக்டரும் விதானையாரும் அங்கு வந்திறங்கினார்.

காசிப்பிள்ளை அவர்களைக் கண்டதும் சற்றுக் குழப்பமடைந்த போதிலும் வெளியே காட்டிக்கொள்ளாமல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாருங்கோ. வாருங்கோ இருங்கோ", என ஆர்ப்பாட்டமாக வரவேற்றார்.

விதானையார், "நீங்கள் முந்தநாள் போட்ட என்ரி பற்றி விசாரிக்க இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறார்?", என்றார்.

"ஓமோம். தாராளமாய் விசாரியுங்கோ... அவங்கள் என்னைக் கொல்லவல்லே வந்திட்டாங்கள்!"

இன்ஸ்பெக்டர் கதையை நிறுத்தும்படி சைகை செய்துவிட்டு, "நாங்கள் கேக்கிற கேள்விக்கு மட்டும் ஆன்சர் போதும்", என்றார். பின்பு அவர் காசிப்பிள்ளை வீட்டிலிருந்து புறப்பட்ட நேரம், சம்பவம் நடந்த இடம், நேரம், சம்பவம் நடந்த விதம், அதில சம்பந்தப்பட்டவர்கள் சாட்சிகள் முதலிய விபரங்களைக் கேட்க கூட வந்த பொலிஸ்காரன் எழுதிக் கொண்டான். பின்பு அவன் இன்ஸ்பெக்டரின் கட்டளைப்படி காரையும், உடைந்த பகுதிகளையும் படமெடுத்துக்கொண்டான். விதானையார் ஆலடிவெட்டை இளைஞர்களைக் கொண்டு தனது காரை அடித்து நொருக்கப் போவதாகக் கூறியதையும் அவர் சொல்லத் தவறவில்லை.

விசாரணையை முடித்து கையெழுத்தை வாங்கிக் கொண்டு எழுந்த போது காசி, "ஐயா! ரீ", எனக் கேட்டார். விதானையார் இடைமறித்து, "ஏன் மற்றது இல்லையே?", எனக் கேட்டார்.

"அது... இது...!", என இழுத்த காசி, "இப்ப.. இப்ப.. பத்து நிமிசத்திலை எடுப்பிக்கிறன்", என்றார்.

"இருந்ததை சார்ஜண்ட் சின்னத்தம்பிக்கு கொண்டுபோய்க் கொடுத்திட்டியள் போலை?", என நக்கலாகக் கூறிய விதானையார் இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "வாங்கோ போவம்!", என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசிப்பிள்ளை பேயறைந்தது போல் நின்றார்.

அவர்கள் கேற்றைத் திறந்துகொண்டு வெளியே வந்த போது எதிர் வீட்டு பாலகிஸ்ணன் வீதியில் வந்து கொண்டிருந்தான். அந்த ஊரில் உள்ள பல வீடுகளுக்கு வாடிக்கையாக அவனே பால் கொடுப்பவன். அவனை விதானையார் அருகில் அழைத்தார்.

"நீ போன வெள்ளிக்கிழமை என்ன நேரம் காசி வீட்டுக்குப் பால் குடுத்தனி?", என விதானையார் கேட்டார்.

"ஆறு மணியிருக்கும்"

"நீ அங்கை போகேக்கை கேற் பூட்டியிருந்ததோ?"

"ஓ.. வழக்கமாய் இரவிலை மூடுற துணியாலை கார் மூடி போட்டிக்கோவிலை நிண்டது". இன்ஸ்பெக்டர் ஒரு மெல்லிய சிரிப்புடன் விதானையாரைப் பார்த்துவிட்டு பாலகிருஸ்ணன் சொன்னவற்றை எழுதி அவனிடம் கையெழுத்து வாங்கும்படி பொலிஸ்காரனுக்குக் கட்டளையிட்டார்.

ஜீப் விதானையார் வீட்டை நோக்கிப் புறப்பட்டது.

ஜீப் போய்க் கொண்டிருக்கும் போது இன்ஸ்பெக்டர் சொன்னார். "நான் மஜிஸ்ரேட்டுக்கு குடுக்கிற றிப்போட்டிலை காசிக்கு முதல் 14 நாள் றிமாண்ட் சின்னத்தம்பிதான் பாவம்"

"ஏன் அவருக்கென்ன?"

"வேலை பறக்கும்!", என்றார் இன்ஸ்பெக்டர்.

"இன்ஸ்பெக்டர் எங்களுக்கு ஆரையும் வேலையிலிருந்து நிப்பாட்டிறதிலை எந்தவித பிரயோசனமும் இல்லை. இனி இவங்கள் இப்படி ஊத்தை வேலை செய்யாமலிருந்தால் போதும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஒரு சீனியர் ஒவ்விசர் வூட்டுக்கு அனுப்புறது நமக்கும் விருப்பம் இல்லை... ஆனா இது மஜீஸ்ரேட் ஓடர் போட்டது தானே”, என்றார் டயஸ்.

“அப்ப. என்ன செய்யலாம்?”

“ம்...!” என்று விட்டு சில நிமிடங்கள் யோசித்த இன்ஸ்பெக்டர் பிறகு “காசி நல்ல லோயர் போட்டு கேஸை விற்றோ பண்ண ஏலும்”.

“பரவாயில்லை.. நீங்கள் சின்னத்தம்பியிட்டைச் சொல்லுங்கோ... என்னத்தையெண்டாலும் செய்யட்டும்” என்றார் விதானையார்.

ஒவ்வொரு ஞாயிறும் சிவஞானம் வல்லிபுரக் கோவிலுக்குப் போவது வழமை. இளையவன் மறுநாள் அவனுடன் கூடிக்கொண்டு அங்கு போனால் எவ்வித இடையூறுமின்றி மனம் விட்டுப் பேசமுடியும் என்று கருதினான். அதிகாலையில் எழுந்து சீவி விட்டுக் கோவிலுக்குப் போவதாக முடிவுசெய்து கொண்டான். மறுநாள் காலையில் இளையவன் சிவஞானம் வீட்டுக்குப் போனபோது அவன் ஏற்கனவே கோவிலுக்குப் புறப்பட்டுப்போய்விட்டான். இளையவன் அவசர அவசரமாக சைக்கிளை வல்லிபுரம் நோக்கி மிதிக்க ஆரம்பித்தான். மனதில் இருப்பதைச் சிவஞானத்திடம் கொட்டாவிட்டால் நெஞ்சே வெடித்துவிடும் போல் அவனுக்குத் தோன்றியது.

இளையவன் சைக்கிளை ஒரு கடைக்கு முன்பாக நிறுத்திப் பூட்டிவிட்டுக் கோவில் முகப்புக்கு வந்தபோது சிவஞானம் கும்பிட்டு முடித்து விட்டு வெளியே வந்துகொண்டிருந்தான். மேல் சட்டை இல்லாத சிவந்த மேனியும் நெஞ்சிலும் நெற்றியிலும் போடப்பட்ட நாமமும் காதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்பட்டிருந்த வில்வம் இலைகளும் அவனை ஒரு உண்மையான கிருஸ்ண பக்தனாகவே காட்டியன. இளையவனைக் கண்டதும் அவன், "என்னடாப்பா இண்டைக்குப் புதினமாய்க் கோயிலுக்கு வந்திட்டாய்?", எனக் கேட்டான்.

இளையவன் வலிந்து ஒரு புன்னகையை வரவழைத்துக் கொண்டு, "கஷ்டம் வந்தால் கடவுளிடம் வரத்தானே வேணும்", "உனக்கோ?", என வினாவினான் சிவஞானம்.

"கஷ்டம் மனதுக்குத்தான்", என்று விட்டு ஒரு பெருமூச்சை வெளியேற்றினான் இளையவன். சிவஞானத்திற்கு எதுவுமே புரியவில்லை.

"சரிசரி நான் அந்தப் பூவரசடியிலை கிடக்கிற கல்லில இருக்கிறன் கும்பிட்டிட்டு வா", என்று விட்டு சிவஞானம் பூவரசை நோக்கி நடந்தான்.

இளையவனுக்குக் கோவிலைக் கும்பிட அதிக நேரம் எடுக்கவில்லை. வெளிவீதியைச் சுற்றிக் கும்பிட்டு விட்டு, வெளியில் ஒரு வாளியில் வைத்திருக்கும் நாமத்தை அள்ளிப் பூசிக்கொண்டு, வில்வம் இலையையும் அலரிப் பூவையும் கையில் எடுத்துக் கொண்டு வந்தான். அப்போதெல்லாம் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் ஆலயங்களுக்கு உட்செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. சொர்ணம் தன் மீது வைத்த விருப்பம் நிறைவேற்றப்பட்டால் அவளும் அவனைப்போல் வெளியில் தான் நின்று வணங்க வேண்டும் என நினைத்தபோது அதை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. கடலையும் அரிசிப்பொரியும் கொண்ட பையை சிவஞானம் இளையவனிடம் நீட்டினான். அவனும் அதை வாங்கிக் கொறிக்க ஆரம்பித்தான்.

கோடை வெய்யிலின் வெம்மை பூவரச மர நிழலின் குளிர்ச்சியைக் கூட இரக்கமின்றி விரட்டியடித்தது. நல்ல காற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீசி மணலை மேலெழுப்பி விளையாட்டுக் காட்டியது. கோவில் பின் வீதியில் நின்ற ஆலமரமும் அதன் கீழ் அமைந்திருந்த மடமும் பக்தர்களின் ஓய்வு விடுதிபோன்று அடைக்கலமளித்தன.

சிவஞானம், "என்னடா... என்ன பிரச்சினை. சொல்லு", எனக்கேட்டான். இளையவன் தானும் சொர்ணமும் ஒருவரை யொருவர் விரும்புவது பற்றியும் அதன் விளைவுகள் தொடர்பாகத் தனக்குள்ள அச்சம் பற்றியும் தயங்கித் தயங்கி சொல்லி முடித்தான்.

"சிங்கண்ணன் கமலி விசயத்திலை விதானையார் நியாயமாய்த்தானே நடந்தவர்", என இடைமறித்தான் சிவஞானம்.

"அந்தக் காதலை விதானையார் முதலே அறிஞ்சிருந்தால் அவரே சிங்கண்ணனை மாமரத்திலை கட்டிப்போட்டு அடிச்சிருப்பார். கமலியையும் எப்பிடியெண்டாலும் பொன்னுக்குட்டி அம்மானைக்கொண்டு கட்டுப்படுத்தியிருப்பார்."

"சிங்கண்ணன்ரை பிரேதத்தை நாங்கள் ஒரு பக்கமும், நீங்கள் மற்றப்பக்கமும் தூக்க சப்போட் பண்ணினவர் தானே", இளையவன் மெல்லச் சிரித்தவாறே சொன்னான், "எல்லாமே சிங்கன் செத்தபிறகு, சாதியளுக்கை சண்டை வராமல் தடுக்க அவர் கையாண்ட தந்திரம்!"

"ம் அப்பிடியும் இருக்கும் போலை தான் கிடக்குது", என ஆமோதித்த சிவஞானம் சில நிமிட மௌனத்தின் பின் திடீரெனக் கேட்டான். "இப்ப நான் கமலியைக் கலியாணம் கட்டினால் என்ன செய்வினம்?"

இளையவன் திகைத்தே போய்விட்டான்.

"அவள் சிங்கண்ணன்ரை பெண்சாதியல்லே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்மை... அதாலை தான் அவள் சம்மதிச்சால் நான் அவளை கட்டத் தயார்.. சிங்கண்ணன் எதுக்காகச் செத்தாரோ அந்த இலட்சியம் அவரோடை அழிஞ்சு போகக்கூடாது"

கமலி இப்போதும் குங்குமப்பொட்டு வைப்பதையும் தனது தாலியைக் கழற்றி சிங்கனின் படத்துக்குப் போட்டிருப்பதையும் இளையவன் நினைத்துப் பார்த்துக் கொண்டான்.

"அவள் விரும்ப மாட்டாள் எண்டுதான் நினைக்கிறன்?"

"விரும்ப வைக்கவேணும்... ஏனென்டால் இது தனிநபர்கள் பிரச்சினையில்லை. ஒரு சமூக மாற்றம் தொடர்பான பிரச்சினை", என்றான் சிவஞானம் மிகவும் உறுதியான குரலில்.

சில விநாடிகள் தூரத்தே தெரிந்த சவுக்கு மரங்களுக்குப் பின்னால் மிக வேகமாக ஓடிய வெண்மேகங்களையே பார்த்துக் கொண்டிருந்த இளையவன் ஒருவித தயக்கத்துடன், "அப்படியெண்டால் என்ரை பிரச்சினையும் சமூக மாற்றம் சம்பந்தப்பட்டது தானே?", எனச்சொல்லி இழுத்தான்.

"உண்மைதான். ஆனால் என்ரை படிப்படியானது உன்ரை தலைகீழ் மாற்றம்", என்றான் சிவஞானம்.

இளையவனும் அதை உணர்ந்திருந்தான். அது மட்டுமன்றி அதன் காரணமாக எழும் எதிர்விளைவுகளுக்கு முகம் கொடுக்கும் துணிச்சல் தன்னிடம் இல்லை என்பதையும் அவன் தெளிவாகவே தெரிந்திருந்தான்.

இளையவனின் முகம் வாடிவிட்டதை அவதானித்த சிவஞானம், "அவசரப்படத்தேவையில்லை... பொன். கந்தையா இந்தமுறை எலெக்சனிலை வெண்டால் சில மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கும். வா போவம்?", என்று விட்டு எழுந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் வடக்கின் பல பகுதிகளிலிருந்தும் வந்த பக்தர்கள் வல்லிபுர ஆழ்வார் கோவில் வளாகமெங்கும் காணப்பட்டனர். பின் வீதியில் நின்ற அந்த ஆலமரத்தின் கீழ் கடலை வியாபாரம் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தது. மணி வண்டில்காரர், ஐஸ்பழவியாபாரிகள், காப்புக்கடைகள் என அந்த ஆலமரம் ஒரு குட்டிச் சந்தை போலவே காட்சியளித்தது. வேறு ஒரு புறத்தில் சுளகு, கடகம், பனையோலைப் பெட்டிகள் என்பவற்றின் வியாபாரம் இடம்பெற்றது. வடபகுதியில் துன்னாலைச் சுளகுக்கு விசேட மதிப்புண்டு.

இருவரும் கடலை கச்சான் என்பவற்றை இரண்டு கடதாசிப் பைகளில் வாங்கிக்கொண்டு ஒவ்வொரு வல்வெட்டித்துறைப் பழச் சோடாக்களையும் வாங்கிக் குடித்து விட்டுப் புறப்பட்டனர்.

இருவரும் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போதே தங்கள் பிரச்சினைகளை கனகரத்தினத்திடம் சொல்லி ஆலோசனை கேட்பதென முடிவெடுத்தனர்.

இருவரும் மந்திகை மருத்துவமனையின் முன்பாக வந்த போது சிவஞானம் எதிர்ப்பக்கமாக இருந்த கடையிலிருந்து கையில் சுடுநீர் போத்தலுடன் வடிவேலன் வருவதைக் கண்டுவிட்டு சைக்கிளை நிறுத்தினான்.

அவன், "என்ன வடிவேலு?, ஆருக்குச் சுகமில்லை?" என வடிவேலுவைப் பார்த்துக் கேட்டான். வடிவேலு இளையவனைக் கண்டதுமே மிரளத் தொடங்கி விட்டான். கூட்டத்தில் கமலியைக் கல்லெறிந்து காயப்படுத்திய பின்பு மணியாறன்மூலையைச் சேர்ந்த எவரைக் கண்டாலும் உதறல் எடுக்க ஆரம்பித்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைக்கிளில் காலை ஊன்றியவாறு நின்ற சிவஞானம் மீண்டும், "என்னடாப்பா. என்ன பிரச்சினை?", எனக் கேட்டான்.

"அது காசி முதலாளியை ஆஸ்பத்திரியிலை விட்டுக் கிடக்குது. பெண்சாதி, பிள்ளையள் எல்லாம் உங்கை தான் நிக்கினம்?", என்றான் வடிவேலு தட்டுத்தடுமாறியவாறே.

"ஏன் என்ன நடந்தது?", எனச் சிவஞானம் வியப்புடன் கேட்டான்.

"ஏதோ காலமை சார்ஜன்ட் சின்னத்தம்பி ஜீப்பிலை வந்தார். இரண்டு பேரும் தனிய இருந்து கனநேரம் கதைச்சவை. இடைக்கிடை சின்னத்தம்பியின் குரல் பெரிசாய் கேட்டது. பிறகு அவர் ஜீப்பையும் எடுத்துக்கொண்டு போட்டார்!"

"பிறகு…?"

"பிறகு.. கொஞ்ச நேரத்தாலை முதலாளி நெஞ்சுக்கை குத்துது எண்டு அவதிப்பட்டார். மூச்செடுக்க ஏலாமல் கஷ்டப்பட்டார். உடனே காரிலை இஞ்சை கொண்டு வந்திட்டம்"

"இப்ப. என்ன செய்யுது?"

"ஊசி போட்டு படுத்தி விட்டுக் கிடக்கிது… அவ்வளவு கடுமை இல்லையெண்டு டாக்குத்தர் சொல்லுறார்", என்று விட்டு உள்ளே போனான் வடிவேலு.

சிவஞானம் தங்களுக்கு எதிராகப் போடப்பட்ட பொய்முறைப்பாடு சம்பந்தமாக ஏதோ சிக்கல் காசியின் தலையில் விழுந்து விட்டிருக்க வேண்டும் எனவும், அதனால் காசி அதிர்ச்சியடைந்திருக்க வேண்டும் எனவும் ஊகித்துக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையவன் சிவஞானத்திடம், "என்ன போய்ப் பார்க்கப்போறியே?", எனக் கேட்டான்.

சிவஞானம், "இல்லை!", என்றான்.

"ஓ.. உங்களை ரிமாண்டுக்கு அனுப்பினவரெல்லே?", என மெல்லச் சிரித்தவாறே இளையவன் கேட்டான்.

"அதுக்கில்லை. என்னை இப்ப கண்டால் மனுஷனுக்கு பிறசர் ஏறி மண்டையைப் போட்டாலும்போட்டிடும்", என்று விட்டுச் சைக்கிளை மிதிக்க ஆரம்பித்தான் சிவஞானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 38

சிவஞானமும் இளையவனும் ஆலடிச்சந்தியை அடைந்தபோது அங்கும் ஒரு பரபரப்பான சூழலே நிலவியது. காசிப்பிள்ளைக்கு கடுமையான நெஞ்சுவலி ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட செய்தி எங்கும் பரவிவிட்டது. ஆனால் திடீரென அவருக்கு ஏன் நெஞ்சுவலி ஏற்றபட்டது என்பதை எவரும் அறிந்திருக்கவில்லை. ஆனால் சார்ஜன்ட் சின்னத்தம்பி வந்துபோனது தொடர்பாக ஏதோ புதிய விஷயம் இருக்க வேண்டும் என கனகரத்தினம் ஊகித்திருந்த போதிலும் அது என்ன என்பதை அவனாலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

கிணற்றுப்பட்டயைத் தோளில் வைத்தவாறு வந்த கந்தவனம், சிவஞானத்தின் அருகில் வந்து, "என்னவாம்! காசி பாடு எப்படியாம்?", எனக்கேட்டார்.

சிவஞானம், "ஊசி போட்டு ஆஸ்பத்திரியிலை மறிச்சுப் போட்டினமாம்!, ஆபத்து இல்லையாம்", என்றான்.

"அவன் செய்யிற அநியாயங்களுக்கு கடவுளாய்ப் பார்த்து வேலை காட்டியிருக்கிறார். மூத்த நயினார் அநியாயம் பொறுக்க மாட்டார். பாப்பம் இனியெண்டாலும் திருந்திறானோவெண்டு",



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கூறிய கந்தவனம் தொடர்ந்து நடக்கத் தொடங்கினான். இரு இளைஞர்களையும் விளக்கமறியலுக்கு காசி அனுப்பியதால் ஏற்பட்ட கோபம் அவருக்கு இன்னும் அடங்கவில்லை. ஆனால், காசி இப்போ புதிய சிக்கலுக்குள் மாட்டுப்பட்டிருப்பதை அவர்கள் எவருமே அறிந்திருக்கவில்லை. காசியைச் சந்தித்து விட்டுக் கோபமாக வெளியேறிய சின்னத்தம்பி நேராக விதானையார் வீட்டுக்குப் போனார். அவர் ஜீப்பை விட்டிறங்கி உள்ளே சென்ற போது ஏற்கனவே கறுப்பான அவரின் முகம் மேலும் இருண்டு போயிருந்தது. விதானையார் இவ்வளவு லாவகமாகக் காய் நகர்த்துவார் என்பதை அவர் எதிர்பார்க்கவில்லை.

அவரின் வருகையின் காரணத்தை விதானையார் விளங்கிக்கொண்ட போதும் எதையுமே காட்டிக்கொள்ளாமல், "வாருங்கோ இருங்கோ!", என்றார்.

சின்னத்தம்பி சில வினாடிகள் எதுவுமே பேசவில்லை.

"என்ன ஏதும் பிரச்சினையே?", என மௌனத்தைக் கலைத்தார் விதானையார்.

சின்னத்தம்பி ஒரு பெருமூச்சுடன் "ஓ.. காசி முதலாளி கேட்டதுக்காக ஒரு அலுவல் பார்க்க வெளிக்கிட்டு அது சிக்கலிலை கொண்டு வந்து விட்டுட்டுது!", என்றார்.

இப்போது விதானையாரின் குரலில் ஒரு அதிகாரமும் இறுக்கமும் தொனித்தது. "ஓ... அப்பாவிப் பொடியளை தேவையில்லாமல் மாட்டவெளிக்கிட்டால் சிக்கல் வரும் தானே!"

ஒரு அமைதியின் பின் சின்னத்தம்பி, "அது பொய்முறைப்பாடு எண்டு இன்ஸ்பெக்டருக்கு விளங்கியிட்டுது என்னோடை நெருப்பாய் நிக்கிறார்!", என்றார்.

"அப்ப. இப்ப என்ன செய்யப் போறியள்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அது தான் என்ன செய்யுறதெண்டு தெரியேல்லை... நீதவானும் லேசிலை விடார் போலை கிடக்குது”

“ம்... நீங்கள் இந்த தவணையிலை அது பொய் முறைப்பாடு எண்டும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய ஆதாரம் எதுவுமில்லை எண்டும் நீதவானட்டைச் சொல்லுங்கோ!”, என்றார் விதானையார்.

“சரியான விசாரணை இல்லாமல் முதல் அறிக்கை எழுதினதுக்கு எனக்கு எச்சரிக்கை வரும். காசி பொய்முறைப்பாடு போட்டதுக்காக ரிமாண்ட் போக வேண்டி வரும்!”

விதானையார் அழுத்தமாவே சொன்னார். “இதெல்லாம் நீங்கள் மற்றவைக்கு கெடுதல் செய்யேக்கை யோசிச்சிருக்க வேணும். இப்ப உங்கடை தலையிலை விடியேக்கை பதறிப் பிரயோசனம் இல்லை!”

சின்னத்தம்பி தலையைக் குனிந்து கொண்டார். பின்பு, “நீங்கள் தான் ஏதாவது வழி செய்யவேணும். அடுத்த தவணை வரமுந்தியே காசி சமாதானமாய் போக விருப்பம் எண்டு நல்லதொரு அப்புக்காத்தரை வைச்சு மனுக் குடுத்தால், பொடியளும் சம்மதிச்சாங்களெண்டால் ஒரு மாதிரிச் சமாளிச்சிடலாம். பொடியள் நீங்கள் சொன்னால் கேட்பாங்கள்”, என்று தயங்கியவாறே சொல்லி முடித்தார்.

விதானையாருக்கு இப்போது உண்மையிலேயே கோபம் வந்து விட்டது. “அப்ப பொடியள் செய்தது தான் எண்டு ஒப்புக்கொள்ளுறமாதிரியல்லே?”

“இல்லை... இல்லை அப்பிடி இல்லை”, எனப் பதறினார் சின்னத்தம்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன இல்லை.. எனக்கும் கோடு பற்றின நடைமுறை விளங்கும். இப்ப நீங்கள் போங்கோ அட்வகேற் ஜெயசிங்கத்தோடை யோசித்துப்போட்டுச் சொல்லுறன்".

சின்னத்தம்பி எழுந்து நின்றவாறே. "எப்பிடியும் நீங்கள் தான்..", என இழுத்தார்.

"நான் இப்ப ஒண்டும் சொல்ல ஏலாது வாசிகசாலைப் பொடியளோடை யோசிக்கவேணும்... அவங்கட முடிவுதான் என்ர முடிவும்...", என்று விட்டு எழுந்து கொண்டார் விதானையார்.

"அப்ப நான் வாறன்" என்று விட்டு சின்னத்தம்பி ஜீப்பில் போய் சோர்வுடன் ஏறிக்கொண்டார்.

விதானையாரின் அழைப்புக்கிணங்க வாசிகசாலை இளைஞர்களும், ஆலடிவெட்டைப் பெரியவர்களும் வாசிகசாலை முன்றலில் கூடியிருந்தனர். சிறிது நேரத்தில் விதானையாரும் குடியரசரும் அங்கு வந்து சேர்ந்தனர்.

விதானையார் நடந்த விஷயங்களையும், சார்ஜன்ட் சின்னத்தம்பி தன்னிடம் வந்து கெஞ்சியதையும் ஒன்றுவிடாமல் விளக்கமாகச் சொல்லிவிட்டு, "இப்ப நாங்கள் என்ன செய்வம்", எனக்கேட்டார்.

கந்தவனம் சிறிது கூடத் தயங்காமல், "அவன் காசி ஒருக்கால் மறியலுக்குப் போட்டு வந்தால் தான் திருந்துவான்", என்றார். சிங்கனின் தகப்பன் சிதம்பரியே, "அவனாலை எப்பவும் தரித்திரம் தானே!, அவனைத் தூக்கிலைப் போட்டாலும் பரவாயில்லை", என்றார். எவரிடமும் உரத்துக் கூடக்கதைக்காத சிதம்பரியார் இவ்வளவு கடுமையான வார்த்தைகளைப் பாவித்து அனைவரையுமே திகைக்க வைத்துவிட்டார். விதானையார் சிதம்பரியாரின் அடக்கி வைத்திருந்த பிள்ளைப்பாசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடித்ததாலேயே அந்த வார்த்தைகள் அவ்வளவு கடுமையாக வெளிவந்தன என்பதைப் புரிந்துகொண்டார்.

எல்லோருமே காசியின் மீது கோபத்தையே காட்டினர். அதுவரை அமைதியாயிருந்த கனகரத்தினம், "அவர் செய்ததெல்லாம் மன்னிக்க முடியாத பிழையள் தான். ஆனால் தொடர்ந்து பகையை வளர்த்து எங்களுக்குப் பின்னாலை கொஞ்சப்பேர் அவங்களுக்குப் பின்னாலை கொஞ்சப்பேர் எண்டு ஊர் இரண்டு படுறது நல்லதில்லை எண்டு நான் நினைக்கிறன்", என்றான்.

விதானையார் மெல்லச் சிரித்தவாறே கேட்டார், "காசி திருந்துவான் எண்டு நீ நம்புறியே.."

"கடைசி வரையும் திருந்தப்போறதில்லை!", என்றான் நல்லதம்பி குறுக்கிட்டு.

"கடைசிச் சந்தர்ப்பம் குடுத்துப் பார்ப்பம்', என்றான் கனகரத்தினம்.

"உன்னை மறியலுக்கு அனுப்பினவனல்லே?"

கனகரத்தினம் ஒரு மெல்லிய சிரிப்புடன் சொன்னான், "அண்ணை! நாங்களும் அவரை மறியலுக்கு அனுப்பினால் அவருக்கும் எங்களுக்கும் வித்தியாசம் இல்லாமல் போகுமெல்லே!"

சில வினாடிகள் அமைதி நிலவியது.

கந்தவனம் அமைதியைக் குலைத்தார், "ஏதோ விதானையார் ஐயா முடிவெடுத்துச் செய்யட்டும்... அவரின்ரை முடிவுக்கு நாங்கள் சம்மதம்"

அனைவரும் விதானையாரின் முகத்தைப் பார்த்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர், " ம்... யோசிச்சுச் செய்வம்!", என்றார். குடியரசருடன் ஆலோசித்தால் தான் சரியான முடிவுக்கு வரமுடியும் என விதானையார் நம்பினார்.

திங்கட்கிழமை இன்ஸ்பெக்டர் நீதிமன்றில் தன் அறிக்கையைச் சமர்ப்பித்தார். அதில் காசிப்பிள்ளைக்குப் பால்கொடுப்பவனிடம் பெற்ற வாக்குமூலத்தை முற்றாகவே தவிர்த்துவிட்டார். தனது அறிக்கையில் அவர் ஆலடியில் ஒரு சம்பவம் இடம்பெற்றது உண்மையெனவும் அதில் சிவஞானமோ, கனகரத்தினமோ ஈடுபடவில்லை என்பது விசாரணைகளிலிருந்து தெரியவருவதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் இனம் காணப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

காசிப்பிள்ளை சார்பில் அட்வகேட் சிவப்பிரகாசம் ஒரு மனுவைச் சமர்ப்பித்தார். அதில் காரை மறித்து இருவர் தாக்குதல் நடத்தியதாகவும் இருட்டில் அவர்களை அடையாளம் காணமுடியவில்லை எனவும் சந்தேகத்தின் பேரிலே சிவஞானம், கனகரத்தினம் ஆகியோர் மீது முறைப்பாடு செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அடுத்த தவணையின்போது வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது காசி நஷ்டஈடாக இளைஞர்கள் இருவருக்கும் தலா ஆயிரம் ரூபா வழங்க வேண்டும் எனத் தீர்ப்பளித்து வழக்கைத் தள்ளுபடி செய்தார். சார்ஜன்ட் சின்னத்தம்பியும் அவரின் பொறுப்பின்மைக்காக எச்சரிக்கப்பட்டார்.

குடியரசாரும் விதானையாரும் வழங்கிய ஆலோசனையின் பேரில் சிவஞானம் கனகரத்தினம் ஆகியோரும் தீர்ப்புத் தொடர்பாக எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை.

ஆனால் சின்னத்தம்பி மூலமாக இன்ஸ்பெக்டருக்கு லஞ்சமாகப் பத்தாயிரம் ரூபா கைமாறிய விசயத்தை விதானையார் தரப்பு எவருமே அறிந்திருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல்த் திகதி நெருங்கவே பிரச்சாரங்களும் சூடுபிடிக்க ஆரம்பித்து விட்டது. ஒவ்வொரு நாளும் தொகுதியின் ஏதோ ஒரு இடத்தில் பொதுக்கூட்டமோ கலந்துரையாடலோ இடம்பெற்றன. கமலி இப்போ பிரபலப் பேச்சாளராகி விட்டாள். அவளின் உணர்ச்சிவசமான பேச்சு தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் பெரும் ஆதரவைத் திரட்டியது. சொர்ணத்தின் அழகுத் தமிழும் அரிய கருத்துக்களும் எல்லோரையும் கவர ஆரம்பித்துவிட்டன.

பொன் கந்தையாவின் கடைசிக் கூட்டம் நெல்லண்டைப் பிள்ளையார் கோவில் முன்றலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தப் பகுதி காங்கிரஸ்காரரின் கோட்டையாகக் கருதப்பட்டது. அதில் வி. பொன்னம்பலம், மாதகல் கந்தசாமி, காத்திகேயன் மாஸ்ரர் போன்ற பிரபல பேச்சாளர்கள் உரையாற்றினர். நெல்லண்டைக்குளமும், படர்ந்து வளர்ந்திருந்த முதிய பூவரசுகளும் கூட அமைதியாகப் பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டிருப்பது போல் தோன்றியது. உயர்ந்து பறந்த செங்கொடிகள் மத்தியில் வல்வெட்டித்துறை கனகரின் எஞ்சின் வழங்கிய மின்சார ஒளியில் அந்த இடமே ஒளிர்ந்து கொண்டிருந்தது.

சொர்ணம் பேசி முடிந்த பின்பு கமலி எழுந்து பேச ஆரம்பித்தாள். சிங்கன் கொல்லப்பட்டு இரத்தம் வழியக் கிடந்ததையும் நான் இளவயதிலேயே விதவையாக்கப்பட்டதையும் அவள் விவரித்தபோது கூட்டமே உணர்ச்சியில் அமுங்கிப்போயிருந்தது. அந்த நேரத்தில் மேடையின் முன்னால் வந்த ஒரு சிறுவன் எட்டி ஒரு கடதாசித் துண்டைக் கமலியிடம் நீட்டினான். கமலி அதைக் குனிந்து வாங்கி விரித்துப் பார்த்துவிட்டு பலமாகவே வாசித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில், "மேடையில நிண்டு குலைக்கிற பெட்டை நாயே.. நான் ஒரு சாதி வெள்ளாளன்.. எனக்கு வைப்பாட்டியாய் வரத்தயாரா?" என இருந்தது.

அதைப் பலமாக ஒலிபெருக்கியில் வாசித்த கமலியின் முகம் கோபத்தில் சிவந்தது. சில விநாடிகள் அமைதியின் பின் அவள் சீறினாள்.

"இந்தத் துண்டை எழுதிக்குடுத்துவிட்ட சாதி வெள்ளாளனே! நீ இந்தக் கோயில் உள் மண்டபத்திலை வைச்சு, இந்தக் கோயில் ஐயர் மந்திரமோத எனக்குத் தாலி கட்டி மாலை மாத்தி இந்த றோட்டிலை வரத் தயாரெண்டால், நீ அப்படி முதுகெலும்பு உள்ள ஆம்பிளையெண்டால் காலமெல்லாம் உனக்கு வைப்பாட்டியாய் இருப்பன்... உனக்குப் பிள்ளையும் பெறுவன்!" என்றவள் சற்று இடைநிறுத்திவிட்டு, "துணிவிருக்கா... துணிவிருக்கா..", எனக் கத்தினாள்.

அந்த மாபெரும் சனத்திரளே திகைப்பில் உறைந்து போனது.

அவள் "நன்றி.. வணக்கம்" எனக் கூறி விட்டு இறங்கினாள்.

அந்தத் துண்டை எழுதி அனுப்பிய வங்கோலை வேலாயுதத்தை அவன் நண்பர்கள் ஏளனமாகப் பார்த்தனர். இப்படி ஒரு பதிலை சற்றும் எதிர்பாராத வேலாயுதம் அவமானத்தில் கொதித்தான். பலத்த பொலிஸ் காவல் போடப்பட்டிருந்ததால் அவனால் எதுவும் செய்யமுடியவில்லை.

சண்டியன் சிவானந்தம் நக்கலாகக் கேட்டான், "வடிவான பெட்டைதானே, ஓமெண்டு கட்டன்ரா.. பிறகு நானே உன்னைச் சுட்டு விடுறன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கோலை குமுறினான். "அவளுக்கு இந்த வேலாயுதத்தைப் பற்றி விளங்கேல்லை. நடுச் சந்தியிலை வைச்சு சீலை உரியாமல் விடுறேல்லை!"

"செய்யாட்டில் நாங்கள் சாதி வெள்ளாளர் எண்டு சொல்லுறதிலை அர்த்தமில்லை!", என உறுமினான் சிவானந்தம்.

கடைசிப் பேச்சாளராகப் பொன். கந்தையா பேசினார் அவரும் கமலியின் கேள்வியை நியாயப்படுத்தினது மட்டுமன்றி இப்படியான கலியாணங்கள் எதிர்காலத்தில் நடக்கும் எனவும் உறுதி கூறினார்.

பொதுக்கூட்டம் முடிந்து போகும் போது வாகனங்களைத் தாக்க வேண்டும் என வேலாயுதம் துடிக்க "எலெக்சன் முடியட்டும் நல்ல பாடம் படிப்பிப்பம்", எனச் சிவானந்தம் தடுத்துவிட்டான். திரும்பி வரும் போது சொர்ணம் கமலி ஆகியோர் ஏறிய காரில் கனகரத்தினமும் சிவஞானமும் ஏறிக்கொண்டனர். கமலி மேடையில் கொட்டிய ஆவேச வார்த்தைகள் சிவஞானத்திற்கு ஏதோ ஒரு வித துணிவைக் கொடுத்தது.

"உங்கடை சிநேகிதி அந்தக் கூட்டத்திலை துண்டு குடுத்தவனைப் பார்த்து தன்னைக் கலியாணம் கட்ட முதுகிலை எலும்பு இருக்கோவெண்டு கேட்டவளவல்லே?"

"ஓ.. இப்ப அதுக்கென்ன?", எனக்கேட்டாள் சொர்ணம்!

"அப்படி ஒருத்தன் முதுகெலும்போடை துணிஞ்சு வந்தால் அவ அவனைக் கட்டுவாவே?"

கமலி திகைப்புடன் அவனைப் பார்த்தாள். பிறகு, "நீங்கள் என்ன கேட்கிறியள்", என அவள் அவனிடம் கேட்டாள். இப்படி நேரடியாகவே கமலி கேட்டு விடுவாள் என அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்க்கவில்லை கனகரத்தினமும் எதுவும் புரியாமல் தடுமாறினான்.

சிவஞானம் ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டவனாக, "சந்தர்ப்பம் கிடைச்சால் நீங்கள் சொன்னமாதிரிச் செய்வியளோ எண்டு கேட்டான்", என்றான்.

கமலி தயங்கவில்லை. அவள் "என்னைக் கட்டத் துணிவிருந்தால் போதாது... ஐயர் மந்திரம் சொல்லக் கோயில் உள்மண்டவத்திலை வைச்சுத் தாலி கட்டவும் துணியவேணும்". என்றாள். கனகரத்தினம் மெல்லிய சிரிப்புடன் சொன்னான், "முடியாது எண்டு சொல்லிவிடமுடியாது. ஆனால் இப்போதைக்குக் கஷ்டம்"

"சிங்கனை விட வேறை எவராலையும் அப்பிடிச் செய்யமுடியாது", கமலியின் குரலில் ஒரு விதமான அழுத்தம் தொனித்தது.

அவ்வார்த்தைகள் சிவஞானத்தின் முகத்தை ஓடிக் கறுக்க வைத்தன. அவன் அதற்கு மேல் எதுவுமே பேசவில்லை.

சொர்ணத்தின் மனதும் அப்படியான நாட்களுக்காக ஏங்கித் தவித்தன ஆனால் அது இப்போதைக்கு சாத்தியமில்லை என நினைத்த போது மெல்லிய கவலை அவளுள் இழையோடியது.

ஆனால் கமலியின் மனதில் சிங்கன் எவ்வளவு ஆழமாகப் பதிந்துள்ளானோ அவ்வாறே தன் நெஞ்சுக்குள்ளும் இளையவன் இறுகி விட்டான் என்பதை அவள் நன்றாகவே புரிந்து கொண்டிருந்தாள்.

கார் ஆலடிச் சந்தியில் நிற்கவே கனகரத்தினமும் சிவஞானமும் இறங்கிக் கொண்டனர். கார் உள்றோட்டில் இறங்கத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொர்ணம் மெல்லக் கமலியிடம் கேட்டாள், "கமலி! நீ சிவஞானத்தைப் பற்றி என்ன நினைக்கிறாய்?"

"ம்.. நல்லவர். சிங்கன்ரை விசுவாசமான கூட்டாளி", என்று விட்டு, "ஏன் பிள்ளை கேட்டனீங்கள்" என வினாவினாள்.

"உன்னை அவர் விரும்புறார் போலை கிடக்குது?"

கமலி சொர்ணத்தை ஆச்சிரியத்துடன் பார்த்துவிட்டு, "சீ.. அப்படி இருக்காது.. அவர் முந்தியே என்னோடை நல்ல அன்பாய்த்தான் பழகிறவர்", என்றாள்.

"அந்த அன்பே காதலாய் மாறாது எண்டு என்ன நிச்சயம்?"

"விதவையள் மேலையும் காதல் வருமே?"

"காதலுக்குக் கண்ணில்லை எண்டு சொல்லுவாங்கள்", என்று விட்டுப்பெரிதாகச் சிரித்தாள் சொர்ணம்.

"காதலுக்குக் கண்ணில்லாமல் இருக்கலாம். சிவஞானத்துக்குக் கண் இருக்கு... நான் சிங்கனிலை எவ்வளவு அன்பு வைச்சிருக்கிறன் எண்டு பார்க்கிறவர்தானே!"

"கமலி செத்துப்போன ஒருத்தரை நினைச்சுக்கொண்டு எவ்வளவு நாளைக்கு இப்பிடியே வாழப்போறாய்?"

கமலி திடீரெனக் குறுக்கிட்டாள். "ஆர் சொன்னது சிங்கன் செத்துப்போனார் எண்டு?, அவர் ஒவ்வொரு நாளும் இரவிலை வந்து என்னோடை படுத்து நித்திரையும் கொள்ளுவார்."

அப்பிடி அவள் கூறியபோது அவளின் முகம் வெட்கத்தில் சிவப்பதைச் சொர்ணம் கவனிக்கத் தவறவில்லை. அவள் கமலியின் கையை மெல்லப் பிடித்தாள். கமலியின் முகம் ஒரு முழுமையான புன்னகையில் பொலிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 39

தேர்தல் நடைபெறுவதற்கு மூன்று நாட்கள் முன்பதாக குடியரசார் பொன். கந்தையாவின் தேர்தல் காரியாலயத்தில் ஒரு கலந்தாலோசனைக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். ஆனால், உண்மையில் அது தேர்தல் போருக்கு வியூகங்களை வகிக்கும் ஒரு தயாரிப்புக் கூட்டமாகவே அமைந்திருந்தது. பண்டிதர்கள், வித்துவான்கள், தமிழாசிரியர்கள், இளைஞர்கள், சனசமூகநிலைய விளையாட்டுக்கழக நிர்வாகிகள் என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டிருந்தனர்.

தேர்தல் தினத்தன்று அதிகாலை தொடக்கமே காங்கிரஸ் சண்டியர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதியைச் சுற்றி வளைத்துக் காவல் போட்டு அவர்களை வாக்களிக்க விடாமல் தடுப்பது என காங்கிரஸ் பிரமுகர்கள் போட்ட திட்டம் குடியரசாரின் காதுகளுக்கு எட்டிவிட்டது. அது வெற்றி பெறுமானால் கம்யூனிஸ்டுகளுக்கு விழும் வாக்குகள் சரிபாதியாகக் குறைந்து விடும். பின்பு வெற்றி என்பது நினைத்துக் கூடப்பார்க்க முடியாத விஷயமாகிவிடும். அதை முறியடிப்பதற்கான திட்டத்தை குடியரசார் உடனடியாகவே வகுத்துவிட்டார்.

பொன். கந்தையாவுக்கு சாதகமாக இருந்த விஷயம் இளைஞர் சக்தி. அவர் கரவெட்டி கிழக்கு, பாலாவெட்டை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்னாலை, யாக்கரை, அல்வாய், வதிரி, சாணக்கமூலை, நவிண்டில், உடுப்பிட்டி, ஆலடிவெட்டை, மணியாறன்மூலை, மண்டான், லக்கணாவத்தை எனப் பல ஊர்களின் இளைஞர்களையும் ஒன்று கூட்டி குழுக்களாக அமைத்துக் கொண்டார். ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட பகுதிகள் வாழும் பகுதியைப் பொறுப்பெடுத்து அப்பகுதி மக்களைக் கூட்டிச் சென்று வாக்களிக்க வைப்பது என முடிவு செய்யப்பட்டது. ஒவ்வொரு குழுவுக்கும் அதே ஊரைச் சேர்ந்த ஒரு பண்டிதரோ, வித்துவானோ, தமிழாசிரியரோ பொறுப்பாக நியமிக்கப்பட்டனர். வயது சென்றவர்களை ஏற்றிச் செல்ல வாகனங்களும் ஒழுங்குசெய்யப்பட்டன. குழுக்களுக்கு ஊர்ப்பெரியவர்களைப் பொறுப்பாக நியமித்தால் சண்டியர்கள் கிட்டவரமாட்டார்கள் என்பது குடியரசு கந்தப்பருக்கு நன்கு தெரியும். அதைவிட சாண்டோக்களான நமசிவாயம், தியாகுமாமா ஆகியோரும் ஒவ்வொரு கார்களில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. விதானையாரும், குடியரசாரும், ஐயாமாமாவும் சேர்ந்து பேசி வகுத்த அந்தத் திட்டங்களைக் கண்டு பொன். கந்தையா மட்டுமன்றி தேர்தல் பணிக்காக யாழ்ப்பாணத்திலிருந்து வந்த கார்த்திகேயன் மாஸ்ரரும் கூட அதிசயித்துப் போய்விட்டனர். மாஸ்ரர் மெல்லச் சிரித்தவாறே கேட்டார். "இப்படியெல்லாம் அவை போடுற திட்டங்களை முறியடிக்க என்னண்டு யோசனை வந்தது?"

விதானையார், "போன முறை இராமலிங்கத்தை வெல்ல வைக்க நாங்களும் சேர்ந்து இதே வேலையைச் செய்தனாங்கள். இந்த முறை அவை செய்வினம் எண்டபடியால் அதுக்கு எதிர்த்திட்டம் போட்டம்", என்று விட்டுப் பெரிதாகச் சிரித்தார்.

கூட்டம் முடிந்த பின்பும் ஒவ்வொரு குழுக்குளும் கூடி தங்கள் பணிகளில் எப்படி ஈடுபடுவது என்பதை விவாதித்து முடிவெடுத்துக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த இரண்டு நாட்களிலும் எந்தக் கலகலப்பும் இடம் பெறவில்லை. ஆனால் ஒவ்வொரு வேட்பாளர்களின் ஆதரவாளர்களும் வீடு வீடாகச் சென்று ஆதரவு திரட்டுவதிலும் தங்கள் சின்னத்திற்கு வாக்களிப்பது எப்படி என விளக்குவதிலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

உடுப்பிட்டியிலும், நவிண்டிலிலும் சமஜமாஜக் கட்சிக்கு ஒட்டுமொத்தமாக விழும் என எதிர்பார்க்கப்பட்டதால் ஆர்.ஆர்.தர்மரத்தினத்திற்கும், பொன். கந்தையாவுக்குமிடையே கடும் போட்டி நிலவுவதாகக் கருதப்பட்டது. குடியரசாரும், ஐயா மாமாவும் தர்மரத்தினத்தின் வாக்குகளை உடைப்பதில் அக்கறை செலுத்தவில்லை. ஆனால் தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி என்பவை பலமாக இருந்த பகுதிகளை உடைக்கும் வகையில் திட்டமிட்டு வேலை செய்தனர்.

காசி அடிக்கடி ஓடிப்போய் காங்கிரஸ் பிரமுகர்களிடம் தகவல்கள் பரிமாறி விட்டு வருவதால் ஊருக்குள் எவ்வித தேர்தல் வேலைகளையும் செய்ய முடியவில்லை வடிவேலன் கூடக் காசியைக் கண்டால் விலகிப்போய்விடுமளவுக்கு அவரின் செல்வாக்கு சரிந்துவிட்டது. ஆனால் புகையிலை நடுகைக்காலம் வரும்போது வட்டிக்குக் காசு வாங்கத் தோட்டக்காரர் தன்னிடம் தானே வரவேண்டும் எனவும் அப்போது பழிவாங்கிக் கொள்ளலாம் எனவும் அவர் மனதுக்குள் கறுவிக்கொண்டார். நீதிமன்றத்தில் சிவஞானத்திற்கும் கனகரத்தினத்திற்கும் அவர் கட்டிய நஷ்ட ஈட்டுப் பணம் இரண்டாயிரம் ரூபாவில் வாசிகசாலைக்கு ஒரு சிறுகட்டிடம் கட்டி அதில் காசிப்பிள்ளை முதலாளியின் உபயம் என எழுதப் போகின்றனர் என்ற செய்தி அவருக்கு மேலும் ஆத்திரத்தை மூட்டியிருந்தது. தான் பட்ட அவமானத்தின் அடையாளச் சின்னமாக அது இருக்கப்போகிறது என நினைத்தபோது அவரால் அதைத்தாங்கிக்கொள்ளவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை. எனினும் தேர்தல் முடியும் மட்டும் பொறுமை காப்பது எனத் தீர்மானித்துக் கொண்டார்.

அன்றைய தேர்தல் எதிர்பார்த்ததற்கு மாறாக மிக அமைதியாகவே நடந்தது. சிற்சில இடங்களில் முறுகல் நிலை தோன்றினாலும் அவை மோதல்களாகும் நிலை ஏற்படவில்லை. அதற்கு ஒரு முக்கிய காரணங்கள் இருந்தன. ஒன்று காங்கிரஸ் வேட்பாளரின் ஆதரவாளர்கள் சண்டியன்களாகவும் சாதி வெறியராகவும் இருந்த போதிலும் அவர் மிகவும் அமைதியானவர். அவர் எந்த வன்முறைகளிலும் ஈடுபடக்கூடாது எனத் தனது ஆதரவாளர்களுக்குக் கண்டிப்பான கட்டளை பிறப்பித்திருந்தார். அதுமட்டுமன்றி எல்லா வாக்களிப்பு நிலையங்களுக்கும் தானே நேரில் சென்று நிலைமைகளை அவதானித்தார்.

அன்று இரவு ஏழுமணியளவில் வாக்குகள் எண்ணும் பணிகள் ஆரம்பமாகின. விதானையார், குடியரசார், மன்னவன், கந்தப்பு எனப் பல ஆதரவாளர்கள் மூன்று கார்களில் கச்சேரிக்கு வந்திருந்தனர். எல்லோருமே வெற்றி நிச்சயம் என்பதில் முழுமையான நம்பிக்கை கொண்டிருந்தனர். இதன் காரணமாக கார் டிக்கிகள் வெடிப் பெட்டிகளால் நிறைக்கப்பட்டிருந்தன.

அதிகாலை ஐந்து மணிக்குப் பருத்தித்துறைத் தொகுதியின் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டது. பொான். கந்தையா மிகப் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றிருந்தார். அந்த வெற்றிச் செய்தி உத்தியோகபூர்வமாக ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட முன்பே பொன். கந்தையாவும், கார்த்திகேயனும் வெளியில் வந்து தமது ஆதரவாளர்களுக்கு அறிவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்கள் இருவரையும் தோளில் தூக்கி ஆரவாரிக்க ஆரம்பித்தனர். எங்கும் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கி வழிய வெடிகள் சரமாரியாக வெடிக்கத் தொடங்கின.

வல்லிபுரம் ஓவசியரின் மகன் மனோகரனின் "ட்றாம்ப்" மோட்டார் சைக்கிள் வெற்றிச் செய்தியை வடமராட்சிக்கு அறிவிக்க மின்னல் வேகத்தில் பறந்தது. அவன் ஒவ்வொரு ஊராகச் சென்று வெற்றிச் செய்தியைச் சொல்லத் தொடங்கினான்.

கடைகள் திறக்கும் மட்டும் பொறுமையற்ற நிலையில் மக்கள் கடைக்காரரைத் தட்டியெழுப்பி வெடிகளை வாங்கிக் கொழுத்த ஆரம்பித்தனர். தமிழரசுக்கட்சியினர், சமஜமாஜக் கட்சியினர் கூடத் தாங்கள் வெற்றி பெறாவிட்டாலும் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டமைக்காக மகிழ்ச்சியடைந்தனர். அவர்களும் கூடத் தாங்களாகவே வந்து வெற்றிக் களிப்பில் கலந்து கொண்டனர்.

அன்று இரவு தேர்தலில் முன்னின்று பாடுபட்டவர்களுக்கு ஒரு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தேர்தல் வெற்றிக்குப் பாடுபட்ட பண்டிதர்கள், வித்துவான்கள், தமிழாசிரியர்கள், அரச பணியாளர்கள், சங்கத்தின் நிர்வாக மட்டத்தினர் என ஒரு பிரமுகர் வட்டமே அங்கு கூடியிருந்தது.

விருந்து தொடங்கும் நேரம் நெருங்க நெருங்க கார்த்திகேயனின் கண்கள் கூட்டத்தின் மத்தியில் யாரையோ தேடியலைந்தன. எவ்வளவு தேடியும் அவர்களால் தேடப் பட்டவர்கள் அவரின் கண்களில் படவேயில்லை சற்றுக் குழப்பமடைந்தவராக அவர் கைகாட்டி குடியரசாரை தன்னருகில் அழைத்தார்.

அருகில் வந்த கந்தப்பர், "என்ன மாஸ்ரர்?", எனக்கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எங்கே கனகரத்தினம், சிவஞானம் ஆக்கள் வரயில்லையே?”, குடியரசார் ஒரு மெல்லிய தயக்கத்துடன் “இல்லை..., அவையைக் கூப்பிடேல்லை?” என்றார்.

“ஏன்?”

“அவைக்கு நாளைக்கு விசேசமாய் ஒரு விருந்து வைக்கிறம்?”

“ஓ.. அப்பிடியெண்டால் யாக்கரதைத் தம்பிமுத்து, துன்னாலை செல்லத்தம்பி, வதிரி இராசரத்தினம், வல்வெட்டி சண்முகம் எல்லாரும் நாளைக்குத்தான் வருவினமோ?”

குடியரசார் தடுமாறிப்போனார், “அது... அது”, என இழுத்தார்.

ஒரு நாளுமில்லாமல் மாஸ்ரரின் கண்கள் சற்று சிவப்பேறின!

“சரி... நாளைக்கு அவைக்கு விருந்தெண்டால் இந்த வெற்றியிலை பெரிய பங்கு வகிச்ச கமலிக்கு விருந்து நாளையிண்டைக்கே?”

“இல்லை... மாஸ்ரர்... இஞ்சை இருக்கிறவை தங்களோடை ஒரு பந்தியிலை தாழ்த்தப்பட்ட ஆக்கள் இருக்கிறதை விரும்பமாட்டினை. அதாலை இளந்தாரிப் பொடியளுக்கு பிறம்பாய் ஒரு விருந்து வைக்கறம் அவங்கள் சாதி சமயம் பார்க்க மாட்டாங்கள்”

குடியரசார் தட்டுத்தடுமாறி சமாளித்தபோதும் அவரின் வார்த்தைகளில் ஒரு குற்ற உணர்வு தொனித்தது, “அப்ப, இது சுண்டியெடுத்த வெள்ளாளருக்கு வைக்கிற விருந்து எண்டு சொல்லுங்கோ...?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தப்பர் அவசரமாக, "இல்லை.. இல்லை... அப்பிடி இல்லை.. நாங்கள் எல்லோருக்கும் ஒண்டாய் விருந்து வைச்சமெண்டால் இவ்வளவு பேரும் அடுத்த தேர்தலிலை எங்களுக்கு எதிராகத் திரும்பியிடுவினம்".

"கந்தப்பர்... நாங்கள் ஒரு கொள்கைக்காகத்தான் லெக்சன் கேட்டனாங்கள் அதை நிறைவேற்றும் எண்டு சொல்லித்தான் வெண்டனாங்கள். வெற்றி பெற்ற பிறகு நாங்களே எங்கடை கொள்கைக்கு எதிராய் நடந்தால் என்ன அர்த்தம்", குடியரசாரால் எதுவுமே பேசமுடியவில்லை. அவர் தலையைக் குனிந்து கொண்டார்.

"இப்ப என்ன மாஸ்ரர் செய்யிறது?"

"ஏற்பாடு செய்த விருந்தை நிப்பாட்ட ஏலாது... உழைக்கிற மக்களுக்கு இல்லாத விருந்து எனக்கும் வேண்டாம்... நான் நாளைக்கு அவையளோடை சேர்ந்து விருந்து சாப்பிடுறன்.. சரியே?", என்றார் கார்த்திகேயன் நிதானமாக.

குடியரசார் வெடவெடத்துப் போய்விட்டார். "மாஸ்ரர் ஏதோ தெரியாமல் நடந்திட்டுது இண்டைக்கு மட்டும்..." "இல்லை... இது நான் நீங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை இல்லை... எங்கடை கொள்கை சம்பந்தப்பட்ட பிரச்சினை... இதிலை என்னால இறங்கி வரமுடியாது", குடியரசார் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துப் போய் நின்றார்.

எழுந்து நேராகப் பொன். கந்தையாவிடம் சென்ற கார்திகேயன், "தோழர் நான் ஒருக்கால் வெளியிலை போட்டு வாறன்... என்ன விஷயமெண்டு குடியரசு சொல்லும்", என்று விட்டு வெளிவாசலை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

எதைச் சொல்வது எப்படிச் சொல்வது என்று தெரியாமல் பேயறைந்தவர் போல் அசையாது நின்றார். அந்தப் பெரியாரின் சீடர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 40

அன்று வெல்லன் பிள்ளையார் கோவில்த் தேர் என்பது மட்டுமன்றி அது ஒரு வெள்ளிக்கிழமையும் கூட. எனவே மணியாறன்மூலையைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலானோர் கோவிலுக்குப் போய்விட்டனர். அந்தப் பத்துமணிப் பொழுது அமைதியாகவே கழிந்துகொண்டிருந்தது.

பொன்னுக்குட்டி அன்று விரதமாகையால் காலை சாப்பிடாமலே பருத்தித்துறைக்குப் போய்விட்டார். அவர் விரதச் சாப்பாட்டுக்கு மத்தியானம் வருவார் என்பதால் கமலி குளிப்பதற்குச் செல்லத்தயாரானாள்.

ஆர். ஆர். தர்மரத்தினம் கிராமசபைத் தலைவரானதும் முதலில் செய்த பணி மணியாறன் மூலையாருக்கு ஒரு பொதுக்கிணறு அமைத்துக் கொடுத்தது தான். இது கமலி வீட்டுக்கு எதிர்ப்புற ஒழுங்கையில் மறுபுறத்தில் அமைந்திருந்தது. மணியாறன்மூலை மக்களின் பொதுக்குளியலிடம் அந்தக் கிணறுதான்.

கமலி உடுப்புக்களையும் கொண்டு வீதியைக் கடந்து கிணற்றடியை நோக்கி நடந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் உள்ப்பாவாடையை நெஞ்சுக்குக் குறுக்காகக் கட்டிக்கொண்டு ஆடைகளைக் கழற்றித் துவைத்து விட்டுப் பிழிந்து ஒரு பக்கத்தில் வைத்துவிட்டுக் குளிக்க ஆரம்பித்தாள். அந்த செம்மண் கிணற்றில் ஊறிய குளிர்ந்த நீர் உடலில் பட்ட போது அதில் ஒரு தனிசுகம் இருப்பதாகவே தோன்றியது. தான் குந்தியிருக்கச் சிங்கன் அள்ளி ஊற்றிக்குளித்த நினைவுகள் வந்து மனதை ஒருமுறை கனக்கச் செய்தது.

வாளி நீரைத் தூக்கி முகத்தில் ஊற்ற உயர்த்திய போது கேட்ட வாகனச்சத்தம் அவளைத் திரும்பி வீதியைப் பார்க்க வைத்தது. இரு கார்களில் வந்தவர்கள் தனது வீட்டுப் பக்கம் ஓடுவதைக் கண்டதும் அப்படியே திகைத்துப்போய் நின்றுவிட்டாள். சிலர் வேலியை வெட்டுவதையும், வீட்டுக்கதவை உடைப்பதையும் அவளால் கண்டுகொள்ள முடிந்தது. வேறு சிலர் வீடுகளை நோக்கி ஓடுவதும் அவள் கண்களில் பட்டது. நடப்பது எதையும் அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

காரைவிட்டுக் கடைசியாக இறங்கிய வேலாயுதம் கிணற்றடியில் கமலி நிற்பதைக் கண்டுவிட்டு அவளை நோக்கி ஓடிவந்தான். அவன் கிட்ட வருவதைக்கண்ட கமலி குனிந்து குளித்துவிட்டு அணிவதற்காகக் கொண்டுவந்த சட்டையை நெஞ்சுடன் அணைத்துப்பிடித்து உடலின் முன்பகுதியை மறைத்துக்கொண்டாள்.

அருகில் வந்த அவன், "என்னடி மறைக்கிறாய். அண்டைக்கு உன்னை வைப்பாட்டியாக வைக்க ஐயர், தாலி, கோயில் உள்மண்டபம் எல்லாம் கேட்டாய். இப்ப பார் அது ஒண்டும் இல்லாமல் உன்னை இதிலையே வைப்பாட்டியாக்கிக் காட்டுறன்!", என்று விட்டு அவளை நெருங்கினான். அவள் மிரட்சியுடன் பின்னால் நகர அவன் வேகமாகக்கிட்ட வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சைப் பொத்திப்பிடித்திருந்த சட்டையைப் பிடித்து இழுத்தான். அது அவனின் கையுடன் போய்விட்டது.

கமலி வெறி வந்தவள் போல கையில் கிடந்த வாளியால் அவனின் முகத்தில் அடித்தாள். அவன், "ஐயோ?", என்றவாறே முகத்தைப் பொத்தவே அடுத்த அடியை உச்சந்தலையில் போட்டுவிட்டு அவள் ஓட ஆரம்பித்தாள்.

வங்கோலை வேலாயுதம் சுதாகரித்துக்கொண்டு நிமிர்ந்து பார்த்தபோது அவள் தோட்டத்திற்குள் இறங்கி அதைக் கடந்து ஓடி வடலிக் காணிக்குள் இறங்கிவிட்டாள்.

வேலாயுதம் தலையைத் தொட்டுப் பார்த்தான். தலையால் இரத்தம் ஒழுகியது அதை ஒரு கையால் துடைத்துவிட்டு துரத்த ஆரம்பித்தான்.

கமலி வடலிக்காணிக்குள் வந்த பின்பு நின்று ஒருமுறை திரும்பிப் பார்த்தாள். பனங்கூடல்களுக்கிடையால் அவளின் வீடு எரிவது தெரிந்தது. மிளகாய்க் கன்றுகளை மிதித்துத் துலைத்துக் கொண்டு வேலாயுதம் வருவதையும் கண்டுவிட்டாள். மீண்டும் ஓட ஆரம்பித்த கமலி புளியடிக் காணிக்குள் இறங்கி மறுபுறத்தில் இருந்த பொட்டுக்குள்ளால் புகுந்து வீதிக்கு வந்தாள். பின்பு வீதியால் சிறிது தூரம் ஓடி விதானையார் வீட்டுச் சங்கடப்படலையைத் திறந்துகொண்டு முற்றத்துக்கு வந்தாள்.

சத்தம் கேட்டு வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்த சீதேவிப்பாட்டிக்குக் கமலியின் கோலம் கோபத்தை மூட்டிவிட்டது.

"என்னடி உனக்கு வெட்கம் ரோசமில்லையே. உள்ப்பாவாடையோடை தெருவிலை வந்திட்டாய்", சீறினாள் பாட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“குளிச்சுக்கொண்டு நிண்ட என்னை ஒருத்தன் விட்டுக்கலைக்கிறானணை!”, அவளின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

கிழவியின் கோபம் இப்போது வேறு திசையில் திரும்பிவிட்டது.

“ஆர். அவர். பின் ஒத்தாப்புக்கை போ. நான் பார்க்கிறன்”, என்று விட்டு குறுக்குக்கட்டை ஒருமுறை உதறிக்கட்டிவிட்டு கிழவி தெருவுக்கு வந்தாள்.

வேகமாக ஓடிவந்த வேலாயுதம் கிழவியைப் பார்த்து மிரட்டும் தொனியில், “எங்கை அவள். விடு வெளியிலை. இல்லாட்டில் நடக்கிறது வேறை”, என்றான்.

அவன் இது விதானையார் வீடு என்பதையோ கிழவி விதானையாரின் தாயார் என்பதையோ தெரிந்திருக்கவில்லை.

“விடுறன் பொறு!”, என்ற பாட்டி விதானையாரின் நாயை அவிழ்த்து விட்டு, “சூ... விடாதை.. பிடி அவனை”, என்றாள். சிங்கம் போல் பாய்ந்து சென்ற அந்த நாய் வேலாயுதம் தன்னைச் சுதாகரித்துக்கொள்ள முன்பே அவனின் ஒரு தொடையைப் பிய்த்துக் குதறியது, “ஐயோ!”, எனக் கத்தியவாறு அவன் ஓட முயன்றபோது அவனின் நெஞ்சில் கால் வைத்து கழுத்தை நோக்கி வாயைப்பிளந்தது. அவன் ஒருவாறு தள்ளிவிட்டு ஓடியபோது விரட்டி விரட்டி நான்கைந்து இடங்களில் கடித்து வடலிக்காணி வரை விரட்டி விட்டு வந்தது.

சொர்ணத்தின் சட்டை ஒன்றைக் கொண்டுவந்து கொடுத்து, “இதைப்போடடி”, எனக் கொடுத்த கிழவி “என்னடி நடந்தது?”, எனக் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆரோ வந்து எங்கடை வீடுகளையெல்லாம் கொளுத்துறாங்கள்', என்றாள் கமலி.

"கோதாரி விழ.. ஏனையு இவ்வளவு நேரமும் சொல்லேல்லை?', என்று விட்டு "செல்லையா.. டேய் செல்லையா?', என உரத்துக் கூப்பிட்டவாறே பாட்டி பக்கத்து வீட்டை நோக்கி விறுவிறென்று நடந்தாள்.

பொன்னுக்குட்டியின் வீட்டுக்குத் தீயை மூட்டியவர்கள் அடுத்தடுத்த வீடுகளையும் எரிக்க முயன்ற போது அது சாத்தியப்படவில்லை. வல்லியப்பனின் வீட்டு வேலியை மட்டுமே கொழுத்த முடிந்தது. காலாலும் தொடையாலும் குருதி ஒழுக ஒழுக ஓடி வந்த வேலாயுதத்தின் நிலைமை அவர்களைத் திகைக்க வைத்துவிட்டது.

அன்று கோவிலுக்குப் போகாமல் நின்ற சில முதியவர்களும், இளைஞர்களும் சத்தம் கேட்டு அவ்விடத்திற்கு ஓடி வரவே அவர்கள் அவசர அவசரமாக காரில் ஏறிப்புறப்பட்டனர். காலை இழுத்துக் கொண்டு ஓடிவந்த வேலாயுதத்தை, "கெதியாய் வாடா!", எனக் கத்தினார்கள். ஒரு புறம் மணியாறன்மூலையைச் சேர்ந்தவர்களும் மறுபுறம் செல்லையாக் குஞ்சியும் இன்னும் சிலரும் ஓடி வரவே அவர்களுக்கு வேலாயுதத்தை ஏற்ற நேரமிருக்கவில்லை. முன்னால் ஓடிவந்த இளையவனின் கையில் மின்னிய பாளைக் கத்தியும், கோடாலியும் வரப்போகும் ஆபத்தை உணர்தியதால் வேலாயுதத்தை விட்டு விட்டே காரை 'ஸ்ராட்' பண்ணி ஓட ஆரம்பித்தனர். இளையவனின் கோடாலியைச் சுழற்றி எறிந்தபோது காரின் பின் கண்ணாடியை உடைத்துக்கொண்டு உள்ளே விழுந்து ஒருவனைக் காயப்படுத்தியது. அவர்கள் எதையுமே பொருட்படுத்தாமல் ஓடியே போய்விட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காருக்குப் பின்னால் ஓட முயன்ற வேலாயுதத்தை மடக்கிப்பிடித்த இளையவனும் குட்டியனும் அவனை அங்கு நின்ற பூவரசில் கட்டினர். வந்திருந்த அனைவரும் குடங்களிலும் வாளிகளிலும் நீரை அள்ளிக்கொண்டு வந்து ஊற்றியபோதும் தீயை இலகுவில் அணைத்துவிட முடியவில்லை. இளையவன் தீ பரவாத பகுதியால் ஏறி ஓலைளைப் பிடுங்கி வீசினான். எரிந்து கொண்டிருந்த தீயின் வெம்மையையும் தாங்கியவாறு குடங்களை வாங்கி எரிந்த பக்கம் நோக்கி வீசினான். குட்டியனும் ஒரு கொக்கைத் தடியால் எரியும் ஓலைகளைத் தள்ளிக் கீழே விழுத்தினான்.

ஒருவாறு தீ அடுத்த வீடுகளுக்குப் பரவாத வண்ணம் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டாலும் கமலியின் வீட்டின் பெரும் பகுதி எரிந்துவிட்டது. செல்லையாக்குஞ்சி தன் குடுமியை ஒரு முறை அவிழ்த்து முடிந்துவிட்டு பூவரசில் கட்டிப்போட்டிருந்த வேலாயுதத்தின் அருகில் போனார்.

"என்னடா. இப்ப சந்தோஷமே?", எனக்கேட்டார்.

"இவள் பெரிய கூட்டத்திலை வைச்சு எனக்கு முதுகிலை எலும்பு கிடக்கிதா எண்டு கேட்டவள். இது உனக்குத் தெரியுமே?", எனக் கேட்டான் வங்கோலை.

"டேய்! சனமெல்லாம் கோயில் தேருக்குப் போன நேரம் பாத்து பதுங்கி வந்து வீடு எரிக்கிறது முதுகெலும்பு உள்ளவன் செய்யிற வேலையேடா?".

அவன் எதுவும் பேசவில்லை.

சீதேவிப்பாட்டி கொடுத்த சொர்ணத்தின் உடுப்புகளைப் போட்டுக்கொண்ட கமலியும், பாட்டியும் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தனர். கமலி, வேலாயுதம் கட்டிப்போடப்பட்டிருந்ததைக் கவனிக்கவில்லை. அவள் எரிந்து முடிந்து இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைந்துகொண்டிருந்த தன்வீட்டுக்குள் ஓடினாள். சிங்கனின் படம் தூக்கப்பட்டிருந்த சுவரைக் கண்கள் துளாவின. ஆணி மட்டுமே சுவரில் தனித்து நின்றது.

திகைப்புடன் குனிந்து நிலத்தைப் பார்த்த போது சிங்கனின் படமும், தாலியும் அங்கு கிடந்தன. புகைப்பிடித்த படத்தின் கண்ணாடியும், தாலிக்கொடியும் கறுத்துப் போயிருந்தபோதும் வேறு எந்தச் சேதமும் ஏற்படவில்லை. அவற்றை எடுத்து நெஞ்சுடன் அணைத்துக்கொண்டாள். கண்களிலிருந்து அவளையறியாமலேயே நீர் பொலுபொலுவென வழிய ஆரம்பித்தது.

"அவர் என்னை விட்டுட்டுப் போகமாட்டார்", என அவள் மனம் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டது.

நாயை விட்டு வேலாயுதத்தை குதறவிட்ட போதிலும் சீதேவிப்பாட்டியின் கோபம் இன்னும் அடங்கவில்லை.

"டேய்! நாயே! விதானை வீட்டை அடைக்கலம் எண்டு வந்தவளை நீ பிடிக்கிற அளவுக்கு நீ பெரிய கொம்பே?", என முழங்கினாள் கிழவி.

அவன் தயங்கியவாறே, "இது விதானையார் வீடு எண்டு தெரியாதெணை", என்றான்.

"அப்பிடியெண்டால் நீ எங்கடை ஊருக்கை வந்து எங்கடை குடிமக்களை என்ன வேணுமெண்டாலும் செய்து போடுவியோ?", அவன் எதுவும் பேசவில்லை.

எவராவது பிழைசெய்தால் மாமரத்தில் கட்டிவைத்துப் பிரம்படி கொடுக்கும் தம்பிப்பிள்ளையின் வழமைபற்றி அவன் ஏற்கனவே கேள்விப்பட்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கு வெளியே வந்த கமலி பூவரச மரத்தில் இரத்தம் வடிந்த நிலையில் கட்டப்பட்டிருந்த வேலாயுதத்தைக் கண்டுவிட்டாள். ஏதோ ஒரு ஆவேசம் வந்தவள் போல் கையிலிருந்த சிங்கனின் படத்தையும், தாலியையும் இளையவனிடம் கொடுத்துவிட்டு குட்டியனிடமிருந்த கொட்டனை வாங்கிக்கொண்டாள்.

என்ன நடக்கப்போகிறது எனத்தெரியாமல் திகைத்து நின்றபோது அவள் வேலாயுதத்தை நோக்கி விருவிரென்று நடந்தாள்.

"டேய். இந்தக் கைதானே என்ரை நெஞ்சை மூடின சட்டையைப் பிடித்திழுத்துப்போட்டு உள்ப்பாவாடையை உரிய வெளிக்கிட்டது?", எனக்கேட்ட கமலியின், வார்த்தைகள் ஓய்வதற்கு முன்பே அவனின் வலது கையில் பலமான கொட்டனடி விழுந்தது.

"ஐயோ..!, என வேதனை தாங்காமல் அலறினான் வேலாயுதம். கமலி அடுத்த தரம் கொட்டனை ஓங்கியபோது சீதேவிப்பாட்டி எட்டிப்பிடித்துவிட்டாள்.

"விடடி... கைமுறிஞ்சு போச்சுப்போலை கிடக்குது?"

வேலாயுதம் வேதனையில் முனகினான். அவனின் கை மணிக்கட்டுக்குக் கீழ் தொங்கியது.

கொட்டனைச் சுழற்றி எறிந்துவிட்டு வல்லியப்பன் வீட்டுக்குள் புகுந்த கமலி மிளகாய்த்தூள்ப் பேணியுடன் வெளியே வந்தாள். ஒரு பிடி அள்ளி அவனின் கண்களை நோக்கி எறிந்தாள். வேதனை தாங்காது, "ஐயோ!... ஐயோ!", என்று அலறிய வேலாயுதம் "ஆச்சி! கொஞ்சம் தண்ணியடிச்சு விடணை?", எனக்கத்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய்... இந்தக் கண்தானே என்னை உள் பாவாடையோடை பார்த்தது. அந்தப்பாவம் தீர கண்ணீராலே கழுவு", என்றாள் கமலி இன்னும் கோபம் அடங்காமலே.

கை வலி ஒருபுறம். கண்ணெரிச்சல் மறுபுறமாக வேதனையில் தவித்தான் வேலாயுதம்.

"இளையவன் வாடா இஞ்சை!... இவனை அவிட்டுவிடு", என்றாள் பாட்டி.

இளையவன் கமலியை நோக்கினான். அவள் கோபம் சற்றுக் குறைந்துவிட்டது போல் தோன்றியது. எதுவும் கூறாமலே இளையவன் போய்க் கட்டுகளை அவிழ்த்துவிட்டான். வேலாயுதம் மெல்லப் பூவரசுடன் சாய்ந்து அமர்ந்து கொண்டான்.

"டேய்... ஓட வெளிக்கிட்டியோ... பொடியள் உச்சியிலை போட்டுத் தான் கிடத்துவாங்கள்... விதானை வருமட்டும் அசையக்கூடாது?", என்று, சீதேவிப்பாட்டி அவ்விடத்தை விட்டுப்புறப்பட்டாள்.

வேலாயுதம் இளையவனை நோக்கி தண்ணீர் தரும்படி இடது கையால் சைகை செய்தான். இளையவன் தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு தனக்குள் சிரித்துக்கொண்டான். எந்தச் சாதித் திமிரால் இங்கு வந்தானோ. நெருக்கடி நேரத்தில் அதையே கைவிட்டு தனது கையால் தண்ணீர் வாங்கிக்குடிக்கும் நிலையை எண்ணி எப்படித்தான் சிரிக்காமல் இருக்க முடியும்.

வீடு கொளுத்திய பெருமையைச் சொல்லச் சொல்லி சாராயத்தில் மிதக்க வேண்டிய நேரத்தில் தான் இப்படி மாட்டுப்பட்டு விட்டதை நினைக்கும் போது வேலாயுதத்திற்கு விசர் பிடித்து விடும் போலிருந்தது. எனினும் தனது நண்பர்கள் எப்படியும் இன்னும் பலரைக் கூட்டிக்கொண்டு வந்து, இன்னும் சில மணிநேரத்தில் தன்னை மீட்டு விடுவார்கள் என்ற நம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுவாகவே அவன் நெஞ்சில் நிலைத்திருந்தது. அப்படி நடக்கும்போது கமலியையும் கடத்திக் கொண்டு போய்விடவேண்டும் எனவும், அவளைப் பழிவாங்க வேண்டும் எனவும் எண்ணிக்கொண்டான். முறிந்த கை வேதனை கொடுக்கக் கொடுக்க பழிவாங்கும் உத்வேகம் அவனுள் மேலும் மேலும் கொழுந்து விட்டெரிந்தது. சரவணை என்றவொரு பொல்லாத சண்டியன் வீரபாகு முதலாளியின் குழுவில் இருப்பதை அவன் அறிந்திருந்தான். ஆனால் அந்தச் சரவணை தான் கமலியின் தகப்பன் பொன்னுக்குட்டி என்பதை அவன் அறிந்திருக்கவில்லை.

வெல்லன்பிள்ளையார் வீதி சுற்றி முகப்புக்கு வருமுன்பே மணியாறன்மூலையில் வீடு எரிந்த செய்தி விதானையார் காதுக்கு எட்டிவிட்டது. கனகாம்பிகையிடம் அவர் அர்ச்சனையைச் செய்துவிட்டு வரும்படி கூறிவிட்டு அவசர அவசரமாகச் சைக்கிளை எடுத்துக்கொண்டு வீடு நோக்கிப் புறப்பட்டார்.

பொலிசாரே வந்தறியாத தன் கடமை எல்லைக்குள் சிங்கனின் கொலை அவரளவில் ஒரு அவமானமாகவே இருந்தது. மீண்டும் தனது குடிமக்களின் வீடுகள் கொழுத்தப் பட்டது அவருக்கு மேலும் ஆத்திரத்தை மூட்டியது. இதற்குச் சட்டப்படி மட்டுமன்றி சட்டத்துக்கு அப்பாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முடிவு செய்துகொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகம் - 41

சற்று நேரத்திற்கு முன்பு ஒரு பிசாசைப் போன்ற வெறியுடன் தன்னைக் குதறவந்த வங்கோலை வேலாயுதம் இப்போ பூவரசின் கீழ் பயத்துடன் மிரள மிரள விழித்தவாறு முனகிக்கொண்டிருந்ததைப் பார்த்தபோது கமலிக்கு மனதில் ஒரு கேலி கலந்த சிரிப்பு எழுந்து மறைந்தது. அதேவேளையில் தான் வாளியால் அடித்துவிட்டு ஓடித்தப்பாமல் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என நினைத்தபோது கோபமும் எழத்தான் செய்தது. ஒரு விறகு கட்டையை எடுத்து அவன் உச்சந் தலையைப் பிளக்க வேண்டும் என ஒரு உணர்வு தோன்றியபோதும் தான் செத்த பாம்பை அடிக்கும் அளவுக்கு நிலை தாழ்ந்து விடக்கூடாது என நினைத்தவளாக அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டாள்.

அவள் அங்கு நின்ற பூசாரி சின்னியப்பனிடம், "அப்பு அவன்ரை கைமுறிஞ்சு போச்சுது போலை கிடக்குது. ஒரு மட்டை வைச்சுக்கட்டி விடன்", என்றாள்.

சில நிமிடங்களுக்கு முன்பு பத்திரகாளியாக மாறி வங்கோலையின் கையை அடித்து முறித்த கமலி அப்படிச் சொன்னது இளையவனை அளவில்லாத வியப்பில் ஆழ்த்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சிறிய தடுமாற்றத்துடன் அவளிடம், "கமலி நீ... என்ன சொல்லுறாய்?", எனக்கேட்டான்.

"அவன் என்ரை சட்டையைப் பிடிச்சு இழுத்தான். கையை அடிச்சு முறிச்சாச்சு. என்னை உள்ப்பாவாடையோடை பார்த்தான். அந்தக் கண்ணுக்கு மிளகாய் போட்டாச்சு. இனியும் இவங்கள் எங்களை என்னவும் செய்ய முடியாது எண்டதைக் காட்டியாச்சு... இப்ப வேதனையிலை தவிக்கிறான். நாங்கள் மனுஷராய் இருப்பம்"

"அப்ப... வீடு கொளுத்தினதை மன்னிச்சிட்டியே?"

கமலி மெல்லச் சிரித்தவாறே சொன்னாள் "இன்னும் கொஞ்ச நேரத்திலை அப்பு வந்திடுவார். அவர் அதைக் கவனிப்பார்".

அந்த வார்த்தைகள் வேலாயுதத்தை அதிர வைத்தன.

சரவணை எப்படிப்பட்ட சண்டியன் என்பதையும் அவனுக்கு வீரபாகு முதலாளியின் பின்புலம் இருப்பதையும் கேள்ளவிப்பட்டிருக்கிறான். தான் இப்போ சரவணையின் கையில் தனியாக அகப்பட்டால் உயிர்கூட மிஞ்சாது என்பதை நினைத்தபோது அவன் உடல் நடுங்கியது.

கமலி ஒரு நேர்மையான துணிச்சல்காரி என்று இதுவரை எண்ணியிருந்த இளையவன் அவளுக்குள் இருக்கும் ஆழமான இரக்க சுபாவத்தையும் புரிந்து கொண்டான். ஆனால், சிங்கனின் படம் எரிஞ்சிருந்தால் இளையவனின் பாளைக் கத்தியாலேயே வேலாயுதத்தின் கழுத்தை அவள் அறுத்திருப்பாள் என்றே இளையவன் கருதினான்.

இளையவன் ஒரு வடலி மட்டையை வெட்டிச் சீவிக்கொடுக்க பூசாரி சின்னியப்பன் பக்குவமாக வேலாயுதத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையுடன் வைத்துக்கட்டினார். இளையவன் ஒரு பழைய துணியில் தண்ணீரைத் தோய்த்து வேலாயுதத்தின் இரத்தக் காயங்களைத் துடைத்துவிட்டான்.

அவற்றையெல்லாம் வேலாயுதம் விரும்பாவிட்டாலும் உடல் வேதனை தவிர்க்க முடியாமல் அவற்றை ஏற்றுக்கொள்ள வைத்தது. ஆனால் அந்த விஷயங்களையெல்லாம் அவர்கள் மனமிரங்கிச் செய்வதாக அவன் நம்பவில்லை. தன்னை அடித்து முறித்துவிட்டு இப்போ சமாளிப்பதற்காகவே அவர்கள் அப்படியெல்லாம் செய்வதாகக் கருதினான்.

காயங்களைத் துடைத்து முடித்துவிட்டு இளையவன், "குடிக்கத் தண்ணி வேணுமே", எனக்கேட்டான்.

வேலாயுதம் அவனை முறைத்துப் பார்த்துவிட்டு, "உங்கடை தண்ணி குடிக்கவே இஞ்சை வந்தனான்?', அவனுடைய அந்தத் திமிர் இளையவனுக்குக் கோபத்தை மூட்டிவிட்டது.

"நீ... சாகத்தான் வந்தனி எண்டு எங்களுக்கும் தெரியும்... அவசரப்படாதை.. இப்ப பொன்னுக்குட்டி மாமா வர உன்ரை ஆசை நிறைவேறும்"

இளையவனின் வார்த்தைகள் வேலாயுதத்தைத் கிடுகிடுக்க வைத்துவிட்டன.

"நீ.. நீ.. என்ன சொல்லுறாய்?", எனத் தடுமாறினான் வேலாயுதம்.

"உன்னைப் போலை ஆக்களுக்கு இரக்கம் காட்டுறது பிழை எண்டு சொல்லுறன்', என்று விட்டு எழுந்து அப்பால் போனான் இளையவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலாயுதம் மனதுக்குள் கறுவிக் கொண்டான். தன்னைக் கைவிட்டு ஓடியவர்கள் மேலும் ஆட்களைக் கூட்டிக்கொண்டு தன்னை மீட்க இன்னும் சிறிது நேரத்தில் வந்து விடுவார்கள் என அவன் திடமாக நம்பினான். அப்போது ஏனைய வீடுகளையும் எரிப்பது மட்டுமன்றி தனது கையை அடித்து முறித்த கமலியைத் துகிலுரித்து பலபேர் முன்னிலையில் மானபங்கப்படுத்த வேண்டும் எனவும் மனதிற்குள் முடிவு செய்துகொண்டான்.

வீடெரிந்த விஷயம் மெல்லப் பரவவே சனங்கள் கூட ஆரம்பித்துவிட்டனர். அப்போது தான் சீவலை முடித்துவிட்டு வந்த நல்லானுக்கு எரிந்த வீட்டைப் பார்த்த போது ஆத்திரத்தை அடக்கமுடியவில்லை. பாளைக்கத்தியைக் கையில் எடுத்துக் கொண்டு ஆவேசமாக வேலாயுதத்தை நோக்கிப் போன அவனை இளையவன் தடுத்து நிறுத்தினான்.

"அண்ணை! இப்ப பொறு... எதுக்கு விதானையார் வரட்டும்.."

"எல்லாத்துக்கும் விதானையாரைப் பார்த்துக் கொண்டு கிடக்க ஏலுமே?", சீறினான் நல்லான்.

"அப்படியெண்டில்லை... கமலி கையையும் அடிச்சு முறிச்சுப்போட்டாள்", என்றான் இளையவன்.

"குடியிருக்கிற வீட்டைக் கொளுத்தினவனுக்குக் கையை முறிச்சால் போதுமே... கழுத்தை அறுக்கவேண்டாமே?", எனக் கெம்பி எழுந்தான் நல்லான்.

"பொறு.. பொறு பாப்பம்?", என்று கையைப் பிடித்துக் கொண்டான் இளையவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார் ஒன்று வரும் சத்தம் கேட்ட போது வேலாயுதம் தனது ஆட்கள் வந்து விட்டதாக எண்ணி மகிழ்ச்சியுடன் தெருவைப் பார்த்தான்.

கார் வந்து நின்றதும் அதிலிருந்து விதானையார் இறங்கி வந்தார். அவரைக் கண்டதும் வேலாயுதத்தைச் சுற்றி நின்ற சனங்கள் விலகி வழி விட்டுக்கொடுத்தனர்.

விதானையார் அருகில் வரவே வேலாயுதம் சிரமப்பட்டு மெல்ல எழுந்து நின்றான்.

"வங்கோலை, நீயே வீடு கொளுத்தின விண்ணன்", எனக்கேட்ட விதானையார் அவனின் காதைப் பொத்தி ஒரு அறை கொடுத்தார். வேலாயுதத்தின் இடது பக்கக் காது விண் கூவியது.

"டேய்.. கடுக்கன் கணபதி பகுதியார் எங்கடை ஊருக்குள்ளை வந்து எங்கடை குடிமக்களின்ரை வீட்டைக் கொழுத்திற அளவுக்குத் துணிஞ்சிட்டியளே?", அடுத்த கன்னத்தில் இன்னொரு அறை விழுந்து வேலாயுதத்தைச் சித்தம் கலங்க வைத்தது.

கடுக்கன் கணபதி பகுதி எனக் கூறப்படும் அந்த வட்டாரம் சற்று வித்தியாசமான ஒரு இடமாகவே நோக்கப்படுவதுண்டு. அங்கு குடியிருக்கும் ஆண்களுக்கு எந்த ஒரு நிரந்தரத் தொழிலும் கிடையாது. கிணறு வெட்டுதல், வேலியடைத்தல் போன்ற ஏதாவது உதிரி வேலைகள் கிடைத்தால் செய்வார்கள். அப்படி வேலை கிடைக்காத நாட்களில் கள்ளைக் குடித்துவிட்டு ஒருவருடன் ஒருவர் சண்டை போட்டு மண்டைகளை உடைத்துக் கொள்வார்கள். கோவில் சந்தையில் வியாபாரம் செய்தோ அல்லது நாகர் கோவில், குடாரப்பு ஆகிய பகுதிகளுக்குப் போய் விறகு சேகரித்து விற்றோ பெண்கள் வீட்டுச் சீவியத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துக் கொள்வர். ஒரு சிலர் விறகு, குழை, வைக்கோல், எரு என்பன கொண்டு வரும் லொறிகளுக்கு தரகு வேலை மட்டும் பார்ப்பதுண்டு. அவர்கள் தாங்கள் படித்ததுமில்லை. தங்கள் பிள்ளைகள் படிக்க வேண்டுமென அக்கறைப்பட்டதுமில்லை.

கடுக்கன் கணபதி. அவர்களின் ஊர்ப் பெரியவர். வட்டிக்குப் பணம் கொடுத்தல், காணி ஈடு பிடித்தல் என்பன அவரின் தொழில். செப்புக்குடம் முதல் பவுண் நகை வரை அவரிடம் அடகு பிடிக்கலாம். அவர் எண்பது வயதிலும் நிமிர்ந்த நடையுடனேயே ஊருக்குள் வலம் வருவார். எது எப்படியிருந்த போதிலும் தங்கள் உயர்சாதி என அவர்கள் பெருமைப்பட மட்டும் தவறுவதில்லை.

ஆனால் தம்பிப்பிள்ளை விதானையார் போன்ற நிலவுடமை உயர்சாதி வெள்ளாளர்கள் அவர்களை கணக்கில் எடுப்பதில்லை.

அப்படிப்பட்டவர்கள் விதானையாரின் குடிமக்கள் மேல் கையை வைத்தால் அவரால் எப்படிப் பொறுக்க முடியும். "இரு உன்னை வந்து விஷேசமாய் கவனிக்கிறன்", என்று விட்டு விதானையார், "எல்லோரும் நில்லுங்கோ.., கமலி நீ என்னோடை வா" என அவளை அழைத்துக் கொண்டு எரிந்த வீட்டை நோக்கிச் சென்றார். எரிந்த வீட்டைச் சுற்றிப் பார்த்து விட்டு

"ம்... ஒரு சாமானும் மிஞ்சேல்லைப் போலை கிடக்குது?"

கமலி எதுவும் பேசவில்லை. கண்கள் மெல்லக் கலங்க ஒரு பெருமூச்சை வெளியே விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம்...நடந்ததை ஒண்டு விடாமல் சொல்லு", என்றார் விதானையார். கமலி விதானையாரிடம் எதையுமே மறைக்கவில்லை. எல்லாவற்றையும் கேட்ட விதானையார்

"ம் எப்படியும் நீ கெட்டிக்காரிதான்", என்றார்.

பின்பு அவர் "பொலிஸ் வந்து கேட்கேக்கை நீ கிணத்தடி விஷயங்களைச் சொல்லவேண்டாம். அவன்ரை கைமுறிஞ்சது பற்றிக் கேட்டால் உனக்கு அது பற்றித் தெரியாது எண்டு சொல்லு", என்றார். கமலியும் ஆமெனத் தலையசைத்தாள்.

விதானையார் தான் வந்த மணியத்தின் காரில் வேலாயுதத்தை ஏற்றிக்கொண்டு முன்னால் புறப்பட்டார்.

கார் ஒழுங்கையால் வந்து கல்லு றோட்டில் ஏறியது. முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த விதானையார். திரும்பி வேலாயுதத்தைப் பார்த்து, "வீடு கொழுத்தினதுக்குப் பத்து வருஷம்..., பெட்டையைக் கற்பழிக்க முயற்சித்ததுக்கு ஒரு பத்து வருஷம்... எல்லாமே எப்பிடியும் ஒரு இருபது வருஷத்துக்குக் குறையாமல் மறியல் தீரும். சம்மதம் தானே?", எனக் கேட்டார்.

இருபது வருஷம் என்றதும் வேலாயுதத்துக்குக் குலை நடுங்கியது. ஒரு முறை 14 நாள் விளக்கமறியலில் இருந்தபோதே கள்ளுக்குடிக்க முடியாததாலும், பீடி பற்றமுடியாததினாலும் விசர் பிடிக்கும் நிலையில் கஷ்டப்பட்டவன். இருபது வருஷம் என்பதை நினைக்கவே தற்கொலை செய்வது மேல் என்றே அவனுக்குத் தோன்றியது.

அவன் எதுவுமே பேசவில்லை.

விதானையார் மீண்டும் கேட்டார், "அப்ப... என்ன செய்யப்போறாய்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் ஒருவிதத் தயக்கத்துடன், "ஒரு நல்ல அப்புத்காத்தை வைச்சு...?", என இழுத்தான்.

"எந்த அப்புக்காத்து வந்தாலும் சரி வராது.... உன்ரை கை ஏன் முறிஞ்சது... எங்கை முறிஞ்சது எண்ட கேள்வி வர எல்லா உண்மையும் வெளிச்சுப்போம்"

"அது... நான் பொலிசிலையும் ஆஸ்பத்திரியிலையும் விழுந்துதான் கை முறிஞ்சதெண்டு சொன்னால்...?"

"சொல்லிப்பாரன்", என்றார் விதானையார், மெல்லிய ஒரு புன் சிரிப்புடன். அப்படி அவன் சொல்வதை விதானையாரும் விரும்பினார். இந்தப் பிரச்சினைக்குக் கமலியை இழுக்க அவர் விரும்பவில்லை.

"அவளும் நீ கிணத்தடியிலை பிடிச்சு இழுத்ததைச் சொல்ல மாட்டாள். நீயும் விழுந்து தான் கை முறிஞ்சதெண்டு சொன்னியெண்டால் கற்பழிக்க முயன்ற குற்றத்திலையிருந்து தப்பியிடலாம்"

"அப்ப... வீடெரிச்சதுக்கு...?"

"அதுக்கு நல்ல அப்புக்காத்தை வைச்சுப் பேசன்...", என்றார் விதானையார்.

கார் பிரதான வீதியால் ஏறி பருத்தித்துறை நோக்கி ஓட ஆரம்பித்தது.

அவர்கள் பொலிஸ் நிலையத்தில் போய் இறங்கிய போது சார்ஜன்ட் சின்னத்தம்பியே பொறுப்பில் இருந்தார். தம்பிப்பிள்ளை விதானையார் குடியரசு கந்தப்பர் என ஒரு கூட்டமே போய் இறங்கிய போது ஏதோ ஒரு பெரும் அசம்பாவிதம் நடந்து விட்டதைப் புரிந்து கொண்டார் சின்னத்தம்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இறங்கி வாடா!", என்று விட்டு விதானையார் முன்னால் போனார்.

"வாருங்கோ... விதானையார். ஏதோ விசேசத்துடன் வந்திருக்கிறியள் போலை?", எனக் கேட்டார் சின்னத்தம்பி.

"ஓமோம். வீடு கொழுத்த வந்த கோஷ்டியிலை மற்றவங்கள் ஓடியிட்டாங்கள். இவன் மட்டும் தான் சனத்தட்டைப் பிடிபட்டவன்", என்றார் விதானையார்.

"அப்ப... ஆர் முறைப்பாடு போடுறது..?"

"அங்கை வீட்டுக்காரர் ஒருதரும் சம்பவம் நடந்த நேரம் இருக்கேல்லை. நானே முறைப்பாடுதாறன்", என்று விட்டு விதானையார் சிலர் ஒரு காரில் வந்து வீட்டுக்குத் தீ மூட்டியதாகவும் சனங்கள் ஓடி வர வேலாயுதத்தை விட்டிட்டு காரில் ஏறி ஓடி விட்டதாகவும் முறைப்பாடு கொடுத்தார்.

பின்பு அவர் வேலாயுதம் பக்கம் திரும்பி. "டேய் உன்னோடை வந்து ஆக்களின்ரை பேர். நீ வந்த காரின்ரை நம்பர் எல்லாத்தையும் சொல்லுவியெண்டால் உன்னை அரசாங்க தரப்புச் சாட்சியாய் போட்டு தப்ப வைக்கலாம்... இல்லாட்டில் பத்து வருஷம் தப்பாது?", என்றார்.

"ஐயா. உண்மையாய் நான் கொழுத்தேல்லை. எரியேக்கைதான் கண்டனான்."

"அது எங்களுக்கும் விளங்கும்... நீ கொழுத்தினவங்களோடை கூட வந்தனி. அவங்கடை பேர்கள் உனக்குத் தெரியாதெண்டு செல்லேலுமே? பேர்களைச் சொன்னால் நீ தப்பலாம். இல்லாட்டில் நீ நான் முதல் எதிரி?", விதானையார் விரிக்கும் வலையைச் சின்னத்தம்பி நன்றாகவே புரிந்துகொண்டார் ஆனால் அவர் எதுவுமே பேசவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே காசி முதலாளிக்காக சிவஞானம், கனகரத்தினம் விஷயத்திலை திருகுதாளம் செய்து விதானையாரிடம் பட்டபாட்டை அவர் மறக்கவில்லை. வங்கோலை வேலாயுதம் எதுவும் பேசாமல் இருக்கவே விதானையார், "எது விருப்பம்", எனக்கேட்டார்.

அவன் ஒரு முறை விதானையாரையும், சார்ஜனையும் மாறி மாறிப் பார்த்துவிட்டுக் கடகடவெனத் தன்னுடன் வந்தவர்களின் பெயர்களைச் சொல்லிவிட்டு காரின் இலக்கம், சாரதியின் பெயர் எல்லாவற்றையும் அட்சரம் பிசகாமல் சொல்லி முடித்தான்.

அவன் சொன்னவற்றையெல்லாம் எழுதிவிட்டு அவனுக்கு ஒருமுறை அதை வாசித்துக் காட்டிவிட்டு, அவனிடம் கையெழுத்து வாங்கினார். சின்னத்தம்பி.

"இப்ப என்ன செய்யப்போறியள்...?", எனச் சின்னத்தம்பியை நோக்கிக் கேட்டார் விதானையார்.

'இப்ப இவனை ஆஸ்பத்திரிக்கு அனுப்ப வேணும். யாழ்ப்பாணம் தான் பண்டேஜ் போட அனுப்புவாங்கள்... பிறகு தான் கோட்டிலை முற்படுத்த வேணும்", என்றார் சின்னத்தம்பி.

"அப்ப. வீடு எரிச்ச மற்றவங்கள்...?"

"இப்பவே அவ்வளவு பேரையும் கைது செய்ய வெளிக்கிடப் போறம்", என்றார் சின்னத்தம்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 42

அடுத்த நாள் அதிகாலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் பொன். கந்தையாவும், குடியரசு கந்தப்பரும் விதானையார் வீட்டில் வந்திறங்கினர்.

கந்தையா தான் இன்ஸ்பெக்டர் டயசுடன் தொலைபேசியில் கதைத்ததாகவும், இரவு இருவரைக் கைது செய்ததாகவும் மிகுதி மூவரும் ஒளிந்து விட்டதாகவும் தெரிவித்தார்.

மூவரும் சொர்ணம் கொடுத்த தேநீரை அருந்தி விட்டு பொன்னுக்குட்டி வீடு நோக்கிப் புறப்பட்டனர். கிழவி அவர்கள் புறப்படும் போது பலமான குரலில், "கந்தப்பு இடியப்பம் அவிக்கிறன். போகேக்கை வந்து சாப்பிட்டுட்டுப் போங்கோ", என்றாள்.

குடியரசார் சிரித்தவாறே, "உருளைக் கிழங்குப் பிரட்டலும், நல்ல பால் சொதியும் செய்து வை வாறன்", என்று விட்டு காரில் போய் ஏறினார்.

சொர்ணமும் போய் சாப்பாடு செய்வதில் தாய்க்கு உதவி செய்ய ஆரம்பித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு எரிந்து கிடந்த நிலையைப் பார்த்த போது இலகுவில் உணர்ச்சி வசப்படாத பொன். கந்தையாவுக்கே மெல்லிய கோபம் வந்து விட்டது.

"இவங்கள் என்ன மனுஷ சாதியே?", என வாய்விட்டுக் கேட்டுக் கொண்டார் அவர். பின்பு

"கந்தப்பண்ணை... இந்த விட்டை நாங்கள் தான் கட்டிக் குடுக்க வேணும்", என்று விட்டு, பொன்னுக்குட்டியை அருகில் அழைத்தார்.

"வீட்டு விஷயம் ஐயா மாமா எல்லா ஏற்பாடும் செய்யிறார்", என்றார் குடியரசார்.

பொன் கந்தையா பொன்னுக்குட்டியிடம், "ஐயா! ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ எரிஞ்சது மண் வீடு நாங்கள் கல் வீடாயே கட்டித்தாறம்", என்றார்.

"அதுக்கு ஊருப்பட்ட காசல்லே வேணும் எங்களுக்கு மண்வீடே போதும்", என்றார் பொன்னுக்குட்டி.

"அப்படியில்லை நீங்கள் நெடுக மண்வீட்டிலை தான் வாழ வேணுமெண்டில்லை.. நான் சமூகசேவைகள் திணைக்களத்திலை நட்ட ஈடாகக் கொஞ்சம் காசு எடுத்துத்தாறன். எங்கடை கட்சி நிதியிலையிருந்து காசு ஒதுக்கித் தாறம். எங்கடை ஆக்களும் கொஞ்சம் காசு போடக் கல் வீடு கட்டியிடலாம். நாளைக்கே வேலையைத் துவங்குவம்", என்றார் அவர்.

பொன்னுக் குட்டியால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. கமலி கூட மணியாறன்மூலையில தங்களுக்கென முதல் முதலில் ஒரு கல்வீடு வரப்போகிறது என்பதால் திகைத்துப் போய் விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானையார் கூட அது உச்சிலடியாருக்கு விடுக்கும் ஒரு சவால் என்ற வகையில் உள்ளூர ஒரு இனம்புரியாத மகிழ்ச்சியில் இருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தலையிடுகிறார் என்ற விசயம் பொலிசாரை உசாரடைய வைத்துவிட்டது. இன்ஸ்பெக்டர் டயஸ் தீவிரமாகச் செயற்பட ஆரம்பித்து விட்டார். சார்ஜன்ட் சின்னத்தம்பியும் தன் வழமையான விளையாட்டுக்களைத் தொடங்கினால் மீண்டும் ஒரு ஆபத்தில் மாட்டுப்பட வேண்டி வரும் என நம்பியதால் உச்சிலடியாரைக் கைது செய்வதில் தீவிரமாக இறங்கிவிட்டார். அடுத்த நாளே கடுக்கன் கணபதியின் மகனான செல்லப்பனைத் தவிர ஏனைய நால்வரும் கைது செய்யப்பட்டு விட்டனர். கடுக்கன் கணபதி தனது மகனை வழக்கிலிருந்து விலக்கி எடுத்த முயற்சிகள் எல்லாமே தோல்வியில் முடிந்தன. ஒன்றும் செய்ய முடியாத நிலையில் செல்லப்பன் வன்னிக்கு ஓடிவிட்டான். வங்கோலை வேலாயுதம் கையில் பண்டேஜ் போட்டபடி யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் பொலிஸ்காவலுடன் அனுமதிக்கப்பட்டிருந்தான். அடுத்தநாள் ஐவரும் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். சின்னத்தம்பி முதல் அறிக்கையைச் சமர்ப்பித்தவுடனேயே நீதிபதி 14 நாட்கள் விளக்கமறியல் எனத் தீர்த்து விட்டார். பிணை வழங்கும் படி சட்டத்தரணிகள் விடுத்த கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன.

அவர்கள் ஐவரும் விலங்கு பூட்டப்பட்டு ஒரே சங்கிலியால் பிணைக்கப்பட்டு நீதிமன்றத்திலிருந்து பஸ் நிலையம் மட்டும் நடத்திக் கொண்டு செல்லப்பட்டனர். வீதியால் போனவர்கள், பாடசாலை மாணவர்கள் என எல்லோரும் நின்று வேடிக்கை பார்க்கவே, அவர்கள் தலையைக் கவிழ்ந்தவாறே நடந்து சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்ற வாசலில் நின்று பார்த்துக் கொண்டிருந்த கடுக்கன் கணபதிக்கு ஆத்திரத்தை அடக்க முடியவில்லை. தனது சாதிக்காறரே தன்னைக் கைவிட்டு விட்டதாகக் கருதினார்.

அந்த நேரத்தில் தான் காசிப்பிள்ளையின் கார் அவர் அருகில் வந்து நின்றது.

"கணபதியண்ணை! ஏறன்", என்றார் காசி.

"எங்கை?"

"ஏறன் போவம்", என்று விட்டுக் கதவைத் திறந்தார் காசி.

கணபதி ஏறவே கார் யாழ்ப்பாண வீதியில் போக ஆரம்பித்தது.

எதிர்பார்த்ததை விட வீட்டு வேலைகள் மிக வேகமாக நடந்து முடிந்து விட்டன. வெள்ளையடிக்கும் வேலையையும் முடித்து விட்டால் ஒரு நல்ல நாளாகப் பார்த்துக் குடிபுகுந்து விடலாம். என்றே பொன்னுக்குட்டி நினைத்தார்.

அது ஒரு சிறிய வீடாக இருந்த போதிலும் மிக அழகாகவே அமைக்கப்பட்டிருந்தது. எல்லாவற்றையும் விட மணியாறன்மூலையில் கட்டப்பட்ட முதல் கல்வீடு என்ற பெருமையை அது பெற்றுவிட்டது.

ஆனால், அந்த வீடு கட்டப்பட்ட காணி விதானையார் தம்பிப்பிள்ளையின் பரம்பரைச் சொத்து. மணியாறன்மூலையில் இருப்பவர்கள் உயர் சாதியினரைப் போன்று கல்வீடு கட்டுவதை மனமார விதானையாரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பது உண்மை தான். ஆனால், பாராளுமன்ற உறுப்பினர் பொன். கந்தையா, கிராமசபைத் தலைவர் ஆர். தர்மரத்தினம் ஆகியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னின்று செயற்பட்ட காரணத்தால் அவரும் கேட்குமுன்பே வீடு கட்டப் பொன்னுக்குட்டிக்கு அனுமதி கொடுத்து விட்டார்.

அந்த வீடு அமைக்கப்பட்டிருந்த இரண்டு பரப்புக்காணியையும் அவர் கமலியின் பெயருக்கு நன்கொடையாக எழுதிவிட்டார். ஆனால் அதை எவரிடமும் வெளியே சொல்லவில்லை. பொன். கந்தையா, குடியரசார், ஐயா மாமா என எல்லோர் முன்னிலையிலும் உறுதிப்பத்திரத்தைக் கமலியிடம் கையளித்து தான் மற்றவர்களை விடக் கமலியின் விஷயத்தில் அக்கறையுள்ளவர் போன்று காட்ட வேண்டும் என முடிவு செய்திருந்தார். ஏறக்குறைய ஐம்பது குடிமக்கள் வசிக்கும் மணியாறன்மூலைக் காணிகள் விதானையாரின் பரம்பரைச் சொத்து ஆனால், பல தலைமுறைகளாக சீவல் தொழில் செய்யும் அந்த மக்களே அதில் வசித்து வந்தனர். விதானையாரோ, சீதேவிப்பாட்டியோ எப்போதுமே அக்காணி பற்றி அக்கறைப்பட்டதில்லை. சீதனம் கொடுக்கும் போது மட்டும் உறுதிகளில் பெயர்களை மாற்றி எழுதிக்கொள்வார்கள்.

தாங்களே தங்கள் குடிமக்களின் காப்பாளர்கள் என்ற எண்ணத்தை தக்க வைப்பதில் இக்காணிகளும் ஒரு முக்கிய பங்கை வகிப்பதாகவே விதானையார் போன்றவர்கள் கருதினார்கள்.

இப்போது கமலியின் பெயரில் உறுதி எழுதிக் கொடுப்பதால் அந்த மக்கள் அவர் மேல் கொண்டுள்ள விசுவாசமும், நம்பிக்கையும் மேலும் அதிகரிக்கும் என்பதை அவர் நன்கு புரிந்து வைத்திருந்தார். அன்று மாலை எல்லா வேலைகளையும் முடித்து விட்டு விதானையார் வழமை போல் சாய்மனைக் கதிரையில் அமர்ந்த போது ஓலை கிழித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த சின்னன் எழுந்து கள்ளைச் சுண்டுக் கோப்பையில் ஊற்றி அவரிடம் நீட்டினாள்.

சிறிதளவு கள்ளை உள்ளே உறுஞ்சி விட்டு ஒரு செருமலுடன், "என்ன சின்னன் பொன்னுக்குட்டியின்ர வீடு எவ்வளவிலை கிடக்குது?", எனக்கேட்டார் விதானையார்.

"கட்டு வேலையெல்லாம் முடிஞ்சுது இப்ப வெள்ளையடிபடுது", விதானையார் ஒரு மெல்லிய சிரிப்புடன், "இப்ப உங்கடை ஆக்களும் கல்வீடு கட்டினம் என்ன"

"எல்லாம் நீங்கள் செய்த புண்ணியமையா", என்றாள் சின்னன். அவளின் வார்த்தைகளில் நன்றியுணர்வு இழையோடியது.

"அந்தக் காணியைக் கமலிப் பெட்டையின்ரை பேரிலை எழுதிவிடலாம் எண்டு பார்க்கிறன் நீ என்ன சொல்லுறாய்?", ஏற்கனவே உறுதி எழுதப்பட்டு விட்ட விசயத்தை அவர் சொல்லாமலேயே அவளிடம் அபிப்பிராயம் கேட்பது போல வினவினார்.

சின்னன் திகைப்புடன் அவரைப் பார்த்தாள். அந்த வார்த்தைகளை அவளால் நம்ப முடியவில்லை. விதானையார் மீண்டும் கேட்டார், "என்ன ஒண்டும் பேசுறாயில்லை",

அவள் ஒருவிதமான தயக்கத்துடன், "எங்கட சனத்தின்ரை நல்லது கெட்டது நீங்கள் தானே பார்க்கிறனியள் உறுதி எழுதினாலென்ன இல்லாட்டிலென்ன நீங்கள் எழும்பச்சொல்லி சொல்லவே போறியள்", என்றாள். எனினும் தனது மகள் முத்துலட்சுமிக்கும் ஒரு துண்டுக்காணி எழுதப்போவதாக சொல்லுவாரோ என்ற எதிர்பார்ப்பும் அவளுள் எழாமலிருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், விதானையார் அது பற்றி எதுவும் கதைக்காதது அவளுக்கும் சற்று ஏமாற்றமாகவே இருந்தது எனினும் விதானையார் தனது மகளுக்கு எப்படியும் கொடுக்காமல் விடமாட்டார் என அவள் தன்னைத் தானே சமாதானப் படுத்திக்கொண்டாள்.

சற்று நேரம் அமைதியாயிருந்த விதானையார் ஒரு பெரு மூச்சுடன் சொன்னார், "மணியாறன்மூலையிலை எழும்புற முதல்க் கல்வீடு முத்துலட்சுமிக்காய் தான் இருக்கும் எண்டு நினைச்சிருந்தன், கால நேரம் கமலிப்பெட்டையை முந்த வைச்சிட்டுது", என்றார். சின்னனின் மனம் ஒரு முறை மகிழ்வில் விம்மித் தணிந்தது.

விதானையார் தொடர்ந்தார், "ஆனால், அப்பிடிச் செய்ய எனக்கு ஒரு சாட்டுக்கிடைக்கேல்ல, சும்மா நான் உனக்கொரு வீட்டைக் கட்டித் தந்தால் வெறும் வாயை மெல்லுறவர்களுக்கு அவல் கிடைச்சமாதிரிப் போகும்"

அவரின் நிலமையை அவளும் புரிந்து கொண்டாள். "ஏதோ!.. பிள்ளைக்கு விதி இருந்தால் கிடைக்கிற நேரம் கிடைக்கிறதெல்லாம் கிடைக்கும்", என்றாள் சின்னன்.

"என்ர பிள்ளைக்கு நான் செய்ய வேண்டியதை விதி எண்டு விட ஏலாது. நான் செய்வன் எப்படியும் செய்வன்"

அவரின் குரலில் அசைக்க முடியாத உறுதி தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 43

ஒரு மாதத்தில் கட்டி முடிக்கப்பட்ட சிறிய வீடாக இருந்த போதிலும் அது அழகாக அமைந்திருந்தது. மணியாறன் மூலையின் கல் வீடாகையால் அம் மக்கள் எல்லோருமே அதற்காகப் பெருமைப்பட்டுக் கொண்டனர்.

பொன்னுக்குட்டி அங்கு குடியேறுவதை ஒரு விழாவாகக் கொண்டாடாத போதிலும் அன்று குடியரசார், ஐயா மாமா, கார்த்திகேயன் மாஸ்ரர், சிவஞானம் உட்படப் பலர் வந்திருந்தனர். விதானையார் தனக்கு ஏதோ வேலையிருப்பதாகக் கூறி மாலை வருவதாகச் சொல்லியிருந்தார். விதானையாரைக் கையாள்வதில் குடியரசாருக்கு நிறையவே அனுபவம் இருப்பதால் அவரை இந்த விஷயத்தில் குடியரசார் நிர்பந்திக்கவில்லை. ஆனால், விதானையார் சொர்ணம் அனுமதிகேட்ட போது அவளைத் தடுக்கவில்லை.

சொர்ணம் பட்டுப் பாவாடை சட்டையுடன் தேவதை போல் வந்திருந்தாள். இளையவனும் வெள்ளை சேட் வேட்டியுடன் வழமையை விட கவர்ச்சியாக நின்ற போதும் அவன் சொர்ணத்தைப் பார்த்த போது தனக்கும் அவளுக்குமிடையே பெரும் இடைவெளி இருப்பதாகவே உணர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பிரதாய பூர்வமான சடங்குகள் எதுவும் நடக்கவில்லை. கமலி வெளி விறாந்தைச் சுவரில் மாட்டப் பட்டிருந்த சிங்கனின் படத்துக்கு மாலை போட்டு விளக்கேற்றி விட்டு, வீட்டுத்திறப்பை படத்தின் நடுவில் வைத்தாள். பின் குடியரசார் அதையெடுத்துக் கமலியின் கையில் கொடுக்க அவள் அதை வாங்கிச் சென்று கதவைத் திறந்தாள்.

பின்பு எல்லோருக்கும் சொர்ணமும், முத்துலட்சுமியும் தேநீர், பலகாரம் வழங்கினர். பலகாரம் கொடுத்துக் கொண்டு வந்த சொர்ணம் இளையவன் முன் வந்ததும் சிரித்தவாறே ஒரு பயத்தம் பணியாரத்தை எடுத்து அவனிடம் நீட்டி, "இந்தா இதை என்ரை கணக்கில் சாப்பிடு", என்றாள்.

இளையவன் பாடு தர்மசங்கடமாகி விட்டது. எனினும் இருபுறமும் பார்த்து விட்டு வாங்கிக் கொண்டான்.

பின்னாலிருந்து அச்சம்பவத்தை அவதானித்த சிவஞானத்தின் நெஞ்சில் கமலி அப்படி நடந்து கொள்ளவேண்டும் போல் ஒரு ஏக்கம் தோன்றி மறைந்தது.

கமலியின் வீட்டு வேலை தொடங்கிய நாளிலிருந்து சிவஞானம் காலையில் வந்து மாலை வரை அங்கே நின்று பாடுபட்டு வந்தான். சிங்கனின் நண்பன் என்ற வகையில் சிங்கன் உயிருடன் இருந்த காலத்திலேயே அவள் சிவஞானத்துடன் நெருக்கமாகவே பழகுவதுண்டு.

ஆனால் சிங்கனின் இறப்பின் பின்பு கொஞ்சம் கொஞ்சமாக அவள் மேல் ஒரு ஈர்ப்பு உருவாகி வருவதை அவன் உணர்ந்துள்ளான். அது அவளின் மேலான அனுதாபமா அல்லது அன்பா என்று பகுத்தறிய முடியாத குழப்பத்துக்கு அவன் ஆளானதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவள் தன்னை விரும்பினால் அவளை ஏற்றுக்கொள்ள மனப்பூர்வமாகத் தான் தயார் என்பதில் அவனுக்குச் சந்தேகம் இருக்கவில்லை. எனினும் கமலி சிங்கனில் கொண்டுள்ள ஆழமான அன்பை அவதானிக்கும் போது தனது எண்ணங்கள் அர்த்தற்றவை என்பதை அவன் நன்கு தெரிந்திருந்த போதிலும் அவற்றை அவனால் தவிர்க்க முடியவில்லை. அது சாதாரண அன்புதான் எனப்பல சமயங்களில் தன்னைத் தானே சமாளித்துக் கொள்வதுண்டு.

சிற்றுண்டிகளைப் பரிமாறிக்கொண்டிருந்த கமலி அவன் ஓரமாக ஒதுங்கியிருப்பதைக் கவனித்து விட்டாள்.

அவனருலே விரைந்து வந்து கமலி, "என்ன, பிறத்தியார் மாதிரி ஒதுங்கியிருக்கிறியள்... வாங்கோ. வந்து பரிமாறுங்கோ" என்றாள்.

"நீங்கள் செய்யுறீங்கள் தானே.."

"நாங்கள் செய்தால்.. வாங்கோ... வாங்கோ உங்கடை வீடுதானே!"

"என்ரை வீடோ.."

"பின்னை... அதின்ரை இஞ்சினியரிலையிருந்து லேபர் மட்டும் நீங்கள் தானே... வாங்கோ..", எனப் புன்னகையுடன் சொல்லி விட்டு அவனின் கையில் தட்டைக் கொடுத்தாள் கமலி. சிவஞானம் ஏதோ ஒரு துணிவு வந்தவனாக, "என்ரை வீடோ.. இன்னும் அப்படித் தெரியேல்லை.. அப்பிடியெண்டால் சந்தோசம் தான்", என்றான்.

திடீரென திரும்பி அவன் முகத்தைப் பார்த்த கமலி எதுவும் பேசாமல் அவ்விடத்தை விட்டு அகன்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா விருந்தினர்களும் ஒவ்வொருவராக விடைபெற்றுச் சென்ற பின்பு சிவஞானமும் புறப்படத்தயாரானான். கமலி அவனருகில் வந்து, "இந்த வீட்டின்ரை ஒவ்வொரு கல்லிலையும் உங்கடை உழைப்பு இருக்குது. அதால இது உங்கடை வீடு தான்", எனச் சொல்லிய கமலி ஒரு புன்னகையுடன், "வீடு மட்டும் தான்", என்றாள்.

அவளின் வார்த்தைகளும் அதில் தொனித்த வித்தியாசமான தொனியும் சிவஞானத்தை அதிர வைத்து விட்டன. ஒரு சிறு தடுமாற்றத்தின் பின், "நான் அப்பிடி ஒரு சொந்தம் கொண்டாட முயற்சிக்கிறன் எண்டு நீங்கள் நினைக்கிறீங்களோ"

"நான் அப்பிடிச் சொல்லேல்லை.. ஆனால் அப்பிடி இருக்கக் கூடாது எண்டு தான் விரும்புறன்", வார்த்தைகள் தயங்கித் தயங்கி வெளிவந்த போதும் அவற்றில் ஒரு உறுதி தொனித்தது.

சிவஞானம் சற்று உணர்ச்சி வசப்பட்டிருக்க வேண்டும். "கமலி நான் உங்களிலை அன்பு வைச்சிருக்கிறது உண்மை ஆனால், நான் இளம் விதவையளின்ரை பலவீனங்களைத் தூண்டி விட்டு அவையை மடக்கிற அளவு போக்கிலியில்லை", எனச் சொல்லி விட்டு எழுந்து கொண்டான் சிவஞானம்.

அவன் இருந்த இடத்தை விட்டு எழுந்ததுமே தனது வார்த்தைகள் அவனைப் புண்படுத்தி விட்டன. என்பதைக் கமலி புரிந்து கொண்டாள். அவள் அவசர அவசரமாக "நான் அப்படிச் சொல்லேல்லை. அப்பிடி நினைக்கக் கூடி இல்லை", என்றாள்.

"அப்ப ஏன் அப்பிடிச் சொன்னீங்கள்?"

அவள் சில வினாடிகளின் பின்பு, "அது என்னையறியாமல் எனக்குள்ளை உள்ள பாதுகாப்பு உணர்வு காரணமாய் வெளி வந்திருக்கலாம்" என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பயம் இருக்கிற இடத்திலை தான் பாதுகாப்பு உணர்வு வரும், நான் போட்டு வாறன்”, என்று விட்டுப் புறப்பட எத்தனித்தான் சிவஞானம்.

“நில்லுங்கோ” என்று விட்டு எட்டி அவனின் கையைப் பிடித்தாள் கமலி. சிவஞானம் அவளின் முகத்தைப் பார்த்து விட்டு கையை விடுவித்துக் கொண்டான். அவளின் கண்கள் கலங்கி இருந்தன.

“சிவஞானம் இப்ப சொன்னியளே நீங்கள் என்னில அன்பு வைச்சிருக்கிறியள் எண்டு நானும் அப்பிடித்தான் உங்களிலை அன்பு வைச்சிருக்கிறன். ஆனால், அதை நீங்கள் காதல் எண்டு பிழையாய் விளங்கிப் போடக்கூடாது எண்டு தான் பயத்தனான்”, என்றாள் கமலி மென்மையான தளதளத்த குரலில்.

“அது.. காதல்.. நான் உன்னிலை வைச்சிருக்கிறது காதல் தான்”, என்று பலமாகக் கத்த வேண்டும் போல தோன்றிய போதும் சிரமப்பட்டு அதை அடக்கிக் கொண்டு எதுவுமே பேசாமல் மீண்டும் திண்ணையில் அமர்ந்து கொண்டான். அவள் தன்மேல் அன்பு வைத்திருப்பதாகக் கூறியது நெஞ்சில் ஒரு இதமான உணர்வைப் பரவ விட்டது.

அவள் மெல்லக் கேட்டாள் “இனி எப்பாலும் என்னோடை இப்படிக் கோவிப்பியளே?”

மெல்லப் புன்னகைத்தவாறே, “இல்லை”, என்று தலையசைத்தான் சிவஞானம்.

அவன் என்றோ ஒரு நாள் அவள் தன்னை ஏற்றுக் கொள்வாள் என்ற நம்பிக்கையுடன் புறப்பட்டான். கமலியோ தான் சிங்கன் மேல் கொண்டிருக்கும் அன்பு தன்னை எந்தச் சந்தர்ப்பத்திலும் சலனமடைய விடாது எனப் பூரணமாக நம்பினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 44

அன்று பருத்தித்துறை நீதவான் நீதமன்றில் சிங்கன் கொலை வழக்கு தவணை போடப்பட்டிருந்தது.

கமலி ஏற்கனவே பஸ்ஸில் போய் விட்டாள். விதானையார் ஒரு முக்கிய சாட்சியாதலால் அவரும் மணியத்தின் காரைப் பிடித்துக் கொண்டு புறப்பட்டார். சொர்ணமும் கெஞ்சிக் கூத்தாடிக் காரில் ஏறிக்கொண்டாள்.

இப்போது சீதேவிக்கிழவி சொர்ணத்தை அளவுக்கதிகமாக கட்டுப்படுத்துவதில்லை. தேர்தலின் போது ஊர்ச்சனமெல்லாம் அவளைப் பாராட்டியதும் நாடாளுமன்ற உறுப்பினர் அவள் எதிர்காலத்தில் தன் கெட்டித்தனத்தால் வடமராட்சி மண்ணையே பெருமைப்படுத்துவாள். எனப் புகழ்ந்ததும் கிழவியைப் பெருமிதம் கொள்ள வைத்தது.

ஆனாலும் சொர்ணம் மருத்துவம் படிப்பதை மட்டும் அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அந்த விடயத்தில் கிழவியை மசிய வைக்க முடியாதென்பதைப் புரிந்து கொண்ட சொர்ணலிங்கம் அவள் இப்போ எச். எஸ். ஸி படிக்கவும் அது சித்தியடையத் தன்னைப் போல் சட்டம் படிப்பாள் என்றும் கூறி கிழவியைச் சம்மதிக்க வைத்து விட்டான். சீதேவிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டியும், சொர்ணம் தனது பேச்சாற்றல் காரணமாக பொன்னம்பலம் மாதிரிப் புகழ் பெற்ற அப்புக்காத்தாக விடுவான் எனக் கனவு காணத் தொடங்கி விட்டாள்.

தம்பிப்பிள்ளை விதானையாரும் உலக அனுபவம் பெற்றால் தான் அவளின் ஆளுமை உருவாகுமெனக் கருதி அவளுக்குச் சுதந்திரம் கொடுத்து விட்டார்.

விதானையார் அங்கு போய்ச் சேர்ந்த சிறிது நேரத்தில் குடியரசாரும் வந்து விட்டார்.

அவர்கள் போய் இறங்கிய போது பொன்னம்பலத்தின் மனைவி மல்லிகா ஒரு பிள்ளையை மடியில் படுத்திக் கொண்டு, மற்றப் பிள்ளையை அருகில் வைத்துக் கொண்டு விறாந்தையில் அமர்த்தியிருந்தாள். அவளினதும், பிள்ளைகளினதும் கோலம் கண்கொண்டு பார்க்க முடியாதவாறு பரிதாபமாயிருந்தது. குழி விழுந்த கண்களும், இடிந்த கன்னங்களுமாக வறுமை அவர்களின் உடலை வாட்டி இருந்திருப்தைச் சொர்ணத்தால் புரிந்து கொள்ளமுடிந்தது.

அவள் ஒரு பெருமூச்சுடன் உள்ளே சென்று கமலியின் அருகில் வாங்கில் அமர்ந்து கொண்டாள்.

சொர்ணம் மெல்ல, "கமலி, மல்லிகாவைக் கண்டனியே?" எனக்கேட்டாள்.

கமலி அவளின் முகத்தை நிமிர்ந்து பார்த்துவிட்டு, "ம்..!" என்றாள்.

அந்த நேரத்தில் சங்கிலியில் பூட்டிக் கொண்டு வந்த கைதிகளின் விலங்குகளைக் கழற்றி விட்டுக் கூண்டுக்குள்ளே விட்டனர். வெளியிலிருந்து ஓடி வந்த மல்லிகாவும், பிள்ளைகளும் கதறி அழ ஆரம்பித்து விட்டனர். கூண்டில் கைகளுக்கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையை விட்டு பிள்ளைகளின்ரை தலையைத் தடவிய பொன்னம்பலம் விம்மியழ ஆரம்பித்தான்.

கமலி ஒரு விரக்தி கலந்த குரலில், "தான் இல்லையெண்டதாலை பெண்சாதி பிள்ளையள் படுற பாட்டைத் தாங்கேலாமல் கண்ணீர் விடுறவங்கள். வேறு பொம்பிளையளின்ரை புருஷனைக் கொலை செய்து இல்லாமல் செய்யேக்கை என்ன நினைக்கிறவங்கள்?", எனக் கேட்டாள். கமலியின் வார்த்தைகளில் நியாயம் இருந்த போதிலும் மல்லிகாவும் பிள்ளைகளும் அலறியமையைச் சொர்ணத்தால் தாங்க முடியவில்லை. சிறைக்காவலர்கள் வந்து, "போ..போ..", என அவர்களை விரட்டிக் கலைத்தனர்.

நீதிபதியின் வரவு அறிவிக்கப்படவே அனைவரும் எழுந்து நின்றனர். நீதிபதி அமர்ந்ததும் வழக்குகள் அழைக்கப்பட்டுத் தவணை போடப்பட்டன. பதினொரு மணியளவில் சிங்கனின் வழக்கு எடுக்கப்பட்டது.

நீதிபதி எதையோ எழுதி விட்டு, அந்த வழக்கு மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்படவுள்ளதாகவும், விசாரணை அழைப்பாணை அறிவிக்கப்படுமெனவும் அறிவித்தார்.

குடியரசாரும், விதானையாரும் வெளியே போகவே, கமலியும் சொர்ணமும் கூட்ட விறாந்தைக்கு வந்தனர்.

விதானையார் சொர்ணத்திடம் "பிள்ளை நீயும் கமலியும் மணியத்தின்ரை காரிலை போங்கோ... நான் குடியரசாரேடை வாறன்", என்று விட்டு குடியரசாரை நோக்கிப் போனார்.

காரில் ஏறிப்போன கமலி, "கமலி", என்ற குரல் கேட்டு திரும்பிப் பார்த்தாள். பொன்னம்பலத்தின் மனைவி காதில் தோடு கூட இல்லாமல் பரிதாபக்கோலத்தில் நின்றிருந்தாள். அருகில் நின்ற அவளின் இரு பிள்ளைகளிலும் வறுமை அப்பட்டமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பட்டு நின்றது. அவளால் கண்களில் வடிந்த கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

கமலி எதுவுமே பேசவில்லை.

பொன்னம்பலத்தின் மனைவி, "உன்ரை தாலியை என்ரை புருசன் அறுத்தான்... என்ரை தாலியை...", என்று விட்டு விம்மி விம்மி அழத்துவங்கினாள்.

"ஏய் என்ன இது ஆக்களல்லே பாக்குதுகள்", என மெல்லிய குரலில் கடிந்து கொண்டாள் சொர்ணம்.

அவள் அதைப்பொருட்படுத்தாமல் அழுதவாறே, "இந்தப் பிள்ளையளின்ர முகத்தைப்பார், நான் தனிய இதுகளை வைச்சுக்கொண்டு என்ன செய்வன்... கிணறு குளம் தான் தேட வேணும்", என்றாள்.

"அதுக்கு நான் என்ன செய்ய...?"

"நீ தான் என்ரை புருசனுக்கு உயிர்ப் பிச்சை தரவேணும்", என்று விட்டு இரு கரங்களையும் கூப்பினாள் அவள், கமலி ஒருகணம் தடுமாறிப் போனாள்.

பின், "என்னை ஒண்டும் கேளாதை", என்று விட்டு காரில் ஏறிக்கொண்டாள். சொர்ணமும் ஏறவே கார் புறப்பட்டது. பொன்னம்பலத்தின் மனைவி பரிதாபமாக போய்க் கொண்டிருக்கும் காரைப் பார்த்தபடி நின்றாள்.

சிறிது தூரம் சென்ற பின்பு சொர்ணம், "என்ன கமலி கடுமையாய் யோசிக்கிறாய்..?", எனக் கேட்டாள்.

"நான் முதலே பொன்னம்பலம் தூக்குக்கு போகக் கூடாதெண்டுதான் நினைச்சனான்... ஏனெண்டால்...", என்று விட்டு இடை நிறுத்தினாள் கமலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொர்ணம் வியப்புடன், "என்ன, உண்மையாயோ...?", எனக் கேட்டாள்.

"ஓ... அவன் வெளியிலை வந்த பிறகு அவனை என்ரை கையாலையே வெட்டிக்கொல்லவேணும் என்று தான் நினைச்சிருந்தனான்", என்றாள் கமலி.

"நீ பொல்லாத ஆள் தான்"

"இல்லை அது சிங்கனை இழந்த வலி"

சொர்ணம் சில வினாடிகள் மௌனமாக சிரித்து விட்டு, "பிறகு பொன்னம்பலம் பெண்சாதிக்கு அவனை இழந்த வலி இருக்கும் தானே...", எனக் கேட்டாள்.

கமலி ஒரு பெரு மூச்சுடன், "அவன் செய்த குற்றத்துக்கு அவள் தண்டனை அனுபவிக்கிறது நியாயமில்லைத்தான். ஆனால், சிங்கனை நினைக்க எல்லா நியாயங்களும் மறந்து போகுது", என்றாள்.

அதன் பின்பு அவர்கள் இருவரும் அதைப்பற்றி எதுவும் பேசவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 45

நீதிமன்றத்திலிருந்து வந்த நேரம் தொடக்கம் கமலியின் மனம் எல்லையற்ற குழப்பத்தில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது. விறாந்தையில் மல்லிகாவும் பிள்ளைகளும் அமர்ந்திருந்த கோலம், பொன்னம்பலத்தைக் கண்டதும் அவர்கள் கதறியமை, பொன்னம்பலம் விம்மியபடி சிறைக்கூண்டுக் கம்பிகளுக்கால் கையை விட்டு பிள்ளைகளின் தலைகளை வருடியமை, மல்லிகா தன் புருசனுக்கு உயிர்ப் பிச்சை கேட்டுக் கும்பிட்டமை ஆகியன அவளைத் தடுமாற வைத்து விட்டன. தான் சிங்கனை இழந்து தவிப்பது போன்று மல்லிகாவும் வேதனைப்பட வேண்டுமோ என்ற கேள்வி அவளுள் மீண்டும், மீண்டும் எழுந்து அவளைக் குடைந்து கொண்டிருந்தது.

எதற்கும் அது தொடர்பாக கனகரத்தினத்துடனும், சிவஞானத்துடனும் கலந்தாலோசிப்பது நல்லதென அவள் முடிவெடுத்த போது சொல்லி வைத்தாற்போல் அவர்கள் இருவரும் படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்தனர்.

ஓடிப்போய் அவர்களை வரவேற்ற கமலி, "இப்ப தான் ஒரு முக்கிய விஷயமாய் உங்களைச் சந்திக்க நினைக்க நீங்களே வந்திட்டியள்", என்று விட்டு விறாந்தைக்கு அவர்களை அழைத்துப் போனாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நாங்களும் உங்களட்டை முக்கிய விஷயம் கதைக்கத் தான் வந்தனாங்கள்”, என்று விட்டுக் கனகரத்தினம் கதிரையில் அமர்ந்தான்”

“பொறுங்கோ.. அடுப்பிலை தண்ணி வைச்சிட்டு ஓடிவாறன்”, என்று விட்டுக் கமலி உள்ளே போக எத்தனிக்க கனகரத்தினம், “இப்ப தேத்தண்ணி வேண்டாம். நீங்கள் உங்கடை விஷயத்தைச் சொல்லுங்கோ”, என்றான்.

கமலி நீதிமன்றத்தில் நடந்தவற்றைச் சொல்லி விட்டு, நான் வழக்கிலை சாட்சி சொல்லப் போகாமல் விடுவமெண்டு யோசிக்கிறன்”, என்றாள்.

அந்த வார்த்தைகளை அவர்களால் நம்ப முடியவில்லை. பொன்னம்பலம் விடுதலையாகி வந்தாலும் அவனை வெட்டக் கத்தி தேடும் கமலி, மல்லிகாவின் கண்ணீருடன் இப்படி ஒரு முடிவுக்கு வந்தமை அவர்களுக்குப் பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்தது.

அவளுக்குள் இன்னொரு கமலி இருப்பதைச் சிவஞானம் உணர்ந்து கொண்டான்.

“கோட்டுக்குப் போகாட்டில் உங்களைப் பிடித்து உள்ளை போட்டிடுவங்கள்”, என்றான் கனகரத்தினம்.

“அப்ப என்ன செய்யுறது?”

“விதானையாரோடை கதைச்சுப் பாப்பம்.. அவரும் தன்ரை குடிமகன் ஒருத்தன் தூக்கிலை தொங்கிறதை விரும்ப மாட்டார் எண்டு நினைக்கிறன்”, என்ற கனகரத்தினம், “ஆனால் சிங்கன்ரை சாவு வந்து ஒரு சமூகப்பிரச்சனையோடை சம்பந்தப்பட்டது. அந்தப் பிரச்சினையை ஒரு பக்கமாய் விட்டிட்டுப் பொன்னம்பலத்தை மன்னிக்க முடியாது”, என அழுத்தமாகக் கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கொண்டும் விளங்கேல்லை", என்றாள் கமலி.

"பொன்னம்பலம் எவ்வளவு நட்டாமுட்டியெண்டாலும் ஆலடிவெட்டைச் சனம் தங்கடை ஒருத்தன் தூக்கிலை தொங்கிறதை விரும்பாது, அங்கையுள்ள நாலு பெரியவையை உங்களட்டைக் கூட்டிக் கொண்டு வாறன்! அவை கேட்கிறதாலை பொன்னம்பலத்துக்குப் பிரச்சனை வராத மாதிரிச் சாட்சி சொல்ல ஒப்புக் கொள்ளுங்கோ"

"ஏன் இதெல்லாம்?"

"இதாலை ஆலடிவெட்டைக்கும், மணியாறன்மூலைக்கும் உள்ளூர இருக்கும் பகை மாறி நல்ல உறவு உண்டாகும். சாதிப்பிரச்சனையை ஒழிக்கிறதிலை அது நல்ல பங்களிக்கும்"

சில வினாடிகள் மௌனத்தின் பின், "நீங்கள் எது செய்தாலும் நன்மைக்குத் தான் செய்வியள்.. நான் எதுக்கும் சம்மதம்", என்ற கமலி, "நீங்கள் வந்த விஷயத்தைச் சொல்லுங்கோவன்", எனக்கேட்டாள்.

சிறுபான்மைத் தமிழர் மகாசபையால் இமையாணனில் தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கென ஒரு பாடசாலை ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், அதில அதே சமூகங்களைச் சேர்ந்த படித்த இளைஞர் யுவதிகளே ஆசிரியர்களாகப் பணியாற்றுவார்கள் என்றும், ஆறுமாதம் வரைச் சம்பளமின்றியே படிப்பிக்க வேண்டுமெனவும், அதன் பின் அரச மானியம் பெற்று மாதச்சம்பளம் வழங்க நாடாளுமன்ற உறுப்பினர் ஏற்பாடு செய்துள்ளார் என்பதையும் கனகரத்தினம் மகிழ்ச்சியுடன் தெரிவித்தான்.

"அப்ப கட்டிடம்?", எனக் கேட்டாள் கமலி

தற்சமயம் ஓலையால் வேயப்பட்ட இரு மண்டபங்கள் அமைக்கப்படுமெனவும், நிலத்துக்கு சீமெந்து போட்டு அரைச்சுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்க சீமெந்து கூட்டுத்தாபனத் தொழிற்சங்கம் தமது நிதியில் சீமெந்து வழங்குமெனவும், ஏனைய செலவுகளைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை மக்களிடம் சேகரித்த பணத்தில் மேற்கொள்ளும் எனவும் தெரிவித்த கனகரத்தினம் சிவஞானத்திடம், "மற்றதை நீ சொல்லன்" என்றான்.

சிவஞானம் ஒரு மெல்லிய சிரிப்புடன், "அங்கை படிப்பிக்கிற ரீச்சரிலை நீங்களும் ஒரு ஆள் எண்டு எம். பி கண்டிப்பாய் சொல்லிப் போட்டார்", என்றான்.

அதிர்ச்சியடைந்த கமலி, "உண்மையாயோ...?"

"தலையிலையடித்துச் சத்தியம் பண்ணுறதே", எனக் கேலியாகக் கேட்டான் சிவஞானம்.

சற்று அமைதியடைந்த கமலி, "அளவு கணக்கில்லாத சந்தோசத்தாலை நெஞ்சை நிரப்பிப் போட்டியள். அது போதும்", என்று விட்டு அவனை வாஞ்சையுடன் பார்த்தாள் கமலி.

பின்பு, "இந்தச் சந்தோசச் செய்தியைச் சொன்னதுக்காவது தேத்தண்ணியைக் குடிச்சிட்டுப் போங்கோ", என்றவள் உள்ளே சென்று நாலு பருத்தித்துறை வடையைக் கொண்டு வந்து அவர்களிடம் கொடுத்து விட்டு, "சாப்பிடுங்கோ.. நேற்று அப்பு வேண்டி வந்தவர்", என்றாள்.

இருவரும் தேநீரை வாங்கிக் குடித்து விட்டு நேராகவே விதானையார் வீடு நோக்கி சென்றனர்.

அவர்கள் கமலியின் மனமாற்றத்தைப் பற்றிச் சொல்லிய போது விதானையார் சற்று யோசித்து விட்டு, "சாட்சியின் வலு இறுக்கம். உடைக்கிறது கொஞ்சம் கஷ்டம்", என்றார். அவர்களின் பரம்பரையில் எவரும் தங்கள் குடிமக்களைப் பிறர் தண்டிக்க அனுமதித்தில்லை. எனவே அவரும் பொன்னம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பினால்தான் தங்கள் மரபு பாதுகாக்கப்படும் என கருதினாலும் அவர் அதை வெளியில் சொல்லவிரும்பவில்லை.

"பிரதான சாட்சி நீங்கள் தானே!"

"அது சரி! ஆனால் துவக்கு பொன்னம்பலம் வீட்டுப் பரணிலையிருந்து எடுத்தது ஒரு பெலப்பான ஆதாரம்", என்ற விதானையார், "எதுக்கும் குடியரசாரோடை போய்க் கதையுங்கோ அவர் ஏதாவது வழி கண்டு பிடிப்பார்", என ஆலோசனை கூறினார்.

விடைபெற்றுக் கொண்டு சென்ற இருவரும் அடுத்த நாள் காலையிலேயே குடியரசாரிடம் சென்று முழு விஷயங் களையும் சொல்லி முடித்தனர். சமூகங்களுக்கிடையே சமத்துவத்தையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்த இளைஞர்கள் செய்யும் முயற்சி அவருக்கு நன்றாகப் பிடித்து விட்டது. அவர், "நீங்கள் ஒண்டுக்கும் யோசியாதேங்கோ.. நான் அப்புக்காத்து ஜெயசிங்கத்தோடை கதைச்சு நல்ல ஏற்பாடு செய்யுறன்!", எனச்சொல்லி அவர்களை அனுப்பி வைத்தார்.

அடுத்த நாள் மாலை பொன்னார், முருகர், தங்கராசா, கந்தவனம் உட்பட ஆலடிவெட்டைப் பெரியவர்களையெல்லாம் சிவஞானமும், கனகரத்தினமும் கூட்டி விட்டானர்.

கனகரத்தினம் கூட்டத்தைத் தொடங்கி வாசிகசாலை தொடங்கிய பின்பு கிராமத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்களை விளங்கி விட்டு இடை நிறுத்தினான். பின் அவன் ஒரு முறை எல்லாரையும் பார்த்து விட்டு, "பொன்னம்பலம் குழப்படிக்காரன் தான்! ஆனால் அவர் தூக்கிலை தொங்கி சாகிறதும் மல்லிகாவும் பிள்ளையளும் தெருவிலை நிக்கிறதும் உங்களுக்கு விருப்பமே?", எனக் கேட்டான்.

எல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர். பின் முருகர், "என்னண்டு அவன் எங்கடை இரத்தமல்லே! ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் என்ன செய்யுறது? அது கோடு, கச்சேரி விஷயம்'', என்றார்.

''வழி இருக்குது! நீங்கள் நினைச்சால் செய்யலாம்'', என்றான் சிவஞானம் அழுத்தமாக.

கந்தவனக்குஞ்சி. ''என்னண்டு?'', எனப் படபடத்தார்.

''சாட்சியளை மடக்க வேணும்... கமலியும் விதானையாரும் முக்கிய சாட்சியள்''

''அவள் பொன்னுக்குட்டியின்ரை பெட்டை கட்டின புருசனை மூண்டாம் நாள் பறிகுடுத்தவள். அவள் ஓமெண்டுவாளே?'', எனக் கேட்டான் தங்கராசா.

''நீங்கள் நாலு பெரிய மனுஷர் போய்க் கதைச்சால் அவள் கட்டாயம் ஓமெண்டுவாள்'',

''நல்ல கதை, எளியன் சாதியின்ரை முத்தத்திலை போய் நிண்டு பல்லைக் காட்டவோ?'', பொன்னர் சீறினார்.

சிவஞானமும் உணர்ச்சிவசப்பட்டு விட்டான். ''உந்தச்சாதித் தடிப்பாலை தான் பொன்னம்பலம் சாவின்ரை வாசலிலை நிக்குறான். உங்கடை தடிப்பு அவனைச் சாவுக்கையே தள்ளி விடட்டும்!'' சில நிமிடங்கள் மயான அமைதி நிலவியது.

''நான் பொன்னுக்குட்டியன்ரை பெட்டையோடை போய்க் கதைக்கத் தான் போறன்.. ஆர் என்னோடை வாறியள்'', எனக் கேட்டார் கந்தவனக்குஞ்சி.

சிறிது நேரத்தில் பெரும்பான்மையானவர் பேசத் தயாரென்று கூறி விட்டனர். எவரும் எதிர்க்கவில்லை.

அடுத்த நாள் விதானையாரும் மணியாறன்மூலைக்குச் செல்வாரென முடிவெடுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 46

ஜெயசிங்கம் கொழும்பின் பிரபல சட்டத்தரணியான குமாரகுலத்தை ஏற்பாடு செய்திருந்தார். அவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவராக இருந்த போதிலும் கொழும்பிலேயே வசித்துக் கொழும்பிலேயே தொழில் செய்து வந்தார்.

அவர் குடியரசாரிடம் வந்து சேர்ந்ததும் சிங்கன் கொலை வழக்கின் முதல் முறைப்பாடு, சாட்சியங்களின் முதல் அறிக்கைகள் என்பவற்றை அவர் ஆராய்ந்து பின்பு இதில் சம்பந்தப்பட்ட அனைவரையும் சந்திக்க ஏற்பாடு செய்யும் படி கேட்டுக்கொண்டார். அதற்கு முன்பாக குடியரசார் கனகரத்தினத்தையும், சிவஞானத்தையும் அழைத்து அவருக்கு முழுச் சம்பவங்களையும் விபரிக்க வைத்திருந்தால் அவர்கள் சம்பவம் இடம் பெற்ற இடத்தையும் குமாரகுலத்துக்கும் கூட்டிச் சென்று காட்டினார்.

அடுத்த நாள் மாலை விதானையார் வீட்டில் விதானையார், கமலி, மல்லிகா, சிவஞானம், கனகரத்தினம், கந்தவனக்குஞ்சி ஆகியோர் கூடியிருந்த வேளையில் குமாரகுலமும், குடியரசாரும் வந்திறங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரகுலம் வழக்கு பற்றிய சில விளக்கங்களைக் கொடுத்து விட்டு, "கொலைக்குப் பாவிக்கப்பட்ட ஆயுதம் பொன்னம்பலம் வீட்டு சமையலறைப் பறணிலையிருந்து தான் தான் மீட்கப்பட்டிருக்குது. ஆகையால் கொலைக் குற்றத்திலையிருந்து விடுறது சாத்தியமில்லை", என்று விட்டு நிறுத்தினார்.

கந்தவனக்குஞ்சி, "இப்பிடியெண்டால் தூக்குத் தண்டனையிலையிருந்து தப்ப ஏலாதே?"

"அப்பிடியில்லை.. இந்த வழக்கை வேறு பக்கம் திசை திருப்ப வேணும். கைமோசக் கொலை எண்டு வழக்கைக் கொண்டு போகவேணும். அப்பிடியெண்டால் ஒரு ஐந்து வருசத்துக்கு உட்பட்ட மறியல் தீரும். சிலவேளை அது ஒத்திவைக்கப்பட்ட சிறையாய்த் தீர்ப்பளிக்கவும் வாய்ப்பு இருக்கு"

"ஐயா, எப்படியெண்டாலும் உயிரைக் காப்பாத்தினாலே போதும்", என்று விட்டு மல்லிகா விம்மத் தொடங்கினாள்.

"பயப்பிடாதையுங்கோ.. அதை நான் செய்து தாறன்.. ஆனால் கொலை நடந்த இடத்துக்கும் பக்கத்திலை உள்ள தோட்டக்காறன் ஒரு சாட்சி சொல்ல வேணும்"

"அது பிரச்சனையில்லை.. அதிலை தங்கராசண்ணை தானே தோட்டம் செய்யுறார்... அவர் வருவார்", என்றான் கனகரத்தினம்.

"நான் நீதவானட்டை மனுக்குடுத்து அவரை எதிரி தரப்புச் சாட்சியாய்ப் பதிஞ்சு விடுவன். அவர் கோட்டிலை தன்ரை பயிர்களுக்கு முயல்களாலை அழிவெண்டும், அதுகளை வேட்டையாடச் சொல்லிப் பொன்னம்பலத்தைத் தான் கேட்டதாகவும் சாட்சி சொன்னால் போதும்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு தான் குறுக்குக் கேள்விகள் கேட்கும் போது சாட்சிகள் எப்படிப் பதில் சொல்ல வேண்டும் என்பதையும் அவர் தெளிவாக விளங்கப்படுத்தினார்.

எல்லாம் முடிய மல்லிகா கமலியிடம் வந்து கண் கலங்கியவாறே, "பிள்ளை. எங்களைக் கைவிட்டிடாதை", என்றாள்.

"பொன்னம்பலத்தை என்ரை கையாலை வெட்டிக் கொல்ல வேணுமெண்டு தான் நினைச்சிருந்தன். ஆனால் உங்களையும், பிள்ளையளையும் பாத்த பிறகு...", எனக் கூறி நிறுத்தி விட்டு, "என்ரை மனதை மாத்திட்டன்", என்றாள்.'

மல்லிகா கையெடுத்துக் கும்பிட்டாள். கமலி, "என்னக்கா நீங்கள்?", என்று கையைப் பிடித்து விலக்கி விட்டாள்.

மேல் நீதிமன்றில் முதலாவது தவணையில் எதிரிகள் தரப்பில் குமாரகுலம் ஆஜராகி நீதிபதிக்கு மனுக்கொடுத்து தங்கராசாவை எதிரிகள் தரப்பு சாட்சியாகப் பதிவு செய்தார். நீதிபதி 14 நாட்கள் தவணை போட்டு வழக்கு தொடர்ந்து இடம் பெறும் எனத் தெரிவித்தார்.

இரண்டாவது தவணையின் போது மேற்கொள்ளப்பட்ட குறுக்கு விசாரணையில் பொன்னம்பலத்துடன் தனக்கோ சிங்கனுக்கோ எவ்வித கோபதாபமோ வெறுப்போ இல்லையென்றும் தான் சத்தம் கேட்டு ஓடிப்போனபோது சிங்கனின் பிரேதத்தை விட வேறு யாரையும் காணவில்லையெனவும் தெரிவித்தாள். விதானையாரும் தனது சாட்சியில் பொன்னம்பலத்துக்கும், சிங்கனுக்குமிடையே பகை இருந்ததாகத் தான் அறியவில்லையெனவும், அப்படியான முறைப்பாடு எதுவும் தன்னால் பதிவு செய்யப்படவில்லையெனவும், சுட்டிபுரம் கோவில் இவர்களைக் கண்ட போது இவர்களின் கோலம் தன்னைச் சந்தேகப்பட வைத்தது எனவும் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மருத்துவர், இரசாயனப்பகுப்பாளர் ஆகியோர் வழங்கிய சாட்சியில் பொன்னம்பலம் வீட்டில் கைப்பற்றப்பட்ட துப்பாக்கியே கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதென்பதை ஆதாரபூர்வமாக முன் வைத்தனர்.

இறுதியில் தங்கராசா முயல்களால் தொடர்ந்து தனது பயிர்கள் அழிக்கப்பட்டதாகவும், அவற்றை வேட்டையாடும் படி தான் பொன்னம்பலத்திடம் கேட்டதாகவும் நீதிமன்றில் தெரிவித்தான்.

குமாரகுலம் தனது தொகுப்புரையில் இது ஒரு திட்டமிட்ட கொலை அல்லவெனவும், முயல் வேட்டைக்குப் போன போது பற்றைக்குள்ளால் தெரிந்த சிங்கனின் வெள்ளை உடுப்பின் ஒரு பகுதியை முயல் என நினைத்து வெடி வைத்ததாகவும், இது ஒரு கைமோசக் கொலை எனவும் எதிரிகளை எச்சரித்து விடுதலை செய்யும் படியும் கேட்டுக் கொண்டார். நீதிபதி தீர்ப்பை அடுத்த தவணைக்கு ஒத்தி வைத்தார்.

அடுத்த தவணையின் போது இடம் பெற்ற கொலை ஒரு கைமோசக் கொலை என்பது தெளிவாகியுள்ளதாகத் தெரிவித்த நீதிபதி தனது தீர்ப்பில் பொன்னம்பலம், இராமலிங்கம், சின்னத்தம்பி ஆகியோரைக் கடுமையாக எச்சரித்ததுடன் 2 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 10 வருடச் சிறைத் தண்டனை வழங்கி விடுதலை செய்தார். துப்பாக்கியைக் கையாண்ட மயில்வாகனத்துக்கு 2 வருடச் சிறைதண்டனையும் வழங்கினார்.

கமலி தனது சாட்சியம் முடிந்ததும் பஸ்ஸில் ஏறி வீட்டுக்கு வந்து விட்டாள். ஏனெனில் சிங்கனைக் கொன்ற பொன்னம்பலம் மகிழ்ச்சியுடன் வெளிவருவதைத் தன்னால் பார்த்துப் பொறுக்க முடியாதென்பது அவளுக்குத் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கெனவே விதானையாரும், கனகரத்தினம், சிவஞானம் ஆகியோரும் வெடிகொழுத்தி சந்தோசம் கொண்டாடக்கூடாது எனக் கண்டிப்பாகக் கட்டளையிட்டிருந்த படியால் அனைவரும் அமைதியாக வந்து சேர்ந்தனர்.

அடுத்த நாள் மாலை பொன்னம்பலமும், மனைவியும், பிள்ளைகளும் வந்திருந்தனர். பொன்னம்பலம், "எப்படி அவளின்ரை முகத்திலை முழிக்கிறது", எனக் கூறித்தயங்கிய போதும் மல்லிகா வலியுறுத்தி அழைத்து வந்தாள்.

அவர்கள் படலையைத்திறந்து உள்ளே வந்த போதே கமலி கண்டு விட்டு, வீட்டுக்குள் போய்க் கதவைச் சாத்திக் கொண்டாள்.

மல்லிகா அப்படி நடக்குமென எதிர்பார்க்கவில்லை. எனினும் அவள் கதவருகே போய், "கமலி, கமலி கதவைத்திற!" எனக் கெஞ்சினாள்.

"உவனை முதல் படலைக்கு வெளியே போகச் சொல்லுங்கோ! திறக்கிறன்", எனக் கமலி கத்தினாள்.

நிலைமையைப் புரிந்து கொண்ட மல்லிகா பொன்னம்பலத்தைச் சற்று நேரம் வெளியே போய் நிற்கும் படி சொல்லி விட்டு, "கமலி. அவர் போட்டார்... திறவுங்கோ!", என்றாள்.

கமலி கதவை மெல்லத் திறந்து பொன்னம்பலம் இல்லையென பார்த்து உறுதி செய்த பின் வெளியே வந்தாள்.

"கமலி எனக்காகவும், பிள்ளையளுக்காகவும் அவருக்கு உயிர்ப் பிச்சை குடுத்தியள்.. அவர் தான் செய்த குற்றத்தை உணர்ந்து மன்னிப்புக் கேட்க வந்திருக்கிறார். நீங்கள் மன்னிக்காட்டிலும், மன்னிப்பு கேட்கவாவது அனுமதிக்கக் கூடாதே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஐயோ... அவன் என்ரை முகத்திலையே முழிக்க வேண்டாம்”, எனக் கத்தினாள் கமலி.

“சரி.. நீங்கள் அவரின்ரை முகத்தைப் பார்க்க வேண்டாம். பதில் சொல்ல வேண்டாம். மன்னிப்புக் கேட்க மட்டும் அனுமதியுங்கோ. அவருக்காக இல்லை. இந்தப் பிள்ளையளுக்காக! அவர் செய்த பாவம் இந்தப் பிள்ளையளைச் சேராமல் இருக்க”, என்று விட்டு விம்மினாள் மல்லிகா. சில நிமிடங்கள் கண்களை மூடி நெற்றியை அமுக்கிப் பிடித்தபடி யோசித்த கமலி, “சரி. வரச்சொல்லுங்கோ?”, என்றாள்.

உள்ளே வந்த பொன்னம்பலம் முற்றத்தில் கண்களை மூடி நெற்றியைக் கையால் பிடித்தபடி நின்ற கமலியின் காலில் நெடுஞ்சான் கிடையாக விழுந்த பொன்னம்பலம், “என்னை மன்னிச்சிடு பிள்ளை!”, எனக் கத்த ஆரம்பித்தான்.

திடுக்கிட்டு கண்களைத் திறந்த கமலி, “என்ன இது? எழும்புங்கோ எழும்புங்கோ...”, எனப்படபடத்தாள்.

“என்னை மன்னிச்சிட்டன் எண்டு சொல்லு பிள்ளை!” எனக் கெஞ்சினான் பொன்னம்பலம்.

வேறு வழியின்றி கமலி, “சரி.. மன்னிச்சிட்டன், எழும்புங்கோ”, என அனுங்கினாள்.

பொன்னம்பலம் கையைக் கூப்பியவாறே எழுந்தான்.

கமலி ஓடிப்போய் விறாந்தையில் தொங்கிய சிங்கனின் படத்தில் முகத்தை வைத்தவாறு, “உன்னைக் கொலை செய்தவனை நான் மன்னிச்சிட்டன்.. நீ என்னை மன்னிப்பியே.. மன்னிப்பியே!”, எனக் கத்த ஆரம்பித்தாள்.

மல்லிகா போய் மெல்ல அவளின் தோளை அணைத்து, “கமலி! அவன் தெய்வமாகிவிட்டான்.. தெய்வங்கள் மனுஷரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமில்லை, மிருகங்களையும் மன்னிக்கும்.. கவலைப்படாதே.. வா", என அவளைச் சமாதானப்படுத்தி வெளியே அழைத்து வந்தாள்.

மெல்ல மெல்ல அழுகை குறைந்து நின்ற போது, "விறாந்தையிலை இருங்கோ.. தேத்தண்ணி ஊத்திக் கொண்டு வாறன்", என்று விட்டு உள்பக்கமாகப் போனாள் கமலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 47

அடுத்து வந்த ஆறேழு மாதங்களில் பல அதிரடியான மாற்றங்கள் அமைதியான முறையில் நடந்தேறிவிட்டன.

இமையாணனில் நிலத்துக்குச் சீமேந்து போடப்பட்டு, அரைச்சுவர் வைக்கப்பட்டு ஓலையால் வேயப்பட்ட இரு மண்டபங்களைக் கொண்ட பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்டு விட்டது. அதில் அதிபர் முதல் ஆசிரியர்கள் வரை அனைவருமே தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த படித்த இளைஞர் யுவதிகளே பணியாற்றினர். கமலியும் அதில் ஒரு ஆசிரியையாக நியமிக்கப் பட்டாள். கமலி ஏற்கனவே மணியாறன் மூலை வாசிகசாலையில் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து அனுபவம் இருந்த காரணத்தால் அவளுக்கு ஆசிரியத் தொழில் மிகவும் மகிழ்ச்சியாகவே அமைந்திருந்தது.

அப்பாடசாலைத் திறப்பு விழாவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கல்வியமைச்சரை அழைத்திருந்தார். அவர் வரும் போது தமிழரசுக்கட்சியினர் வீதியோரமாக நின்று கறுப்புக் கொடி காட்டினார்கள். அவர்களைப் பொலிசார் விரட்ட முயன்ற போது நாடாளுமன்ற உறுப்பினர் தடுத்து விட்டார். எவருமே அவர்களைப் பொருட்படுத்தவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியாறன் மூலை, ஆலடிவெட்டை, இமையாணன், உடுப்பிட்டி எனப்பல பகுதி மக்களும் கலந்து கொண்ட நிலையில் திறப்பு விழா சிறப்பாக இடம் பெற்றது. பொன்னம்பலம், கனகரத்தினம், சிவஞானம் ஆகியோருடன் சேர்ந்து விழா ஏற்பாடுகளில் முன்னின்று செயற்பட்டான். விதானையாருக்கும் உள்ளூர மனமில்லாவிட்டாலும் தனது உரிமையை விட்டுக் கொடுக்கக் கூடாது என்பதற்காக விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துத் தெரிவித்தார்.

கமலி ஆசிரியையான பின்பு அவள் ஒரு புதிய உலகத்துக்குள் புகுந்து கொண்டதாகவே உணர்ந்தாள். மாணவர்களுடன் பழகுவது ஒரு இனிய அனுபவமாக இருந்ததுடன், தன் பணிமூலம் ஒரு ஒடுக்கப்பட்டிருந்த மக்கள் மத்தியில் ஒரு கல்விச் சமூகத்கை உருவாக்குவதாக நினைத்த போது ஒரு பெருமிதம் அவள் நெஞ்சை நிறைத்தது. அவள் மணியாறன் மூலை குடியிருப்புப் பகுதியிலிருந்து புறப்பட்டு வெள்ளையர் மதவடியில் அந்திரான் வீதியைக் கடந்து, வடலிக்காணியொன்றின் அருகில் இருந்த வெள்ளவாய்க்காலால் நடந்து, ஒரு சிறு கலட்டிக் காணியைத தாண்டியதும் ஒரு தோட்டங்கள் அமைந்துள்ள செம்மண்காணி வரும். அங்கு தான் சிவஞானத்தின் தோட்டமும் அமைந்திருந்தது. அவள் பாடசாலைக்குப் போகும் போதும் வரும் போதும் அநேகமாக அவனைச் சந்திப்பதுண்டு அவள் ஒரு புன்னகையால் அவனிடம் விடைபெறுவாள். திரும்பி வரும் போது சில சமயங்களில் அவன் சில மரக்கறி வகைகளைக் கொடுத்துவிடுவதுண்டு.

அவள் ஆரம்பத்தில் அவை சாதாரண சந்திப்புக்கள எனக் கருதிய போதும், அவன் வராத நாட்களில் அவள் மனதில் எழும் ஒருவிதமான தவிப்பை உணர்ந்த போது தானும் அப்படியான சந்திப்புகளை எதிர்பார்ப்பதைப் புரிந்து கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மனதைச் சலனமடைய விடக்கூடாதென அவள் தன்னைத் தானே எச்சரிப்பதுண்டு.

விளக்கமறியலிலிருந்து வெளிவந்த பின்பு பொன்னப்பலம் ஒரு புதிய மனிதனாகவே மாறி விட்டான். குடி, சண்டித்தனம் என அவனிடமிருந்த சகல தீய பழக்கங்களையும் கைவிட்டு விட்டான். அதிகாலையில் எழுந்து 'புறோக்கர்' தொழிலை முடித்து விட்டு, சந்தைக்குப் போய் சாமான் வாங்குவது, பிள்ளைகளைப் பள்ளிக் கூடத்திலிருந்து ஏற்றி வருவது என அவன் பொறுப்புள்ள குடும்பஸ்தனாக மாறி விட்டான். அது மட்டுமின்றி ஊரில நடக்கும் செத்த வீடு, கலியாண வீடு போன்றவற்றை முன்னின்று நடத்துவதில் தீவிர அக்கறை காட்ட ஆரம்பித்தான்.

கனகரத்தினமும் இறுதிப் பரீட்சை எழுதி முடிந்து விட்டு ஊருக்கு வந்து சேர்ந்து விட்டான். வாசிகசாலைக்குப் பத்திரிகைகள் எடுத்துப்போடுவது, மாணவர்களுக்கு இரவு வேளைகளில் பாடம் சொல்லிக் கொடுப்பது, விளையாட்டுக் கழகத்தில் கிரிக்கட், கைப்பந்தாட்டம், கால்ப்பந்தாட்டம் என்பவற்றுக்கு அணிகளை உருவாக்கல் போன்ற பல விடயங்களை உருவாக்குவதில் கனகரத்தினம் ஏனைய இளைஞர்களை திரட்டி பல புதிய முயற்சிகளை ஆரம்பித்தான். பொன்னம்பலமும் இரவு பகல் பாராது ஆலடிவெட்டை இளைஞர்களுடன் இணைந்து செயற்ப்பட்டான்.

இடையிடையே மல்லிகாவும், பொன்னம்பலமும் கமலியிடம் சென்று வருவதுண்டு. இப்போதெல்லாம் அவன் பனங்கிழங்கோ, பலாப்பழமோ அல்லது மாம்பழமோ என ஏதாவது கொண்டு போவான். ஆரம்பத்தில் கமலியால அவற்றை ஏற்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் கமலி மல்லிகாவிடம் நேரடியாகவே, "அக்கா! என்ரை புருஷனைக் கொண்ட கையாலை தாறதை நான் என்னண்டு வாங்கிறது. தயவு செய்து கொண்டு வரவேண்டாமெண்டு சொல்லுங்கோ!", என்று விட்டாள்.

மல்லிகா அமைதியாகவே, "கமலி அவர் அதுகளை உனக்காக கொண்டு வரயில்லை. தான் செய்த பாவத்தைக் கழுவிறார். அனுமதிக்கக்கூடாதே?", எனக் கேட்டாள்.

கமலி அதன் பிறகு எதுவுமே பேசவில்லை. அதே வேளையில் அவன் கொண்டு வாறதை மறுப்பதில்லை ஆனால் மனதுள் உறைந்து போயிருந்த அவன் மீதான வெறுப்பு மட்டும் குறையவில்லை.

அன்று ஞாயிற்றுக்கிழமை!

பொன்னுக்குட்டி சனிக்கிழமை மாலை பருத்தித்துறையிலிருந்து வரும் போதே ஒரு 'கல்லோயா' சாராயப் போத்தலுடன் தான் வருவார்.

அவர் காலையில் நெல்லியடிக்குப் போய் இறைச்சி வாங்கி வந்து கமலியிடம் சமைக்கும் படி சொல்லி விட்டு உடலெங்கும் நல்லெண்ணை தேய்த்து, சீயாக்காய் அரப்பு வைத்து நல்லதொரு முழுக்குப் போட்டார்.

பின் கமலியிடம் ஒரு கிண்ணத்தில் கொஞ்ச இறைச்சி போட்டு வரும்படி கூறி விட்டு போத்தலுடன், கிளாசுடனும் போய் முற்றத்து வேம்பின் கீழ் அமர்ந்து கொண்டார்.

பதினொரு மணியளவில் குடிக்க ஆரம்பித்தவர் ஒரு மணிக்கிடையில் அரைப் போத்திலை முடித்து விட்டார்.

அப்போது தான் மல்லிகா படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னுக்குட்டி அவளைக் கண்டதும், "பிள்ளை.. இப்படி வா. இதிலை இரு!", என்றார்.

அவளும், "ம். இறைச்சி.. சாராயம்...! இண்டைக்கு வலு கொண்டாட்டம் தான்", என்று கூறியவாறே அவரின் முன்னால் அமர்ந்தாள்.

பொன்னுக்குட்டி நிமிர்ந்து அவள் முகத்தைப் பார்த்துவிட்டு, "குடிக்கிறது.. தின்னுறது.. சாகிறது.. வேறை என்ன வாழ்க்கையிலை எனக்கெண்டு கிடக்குது. கடைசியாய் ஒரு பிடி சாம்பல்.. அதையும் கொண்டு போய் கீரிமலையிலை கரைச்சுப் போடுவாங்கள்", என்றார்.

அவரின் குரலில் எல்லையற்ற விரக்தி இழையோடுவதை மல்லிகா உணர்ந்து கொண்டாள். அவளால் அதை வெறும் வெறிக்கதை என நிராகரித்துவிட முடியவில்லை.

அவள், "பொன்னு.. நீ என்ன சொல்லுறாய்?", என வியப்புடன் கேட்டாள்.

தளதளத்த குரலில் அவன், "எனக்கு ஒரே ஒரு பொம்பிளைப் பிள்ளை அவள் இப்ப வாழாவெட்டி.. பேரப் பிள்ளை, பூட்டப்பிள்ளையெண்டு அடி கொடியாய் வாழ ஏலுமே.. பேர் சொல்லக் கூடி ஆளில்லாமல் பொன்னுக்குட்டியின் பரம்பரை அழியப்போகுது", எனக் கூறிவிட்டுப் பெரிதாக அழ ஆரம்பித்தான்.

சண்டித்தனம், வெட்டுக் கொத்து எதுக்குமே தயங்காத அவனுக்குள் பேரப்பிள்ளை, பூட்டப்பிள்ளை பாசத்துக்கு ஏங்கும் ஒரு இதயம் இருப்பதை அவள் புரிந்து கொண்டாள்.

"பொன்னு.. அழாதை எல்லாம் நல்ல காலம் வர நடக்கும்"

"கலியாணக்கதை துவங்கினாலே சீறி விழுந்து போட்டு இந்த இடத்தை விட்டே போறாள்", என்று விட்டு மீண்டும் பலமாக அவர் அழத் தொடங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளிருந்து எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த கமலியால அவர் கண்ணீர் விடுவதையும், குரலெடுத்து அழுவதையும் தாங்கமுடியவில்லை.

வெளியே வந்த அவள் ஒரு பெருமூச்சுடன், "அப்பு, அது எங்கடை விதி.. அழுதால் போலை மாறுமே?", என்றாள்.

அவர், "ஒரு பேரப்பிள்ளையைத்தான் தரமாட்டாய்.. மனம் விட்டு அழவும் விடமாட்டியே?", என அழுகையுடன் கேட்டார்.

"நீ.. அழ என்னாலை தாங்க முடியுமே?"

"நீ வாழா வெட்டியாய்க் கிடக்க என்னாலை மட்டும் தாங்க ஏலுமே?"

ஒரு பாசப்போர் தொடங்கி விட்டதை மல்லிகா புரிந்து கொண்டாள் சில நிமிடங்கள் மௌனத்தில் கடந்தன.

கமலி மெல்லிய குரலில் ஒரு வித தயக்கத்துடன், "அப்பு.. அழாதை வா. வந்து சாப்பிடு.. உனக்கு நான் நாளைக்கு முடிவு சொல்லுறன்"

பொன்னுக்குட்டி அழுகையை நிறுத்தி விட்டு, "நீ. என்ன சொல்லுறாய்?", எனக் கேட்டார்.

"இரவைக்கு நான் யோசித்துப் போட்டு ஏதோ ஒரு முடிவு சொல்லுறன் எழும்பு", என்றாள் அவள்.

பொன்னுக்குட்டி ஏதோவொரு நம்பிக்கையுடன் அவளைப் பார்த்தார்.

அதே வேளையில் சொர்ணமும் வந்து மகளிர் கல்லூரியில் சேர்ந்து அங்கு, 'பையோ' படிக்க ஆரம்பித்து விட்டாள்.

சொர்ணலிங்கம் சீதேவிப்பாட்டியிடம் அவள் சட்டம் படிக்கப் போகிறாள் எனப் பொய் கூறி அனுமதி பெற்று விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனே கூட்டிக்கொண்டு போய் கல்லூரியில் சேர்ந்து விட்டு, அங்கேயே விடுதியில் தங்கிப்படிக்கவும் ஏற்பாடு செய்து விட்டான். ஆனால் கிழவி அவள் பஸ்ஸில் போய் வரக்கூடாதெனக் கண்டிப்பாகச் சொல்லி விட்டாள்.

ஒவ்வொரு திங்களும் காலையில் மணியம் காரில் கொண்டு போய் இறக்கி விட்டு வருவதென்றும், பின் வெள்ளி மாலை போய் ஏற்றி விட்டு வருவதெனவும் ஏற்பாடாகியிருந்தது.

சொர்ணம் யாழ்ப்பாணம் போய் விட்டு வாறத்துக்குள் ஐந்து நாட்களும் இளையவன் ஒரு வெறுமையை உணர ஆரம்பித்தான். வெள்ளிக்கிழமைகளுக்காக அவன் மனம் ஏங்கித் தவிக்க ஆரம்பித்தது. அந்த நாட்களில் சொர்ணத்தைக் காண வேண்டுமென்பதற்காகவே சீவலுக்கு விதானையார் வீட்டுக்கு வரும் போது பிந்தியே வருவான்.

நடைமுறைச் சாத்தியமற்ற கனவை நோக்கித் தான் இழுபடுவதாக அவன் உணர்ந்த போதும் அவனால் அதிலிருந்து விடுபடமுடியவில்லை.

சொர்ணமும் விடுதியில் இருக்கும் போது இளையவனின் நினைவுகளால் ஆட்கொள்ளப்பட்டாலும் கூட படிப்பில் தீவிர கவனம் செலுத்தினாள். தான் மருத்துவராக வந்தால் இளையவனுடன் சேரக்கூடிய வாய்ப்புகளை உருவாகும் என அவள் திடமாக நம்பினாள்.

ஆனால் வீட்டுக்கு வந்ததும் அறைக்குள் ஓடிப் போய் யன்னலால் கண்டுப்புளியடிப் பனையில் இளையவனைத் தேட அவள் தவறுவதேயில்லை.

அவனைக் கண்டதும் தன் மனம் எல்லையற்ற சந்தோசத்தில் மிதப்பதை அவள் உணரத்தவறுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 48

பாடசாலையிலிருந்து வந்த நேரம் தொடக்கம் கமலியின் கண்கள் அடிக்கடி அவளையறியாமலே முன்படலையை நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்தன. சிவஞானத்தின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவளின் மனம் ஒரு விதமான தவிப்பில் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருந்தது. அவள் காலையில் பாடசாலை செல்லும் போது தோட்டத்தில் தண்ணீர் கட்டிக் கொண்டிருந்த சிவஞானத்திடம் மாலையில் தனது வீட்டுக்கு வரும்படி கேட்டிருந்தாள். கமலி எப்போது அவனிடம் அப்பிடிக் கேட்டுக் கொண்டதில்லை. அப்படி அவள் கேட்காவிட்டாலும் அவன் கனகரத்தினத்தோடும், சில சமயங்களில் தனியாகவும் இடையிடையே சென்று வருவதுண்டு. அன்று அவள் தானாக அவனை அழைத்தமை அவனுக்கு ஆச்சிரியத்தை ஏற்படுத்தினாலும் அவன் ஏனென்று கேட்காமலே சம்மதம் தெரிவித்து விட்டான்.

முற்றத்தில் கிடந்த கோழிகளின் எச்சங்களை அள்ளிக் கொண்டு சென்று குப்பையில் எறிந்து விட்டுத் திரும்பிய கமலி படலை திறக்கும் சத்தம் கேட்டு ஆவலுடன் முன் பக்கம் வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனோ என்றுமில்லாதவாறு அவளின் நெஞ்சு படபடவென அடித்துக்கொண்டது.

முதல் நாள் பொன்னுக்குட்டி கமலியிடம் தனக்கு வாரிசு இல்லாமல் போய்விட்டதாகக் கூறிக்குரலெடுத்து அழுதமையும், அதற்கு தான் சமாதானப்படுத்தும் வகையில் சில வார்த்தைகளைச் சொன்னமையும் அவளுள் ஒரு சலனத்தை ஏற்படுத்தியிருந்தது. அவளால் தாங்க முடியவில்லை. சிங்கனை நெஞ்சில் நிறைத்து வைத்திருக்கும் தன்னால் எப்படி வேறு ஒருவனின் மனைவியாக வாழமுடியுமென்ற கேள்வி எடுத்து விஸ்வரூபம் எடுத்து அவள் முன் நின்றது. ஆனால் அவளின் மனமும் உடலும் ஆழமான அன்புக்காகவும், அரவணைப்புக்காகவும் ஏங்குவதை அவள் உணராமலில்லை.

எனவே சிவஞானத்திடம் தன் மனக்குழப்பங்களைச் சொல்லி ஏதாவது வழி தேடுவதெனக் கமலி முடிவெடுத்திருந்தாள். சிவஞானத்தை அழைத்துச் சென்று கதிரையில் இருத்தி விட்டு அவளும் எதிரில் அமர்ந்து கொண்டாள். அவள் அதை எப்படி ஆரம்பிப்பது எனத் தெரியாத சிக்கலில் மாட்டுப்பட்டிருந்தாள்.

சிவஞானம் ஒரு மெல்லிய புன்னகையுடன், "என்ன வரச்சொன்னியள்.. ஒண்டையும் கதைக்கிறியளில்லை", எனக் கேட்டாள். கமலி தயக்கத்துடன் முதல் நாள் நடந்த சம்பவங்களைச் சொல்லி முடித்தாள்.

"அப்ப.. என்ன செய்யப் போறியள்?", எனக் கேட்டான் சிவஞானம்.

கமலி ஒரு சிறிய மௌனத்தின் பின், "இரவு முழுக்க யோசிச்சன்.. இரண்டு வழி தான் இருக்குது. ஒண்டு சின்னன் மாமியைப் போலை பிள்ளை பெறுகிறது. மற்றது மறுமணம் செய்யுறது", என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் திடுக்கிட்டவனாக, "என்ன.. சின்னனைப் போலை.." எனக் கேட்டுவிட்டு இடை நிறுத்தினான்.

கமலி குறுக்கிட்டு, "நிச்சயமாய் நான் அந்த வழிக்கு போகமாட்டன்", என்றாள் உறுதியாக.

"அப்பிடியெண்டால் மறுமணம் தான் அடுத்த வழி!"

"உண்மை தான்.. என்னையும் சிங்கனிலை நான் வைச்சிருக்கிற அன்பையும், எங்களுக்கை நிலவிய உயிருக்குயிரான உறவையும் புரிஞ்சனீங்கள் நீங்கள்"

"ம். உங்களைக் காதலிச்ச காலத்திலை தன்ரை காதல் விவகாரங்களையெல்லாம் என்னட்டைத் தானே கொண்டு வந்து கொட்டுறவன்", என்று விட்டு மெல்லச் சிரித்தான் சிவஞானம்.

"அதாலை..", என்று விட்டு நிறுத்திபின் திரும்பி ஒரு முறை சிங்கனின் படத்தைப் பார்த்தாள் கமலி.

"அதாலை..?"

மெல்லத் தலையைக் குனிந்தவாறே, "நான் இன்னொரு கலியாணம் செய்யிறதெண்டால் உங்களை விட வேறை பொருத்தமான ஆள் இருக்க முடியாது", என்றாள் கமலி.

அந்த வார்த்தைகள் சிவஞானத்தைக் குளிர்வித்த போதும் அவன் அவற்றை எதிர்பார்க்கவில்லை.

"நீங்கள் மனப்பூர்வமாய் சொல்லுறியளே..?"

"எனக்கே அது விளங்கேல்லை.. ஆனால் எனக்கு வேறை வழியில்லை", என்ற கமலி சற்று நிறுத்தி விட்டு, "எண்டாலும் இரண்டாம் முறையும் விதவையாய்ப் போய் விடுவனோ எண்டு பயமாய்க் கிடக்குது", என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் சொல்வதைப் புரிந்து கொண்ட சிவஞானம் உறுதியான குரலில், "இனி அப்பிடி நடக்காது", என்றான்.

"எப்பிடி..?"

"அந்தப் பொன்னம்பலமே எங்கடை கலியாணத்தை முன்னுக்கு நிண்டு நடத்துவான்"

"உண்மையாகவோ?"

"நிச்சயமாய்.. அவனை நடத்த வைப்பம்", என்றான் சிவஞானம்.

கமலி வியப்புடன் அவனின் முகத்தைப் பார்த்தாள்.

சிவஞானம், "நம்புங்கோ! நான் உங்கடை சம்மதம் கிடைக்கிறது தான் கஷ்டம் எண்டு நினைச்சன். அது கிடைச்சிட்டுது.. இனி வாற தடையெல்லாம் எங்களுக்கு வெறும் தூசு", என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 49

சொர்ணலிங்கம் சீதேவிக் கிழவிக்குக் கதைகளைப் போடவேண்டிய விதத்தில் போட்டு சொர்ணம் எச்.எஸ்.ஸி படிக்க அவளிடம் அனுமதி பெற்று விட்டான். கிழவி முதலில் மறுத்த போதும் சொர்ணம் படித்துப் பெரிய சட்டவாளராக வந்து பரம்பரைப் பெருமையை மேலும் விளங்க வைப்பாள் என்றும், அவளை மருத்துவம் படிக்க அனுப்பவில்லை எனவும் பெரிய பொய்யைச் சொல்லி வைத்தான்.

கனகாம்பிகையும், அண்ணனும், தங்கச்சியும் ஒரே தொழிலைச் செய்தால் ஒருவருக்கொருவர் உதவியா யிருக்குமென்று மகனுக்குத் தாளம் போட்டாள்.

ஜீ. பொன்னம்பலம், செனட்டர் நடேசன் போன்றோரை மக்கள் பெரும் மேதாவிகளாக புகழ்வது போல் தனது பேரப்பிள்ளைகளும் பெயர் பெறப்போவதை எண்ணிய போது கிழவிக்கு உள்ளூர ஒரு பெருமிதம் எழுந்த போதும் அதை வெளிக்காட்டாமலே, "ஏதோ ஆடவெண்டு வெளிக்கிட்டிட்டியள்! ஆடிமுடியுங்கோ!", எனச் சம்மதம் கொடுத்தாள்.

சொர்ணலிங்கம் தங்கையைக் கூட்டிக்கொண்டு போய் இந்து மகளிர் கல்லூரியில் சேர்த்து விட்டதுடன் அங்கேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹொஸ்டலில் தங்கிப்படிக்க ஏற்பாடும் செய்து விட்டே கொழும்புக்குப் புறப்பட்டான்.

பஸ்ஸில் போய் வரக்கூடாது என்ற கிழவியின் கட்டளைக்கமைய ஒவ்வொரு திங்கள் காலையிலும் மணியம் காரில் கொண்டுபோய் பாடசாலையில் இறக்கி விட்டு வெள்ளி மாலை போய் ஏற்றிவரவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

வாரத்தில் ஐந்து நாட்கள் சொர்ணத்தைச் சந்திக்க முடியாத நிலை ஏற்பட்ட பின்பு தான் தன்னால் அவளை ஒரு நாள் கூடக் காணாமல் இருக்க முடியாது என்பதை இளையவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

அவன் அடிக்கடி நாட்களை எண்ணிப் பார்த்து சனி ஞாயிறை எதிர்பார்க்குமளவுக்கு அவனின் தவிப்பு அவனைப் படாத பாடுபடுத்த ஆரம்பித்து விட்டது.

சொர்ணத்துக்கும் கூட அவனைச் சந்திக்காமல் இருப்பது மனதில் ஏதோ ஒருவித வெறுமையை உருவாக்கினாலும் தான் மருத்துவரானால் தனக்கும் இளையவனுனக்குமிடையேயுள்ள தடையைத் தாண்டும் ஊன்றுகோலாக அதைக் கையாள முடியுமென அவள் கருதியதால் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்தினாள்.

ஆனால் அவளாலும் சனி, ஞாயிறு ஆவலுடன் எதிர்பார்ப்பதையும் அவனைச் சந்திக்கும் சந்தர்ப்பங்களையும் அதிகரிக்கவும், நீட்டவும் முயல்வதையும் தவிர்க்க முடியவில்லை.

கனகரத்தினம், சுந்தரம் ஆகிய சிவஞானத்தின் நண்பர்கள் சிவஞானம் கமலி திருமணத்தை எத்தகைய இடையூறுகள் ஏற்பட்டாலும் அவற்றைத் தகர்த்தெறிந்து நடத்தியே தீருவது என உறுதியாக முடிவெடுத்தனர். கனகரத்தினம் இதை இரு தனிநபர்களுக்குள் இடம் பெறும் திருமணம் என்பதற்கு அப்பால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது இரு சமூகங்களுக்குமிடையே நல்லுறவை உருவாக்கும் ஒரு முயற்சியாகவும், இப்படியான சம்பவங்களை இயல்பான நடைமுறையாக்குவதற்கான ஆரம்பமாகவும் நடத்தி முடிக்க வேண்டுமென்ற ஆலோசனையை முன் வைத்தான்.

அத்திருமணம் காரணமாகப் பல்வேறு விதமான எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வருமென எதிர்பார்த்த சிவஞானத்துக்கு அவனின் வார்த்தைகள் பெரும் ஆச்சரியத்தை மூட்டின.

கனகரத்தனம். "இந்த விசயத்திலை நாங்கள் பொன்னம்பலத்தையும் மல்லிகாவையும் முழுமையாகப் பயன்படுத்த வேணும்", என உறுதியாகச் சொன்னான். அதே வேளையில் அவர்களின் திட்டத்துக்கு விளையாட்டுக் கழக இளைஞர்களையும் அவர்கள் சம்மதிக்க வைத்து விட்டனர். ஒரு சிலர் விடயத்தைக் கூறிய போது தயக்கம் காட்டிய போதும் கிராமத்தின் முன்னேற்றத்தில் தீவிரமாக உழைப்பவன் கனகரத்தினம் என்ற வகையில் அவனின் முடிவுகளுக்கு அவர்களால் மறுப்புக் கூறமுடியவில்லை. அன்று அவர்கள் மூவரும் பொன்னம்பலம் வீட்டுக்குப் போன போது அப்போது தான் அவன் கோவிலுக்குப் போய் மாலைப்பூசையில் பங்கு கொண்டு விட்டு வந்திருந்தான்.

அவர்கள் பொன்னப்பலத்திடம் தாங்கள் வந்த விடயத்தை விளங்கப்படுத்திய போது முதலில் ஆச்சிரியப்பட்ட போதிலும் அவன், "தம்பியவை! நான் அவளுக்கு அநியாயம் செய்தாலும் என்ரை பிரேதத்தைக் கூடி பெண்சாதி பிள்ளையள் பாக்க முடியாத நிலை ஏற்படாமல் என்னைச் காப்பாத்தினவள். நான் இதை முன்னுக்கு நிண்டு நடத்தினால் தான் நான் செய்த பாவம் தீரும்", என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகாவும் "என்ரை தாலியைக் காப்பாத்தினவள் அவள். அவான்ரை கழுத்திலை தாலியேற வைக்க நான் என்னாலை முடிஞ்சதெல்லாம் செய்வன்", என்றாள்.

"ஆனால் எங்கடை ஊர்ப்பொரியவையைச் சம்மதிக்க வைக்கிறது.." என இழுத்தான் சிவஞானம்.

"அவை என்னைக் காப்பாத்த அவளோடை போய்க் கதைச்சவை தானே.. நானல்லோ அவையைச் சம்மதிக்க வைக்கிறது" என்ற பொன்னம்பலம், "கந்தவனக்குஞ்சி சொன்னால் அரக்கமாட்டார். அவர் சம்மதிச்சால் பிறகென்ன.. ஊர் சம்மதிச்ச மாதிரி", என ஒரு மெல்லிய சிரிப்புடன் கூறினான். அடுத்த நாள் மாலை அந்த ஊர்ப் பெரியவர்கள், இளைஞர்கள் என அனைவரையும் கனகரத்தினம் வாசிகசாலை முன்றலில் கூட்டியிருந்தான். பொன்னம்பலம் ஏற்கனவே பலரை இவ்விடயத்துக்குச் சம்மதிக்க வைத்து விட்டான். கனகரத்தினம், சுந்தரம் ஆகியோரும் இளைஞர்களிடம் போதிய ஆதரவு திரட்டி விட்டனர்.

கூட்டத்தைத் தொடக்கி கனகரத்தினம் விஷயங்களை விளங்கப்படுத்தி விட்டு ஆலடிவெட்டை மக்கள் முன்னின்று நடத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டான்.

அப்போது சுப்பையர் குறுக்கிட்டு, "உவன் சிவஞானம் அவளைக் கட்டுறதெண்டால் கட்டிப்போட்டு மணியாறன் மூலையிலையே போய் இருக்கட்டும். அதுக்கேன் நாங்கள்?", என்றார்.

இப்படியான பிரச்சனை வருமென்று ஏற்கனவே எதிர்பார்த்த படியால் கனகரத்தினம், அதற்குப் பதிலளிக்கும் வகையில் கந்தவனக்குஞ்சியைத் தயார் படுத்தி வைத்திருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவளைக் கட்டின எங்கடை பொடியனை நாங்களே கொண்டு ஒரு இளம் பெட்டையை வாழாவெட்டியாக்கினம்.. அந்தப் பாவத்தை நாங்கள் தானே கழுவவேணும்.. இல்லாட்டில் மூத்தநயினார் பொறுப்பரே?", எனக் கேட்டார் கந்தவனம்.

"அப்பிடியெண்டால் காசியின்ரை மோனையல்லோ பிடிச்சு அவளுக்குக் கட்டி வைக்க வேணும்", என்றான் வடிவேலு. அவனுக்குக் காசியர் தன்னைக் கல்லெறிய ஏவி விட்டு அடிவாங்க வைத்த கோபம் இன்னும் மாறவில்லை.

அப்போது முத்தர், "இதை விட அந்தப் பெட்டையை எங்கையாவது கிணறு குளத்துக்கை கல்லைக் கட்டித்தள்ளி விடுறது நல்ல விஷயம்", எனச் சொல்லவே அனைவரிடமும் எழுந்த சிரிப்பொலி அடங்கச் சில நிமிடங்கள் பிடித்தன.

திருமணத்தைச் செல்வச் சந்நதி கோவிலில் வைப்பதெனவும், திருமண விருந்தை செல்வச் சந்நதி மடத்தில் வைப்பதெனவும் முடிவெடுக்கப்பட்டது. கலியாணத்தையோ, விருந்தையோ மணியாறன் மூலையில் வைத்தால் ஆலடிவெட்டையார் வரமாட்டார்கள் என்பதாலேயே கனகரத்தினம் இப்படியான ஒரு ஏற்பாட்டை முன் வைத்தான்.

திருமணத்தன்று மாலை ஆலடிவெட்டை வாசிகசாலையில் ஒரு வரவேற்பு வைப்பதெனக் கூறிய போது கூட்டத்தில் ஒரு சலசலப்பு எழுந்ததைக் கவனித்த கனகரத்தினம், "வரவேற்புக்கு விதானையார் தான் தலைமை தாங்குவார்", என்றான்.

"விதானையார் கடைசி வரையும் வரார்", என்றார் கனகர்.

"விதானையார் மட்டுமில்லை.. குடியரசார், ஐயா மாமா எல்லோரும் வருவினம்", என்றான் கனகரத்தினம் உறுதியுடன். டி.ஆர்.ஓனரைச் சிறப்பு விருந்தினராக அழைத்தால் விதானையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை தாங்க மறுக்க மாட்டார் என்பது அவனுக்கு நன்றாகவே தெரியும்.

அடுத்த நாள் கனகரத்தினமும், சிவஞானமும் கமலி வீட்டுக்குச் சென்று கமலியிடம் தமது திட்டங்களை விபரித்த போது அவளால் நம்பமுடியவில்லை.

அவள் தலையைக் குனிந்தவாறே தயக்கத்துடன், "ஏதோ அப்புவின்ரை நிலைமையைப் பாக்க முடியாமல் சம்மதிச்சிட்டன்... ஆனால் மனம் குழப்பிக் கொண்டிருக்குது," எனக் கூறி நிறுத்தி விட்டுப் பின் "சிங்கன் என்னிலை வைச்ச நம்பிக்கைக்கும், அன்புக்கும் துரோகம் செய்யிற மாதிரி மனம் உறுத்தலாய் இருக்குது", என்றாள்.

கனகரத்தினம், "நீங்கள் குழம்பிறதிலை அர்த்தமில்லை... சிங்கன் உங்களைக் கலியாணம் கட்டினது நீங்கள் வாழ்நாளெல்லாம் விதவையாய் இருந்து துன்பப்படவல்ல. நீங்கள் சந்தோசமாய் வாழத்தான். நீங்கள் கலியாணம் கட்டி சந்தோசமாய் வாழ்ந்தால் அவனின்ரை ஆத்மா சந்தோசப்படும். அதிலை அவனின்ரை உயிர் நண்பனோடை வாழ்க்கை நடத்த அந்தச் சந்தோசம் இரட்டிப்பாகும்," என்றான். கமலி எதுவுமே பேசவில்லை.

அப்போது பொன்னுக்குட்டி வரவே அவர்கள் அவருடன் கதைக்க ஆரம்பித்தனர். முதலில் அவர், "அவளை இரண்டாம் தரமும் கைம் பெண்டாடிச்சியாக்கப் போறியளோ?", எனக் கேட்ட போதிலும், சிறிது நேரத்தில் மகிழ்ச்சியுடன் சம்மதித்து விட்டார்.

பின் அவர், "பிள்ளை என்னவாம்?", எனக் கேட்டார்.

"அவை இரண்டு பேரும் எப்பவோ முடிவெடுத்திட்டினம்", என்று விட்டுப்பலமாகச் சிரித்தான் கனகரத்தினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு அவர்கள் அங்கிருந்து புறப்பட்டுப் போய் இளையவன், தம்பியன், சின்னப்பொடியன் ஆகியோரைச் சந்தித்தனர்.

அப்போது மணியாறன்மூலையார் அனைவரையும் செல்வச்சந்நதிக்கு அழைப்பதெனவும், சிறு குழப்பம் கூட ஏற்பட்டு விடாமல் அவதானமாக இருப்பதெனவும் முடிவெடுக்கப் பட்டது.

அதாவது விருந்தின் போது முதல் பந்தியில் ஆலடிவெட்டையாரை இருத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இரு பகுதியாரையும் ஒரே பந்தியில் இருத்தினால் ஆராவது ஒருவர், "உவங்கள் எங்களோடை சமனாய் இருக்கிறதோ?", எனச் சொல்லி எழுந்துவிட்டால் குழப்பம் ஏற்பட்டு விடும். அடுத்த பந்தியில் மணியாறன்மூலையாரை இருத்துவதெனவும், அவர்களுடன் ஒன்றாக குடியரசார், ஐயா மாமா, ஆலடிவெட்டை இளைஞர்கள் அனைவரும் ஒன்றாயிருந்து சாப்பிடுவதெனவும் முடிவெடுக்கப்பட்டது.

இளையவனும் நண்பர்களும் மகிழ்ச்சியுடன் சம்மதித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் – 50

விதானையார் குடும்பம் பளை தென்னந்தோட்டத்திற்கு வந்து சேர்ந்தபோது நேரம் ஒன்பது மணியைத் தாண்டி விட்டது. அவசரமவசரமாகக் காரை விட்டிறங்கிய சீதேவிப்பாட்டி தான் கொண்டு வந்த கடகப்பெட்டியைக் கீழே இறக்கியவாறே, "பிள்ளை! காலமை வெறுவயித்தோடை வேலை செய்யிறாங்கள், வந்து சாப்பிட்டிட்டு மிச்சத்தைப் பறிக்கச் சொல்லு?", எனச் சொர்ணத்திடம் சொன்னாள்.

இளைவனும் வேறு இரு தொழிலாளர்களும் அதிகாலையிலேயே தேங்காய் பறியலை ஆரம்பித்து விட்டதால் கணிசமான வேலை குறைவடைந்து விட்டது.

அவள் பறியல் நடந்த இடத்துக்குச் சென்ற போது இளையவன் ஒரு மரத்திலிருந்து இறங்கிக்கொண்டிருந்தான்.

"பாட்டி.. சாப்பிட வரட்டாம். மூண்டு பேரும் மோட்டையிலை போய் கைகாலை அலம்பிப் போட்டுச் சாப்பிட வாருங்கோ!"

மரத்திலிருந்தவாறே வீதியில் கார் வருவதையும், அதிலிருந்து சொர்ணம் இறங்குவதையும் எதிர்பார்த்து அடிக்கடி அப்பக்கம் பார்த்த இளையவனுக்கு அவளைக் கண்டதும், அவன் மனதில் ஒரு சந்தோசம் பொங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன், "போங்கோ.. வாறன்!", என்றான்.

"நீ கழுவிப்போட்டு வா.. ஒண்டாய்ப் போவம்", எனச் சொர்ணம் சொன்னதும், அவன் ஒன்றும் பேசாமல் மோட்டையை நோக்கிப் போனான். அவர்கள் அங்கு சென்றதும் பாட்டி தான் கொண்டு வந்த வாழைத்தடல்களை அவர்கள் கையில் கொடுத்து விட்டு அவற்றில் தோசைகளை வைத்தாள். சொர்ணம் அம்மியில் அரைத்த செத்தல் மிளகாய்ச் சம்பலை அதன் மேல் வைத்தாள்.

கிழவியின் தோசைக்கும், சம்பலுக்கும் தனிருசி இருப்பதை இளையவன் அனுபவித்திருந்தான். அவர்கள் போதும் போதும் என்ற போதும், "உந்த உயரத்திலை ஏறுறனீங்கள், வடிவாய்ச் சாப்பிடுங்கோ", எனச் சொல்லி கிழவி மீண்டும் மீண்டும் தோசைகளைத் தட்டில் போட்டாள்.

"சாப்பிட்டிட்டு கொஞ்ச நேரம் ஆறிப்போட்டு வேலையைத் துவங்குங்கோ!", என்று விட்டு மத்தியானச் சமையலுக்கான தயாரிப்பில் இறங்கி விட்ட கனகாம்பிகைக்கு உதவி செய்யப் போய் விட்டாள்".

இளையவன் சாப்பிட்டுக் கைகழுவிட்டு வந்த போது சொர்ணம், "அவையள்.. ஆறட்டும்.. எனக்கு நீ செவ்விளனி பிடுங்கித் தா!", என அவனை அழைத்தாள். அவளுடன் தனியக் கதைப்பதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்துக்காகச் சந்தோசப் பட்டவனாக அவனும் கத்தியை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

அந்த மரத்தில் நிறையச் செவ்விளநீர் இருந்த போதும் அது சற்று வளைவாக இருந்ததால் பிடுங்கப்பட்டவை அருகிலிருந்த பற்றைக்குள்ளேயே விழுந்தன. சொர்ணம் பற்றைக்குள் போக முயன்ற போது அவன் மரத்திலிருந்தவாறே, "பிள்ளை.. உள்ளை போகாதையுங்கோ.. காலிலை முள்ளு ஏறியிடும்.. நான் வந்து எடுத்துத் தாறன்", என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழே இறங்கியதும் அவன் பற்றைக்குள் போக அவளும் அவனின் பின்னையே போனாள். இளையவன் லாவகமாகப் பற்றைகளுக்குள் புகுந்து, இளநீர்களை எடுத்து வந்து நடுவிலிருந்த ஒரு சிறு வெட்டையில் போட்டான். சொர்ணமும் அவற்றின் அருகில் சம்மணமிட்டு அமர்ந்து கொண்டாள்.

இளையவன் இளநீரைச் சீவிக்கொண்டிருக்க, "என்ன கமலியின்ரை கலியாணத்தை ஆலடிவெட்டையாரும், மணியாறன் மூலையாரும் சேர்ந்து வலு அமர்க்களமாய் நடத்திச்சினமாம்", எனச் சொர்ணம் கேட்டாள்.

"ஓ.. இப்பிடி ஒற்றுமையாய் நடக்குமெண்டு நாங்கள் நினைக்கவேயில்லை. எல்லாம் கனகண்ணையின்ரை பிளான்", என்று விட்டு, "வரவேற்புக்கு விதானையாரைத் தலைமை தாங்க வைச்சிட்டார்", என்றான்

சொர்ணம் திடீரென, "அப்பிடியெண்டால் எங்கடை கலியாணத்துக்கும் ஐயா தலைமை தாங்குவரே?", எனக் கேட்டாள்.

இளையவன் அதிர்ச்சியுடன், "பிள்ளை!", என்று விட்டு எதுவும் மேற்கொண்டு பேச முடியாமல் தடுமாறினான். அவன் முகம் ஓடிக் கறுத்து விட்டது.

அவள் சாதாரணமாக, "என்ன வெருளுறாய்.. தலைமை தாங்க வைக்க வேணும்", என்றாள்.

"ஒருக்காலும் நடக்காது" என மனதில் தோன்றிய போதும் அவன் எதுவும் பேசவில்லை.

சொர்ணம் மிகவும் நிதானமான வார்த்தைகளில் சொல்ல ஆரம்பித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இளையவன்! இந்தச் சாதிக் கோட்டையை உடைக்க வெளிக்கிட்டு சிங்கன் பலியானான்.. இப்ப சிவஞானமும் கமலியும் கதவை உடைத்துக் கொண்டு உள்ளை போட்டினை.. நாங்கள் அந்தக்கதவாலை உள்ளை போய் கோட்டையையே இடிக்க வேணும். சில வேளை அதிலை நாங்கள் பலியாகலாம். ஆனால் கோட்டையை உடைக்கத்தான் வேணும்”

இளையவன் சில வினாடிகள் மௌனத்தின் பின், “எனக்கென்னவோ நினைச்சுப்பார்க்கவே பயமாய்க்கிடக்குது..”, என்றவன் பின்பு, “ஆனால் என்னாலை நீங்கள் இல்லாத வாழ்வைக் கற்பனை பண்ணக்கூட முடியாது”, என உறுதியாகக் கூறினான்.

இளையவனின் கடைசி வார்த்தைகள் அவளின் முகத்தை முன்னெப்பொழுதையும் விடப் பிரகாசமடைய வைத்தன.

“சிங்கன்ரை கலியாணத்துக்குப் பிறகு சிவஞானத்தின்ரை கலியாணம் வரை இப்ப எவ்வளவோ மாற்றம் ஏற்பட்டுட்டுது, நான் படிப்பு முடித்து டொக்டராய் வர ஏழெட்டு வருஷம் செல்லும். அப்ப சமூகம் எவ்வளவோ மாறியிடும்.. அந்த மாற்றங்களோடை இணைஞ்சு நாங்களும் சமூகத்தோடை மோதி வெல்லுவம்”

இளையவனின் மனதிலும் நம்பிக்கை ஒளிபரவுவதை அவளால் உணரமுடிந்தது.

இளையவன் இளநீரைச் சீவி அவளிடம் நீட்டினான். சொர்ணம் அவனின் இரு கைகளையும் இளநீருடன் சேர்த்துப் பிடித்தபடியே குடிக்க ஆரம்பித்தாள்.

அவன், “பிள்ளை.. கை..!”, என்றான்.

அவள் மெல்லிய சிரிப்புடன், “கை விட மாட்டன்!”, என்று விட்டு இளநீரை மடமடவெனக் குடிக்க ஆரம்பித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூற்றுவர் சொத்தை
நேற்றவர் பறித்தது
நீதியில் எவ்வகை ஜாதி
நெருங்குமோ
உண்மையின் ஜோதி
ஆற்றுதல் அடங்குதல்
போற்றுதல் முழந்தது
அழ தழ காட்டும் நீதி
அதுதான் தர்மம் வா நீ!

– நா.யோகேந்திரநாதன்
('எதிர்காலம் இருளல்ல'
திரைப்படப் பாடலில் இருந்து, 1987)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org